# மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு



2ஆம் உலக இந்து மாநாடு
மட்டக்களப்புப் பிரதேசக் கிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப்பண்பாடு

***பதிப்பாசிரியர்***

**பேராசிரியர் சி. மௌனகுரு**

*(தலைவர், நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)*

**2ஆம் உலக இந்து மாநாடு**

**மட்டக்களப்புப் பிரதேசக் கிளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தலைப்பு*

மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப்பண்பாடு

*பதிப்பாசிரியர்*

பேராசிரியர் சி. மௌனகுரு

*முதல் பதிப்பு*

வைகாசி 2003

*அச்சு*

குமரன் அச்சகம்

201, டாம் வீதி, கொழும்பு - 12.

*வெளியீடு*

2ஆம் உலக இந்துமாநாடு - மட்டக்களப்புப் பிரதேசக் கிளை

*Title*

*Hindu Culture in Batticaloa*

*Editor*

**Prof. S. Mounaguru**

*First Edition*

**May 2003**

*Printing*

**Kumaran Press (Pvt) Ltd.**

**201, Dam Street, Colombo -12.**

*Publishers*

**2nd World Hindu Conference : Batticaloa Branch**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

## முகப்பு


| | | |
|---|---|---|
| 1 | சுவாமி ஜீவனானந்தஜியின் ஆசியுரை | ix |
| 2. | அரசாங்க அதிபரின் வாழ்த்துரை | xi |
| 3. | துணைவேந்தரின் வாழ்த்துரை | xii |
| 4. | செயலாளரின் வாழ்த்துரை | xiv |
| 5. | பதிப்புரையும் அறிமுகவுரையும் | xv |


## கோயில்களும் வழிபாட்டு முறைகளும்


| | | |
|---|---|---|
| 1. | மட்டக்களப்பு மாவட்ட இந்துக் கோயில்களை வகைப்படுத்துதல் | 1 |
| 2. | சிவாலயக் கிரியைகளும் அவற்றின் முறைகளும் - சில குறிப்புக்கள் | 5 |
| 3. | மட்டக்களப்புத் தேசத்துக் கோயில்களும் வழிபாடும் | 11 |
| 4. | மட்டக்களப்பில் விஸ்ணு வழிபாடு | 23 |
| 5. | மட்டக்களப்புத் தமிழகத்தில் மந்திரபூர்வ பத்ததி முறை வழிபாடு | 28 |
| 6. | மட்டக்களப்பின் கண்ணகி அம்மன் வழிபாட்டு முறைகள் | 36 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. காரைதீவு கண்ணகியம்மன் கோயில் வழிபாட்டு முறைகள் 42

8. மட்டக்களப்பு மாரியம்மன் கோயில் வழிபாட்டு முறைகள் 45

9. மட்டக்களப்புத் தமிழகத்தில் காளி வழிபாடு 50

10. மட்டக்களப்பில் திரௌபதையம்மன் வழிபாடு 54

11. மட்டக்களப்புத் தமிழகத்தில் பெரிய தம்பிரான் வழிபாட்டுமுறை 62

12. மட்டக்களப்புத் தமிழகத்தில் வதனமார் வழிபாட்டுமுறை 67

13. மட்டக்களப்புத் தமிழகத்தில் குமார தெய்வ வழிபாடு - புராதன இந்து வழிபாட்டு முறைகளுள் ஒன்று 70

14. மட்டக்களப்புத் தமிழகத்தில் வைரவர் வழிபாட்டுமுறை 79


## இந்துக் கலைகள்


15. மட்டக்களப்புப் பிரதேச இந்துக் கோவில்களின் கட்டிட சிற்பப் பாரம்பரியம் 85

16. மட்டக்களப்பு ஆனைப்பந்தி ஸ்ரீசித்தி விக்னேஸ்வரர் ஆலயச் சிற்பங்கள் - ஒரு விவரணம் 93

17. மட்டக்களப்பு இந்துக் கோயில்களும் அவைக்காற்றுக் கலைகளும் 100

18. மட்டக்களப்புத் தமிழகத்தின் கூத்துக் கலையில் இந்துமதச் செல்வாக்கு 103

19. மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துக்கோயில்களில் பாவிக்கப்படும் இசைக்கருவிகள் 107

20. கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் இரு தேர்கள் 111


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து வாழ்வும் இந்துச் சடங்கும்

21. இந்து விஞ்ஞானம் (வைத்தியம், சோதிடம், மந்திரம்) 123

22. மட்டக்களப்புத் தமிழகத்தில் சோதிடக்கலை 130

23. மட்டக்களப்புத் தமிழகத்தில் மந்திரம் 135

## இந்துமத இலக்கியங்கள்

24. மட்டக்களப்புத் தமிழகத்து இந்து இலக்கியங்கள் - I 143
கண்ணகி வழக்குரை, கஞ்சன் அம்மானை, பாரத அம்மானை

25. மட்டக்களப்புத் தமிழகத்து இந்து மத இலக்கியங்கள் - II 150
இராமர் அம்மானை

26. மட்டக்களப்புத் தமிழகத்து இந்து இலக்கியங்கள் - III 155
மஹாமாரித் தேவி திவ்விய கரணி

27. மட்டக்களப்புத் தமிழகத்து இந்து இலக்கியங்கள் - IV 161
சுருதிநூல் முறை ஏட்டுப்பிரதியின் வரலாறு

28. மட்டக்களப்புத் தமிழகத்து இந்து இலக்கியங்கள் - V 166
மட்டக்களப்பில் கண்ணகையம்மன் சடங்குப் பாடல்கள்

## இந்துமத இயக்கங்கள்

29. மட்டக்களப்பு மாநிலத்தில் ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் 173

30. மட்டக்களப்பு மாவட்டத்தில் இராமகிருஷ்ணமிஷன் தவிர்ந்த இந்து சமய நிறுவனங்கள் 182

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துமதமும் சமூகமும்

31. மட்டக்களப்புப் பிரதேச இந்து சமய மக்களின் இன்றைய நிலை 189

## மட்டக்களப்பு இந்துப் பண்பாடு

32. இந்துப் பண்பாட்டில் கவனிக்கப்பட வேண்டிய பக்கம் : மட்டக்களப்பில் தெய்வ வழிபாட்டினை மையப்படுத்திய சில சிந்தனைகள் 203

## அறிக்கை


33. உலக இந்துமாநாட்டையொற்றி மட்டக்களப்புப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட சபையினர் இன்றைய இந்துமத நிலை பற்றி சமர்ப்பிக்கும் அறிக்கை 217

## செயற்குழு

2ஆம் உலக இந்துமாநாடு மட்டக்களப்புப் பிரதேசக் கிளை செயற்குழு 227

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்த மகராஜ் அவர்களின்

# ஆசியுரை

"உங்களைக் கடவுளுக்கு அருகே கொண்டு செல்லுமானால் எந்த வடிவத்தையும் எந்தக் கோயிலையும் எந்தவிதமான சடங்குகளையும் தாராளமாகப் பின்பற்றுங்கள். ஆதலால் அதுகுறித்துச் சண்டையிடாதீர்கள். சண்டையிடத் தொடங்குகின்ற அந்தக்கணமே நீங்கள் கடவுளை நோக்கிச் செல்லவில்லை. மிருகநிலையை நோக்கிப் பின்னால் செல்கிறீர்கள்". சுவாமி விவேகானந்தர் 'நமது அடிப்படை' என்னும் பொருளில் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் பகுதி இது.

வைதீகர்களையும் வேதாந்திகளையும் இணைத்துக் கொண்டது இன்றைய வழக்கிலுள்ள இந்துசமயம். துவைதம், அத்வைதம். விசிஷ்டாத்வைதம், சைவம், வைஷ்ணவம், சாக்தம், சௌரம், கௌமாரம், காணாபத்தியம் என்று எதுவாயினும் அவைகள் அனைத்தும் வேதங்கள், உபநிடதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள், தந்திர நூல்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவைகளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் நோக்கும் போது மட்டக்களப்பில் ஆகமவழிபாடுகளும், சடங்குவழிபாடுகளும் எங்கும் பரந்து காணப்படுகின்றன. வைரவர் பூஜை, அம்மன் சர்க்கரை அமுது, சடங்கு, குளுர்த்தி, திருவிழா, தேரோட்டம் என்றவாறு இந்துசமய நிகழ்வுகள் இங்கு மாதந்தோறும் கிராமம் கிராமமாக நடைபெறுவதைக் காணலாம். இது ஒரு பன்முகப்பட்ட வணக்க வழிபாட்டு முறை என்பதையே உணர்த்துகின்றது. இத்தகைய வழிபாட்டுமுறைகளைப் பற்றி ஆராய்ந்து தொகுத்து 'மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு' எனும் நூல் ஒன்று வெளிவருவது பாராட்டப்பட வேண்டியதாகும்.

இரண்டாவது உலக இந்து மகாநாட்டு மட்டக்களப்புப் பிரதேச விழாவில் இந்நூல் வெளிவருவது சிறந்த ஒரு முயற்சி. இம்முயற்சியில் ஈடுபட்டு உழைத்த அறிஞர்களையும் குறிப்பாக பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களையும் பாராட்டுகின்றேன்.

நமது பண்பாட்டின் அடிப்படைகளை ஆராய்ந்து வெளிக்கொணரும் இம்முயற்சி எதிர்காலத் தேடலின் தொடக்கமாக இருக்க வேண்டும்.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் நடைபெறும் இரண்டாவது உலக இந்து மகாநாட்டு நிகழ்ச்சிகளும், நூல் வெளியீடும் சிறப்புற்று நிறைவேற பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவரின் ஆசியை வேண்டிப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

இறை பணியில்,

சுவாமி ஜீவனானந்த

30.04.2003.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்
## திரு. இ. மோனகுருசாமி
## அவர்களின்
# வாழ்த்துரை

உங்கள் கரங்களில் மலர்ந்திருக்கும் இந்த 'மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு' எனும் நம் சொந்த மலர் ஒரு வரலாற்று வாடா மலராகும்.

இதனைப் படித்துவிட்டு அதன் சிறப்புக்களை சித்தரிக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்திருந்தால் இதுபற்றி எவ்வளவோ எழுதி இருக்கலாம்.

இம்மலர், என் இனிய நண்பன் பேராசிரியர் கலாநிதி சி.மௌனகுருவின் வழிகாட்டல். எனது மாறாத மதிப்பினைப் பெற்ற எமது பழுத்த எழுத்தாளர்கள் தேடிப் பெற்ற தெவிட்டாத வரலாற்று வளங்கள். அவ் எழுத்தாளர்களின் இதயங்களில் உதயமான எண்ணக் கருத்துக்கள். இவை யாவும் எமக்கு இனிய விருந்தாகுமென எண்ணுகின்றேன்.

இந்நூல், இந்து சமுத்திரத்தின் மட்டக்களப்புத் தமிழகக் கடற்கரையின் அலைகளையும் கடந்து இந்த எழுத்தாளர்களால் அலைந்து பெறப்பட்ட முத்துக்களால் தொடுக்கப்பட்ட முத்து மாலையாக உங்களை அலங்கரிக்கும்.

நன்றி.

இ. மோனகுருசாமி
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,
மட்டக்களப்பு.
30.04.2003.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மா.செ. மூக்கையா அவர்களின்

# வாழ்த்துரை

அகில உலக 2வது இந்து மாநாட்டினையொட்டி மட்டக்களப்புக் கிளை. 'மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு' என்ற நூலை வெளியிடுவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

மட்டக்களப்புப் பிரதேசம் தனித்துவமான பல பண்புகளைக் கொண்ட பிரதேசம். பண்டைத்தமிழரின் அடையாளங்கள் பலவற்றை இன்றும் பேணும் பிரதேசம். இங்குள்ள இந்துக்களின் பண்பாட்டில் பண்டைய அடையாளங்களைக் காணமுடியும்.

மட்டக்களப்பில் கடந்த 3 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வரும் எனக்கு மக்கள் தமது சமய பண்பாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் பல வாய்ப்புக்களைத் தந்துள்ளனர். அப்போதெல்லாம் இச்சமய தனித்துவங்களை என்னால் அவதானிக்க முடிந்தது. மட்டக்களப்பு இந்துக்களும், கலாசார ஆர்வலர்களும், ஆய்வாளர்களும், தொடர்ந்து கொடுத்த அழுத்தங்களின் விளைவாக கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இந்துக் கலாசாரம் ஒரு பாடமாக கற்பிக்கப்படும் நிலை கடந்த இரண்டு வருடங்களாக ஏற்பட்டுள்ளது. இதனை தனித்து மத ஆர்வத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டுவிக்கும் ஒரு நடவடிக்கையாகக் கருதமுடியாது. சமூகங்களின் கலாசார தனித்துவங்கள், அவர்களுடைய சமூக பெறுமானங்கள் என்பவற்றினை பாதுகாப்பதுவும், அவற்றிற்கான சித்தாந்த ரீதியான விளக்கங்களை இளைய தலைமுறையினரிடம் உருவாக்குவதும் அடிப்படை நோக்கங்களாகும். அவற்றை அடுத்து அவை பற்றிய ஒழுங்கு முறையான ஆய்வுகளை மேற்கொள்ளுவதன் மூலம் இந்து சமயத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் பற்றியும், அவற்றிற்கான காரணங்கள் பற்றியும் காரணகாரிய ரீதியாக இடத்துடன் தொடர்புபடுத்தி விளங்கிக் கொள்ள முடியும். இத்தகைய உயரிய அர்த்தமுள்ள பங்கினை, பல்கலைக்கழகம் வழங்க வேண்டியது அதனுடய முக்கிய கடமைகளில் ஒன்றென்றும் நம்புகின்றேன். இவ்வழியில் கிழக்குப் பல்கலைக்கழகம் தற்போது பல காரியங்களை ஆற்றி வருகின்றது. இவை போன்ற பல நடவடிக்கைகளில் அதன் பங்கு அதிகரிக்க வேண்டும் என்பதனை உறுதியாக நம்புகிறேன்.

இலங்கையில் இரு தசாப்தங்களுக்குப் பிறகு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்து மகாநாட்டினை தொடர்ந்து மட்டக்களப்பில் நடைபெறும் பிரதேச இந்து மகாநாட்டு நிகழ்ச்சிகளுக்கு வழங்கப்பட்ட பலரதும் பங்கும் பாராட்டுதற்குரியது.

இந்நூலில் பண்பாட்டுத் தனித்துவங்கள் ஒன்று சேர்த்து தொகுக்கப்பட்டு வெளியிடப்படுகின்றது. குறுகிய காலத்திற்குள் தம் உடல் நலக்குறைவையும் பொருட்படுத்தாது இதனைத் தொகுத்து வெளியிடும் பேராசிரியர் சி. மௌனகுருவுக்கும் அவருக்கு உதவியாக இருந்தவர்கட்கும் எமது பாராட்டுக்கள். மகாநாட்டு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தேற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை கூறுவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பேராசிரியர் மா.செ. மூக்கையா
துணைவேந்தர்
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை,
செங்கலடி.
29.04.2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் உலக இந்து மாநாடு மட்டக்களப்புப் பிரதேசக்கிளை செயற்குழுச் செயலாளர் குமாரசாமி தெட்ஷணாமூர்த்தி அவர்களின்

# வாழ்த்துரை

இரண்டாவது உலக இந்து மாநாட்டின் மட்டக்களப்பு பிரதேச விழாச்சபையின் ஒரு செயற்றிட்டமாக "மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு" என்னும் இந்த நூல் வெளியிடப்படுகின்றது.

மட்டக்களப்பு தமிழகம் தனித்துவமான இந்துசமய வழிபாட்டு முறைகளையும், கலாசார பண்பாடுகளையும் கொண்டு விளங்குகின்றது. இவற்றுள் சிலவற்றை வேறெங்கும் காண முடியாது. எந்தப் பாதையைப் பின்பற்றினாலும் இறைவன் அந்தப் பாதையில் அவனை மேலும் விரிவுபடுத்துகின்றான். அவரை நாடிச் செல்கின்ற எல்லாப் பாதைகளும் இறை நெறிகளே என்ற கீதையின் கருத்தையே இது வெளிப்படுத்துகின்றது. காலதேச வர்த்தமானங்களுக்கும், மனத்தின் பக்குவத் தன்மைக்கும் பொருத்தமான வழிபாட்டு முறைகளைக் கொண்டிருக்கும் இந்து சமயத்தின் சிறப்பினையும் இந்த வழிபாட்டு முறைகள் வெளிப்படுத்துகின்றன.

மட்டக்களப்பு தமிழகத்தின் இந்து சமய வழிபாட்டு முறைகளைப் பன்னாட்டு மக்களும் அறிந்து பயன்படும் வகையில் இந்த நூல் அமைந்துள்ளது. பல அறிஞர்களின் கட்டுரைகளையும் தொகுத்து நூலாக அமைக்கும் பணியை பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் சிறப்பாகச் செய்து முடித்துள்ளார். அவரது பணியைப் பாராட்டி எமது சபையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குமாரசாமி தெட்ஷணாமூர்த்தி
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்பாசிரியர்

# பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களின்

# பதிப்புரையும் அறிமுகவுரையும்

அகில உலக இந்து மாநாட்டினையொட்டி மட்டக்களப்பிலும் ஒரு மாநாட்டை நடத்த மட்டக்களப்பு மக்கள் நினைத்தனர். அதனையொட்டி ஒரு மலர் வெளியிடுவதெனத் தீர்மானிக்கப்பட்ட போது அம்மலரினைத் தொகுக்கும் பொறுப்பு, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகப் பிரிவின் பொறுப்பாளர் என்ற வகையில் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

மட்டக்களப்பு என்ற சொல் இலங்கையின் கிழக்கு மாகாணத்தை முன்னர் குறித்து நின்றது. அப்பிரதேசத்தின் வாழ்க்கைமுறை, சமூக அமைப்பு, பண்பாடு, வரலாறு என்பன தனித்துவமானவை. இந்துத் தமிழ்மக்கள் இங்கு பெரும்பான்மையினராயினும் ஏனைய மதத்தினரும், இனத்தினரும் கலந்து வாழும் பல் இன பல் மதத் தன்மை கொண்ட பிரதேசம் இது. இப்பன்மைத் தன்மையில் சமரசம் காண்பதிலும், மக்கள் வாழ்க்கையை அமைதிப்படுத்துவதிலும் இப்பிரதேசத்தில் இந்துமதம் வகிக்கும் இடம் மிக முக்கியமானது. மட்டக்களப்பில் இந்துமதம் தமிழ்ச் சமயம் என்றே முன்னர் அழைக்கப்பட்டது.

புராதன வழிபாடுகளுடன் இன்றைய வழிபாடுகளையும் இப்பிரதேசத்திற் காணலாம். இப்பிரதேசத்தின் வரலாற்றுடன் இங்கு வாழ் மக்களிடையே இந்துப் பண்பாடு இணைந்துள்ளது.

காலத்துக்குக் காலம் இங்கு ஏற்பட்ட அந்நியப் படை எடுப்புக்கள் அரசியல் மாற்றங்கள், குடியேற்றங்கள் என்பனவற்றிற்கியைய இப்பகுதி இந்துப் பண்பாடு மாற்றமடைந்ததாயினும் பண்டைய வழிபாடு தொடக்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீப கால வழிபாடு வரை அத்தனை வழிபாடுகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது இப்பிரதேசம்.

பண்பாட்டு மானிடவியலாளர்கட்கு இப்பிரதேசம் ஒரு தங்கச் சுரங்கம். ஆய்வுக்கான வளங்களை யெல்லாம் வைத்துக் கொண்டு, அர்ப்பணிப்பும் ஆய்வுத் திறனும் கொண்ட ஆய்வறிஞர்களை அது எதிர்பார்த்துக் கிடக்கிறது.

இப்பிரதேசத்தில் ஆகம முறையில் பிராமணர் பூசை பண்ணும் கோயில்கள், கப்புகன்மார் வாய்கட்டிப் பூசை பண்ணும் கோயில்கள். பத்ததி முறையில் பூசாரிமார் பூசை பண்ணும் கோயில்கள் எனப் பலவிதமான கோயில்கள் உள்ளன.

தீர்த்தமாடுதல், திருவிழா, தேரோட்டம் தொடக்கம் பள்ளயம், குளுர்த்தி, தீப்பாய்தல், பலி கொடுத்தல், கும்பம் சொரிதல் எனப் பல்வேறு வழிபாட்டு முறைகளைக் கொண்டுள்ளது இப்பிரதேசம்.

இங்குள்ள கண்ணகி அம்மன், மாரி அம்மன், திரௌபதையம்மன், காளி அம்மன், கடல்நாச்சி அம்மன், பேச்சியம்மன், சுவாதியம்மன் முதலான பெண் தெய்வங்களையும் வைரவர், நரசிங்க வைரவர், கிருஷ்ணர், பெரிய தம்பிரான். வதனமார், குமாரர் முதலிய ஆண் தெய்வங்களையும் வழிபடும் வழிபாட்டு முறைகள் வெளியில் இருந்து பார்க்கும் ஓர் இந்துவுக்குக் கூட விநோதமானதாகத் தென்படினும் இம்மண்ணுடனும் இங்கு வாழும் இந்துமக்களின் இரத்தத்துடனும் அவை ஊறிப் போனவை.

இங்குள்ள கோயில்கள் தேசத்துக் கோயில்கள், ஊர்க் கோயில்கள் என இருவகையின. தேசத்துக் கோயில்களில் மக்கள் அனைவரும் பேதமின்றி இணைவதும் ஊர்க் கோயில்களில் தம் ஊரின் வழமைகளுக்கியைய வழிபாடுகளைப் பேணுவதுமான ஒரு ஜனநாயகத் தன்மை இப்பிரதேசத்தில் பண்டு தொட்டு இருந்து வருவதனால் இங்கு ஒரு சமூகப் பொறுமையும், ஒற்றுமையும் இருப்பதைக் காண முடிகிறது.

இங்கு ஒவ்வொரு இந்துக் கோயில் வழிபாடும் ஒவ்வொரு பண்பாட்டுத் தளத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது.

ஆகம முறையில் வழிபடப்படும் சிவன், பிள்ளையார், முருகன் போன்ற தெய்வங்கள் இங்கும் பிரதானமாயினும் சிறு தெய்வம் என்று பிறரால் அழைக்கப்படும் கண்ணகியும் இங்கு பிரதான தெய்வம் தான். அத்தோடு மாரி, காளி, திரௌபதி, பேய்ச்சி, வைரவர் போன்ற தெய்வங்களும் இங்கு பிரதான தெய்வங்கள் தாம். தாந்திரிக வழிபாட்டினடியாக வந்த வழிபாட்டு முறைகள் இப் பிரதேசத்தில் உயிர்த்துடிப்புடன் பேணப்படுகின்றன.

இத்தெய்வங்கள், தெய்வ வழிபாடுகள், பற்றி சிற்றிலக்கியங்களும், காவியங்களும் தோத்திரப் பாடல்களும் இங்கு தோன்றியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஒவ்வொரு விதமான கோயில்களிலும் பொதுமைகள் காணப்படினும் வித்தியாசம் வித்தியாசமான கலைப் பாரம்பரியங்களுமுண்டு.

இவ்வகையில் பல்வேறு தெய்வங்கள், பல்வேறு வழிபாடுகள், பல்வேறு இலக்கியங்கள், பல்வேறு கலைகள், பல்வேறு பண்பாடுகள் என ஒரு பன்மைத் தன்மை இங்கு காணப்படுவது இப் பிரதேச இந்துப் பண்பாட்டின் ஒரு சிறப்பம்சமாகும்.

*பன்மைத் தன்மையும், ஒன்றில் இன்னொன்றன் அம்சங்களைக் காண்பதும், ஒன்றை ஒன்று புரிந்து கொண்டு வாழ்வதும் தான் ஜனநாயகத்தின் உச்ச அம்சம்.* அது மட்டக்களப்பின் இந்துப் பண்பாட்டின் நடைமுறையிற் காணப்படுகிறது. *வானவில்லின் அழகு அதன் ஏழு நிறங்களால் உருவாவது போல மட்டக்களப்புத் தமிழகத்தின் இந்துப் பண்பாட்டின் அழகு அதன் பன்மைத் தன்மையால் உருவாகியுள்ளது.*

இப்பன்மைத் தன்மையினைக் கொண்டு வரும் வகையில் மலர் உருவாக வேண்டும் என விரும்பினோம். மலர் உருவான முறை கண்டு அதனை ஒரு நூலாக வெளியிடுதல் பயனுடையது எனச் சபை முடிவு செய்தது.

மட்டக்களப்புத் தமிழகத்தின் இந்து வழிபாட்டு முறைகள், இந்துக் கலைகள், இந்து இலக்கியங்கள், இந்து நாடகங்கள், இந்துமத இயக்கங்கள், இன்றைய நிலைமை என்ற பிரிவுகளை இது உள்ளடக்கிய போது *மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு* என்ற தலைப்பினை இந்நூலுக்கு இடுவது என முடிவாயிற்று

இந்நூலில் எனது இடம் இத்தலைப்பு சம்பந்தமான கட்டுரைகளை உரியவர்களைத் தெரிந்து எழுதத் தூண்டியதும், தேடிப் பெற்றதும், அவற்றை ஒழுங்குபடுத்தியதும், தொகுத்ததுமேயாகும். விளம்பரங்கள் மூலமும் சில கட்டுரைகள் கோரப்பட்டன. வந்தவற்றுள் பிரசுரித்தற்குரியவை தெரியப்பட்டுமுள்ளன. சிலரிடம் கட்டுரைகள் பெறுவது கல்லிலே நாருரிப்பது போன்ற நிலையை ஏற்படுத்தியது.

இந்து மதத்தின் இன்றைய நிலை சம்பந்தமாக ஓர் அறிக்கை சமர்ப்பிப்பது என மட்டக்களப்புக்கிளை தீர்மானித்தது. அதற்குப் பொறுப்பாக திரு. எஸ். தியாகராஜா, கலாநிதி ரவீந்திரநாத், திரு. கு. தெட்ஷணாமூர்த்தி, திரு. காசுபதி நடராஜா, சி. த. கோபாலசிங்கம், சாந்தி கேசவன் என்போர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் மட்டக்களப்பின் பல பாகங்களுக்கும் சென்று பலதரப்பட்ட மக்களையும் சந்தித்து ஓர் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். அவ்வறிக்கையை இந்நூலுடன் இணைப்பதெனச் சபை தீர்மானித்தது. அதுவும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரைகளில் இடம்பெறும் கருத்துகளுக்கு அவ்வக் கட்டுரையாளர்களே பொறுப்பானவர்கள். எனது பணி நாரிலே பூக்கோப்பது போல பூவிலே காணப்பட்ட சில ஒழுங்கீனங்களைச் செம்மை செய்து இக் கட்டுரைகளை அழகுபடுத்தித் தொகுத்தமை மாத்திரமே.

இரண்டு வாரங்களுக்குள் இவற்றைத் தொகுத்து அச்சிட வேண்டியிருந்தது. இவற்றை எவ்வண்ணம் செய்து முடிக்கப் போகிறோம் என்ற கவலையும், செய்து முடிப்பேனா, என்கிற ஐயமும் எனக்கு இருந்தது. எனினும் இச்செயலை நன்றாகவும், செம்மையாகவும் முடிக்க பலர் பக்க பலமாயிருந்தனர்.


அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திரு. இ. மோனகுரு சாமி, கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் திரு. ம. செ. மூக்கையா, வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் பிரதிநிதியான திரு. எஸ். தியாகராஜா, சபையின் செயலாளர் தெட்ஷணாமூர்த்தி, உபசெயலாளர் திரு. காசுபதி நடராஜா, ஆலய ஒன்றியத் தலைவர் திரு. ஆறுமுகம் எஸ். கோபாலசிங்கம் (வெல்லவூர்க் கோபால்) போன்றோர் அதிற் குறிப்பிடத்தக்கவர்கள். அத்தோடு கட்டுரை வழங்கிய கட்டுரை ஆசிரியர்கட்கும் நன்றிகள்.

இதனை விரைவாக கணினியிற் பதித்துத் தந்த எமது துறை சார்ந்த செல்விகள் மாலதி, தமிழ்ச் செல்வி ஆகியோருக்கும், விரைவாக அச்சிட்டுத் தருவதாக உறுதி மொழி தந்து உரிய நேரத்தில் அச்சிட்டுத் தந்த பழைய மாணவரும், நண்பருமான குமரனுக்கும், ஊழியர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

**பேராசிரியர் சி. மௌனகுரு**
நுண்கலைத் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்
28.04.2003.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில்களும் வழிபாட்டு முறைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாவட்ட இந்துக் கோயில்களை வகைப்படுத்துதல்

– பெ. பேரின்பராசா B.A. (Hons.) Dip. in Ed. –

*பாரம்பரிய பண்பாட்டு மரபுகளும், சுவடுகளும் பதிந்துள்ள முதிர்ந்த பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டம் விளங்குகின்றது. பல்வேறு பூர்வீக தடயங்கள், சோழ சாம்ராச்சிய எச்சங்கள், பௌத்த பண்பாட்டுக்கள் இணைந்து தமக்கென தனித்துவமாக சமய பண்பாட்டு அம்சங்களைக் கொண்டு இம் மாவட்டம் விளங்குகின்றது.*

*மட்டக்களப்பு மாவட்ட இந்துப் பண்பாட்டு மரபின் தனித்துவத்திற்கு இம்மாவட்டமெங்கும் நிறைந்துள்ள சிறியனவும் பெரியனவுமாகிய கோயில்களே சான்று பகருகின்றன. பண்பாட்டு வேர்கள் ஆழமாகப் புதைந்து போயிருக்கும் நிறுவனங்களாகக் கோயில்களைக் குறிப்பிடலாம். மட்டக்களப்பு மாவட்டத் திருக்கோயில்களை பல்வேறு கட்டமைப்பில் வகைப்படுத்த முடியும். இதுவரையிலான வகைப்படுத்தலில், சிவனாலயம், விஷ்ணு ஆலயம், விநாயகர் ஆலயம், சக்தி கோயில்கள், முருகன் ஆலயம், ஏனைய பிற ஆலயங்கள் என தெய்வீக அடிப்படையிலே வகுக்கப்பட்டிருப்பதனைக் காண முடிகிறது.*

*ஆயினும், மட்டக்களப்பு மாவட்டச் சமூக வரலாற்றியலுடன் தொடர்பான வகையில் மாவட்ட ஆலயங்களை வகைப்படுத்துகையில் மட்டக்களப்புப் பிரதேச இந்துப் பண்பாட்டின் தனித்துவமான பண்புகள் பலவற்றை அவதானிக்க முடியும். மட்டக்களப்புப் பிரதேச இந்துக் கோயிற் கட்டமைப்பினைப் பின்வரும் அடிப்படையில் சுருக்கமாக நோக்கமுடியும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மட்டக்களப்புப் பிரதேச புராதன காலத்தனவும் சிதைந்த சிவாலயங்களும்.

2. தேசத்துக் கோயில்கள் எனப் புகழப்படுபவை.

3. இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சியினூடாக வளர்ச்சி பெற்ற இந்துக் கோயில்கள்.

4. சிற்றரசர்களின் பரிபாலனத்துக்குட்பட்ட ஆலயங்கள்.

5. தொழில்சார் நிலையங்களில் முக்கியத்துவம் பெற்ற கோயில்கள்.

6. கிராமியக் கோயில்கள்

என வகைப்படுத்தலாம்.

இவ்வாறு திருக்கோயில்களின் வரலாறுகளை வகைப்படுத்துகையில் சாதிகளின் வரலாறுகளுடனும் ஊர்ப்பெயர் வரலாறுகளுடனும் தொடர்பான வகையில் ஆலயங்கள் தொடர்புபட்டிருப்பதைக் காண்கிறோம்.

மட்டக்களப்புப் பிரதேச கோயில்கள் பற்றிய ஆய்வுகள் சமூகவியல் பண்பாட்டு இருப்பை மேலும் வலியுறுத்துவனவாக அமைந்துள்ளன. பிராமணர்கள் கிரியைகள் செய்யும் கோயில்கள், கப்புகனார் பூசை செய்யும் மண்டூர் கோயில், பூசாரிமார் சடங்கு செய்யும் கோயில்கள், சைவக் குருமாரின் பரிபாலனத்தில் உள்ள கோயில்கள், ஊர்ப் பெரியவர்கள் பூசை செய்யும் கோயில்கள் எனப் பலவகையிலும் காணப்படுகின்றன. இவற்றோடு கிராமியக் கோயில்களில் அடங்கும் பெரியதம்பிரான், வீரபத்திரர், வைரவர் கோயில்களும் இதில் அடங்கும்.

மட்டக்களப்புப் பிரதேச இந்துக் கோயில்களை வகைப்படுத்துகையில் சிற்றரசு ஆட்சியிலே சிதைந்த கோயில்களில் மண்முனைப் பற்றில் கோயில் குளம் பிரதேசத்தில் சிதைந்து போன கோயில்கள் முக்கியமானவை. இக்கோயில்கள் கலிங்கமாகன் ஆட்சியிலிருந்து தோன்றியிருக்கலாம் என்பது ஆய்வாளர் குறிப்பு. கலிங்கமாகன் ஆட்சிக் காலம் ( ) என்பது பேராசிரியர் பூலோகசிங்கம் அவர்களது கருத்து. (இந்துநெறி) மண்முனைப்பற்று பிரதேசம் மட்டக்களப்பின் பிரதான ஆட்சியிடமாக அமைந்திருந்தமை குறிப்பிடப்படுகின்றது.

மட்டக்களப்பிலும் ஆரம்பகாலக் கோயில்கள் சிவாலயங்களாகவே விளங்கின என்பது பிரதான குறிப்பு. ஐரோப்பியர் வருகையின் போது சிவாலயங்களே கூடுதலாக சிதைக்கப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. திருப்பெருந்துறை முருகன் கோயிலுக்கண்மையிலும் சிவாலய எச்சங்கள் இருப்பது பற்றியும் அறியப்படுகிறது. நாதனையாற்று பெரு வெளியிலும் சிதைந்த கோயில் எச்சங்களை நோக்க முடியும். நாதனை என்பது வெல்லாவெளிப் பிரதேசத்தைக் குறிப்பது கதிரவெளி/ஏறாவூர் பகுதிகளிலும் சிதைந்த கோயில் அடையாளம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்துக் கோயில்கள் என்பன பல்வேறு சமூகதளப் பின்னணியில் தோற்றம் பெற்றுள்ளன. தேசத்துக் கோயில் மரபில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீச்சரமும், மண்டூர் முருகன் கோயிலும் கோயிற் போரதீவு சித்திரவேலாயுதர் சுவாமி கோயிலும் முக்கியத்துவம் பெறுகின்றன. தேசத்துக் கோயில்கள் என்னும் போது -

இப்பிரதேச பல்வேறு சமூக கட்டமைப்பு நிருவாகத்திற்குள்ளும் அடக்கப்பட்ட கோயில்கள் அடங்கும். வீரமுனை துறை நீலாவணை, கல்லாறு, குறுமன்வெளி, மண்டூர் முதலிய கிராம சமூகங்களின் பண்பாட்டுப் பின்புலத்தோடு, மண்டூர் முருகன் கோயில் தொடர்புபட்டுள்ளது. அதேபோலவே மண்முனைப்பற்றின் ஒரு கூறாகிய மண்முனை மேற்குப் பிரதேச மக்களின் பூர்வீக வாழ்வியல் முறைகளுடன் இணைந்ததாகக் கொக்கட்டிச் சோலை தான்தோன்றியீச்சரம் காணப்படுகின்றது.

மட்டக்களப்பு பிரதேச கோயில்களின் வரலாற்றில் காணப்படும் விசேட அம்சங்கள் சிலவற்றைப் பற்றியும் ஆய்வாளர்கள் குறிப்பினை நோக்கல் வேண்டும். ஆரம்பத்தில் சிவாலயங்களே காணப்பட்டன என்னும் குறிப்பு காணப்பட்டாலும் மட்டக்களப்பின் பாரம்பரிய சமூக முறைமை வேடர்வழிவந்த வழிபாடுகளையே சுட்டிக் காட்டுகின்றன. பேராசிரியர் சிற்றம்பலம் அவர்கள் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரம் பற்றிக் குறிப்பிடுகையில் 1900 ஆண்டுகளைத் தொடர்ந்து ஐரோப்பிய கலாசாரத்துடன் தொடர்பான வளர்ச்சியில் கிராமிய மறுமலர்ச்சிகள் ஏற்பட்டன. கிராமங்களை இணைக்கும் உள்ளூர் வீதிகள் இக்காலத்திலே ஏற்பட்டன. இதனைத் தொடர்ந்து புயல், வெள்ளம் முதலியனவும் தொற்று நோய்களும் பரவத் தொடங்கின. இக் காலத்தினைத் தொடர்ந்து ஊர் முனைகளில் மாரி, அம்மன் கோயில்கள் அமைக்கப்பட்டன. இவ்வாறு ஊர் முனைகளில் அமைக்கப்பட்ட அம்மன் ஆலயங்களுக்கும் அண்மையில் மக்கள் குடியிருப்புக்கள் நெருங்கிக் காணப்படுகின்றன. இது மக்கள் குடித்தொகைப் பெருக்கத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

மட்டக்களப்புப் பிரதேசம் மகாபாரத இலக்கிய கலாசாரப் பண்புகள் கொண்டது. பாரத அம்மானை ஏடு மட்டக்களப்பு பிரதேச பண்பாட்டின் சொத்தாக விளங்குகின்றது. சோழர் கல்வெட்டுக்களில் "பாரத விருத்தி" எனக் குறிப்பிடப்பட்ட நிபந்தம் பாரத கதையை கோயிலில் படிப்பவர்களுக்கு வழங்கப்பட்டதாகும். பாரத கலாசாரத்தின் விளைவால் கிருஷ்ணன் கோயில்கள், திரௌபதி கோயில்கள் தோன்றும் மரபு ஏற்பட்டது. கஞ்சன் அம்மானைப் படிப்பு ஊர்கள் தோறும் பெருமை பெற்று வருவதும் நினைவு கூரத்தக்கது.

கி. பி. 1800களைத் தொடர்ந்து போர்த்துக்கேய ஒல்லாந்த கெடுபிடிகளும் கட்டுப்பாடுகளும் குறையத் தொடங்க இந்து சமய மறுமலர்ச்சி வேரூன்றத் தொடங்கியது. ஊர்கள் தோறும் விநாயகர் கோயில்கள் அமைக்கப்பட்டன. இவை தவிர தமிழ்நாட்டிற்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்பட்ட தொடர்பால் இவ்வாலயங்களுக்குப் புத்துயிர்ப்பும் ஏற்பட்டது. அத்தோடு புதிய கோயில்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழவும் வாய்ப்பேற்பட்டது. செட்டிபாளையம் சிவன் ஆலயம், குருக்கள் மடம் விஷ்ணு கோயில் என்பவை 1940களில் சுவாமிஜி சோமேஸ் வரானந்த கிரி அவர்களால் ஸ்தாபனம் செய்யப்பட்டமையைக் குறிப்பிடலாம்.

"ஆதியில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் ஆலயம் ஒரு முருக வழிபாட்டிடமாக இருந்தது. பின்னர் தான் சிவ வழிபாட்டிடமாக மாறியது" என குறிப்பிட்டுள்ளார் (சிந்தனை தொகுதி II இதழ் III யாழ். பல்கலைக்கழகம்). இவ்வகையில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம், மண்டூர் முருகன் கோயில் இரண்டும் தேசத்துக் கோயில் மரபில் முக்கியத்துவம் பெறுவதைக் காண்கிறோம். வேடர் வழி வந்த முருக வழிபாடு கிழக்குப் பிரதேச முதுசம் என்பது இதனூடாக அறியப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசத்துக் கோயில் மரபுடன் தொடர்புடையதாக திருப்படைக் கோயில்களையும் குறிப்பிடலாம். திருப்படைக் கோயில்களில் முருகன் கோயில்களே பெரும்பாலும் அடங்குகின்றன. திருப்படைக் கோயில்கள் என்பவை பண்டைய அரசர்களின் உதவி, செல்வம் என்பவற்றைப் பெற்றுக்கொண்டவையாகும். இவை கலிங்க மாகன் காலத்திலிருந்தே செல்வாக்குப் பெற்றதெனக் குறிப்பிடலாம். இத்தகைய திருப்படைக் கோயில்களில் போரதீவு சித்திரவேலாயுதர் சுவாமி கோயில் முக்கியமானது. இதனைத் தொடர்ந்து மண்டூர், சித்தாண்டி ஆலயங்களும் திருப்படைக் கோயில்கள் என்னும் மரபில் அடக்கப்படுகின்றன.

இவற்றில் கோயிற் போரதீவு சித்திரவேலாயுதர் சுவாமி கோயில் பற்றிய பூர்வீகச் செய்தியொன்று குளக்கோட்டன் பணி செய்த கோயில்களின் பட்டியலில் கூறப்படுகின்றது. கோயிற் போரதீவு சித்திரவேலாயுதர் சுவாமி கோயிலுக்கு வெள்ளை நாவலம்பதி என்று தற்போதும் வழங்கும் பெயர் குளக்கோட்டன் பணியாற்றிய கல்வெட்டுப் பாடல்களில் விரிவாகப் பாடப்பட்டுள்ளதென அறிகிறோம்.

1800 ஆண்டுகளைத் தொடர்ந்தே கொத்துக்குளம் முத்துமாரியம்மன் ஆலயம், அம்பிளாந்துறை முத்துமாரியம்மன் ஆலயம் என்பன புதுப்பொலிவு பெற்றுள்ளன. தொழில்சார் நிலைய ஆலயங்களில் பாடசாலை, வைத்தியசாலை கட்டப்படும். பொலிஸ் நிலையங்களுக்கு அண்மையில் ஆலயங்களும் வயல் பாதுகாப்பிற்கான விநாயகர் நாகதம்பிரான் ஆலயங்களும் இத்தகைய பிரிவில் அடங்கும். வீடுகளிலும் வைரவர் பந்தல்களும் வீட்டுத்தலங்களாகவே கருதப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாலயக் கிரியைகளும் அவற்றின் முறைகளும் சில குறிப்புக்கள்

– பிரம்மஸ்ரீ ம. பாலகைலாசநாத சர்மா B.A. (Hons.) M.Phil. –

சிவனை முழுமுதற் தெய்வமாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவ சமயமாகும். சைவத்திருக்கோயில்களில் நிகழும் கிரியைகள், வழிபாட்டு முறைகள் என்பன சிவாகமங்களை அடிப்படையாகக் கொண்டவை. 'ஆகமம் என்பது தொன்றுதொட்டு நிலவி வரும் அறிவு அல்லது முறை' எனச் சொல்விளக்கம் பொருள்படும். இவை சிவபரமாக வைத்துப் பேசப்படுவதால் 'சிவாகமங்கள்' எனப்படுகின்றன. காமிகாதி முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டாகும். இவ்விருபத்தெட்டாகமங்களிலும் கிரியை பற்றிய விளக்கங்களையும் வழிபாட்டு முறைகளையும் விரிவாகவும் சிறப்பாகவும் விளக்கும் பகுதியே 'கிரியாபாதம்' எனப்படும். இப்பிரிவே ஆகமங்களில் முக்கியமான விரிந்த பகுதியாகும்.

இக்கிரியாபாதத்திலே கிரியைகளுக்குத்தான் முதலிடம் அளிக்கப்படுகிறது. இப்பகுதியிலே திருக்கோயில்களிலே அனுஷ்டிக்க வேண்டிய கிரியைகள் பற்றிய விடயங்கள் மூன்று பாகங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் எனவும், பிரதிஷ்டாதி உற்சவாந்தம் எனவும் உற்சவாதி பிராயச்சித்தாந்தம் எனவும் கூறப்பட்டிருக்கின்றன.

'கர்ஷணம்' என்பது உழுதல் 'ஆகர்ஷித்தல்' எனவும் நேரடியாகப் பொருள்படும். இறைவனை 'ஆகர்ஷணம்' செய்வது முதற்கொண்டு பிரதிஷ்டை வரை செய்வதான கிரியைகள் கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் என வழங்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பிரதிஷ்டா என்பது ப்ரகர்ஷணதிஷ்டதி அநயாப்ரக்ரியா சிவ, இது பிரதிஷ்டா என பிரதிஷ்டைக்கு விளக்கமளிப்பர். எங்கும் நீக்கமற நிறைந்தும், கடந்தும், உள்ளும், புறமும் இருப்பவராகிய சிவன் பிரதிஷ்டாவிற்கு முன்பே ஆலயங்களிலும், திருமேனிகளிலும் நிறைந்து இருப்பினும் எந்தக் கிரியையினால் சாந்நித்தியமாக சிறப்புற விளங்குகின்றாரோ அதற்கு 'பிரதிஷ்டா' எனப் பெயர் கூறப்படும்.

கோயில் அமைப்புக்கு முன்பு இறைவனை அவ்விடத்தில் ஆகர்ஷித்தல் வேண்டும். இக்கிரியையே முதலில் நடைபெறுவதால் கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் என்னும் சொல்லிற்கு இறைவனை ஆகர்ஷிப்பது முதற்கொண்டு பிரதிஷ்டை செய்வது வரையுள்ள கிரியைகள் உள்ளடக்கும். இதனை 'வாமதேவபத்ததி' சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது.ஆகமங்களிலே கர்ஷணாதி பிரதிஷ்ஷாடந்தம் என்னும் கிரியை முறைகள் பலவிதமாகக் கூறப்பட்டுள்ளன. பிரயோக முறையிலே ஆகமப்பத்ததி கிரமமே மிகவும் முக்கியமாகின்றது. ஏனெனில் ஆகமங்களிலே கிரியைகளுக்கு எவ்வளவு முக்கியமிருக்கின்றதோ அதனைவிட பத்ததிகளிலே கிரியைகளின் கிரமத்திற்கு முறைக்கு வரிசைக்கு முக்கியத்துவம் அதிகமாகின்றது. பிரதிஷ்டாதி உற்சலாந்தம் என்பதில் பிரதிஷ்டைக்கு பின்பு நிகழும் கிரியைகள் முதல் உற்சவம் வரையுள்ள கிரியைகளும் அவற்றின் முறைகளையும் உள்ளடக்கும். உற்சலாதி பிராயச் சித்தாந்தம் என்பதில் உற்சவம் முதல் பிராயச்சித்தம் வரையுள்ள கிரியைகளும் அவற்றின் முறைகளையும் உள்ளடக்கும். இவற்றின் முறைகளை மூல ஆகமங்களிலும், பிரயோக முறைகளை ஆகமப்பத்ததிகளிலும் சிறப்பாகக் காணலாம்.

மூல ஆகமங்களிலே பெரும்பாலும் கிரியைகள்தான் விஸ்தாரமாக விதி முறைகளுடன் விளக்கப்பட்டுள்ளனவே தவிர. கிரியைகளின் கிரமம் - முறை - வரிசை தெளிவாக விளக்கப்படவில்லை. ஆனால் கிரியைகளுக்கான பிரயோக முறைகளையும் கிரியைகளின் சிரமத்தையும் அவற்றிற்கான மந்திர முறைகளையும் தெளிவாக விளக்குவனவே, 'பத்ததிகள்' ஆகும். இவற்றைத் தொகுத்து எழுதியவர்கள் 'பத்ததி ஆசிரியர்கள்' எனப்படுவர். இவை 'பதினெண்பத்ததிகள்' எனவும், 'பதினெண்பத்ததி ஆசிரியர்கள்' எனவும் வழங்கப்படுகின்றனர். அரும்பாடுபட்டு மூல ஆகமங்களின் விதி ஸ்தோத்திரங்களை பிரமாணமாகக் கொண்டு பிரயோக முறைகளில் தொகுத்து அமைக்கப்பட்டனவே இப்பத்ததிகளாகும். இவை பெரும்பாலும் தமது ஆசிரியர்களின் பெயர்களையே முதன்மையாகக் கொண்டமையும் உதாரணமாக 'சோம சம்பு பத்ததி' அகோர சிவச்சாரியார் பத்ததி, 'வாமதேவ பத்ததி' என ஆசிரியர்களைக் குறித்து வரும். இவற்றில் அஹோர சிவச்சாரியாரின் பத்ததி மிகவும் பிரசித்தமானதும், அதிகளவு நடைமுறையில் காணப்படுவதுமாகும். இப்பத்ததி கிரியாக்ரம ஜோதிக்களைக் 'கிரியாகாண்ட கிராமவளி' எனவும் சிறப்பித்து வழங்கப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயில் அமைத்து அங்கே இறைவனை பிரதிஷ்டை செய்வதற்கான கிரியைகளைப் பதினெண் பத்ததியாசிரியர்கள் பலவிதமாகப் பிரித்தும் வரிசைப்படுத்தியும் கூறியுள்ளனர். பத்ததியாசிரியர்கள் தங்கள் பத்ததி ஒவ்வொன்றிற்கும் எந்தெந்த மூல ஆகமங்களைக் பிரமாணமாகக் கொண்டனர் என்பதை இலகுவாகக் கண்டறிவது மிகவும் கடினமாகும். கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் என்ற கும்பாபிஷேக கிரியை முறைகளை 'வாமதேவ பத்ததி' 'சதுஷ் ஷஷ்டி கிரியாமாலா' எனப் பெயரிட்டு அறுபத்து நான்கு கிரியைகளாகப் பிரித்து விஸ்தாரமாகக் கூறுகின்றது. அஹோர சிவாச்சாரியார் பத்ததி கிரியைகளின் கிரமத்தை 'பிரதிஷ்டா அனுக்கிரமணி' எனப் பெயரிட்டு வரிசைப்படுத்திக் கூறுகின்றது. இவற்றை நாற்பத்திரெண்டு (42) கிரியைகளாகவும், நூற்றி முப்பது (130) கிரியைகளாகவும் குறிப்பிடுகின்றது. இதன் விரிவாக்கத்தை அஹோர சிவச்சாரியின் சிவலிங்கப் பிரதிஷ்டா விதியின் அனுக்கிரமணியில் காணலாம். அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள் அவர்களின் சிவலிங்கப் பிரதிஷ்டா விதியிலும் அனுக்கிரமணியே கிரியைப் பிரயோகத்திற்கு முதன்மையாக அமைந்துள்ளது.

இவையனைத்தையும் சுருக்கி 'அஷ்டாதச கிரியாவளி' (பதினெட்டுக் கிரியைகளுக்கான கிரமம்) எனவும் குறிப்பிடப்படும்முறையும் உண்டு. இந்த அஷ்டாதச கிரியாவளியும் இருவிதமாகக் கிடைக்கின்றது. எனினும் இவ்விரண்டு அஷ்டாதச கிரியாவளிகளுக்கும் கிரமத்தில் தான் வேறுபாடு உள்ளதே தவிர முக்கியமான கிரியைகள் பெரும்பாலும் ஒன்றாகவே உள்ளன என்பது கவனிக்கத்தக்கது. ஓர் அடிப்படைக் கருத்தினை மையமாகக் கொண்டே இரண்டு கிரமங்களிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக முதலில் நூதன மூர்த்திகளுக்குரிய கிரியைகளைச் செய்துவிட்டு பின்பு யாகபூசை, ஜபம், ஹோமம் முதலிய கிரியைகளைச் செய்வது என்னும் அடிப்படையில் ஒரு 'அஷ்டாதச கிரியாவளியுள்ளது.' மற்றைய முறையெனில் யாகபூசை ஜபம், ஹோமங்கள் ஆகியவற்றை தொடங்கி பின்பு நூதன மூர்த்திகளுக்குரிய கிரியைகளைச் செய்தல் என்னும் அடிப்படையில் மற்றொரு அஷ்டாதச கிரியாவளி அமைந்துள்ளது.

இவற்றின் விஸ்தார பஷங்களை 'சிவப் பிரதிஷ்டா விதி' 'சிவலிங்கப் பிரதிஷ்டாவிதி' ஆகிய பத்ததிகளில் காணலாம். இவை உத்ததம், மத்திமம், அதமம் என்ற நிலைகளில் கூறப்பட்டுள்ளன.

அடுத்து பூசைக்குரிய காலங்களைப் பற்றி நோக்கும் போது இவற்றின் விதிகளை மூலாகமங்களிலே தெளிவாகக் காணலாம். முதலில் அதிகளவு நடமுறையில் இருக்கும் காமிகாகம விதிமுறைகளைக் குறிப்பிடலாம்.

முதலில் கால பேதத்தை குறிப்பிடும்போது காலமானது ஒன்றே ஆதலால் பேதமில்லாமல் உத்வாஸாதி பேதத்தால் இரவு பகல் ரூபமான கால, பேதத்தைக் கூறலாம். 'காமிகத்தில் அறுபது உச்சவாஸங்களுக்கே ஒரு பிராணம் என்றும், ஆறு பிராணம் ஒரு ஏழரை கடிகைகளுடைய யாமம் என்கிற எட்டுச் சந்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் கூறுகின்றது. கடிகை எனவும் அறுபது கடிகை ஒரு அஹோராத்திரம் என்றும் கூறப்படுகிறது. எனவே இந்த எட்டுச் சந்திகளிலும் பூசை செய்வது உத்தமோத்தமம் என்று அறிந்து கொள்ளலாம். இந்த எட்டு சந்திகாலங்களில் பூசை இல்லை. கிரமமாக அதமபாவத்தையடைந்து ஒன்பது பேதமாகின்றது. இவ்விஷயமானது காமிகாமத்தில் எட்டு, ஏழு, ஆறு, ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என்ற பாதியாமங்களில் பூசைக் காலங்களை அமைத்துச் செய்வதால் மேற்கூறிய ஒன்பதுவிதமாக ஆகுவது என்று கூறப்பட்டிருக்கின்றது.

காரணாகமத்தில் மஹாசந்தியினுடைய ஏழரைக் கடிகாகாலத்தில் செய்ய வேண்டிய கிரியைகளுடைய விளக்கம் கூறப்படுகிறது. எப்படியெனின் ஸ்நானத்திற்கும் நித்தியோற்சவத்திற்கும் இரு நாழிகையெனவும், அர்ச்சனை நர்த்தனம் என்பனவற்றிற்கு ஒரு நாழிகையெனவும், நிவேதனம், பலிப்பிரசாதம் நித்தியாக்னி கார்யத்திற்கு அரை நாழிகையெனவும் கூறப்பட்டிருக்கிறது. இவை மஹாஸந்தியா, மஹாஸசந்தியார்ச்சனை என விபரமாகக் கூறப்பட்டிருக்கிறது.

அஜிதாகமத்தில் எட்டு யாமங்களிலும் பூஜிக்க வேண்டுமெனக் கூறி எட்டுக் காலங்களில் ஐந்து உத்ததம் எனவும் மூன்று மத்திமம் எனவும் இரண்டு அதமம் எனவும் கூறப்பட்டிருக்கிறது. சாஸ்திரீயமாக இரவு நான்கு காலங்கள் பகல் நான்கு காலங்கள் பூசைகளைச் செய்தால் உத்தமோத்தமம் என்றும், பகல் நான்கு காலங்கள் இரவு மூன்று காலங்கள் பூசை செய்தால் உத்தம மத்யமம் என்றும் பகல் நான்கு காலங்கள் இரவு இரண்டு காலங்கள் பூசை செய்தால் உத்தமாதமம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. காலை மதியம், சாயங்காலம், இரவு, இரண்டாவது ஜாமம், அர்த்தஜாமம் ஆகிய காலங்களுக்குரிய பூசை மத்யமோத்தமம் என்றும் காலை, மாலை காலங்களில்செய்யும் பூசை மத்யமாதமம் என்றும் காலை, மதியம் மாலைகளில் செய்யும் பூசை மத்யமாதமம் என்றும் காலை, மாலைகளில் செய்யும் பூசை அதமோத்தமம் என்றும் ஒரு நாளில் ஒரு தடவை மட்டும் செய்யும் பூசை அதம மத்யம் என்றும் எட்டுவிதமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

இவைகளில் ஹலிர்நிவேதானந்தமான பூசை சுத்தம் என்றும் நித்தியோம்ஸவமான பூசை 'மிஸ்ரம்' என்றும் நர்த்தனார்த்தமான பூசை 'ஸங்கீர்ணம்' என்றும் மூன்று பிரிவுகளாகவும் வகைசெய்யலாம். காலை மதியம் சாயங்காலங்களில் மிஸ்ரம் அல்லது சங்ககீர்ண பூசையைச் செய்ய வேண்டும். உயசந்த்யா பூசையை சாந்நியத் இருந்தால் மிஸ்ர சங்கீர்ணங்களை செய்யாமல் சுத்த பூசை மட்டுமே செய்யவேண்டும். சூர்யோதயத்துக்குப் பின்பு ஒரு யாமகாலத்தில் செய்யும் பூசை பூர்வ சந்தியா அல்லது மஹாசந்தியா என்று கூறப்பட்டிருக்கிறது. பகலில் இரண்டு மஹாசந்தியா இரண்டு உப சந்தியாக்களும் இரவில் ஒரு மஹாசந்தியா, மூன்று உபசந்தியாக்களும் செய்ய வேண்டும் என அஜிதாகமம் கூறுகின்றது.

மேலும் நடைபெறுகின்ற பூஜாக் கிரமத்தில் வித்தியாசம் உண்டானால் பிராயச்சித்தம் செய்ய வேண்டும் எனக் கூறுகின்றது. கால நேரம் மாறி வித்தியாசமாகச் செய்தால் உலகத்திற்கும் ஷேமத்திற்கும் தாழ்வு வருவதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை நிவர்த்தி செய்ய நியமிக்கப்பட்டவரே பிராயச் சித்தம் செய்ய வேண்டும் என அஜிதம் கூறுகிறது.

காமிகாகமத்தில் பூர்வகாலத்தில் இடைவிடாமல் நடைபெறுகின்ற விஷயத்திற்கும் சாஸ்திரத்திற்கும் விரோதமாக இருந்தால் அதனை நிவர்த்தி செய்து அனுசானக் கிரமத்திற்கு அதிகமாக நடந்தால் தோஷமில்லை. ஏதாவது நிமித்தம் உண்டானால் குறிப்பாக கிரஹண நிமித்தம் மாசபூஜா் நிமித்தம் செய்கின்ற பூஜாதிகள் 'நைமித்தியங்கள்' எனப்படும். புத்திரா் முதலிய காமதோஷத்தால் செய்கின்ற விசேட பூசைகள் 'காம்யம்' எனக் கூறப்படும். இந்த காம்ய பூசைகளுக்கு கால நியமம் கிடையாது. எப்போது விருப்பம் நிறைவேறுமோ, அப்போது காம்ய பூசையைச் செய்யலாம். காம்ய பூசைகளை நித்ய பூசைகளோடு கூடிச் செய்யக் கூடாது என்று சூட்சுமாகமம் கூறுகின்றது.

சூட்சுமாகமத்தில் பூசையானது ஐந்து விதமாகப் பிரிக்கப்பட்டு உள்ளது. 'பிரக்ருத காலம்' எனவும் 'சூட்சுமஸ்தூல காலம்' எனவும் இருவிதமாகவும் இருக்கிறது. லௌகிகமாக நாங்கள் உபயோகிக்கின்ற காலமானது 'ஸ்தூலம்' என்றும் ஆத்யாத்ம விஷயகாலமானது 'சூட்சுமம்' என்றும் அறிந்து கொள்ளலாம். ஆகையால் சூட்சும காலத்தை வியவாகாரத்தின் பொருட்டு விசாரம் செய்யலாம். சூட்சுமாகமம் யோகிகள் நான்கு முறை கண் சிமிட்டுதல் ஒரு 'திருடி' எனவும் இரு திருடி ஒரு லவம், இரு லவம் ஒரு நிமிடம், பதினைந்து நிமிடம் ஒரு காஷ்டா, முப்பது காஷ்டா ஒரு கலை, முப்பது கலை ஒரு முகூர்த்தம், ஏழு கடிகை ஒரு யாமம், எட்டு யாமம் ஒரு அஹோ ராத்ரம் என இரண்டு நியமங்களைக் கூறுகின்றது. எட்டு யாமங்களிலும் அர்ச்சனை முதலியவை செய்வது உத்தம பூசையாகும். சந்திகளின் காலத்தில் செய்வது மத்யமபூசை. மூன்று சந்திகளில் செய்கிறது அதம பூசையாகும்.நான்கு சந்திகளில் செய்வது அதமபூசையாகும். உப சந்தியர மஹாசந்தியா காலங்களில் பூசைகளைச் செய்தாலும் பூசைக்கு அடக்கமான உற்சவத்தை மூன்றே சந்தியா காலத்தில் செய்யவேண்டும். பலிப்பிரதனம், அபிஷேகம், நிவேதானந்தம், தீப நீராஞ்சனாந்தம் என்பன ஒரு சந்நிதியிலாவது அவசியம் செய்ய வேண்டும் என்று சூட்சுமாகமம் கூறுகின்றது.

அம்சுமதாகமம் நித்திய பூசைகளைச் செய்த பின்பு நைமித்தியத்தைச் செய்ய வேண்டும் எனக் கூறுகின்றது. சந்தியாகால பூசையானது நைவேத்யந்த, பல்யந்த, தீபதானந்த ஆகிய மூன்று விதமாக இருப்பதால் இந்த நித்தியமான கா்மாசானத்தில் நைமித்திகத்தைச் செய்யும் போது ஆசாா்யன் மற்றும் அா்ச்சகா் எனக் கூறியிருப்பதால் நைமிகத்தை ஆசார்யனே செய்யவேண்டும. நித்யபூசையை அர்ச்சகன் மட்டுமே செய்ய வேண்டும் என அம்சுமதாகமம் கூறுகின்றது. நைமித்தியத்தை 'சாகல்ய, பாவன, சாந்திக, மாங்கல்யம்' என பிரித்துக் கூறுகின்றது. சாகலியத்தில் துவார பூசை தொடங்கி நிவேதானந்தமானது வரையும் அடங்கும். ஹோமங்கள் தொடக்கம் பலிப்பிராதனமானது 'பாவனம்' என்றும் தூபம் முதற் கொண்டு நர்த்தானந்தம் வரை 'சாந்திகம்' என்றும் துவாரபூசை முதற்கொண்டு தாண்டவம் நிருத்தானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை 'மாங்கல்யம்' என்றும் அம்சுமதாகமம் கூறுகின்றது. இவைகளின் முடிவில் நித்திய சந்தியை அடைந்தால் அதையும் ஆசார்யனே செய்ய வேண்டும் மற்றும் நித்திய நைமித்திக காம்யங்கள் 'நித்தியம்' எனவும் 'ஆகந்துக நித்தியம்' எனவும் இருவகையாகும். எவ்வறெனில் தினமும் செய்யும் சந்தியார்ச்சனை 'நித்தியம்' எனவும் ஒவ்வொரு மாதமும் வரும் விசேட நாட்களான அஷ்டமி, பிரதோசம், அமாவாசை, மேஷாதி, சங்கிராந்தி முதலிய பூசைகள் 'ஆகந்துக நித்தியம்' எனவும் அறியப்படுகின்றது. இவற்றையும் அர்ச்சகரே செய்ய வேண்டும்.

நைமியத்திலும் 'நைமித்திகம்' 'ஆகந்துக நைமித்திகம்' என இரு வகையுண்டு. இந்த நைமித்திகமானது தர்பணாதி, பிரதிஷ்டானம் கர்மாக்களைக் கொண்டது. இவற்றை ஆசாரியரே செய்ய வேண்டும். காம்ய பூசையானது பாஷ்யம், ஆபயந்திரம் என இரண்டு வகையாகப் பிரசித்தமானது. பலனுக்காகச் செய்கின்ற கார்யமானது 'பாஹ்ய காம்யம்' எனவும் மோசத்திற்காக சித்தசுத்தி அர்த்தமாகி செய்யப்படும் கார்யம் 'ஆபயந்தரம்' எனவும் அறியவும், இவை ஆசாரியனால் செய்யப்படவேண்டியவை. நித்தியமும் நைமித்தியமும் ஒரே காலத்தில் வந்தால் இரண்டும் ஸ்நான நிவேதன ஹோமம் முதலியவைகளை கிரமமாக ஒரே நேரத்தில் சேர்த்துச் செய்யலாம். ஆனால் ஆசார்யனே செய்யவேண்டும். பூர்வோத்தமான சந்தியா காலத்தை மீறிச் செய்யப்படும் பூசைமுறை 'அபிசார கர்மா' என அறியப்படுகின்றது.

பூசைக்குரிய காலங்களையும் அவற்றின் முறைகளையும் காமிகம் காரணம் அஜிதம், சூட்சுமம், அம்சுமதாகமங்கள் மேற்கூறிய முறைகளில் சிறப்பாகவும் விரிவாகவும் கூறியிருப்பது நோக்கத்தகுந்தவை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தேசத்துக் கோயில்களும் வழிபாடும்

**– எஸ். கோபாலசிங்கம் (வெல்லவூர்க் கோபால்) –**

மட்டக்களப்பு நாடு என்பது வடக்கே வெருகல் கங்கையிலிருந்து தெற்கே பாணமை பற்றின் குமுக்கன் ஆறு வரையும், கிழக்கே வங்காள விரிகுடா கரையிலிருந்து மேற்கே நாடு காட்டுப்பற்றின் வெல்லசை பிரிவு வரையும் இலங்கை சுதந்திரம் பெறும் வரை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் நீடித்திருந்தது. குக மரபின் முதற் பிரிவினரான கலிங்கர் மட்டக்களப்பைக் கைப்பற்றி தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்திய வரலாற்றுக் காலமாகவும் இதைக் கருத்தில் கொள்ளலாம். அப்போது கூட திமிலர் என்ற சாதியினர் வாழ்ந்திருந்தமையும், கலிங்கரால் விரட்டப்பட்ட இம் மக்கள் வெருகல் கங்கைக்கு அப்பால் குடியேறியதையும் நம்மால் அறியமுடிகிறது. கலிங்கரைத் தொடர்ந்து சேர, சோழ, பாண்டிய நாடுகளிலிருந்து காலத்துக்குக் காலம் பல்வேறு காரணங்களால் மட்டக்களப்புக்குப் புலம்பெயர்ந்த சமூகங்கள் மட்டக்களப்பு கலிங்கரோடு இணைந்து கொண்ட கூட்டு வாழ்க்கையே ஒன்றுக்கொன்று கைகொடுக்கின்ற சமூக அமைப்பாக மட்டக்களப்புக்குப் பெருமை சேர்த்தது.

இங்குள்ள நீண்ட கால வரலாற்றினைக் கொண்ட திருப்படைக் கோயில்களே இதற்கு நல்ல உதாரணமாகும். தேசத்துக் கோவில்கள் என அழைக்கப்படும் இக் கோவில்களில் எல்லாச் சமூகத்தினருக்குமான வரையறை செய்யப்பட்ட உரிமைகளும், கடமைகளும் நீண்ட காலமாக இம் மக்களை ஒன்றுபடுத்தியே வந்திருக்கின்றன. மட்டக்களப்புத் தேச வன்னிமைகளாக அக்காலம் தொடர்ந்திருந்த முற்குகர் குலப்பிரபுக்களே திருப்படைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்களின் பாதுகாவலர்களாக சாசன ரீதியாக அதிகாரம் வழங்கப் பெற்றிருந்தனர்.

மட்டக்களப்பில் தேசத்துக் கோவில்களை அடையாளப்படுத்துவதில் ஆய்வாளர்களிடையே முரண்பாடுகள் நிலவுவதைக் காண்கின்றோம். முக்கிய முருக வழிபாட்டுத் தலங்களைத் திருப்படைக் கோவில்களாகக் கருதும் நிலையில் திருக்கோவிலை அடுத்த திருப்படைக் கோவிலாகக் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரத்தை வரிசைப்படுத்தி இருப்பது கவனத்தில் கொள்ளப்படத்தக்கதாகின்றது. பொதுவாக மன்னர்களது மதிப்பினையும் மானியங்களையும் சீர்வரிசைகளையும் பெற்ற தலங்களே இவையெனக் கொள்ளுதலே பொருத்தமானதாகும்.

மட்டக்களப்பில் திருக்கோவில் சித்திரவேலாயுதர் ஆலயம் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரம், கோவில் போரதீவு சித்திர வேலாயுதர் ஆலயம், மண்டூர் முருகன் ஆலயம், சித்தாண்டி சித்திர வேலாயுதர் ஆலயம், வெருகல் சித்திரவேலாயுதர் ஆலயம் ஆகியவை தேசத்துக் கோவில்களாக இன்று கருதப்பட்ட போதும் முன்னைய மூன்றுமே குளக்கோட்டனால் சீர்வரிசை செய்யப்பட்டதாக உறுதியாகிறது. மண்டூர் முருகன் ஆலயம் மண்டுநாகன் மற்றும் மதிசுதன் என்ற சிற்றரசர்களோடு இணைத்துப் பேசப்படுகின்றதாதலின் இவர்களது பராமரிப்பு, மற்றும் மானிய வரிசைகள் இக் கோவிலுக்குக் கிடைத்திருக்க வாய்ப்புண்டு. குளக்கோட்டனின் சீர்வரிசைப் பாடலில் 'வெற்றிபுனை மயூர சித்திர சங்கார வேல்' எனும் பாடல் அடியானது வெருகலைக் குறித்து நிற்பதாக கூறப்படுகின்றது. சித்தாண்டி, பிற்பட்ட காலத்தைச் சேர்ந்தது என்பதால் வன்னிமைத் தலைவர்களோடு இணைத்தே பேசப்படுகின்றது. உகந்தை முருகன் ஆலயமும் தேசத்துக் கோவிலாகக் கருதப்பட்டதெனச் சொல்வாரும் உளர். எனினும் இதற்கான சான்றுகளைப் பெறமுடியவில்லை.

மட்டக்களப்புத் தேசத்துக் கோவில்களாக அடையாளப்படுத்தப்பட்ட ஆறு கோவில்களில் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரம் ஒன்றே சிவன் கோவிலாகும். ஏனைய ஐந்தும் முருக வழிபாட்டுத் தலங்களே. இதில் ஒரு சிறப்பு அம்சம் யாதெனில் முருக ஆலயங்களில் ஆதி மூலமாக வேலே இருப்பது. இது ஒன்றே மட்டக்களப்பின் புராதன வழிபாட்டுச் சிறப்பை நமக்கு வெளிப்படுத்துகின்றது. மேலும் இவ்வாலயங்களில் வேடுவ குலப் பெண்ணான வள்ளிக்குக் கொடுக்கப்படுகின்ற சிறப்பு தேவ குலப் பெண்ணாண தேவயானைக்கு வழங்கப்படாதிருப்பது கவனத்தை ஈர்ப்பதாகும்.

நமது பாரம்பரிய பண்டைய இந்து மத வழிபாட்டினுள் ஆரியக் கலப்பு வலிந்து புகுந்து கொண்டதற்கான அடையாளமாகவே தேவயானையின் வரவு அமைந்ததாக தென்னிந்திய ஆய்வாளர்கள் வலியுறுத்துவது இதன் அர்த்தப்பாட்டிலேயாகும். அத்தோடு நம்மால் அடையாளப்படுத்தப்படுகின்ற இத் தேசத்துக் கோவில்களிலே மண்டூர் முருகன் ஆலயம் தவிர்ந்த ஏனைய முருக வழிபாட்டுத் தலங்களில் நமது வழிபாட்டு நடைமுறைகளைப் படிப்படியாக நீக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வேதியருக்கான நிகம வழிபாட்டு முறைகள் உட்புகுந்து வியாபித்திருப்பது கவனத்தில் கொள்ளத் தக்கதாகின்றது. தான்தோன்றீச்சரம் தொடர்ந்தும் வீர சைவர்களான சங்கமராலேயே பூசை பண்ணப்படுகின்றது.

## 1. திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி கோயில்

மட்டக்களப்புத் திருப்படைக் கோவில்களில் முதன்மைக் கோவிலாகவும், சுமார் இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட கால வரலாற்றினைக் கொண்டதாகவும் திருக்கோவில் கருதப்படுகின்றது. இது மட்டக்களப்பிற்குத் தெற்கே நாற்பத்தாறு மைல்கல் தொலைவில் அமைந்துள்ளது. கோவில் பெயரே ஊர்ப் பெயராகிய சிறப்பும் இதற்குரியது. திருக்கோவிலின் பண்டைய பெயர் நாகர் முனையாகும். இது ஒரு சிறிய துறைமுகமாக மிளிர்ந்தது எனக் கூறப்படுகின்றது. தமிழக வரலாற்றோடு திருக்கோவில் தொடர்புபட்டிருப்பதை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. முருகனின் சூரசங்கார காலத்துடன் இதன் வரலாற்றினை இணைப்பாரும் உளர். மன்னர்களால் மரியாதை செய்யப்பட்ட இவ்வாலயத்திற்குக் குளக்கோட்டனது திருப்பணி கிடைத்துள்ளமை கல்வெட்டுப் பாடல் ஒன்றில் உறுதி செய்யப்படுகின்றது. 'பேர் பெறும் தென் திருக் கோவில்' என்ற பாடல் அடிகளால் இதன் சிறப்பினை அறியலாம். மேலும் சோழ மன்னர்களதும் பாண்டிய மன்னர்களதும் திருப்பணிகள் இவ்வாலயத்திற்குக் கிடைத்திருப்பது இதன் பெருமைக்கோர் சிறந்த எடுத்துக் காட்டாகும். இவ் ஆலயத்தின் பண்டைய சிற்ப வேலைப்பாடுகள் இதனை உறுதி செய்கின்றன.

முருக வழிபாட்டின் ஆதிமூலமான வேல் வழிபாட்டையே கொண்டதான இவ்வாலயம் ஈழத்தின் ஆதிக் குடிகளான வேடுவரின் வழிபாட்டிலே தொடங்கப் பட்டதாகும். கி.பி.1ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புவனேகபாகு மன்னனால் இவ்வாலயம் அழகுற அமைக்கப்பட்டதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. இக் கோவிலை அடியொற்றி பல்வேறு சாதி மரபினரும் தமிழகத்திலிருந்து அழைத்து வரப்பட்டதாகத் தெரிகின்றது. திருக்கோவில் ஆலயத்திற்கு என மூன்று கல்வெட்டுப் பாடல்கள் முழுமையாகக் கிடைத்திருக்கின்றன. இன்னும் சில சிதைவுற்றுக் காணப்படுகின்றன. சுவாமிக்கு ஆராத்தி எடுக்கும் குழந்தையாக வந்து மூதாட்டி ஆகியும் தன் கடைமையைச் செவ்வனே நிறைவேற்றிய தங்கம்மாவின் கதை இப் பகுதியில் பிரசித்தம் பெற்றதாகும்.

வேடுவரால் கொத்துப் பந்தலிட்டு அவர்களது பராம்பரிய பூசை முறைகளால் வளர்த்தெடுக்கப்பட்ட இத் திருத்தலம் பின்னர் வீர சைவ மரபினரான சங்கமரின் நீண்ட கால பூசை முறைமைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. காலப் போக்கில் சோழர் தம் தொடர்பினைப் பெற்ற இவ்வாலயம் தமிழகத்தில் ஏற்பட்ட வேதியருக்கான ஆகம நெறிகளுக்கு அமைந்த வழிபாட்டு முறைகளை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. மட்டக்களப்புப் பிரதேச ஆலயங்கள் பலவற்றிற்கு ஏற்பட்டதைப் போன்று இடையிடையே ஏற்பட்ட நிர்வாகப் பூசல்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகங்களிடையே தோன்றிய ஒன்றுமையின்மையும் இவ்வாலயத்தின் ஒழுங்கு முறை வளர்ச்சியில் குறுக்கீடு செய்தன. இப்பேற்பட்ட கால நிகழ்வுகள் தவிர்க்க முடியாதவையே.

இவ்வாலயம் தேசத்துக்கான பெருமையை உடையதாதலில் ஒரு குறிப்பிட்ட காலம் முதலே பாணமைப் பற்று, அக்கரைப்பற்று, சம்மாந்துறைப் பற்று, கரவாகுப் பற்றுப் பகுதிகளில் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்த பணிக்கனார் குடியினர் முதல் நிலையில் இருந்தவர்களே இதன் தலைமைப் பொறுப்பினை ஏற்றனர். இக் காலத்தை சில ஆய்வாளர்கள் சேரத்துப் பணிக்கனார் சமூகத்தை சேர்ந்தவனும் சிற்றரசனுமான எதிர்மன்ன சிங்கனின் காலத்துடன் இணைத்துப் பேசுகின்றனர். அப்பகுதி வாழ் கண்டன் குடியினரே ஆலய வண்ணக்கர் நவியினை தொடர்ந்து அணிசெய்து வருகின்றனர். இக் கோவிலின் அக் டைமைகளை கோவிலாரே மேற்கொள்கின்றனர்.

இக் கோவில் திருத்தலத்தில் முற்காலப் பூசைகள் நித்திய பூசைகளாக நடைபெற, எல்லா விசேட தினங்களிலும் சிறப்புப் பூசைகள் இடம் பெறுகின்றன. விரதங்கள் அனைத்துமே முறையோடு பேணப்படுகின்றன. கந்தசஷ்டி விரதம் மற்றும் அதனோடான சூரன் போரும் வெகு விமரிசையாக இடம் பெறுகின்றன. ஆடி அமாவாசைக்கு முன்னைய எட்டு நாட்கள் சுவாமிக்குச் சிறப்பாக திருவிழாக்கள் நடைபெற்று அமாவாசை நன்னாளில் சமுத்திர தீர்த்தோற்சவம் இடம் பெறும். அன்றைய நாளிலே மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரருக்கும் தீர்த்தோற்சவம் நிகழும். அதற்கென திருக்கோவில் முன் கடல் நீர் எடுத்து மாமாங்கத் தீர்த்தகுளத்தில் கலக்க விடுவது பண்டைய மரபாக இருந்து வருகிறது.

## 2. கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரன் கோயில்

மட்டக்களப்புத் தமிழகத்தின் வளமிக்க மண்முனைப் பகுதியில் மட்டுநகருக்கு தென்பால் ஒன்பது மைல் தொலைவில் அமைந்திருப்பது கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம். இதுவே இப் பிரதேசத்தில் ஒரே சிவன் கோவிலாகவும், தேரோடும் கோவிலாகவும் விளங்குகிறது. இங்கு இறைவன் சுயம்பு லிங்கமாகத் தோன்றி அருள்பாலிக்கின்றார். இவ்வாலயத்தின் தொன்மை பற்றிய குறிப்புக்கள் மட்டக்களப்புப் பூர்வீக சரித்திரம் வாயிலாக வெளிப்படுகின்றன. கலிங்க இளவரசி உலக நாச்சியே (கி.பி.362-380) தான்தோன்றிங்கத்திற்கு முதற் கோவில் கட்டியவளாகக் கருதப்படுகின்றாள். அதற்கு முன்னர் இச் சிவலிங்கமானது கொக்கட்டி மர நிழலில் வேடுவரின் நீண்ட கால வழிபாட்டுக்கு உட்பட்டிருந்து, காலப் போக்கில் அம் மர வேரில் மறைபட்டிருந்ததாக ஐதீகம்.

மகோனின் ஆட்சிக் காலம் வரை (கி.பி.1215-1255) தான்தோன்றீச்சரத்தின் வரன்முறைகள் பற்றி விரிவாக அறிய முடியவில்லை. இவனது ஆட்சியின் போது கிழக்குப் பகுதியின் உப வேந்தனான குளக்கோட்டனின் உறுதுணையோடு மாகோன் இப்பிரதேச ஆலய நடைமுறைகளை வகுத்துக் கொடுத்ததை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுகள் முடிவுறுத்தும். இதன் அடிப்படையிலே வீர சைவ மரபினரான சங்கமர், திருப்படைக் கோவில்களின் பூசை புனற்காரங்களை மேற்கொள்ள அழைத்து வரப்பட்டதாகக் கூறப்படுகின்றது. லிங்கத்தை அணிந்திருக்கும் சங்கமக் குருமாரின் பூசை முறைகள் பிராமணர்களின் முறைகளிலிருந்து அடிப்படையில் வேறுபட்டவையே எனினும் காலப்போக்கில் பிராமணரின் ஆகம முறைகளை நோக்கி அவை நகர்ந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்புப் பிரதேசத்தின் சமூக இறுக்கத்தினையும், சமூகங்களின் பிணைப்பினையும் தனது நடைமுறைகளினால் நீண்ட காலமாக வலியுறுத்திவரும் தான்தோன்றீஸ்வரத்தின் நிர்வாகச் செயற்பாட்டில் பங்கு கொள்ளும் கலிங்க மரபினரும் அவர்களின் இணை குடியினரான உலகநாச்சி மரபினரும், படையாச்சியரும் ஒரு வரலாற்று உண்மையைத் தெளிவுபடுத்துகின்றனர். மட்டக்களப்பு பிரதேச ஆட்சி அதிகாரத்தில் இருந்த கலிங்கர் தலைமைப் பொறுப்பினையும் ஆலயத்தை அமைத்து பூசை பண்ணச் செய்த உலகநாச்சி மரபினர் பொருளாதாரப் பொறுப்பினையும் வன்னிமைப் பொறுப்புக்களில் இருந்து பிரதேசத்தை நிர்வகித்த படையாச்சியர் நிர்வாகச் செயற்பாட்டினையும் இவ்வாலயத்தே ஏற்றிருப்பது மிகவும் பொருத்தமானதே. தேரோட்ட நிகழ்வின் போது மட்டக்களப்பின் சகல சமூகத்தவரும் கலந்து கொண்டு தங்களுக்கு என வழங்கப்பட்ட கடமைகளைக் குறைவின்றி நிறைவேற்றித் தேர் இழுப்பதும், குடுக்கை கூறுதல் நிகழ்வில் சகல சமூகத்தினரும் வரிசையாக கௌரவிக்கப்படுதலும் இப் பிரதேசப் பெருமைக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகும். தினம் தோறும் மூன்று காலப் பூசைகளுடன் இந்து மதம் சார்ந்த சகல விசேட நாட்களும், மற்றும் விரதங்களும் இங்கு தவறாது அனுட்டிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஆவணி உத்தரத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து, பூரணைக்கு அடுத்து வரும் திங்கள் நன்னாளில் நீராடலுடன் திருவிழா முடிவுறும். இது பெரும் பாலும் பதினெட்டு திருவிழாக்களை உள்ளடக்கியதாக அமையும்.

## 3. கோயில் போரதீவு சித்திரவேலாயுதர் சுவாமி கோயில்

மட்டக்களப்புத் திருப்படை கோவில்களில் மூன்றாம் இடத்தில் வைத்து எண்ணப்படுவது கோவில் போரதீவு சித்திர வேலாயுதர் ஆலயமாகும். போர் முனை நாடு, வெள்ளை நாவற்பதி, போரதீவு என பண்டைய நாளில் அழைக்கப்பட்ட இவ்வூர் கோயில் சிறப்பு காரணமாக கோவில் போரதீவு என மாற்றம் பெற்றது. குளக்கோட்டன் பற்றிய பாடலில் அவனால் சீர்வரிசை செய்யப்பட்டதாக இது குறிப்பிடப்படுகிறது. மட்டக்களப்புக்குத் தென் பால் பட்டிருப்பு ஊடாக இருபது மைல் தொலைவில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தின் தொடக்க காலம் பற்றி அறிவதற்குச் சரியான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இவ்வாலயம் பற்றிய குறிப்புக்கள் மண்டூரில் இருந்து ஆட்சி செய்த மண்டு நாகன்(கி.பி. 1108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் மன்னனுடன் தொடர்பு பட்டு நிற்பதுவும் இதன் ஆரம்ப கோவில் வேலாயுதர் வெளியில் கோவில் தீவு என்னும் இடத்தில் அமைந்திருப்பதாகவும், காலசேனனால் அழிக்கப்பட்ட இவ்வாலயம் பின்னர் வெள்ளை நாவற் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டதாகவும் வேலாயுதர் வெளியே மருவி வெல்லாவெளி ஆனதெனவும் பிறிதோர் வரலாறு தெரிவிக்கின்றது. மட்டக்களப்பை ஆண்ட கலிங்க அரசன் மதிசுதன் காலத்தில் வெல்லாவெளி ஆற்றுக்குக் குறுக்கே அவனது மகன் நாதனின் பெயரில் இவ்வாலயத்திற்கு உரித்தான நெற்காணிகளுக்கு பாசனம் செய்ய அணையொன்று கட்டப்பட்டதாகவும் நாதன் அணையே நாதணையாகி அச்சிறப்பு பெயரால் வெல்லாவெளியை அழைக்கவும் வரலாற்றில் குறிப்பிடவும் காரணமாயிற்று எனவும் ஆய்வாளர்கள் கூறுவர்.

காலசேனனின் படையெடுப்பில் மண்டூர் ஆலயத்துடன் இவ்வாலயமும் அழிக்கப்பட்ட பின் மதிசுதன் இவ்வாலயங்களைத் தமிழ் நாட்டு சிற்பிகளை வரவழைத்துக் கட்டுவித்ததாகவும் கூறப்படுவதில் இருந்து கோவில் போரதீவில் எழுதப்பட்ட முதலாவது ஆலயம் கி.பி. 12ம் நூற்றாண்டின் தொடக்கத்தை கொண்டிருப்பதை உறுதி செய்ய வாய்ப்புள்ளது. தற்போதுள்ள ஆலயமானது தென்னிந்தியாவில் உள்ள காரைக் குடியின் உயர் செல்வந்தரான கண்ணாயுத செட்டியின் புதல்வன் நாகப்பச்செட்டியால் நிர்மாணிக்கப்பட்டதாகவும் அதன் பின்னரே வீர சைவ மரபினரால் பூசை செய்யப்பட்ட இவ்வாலயம் பிராமணரின் பூசை முறையின் கீழ் கொண்டுவரப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. இங்கு காணப்படும் கல்வெட்டு ஒன்று

'காரைக்குடி நாகப்பச் செட்டி உபயம் பிராமணர் பராபரிப்பு' என இதனை குறித்து நிற்கின்றது. மேலும் இவ்வாலயத்தில் ஏற்படும் நிர்வாகச் செலவினங்களை ஈடு செய்ய வண்ணக்கர், அச்சகர் கண்காணிப்பாளர்களுக்கு பாசன நெற் காணிகள் சுமார் 100 ஏக்கர் வரை செய்கைக்காக வழங்கப்பட்டிருந்தமை இவ்வாலயத்திற்கான தனிச்சிறப்பாகும். இவ்வாலயத்தே நெல்லைச் சேகரித்து வைக்கத் தனியான நெற்களஞ்சியம் ஒன்று அமைந்திருந்தது.

ஆலயத்தைச் சிறப்புற நிர்வகிக்க வேண்டிய பிரதேச வன்னிமயால் வகுக்கப்பட்ட நெறிமுறையின் கீழ் ஆலய முகாமைத்துவப் பொறுப்பு அப்பகுதி பணிக்கனார் குடியினரிடமும் வண்ணக்கர் எனும் நிர்வாகப் பொறுப்பு களுவாஞ்சிக்குடி கவுத்தன் குடியினரிடமும் கண்காணிப்பாளரை தலைவராகக் கொண்ட அகக் கடைமைப் பொறுப்பு கோயிலாரிடமும் ஒப்படைக்கப்பட்டு நீண்ட காலச் செயற்பாட்டில் இவ்வாலயம் சிறப்புற அமைந்திருந்தது. ஆலயத்தை அண்டியிருந்த கிராமங்களின் அனைத்து சமூகங்களிற்கும் குடி வளிப் பிரிவினர்களுக்கும் இவ்வாலயத்திற்கான உரிமைகள் சாசன ரீதியாக வழங்கப்பட்டிருந்தன.

புறக் கடைமைப் பங்களிப்பில் ஏற்பட்ட மனக்குறைபாடு காரணமாக எவ்வாறு மட்டக்களப்புப் பிரதேசத்தில் நீண்ட கால சமூக ஒற்றுமைக்கு வழி கோலிய தான்தோன்றீஸ்வரத்திலிருந்து பழுகாமத்து வேளாளர் தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்பினை விலக்கிக் கொண்டனரோ அதே போன்று கோவில் போரதீவு சித்திர வேலாயுதர் ஆலயத்திலிருந்து தங்களது பங்களிப்பினை கஞவாஞ்சிக்குடி கவுத்தன் குடி வேளாளரும் விலக்கிக் கொண்டனர். திருப்படைக் கோவில்களின் சிறப்பில் ஏற்பட்ட ஒரு குறைபாடாகவே வரலாற்றில் இது குறிக்கப்படும்.

நாளாந்தம் மூன்று காலப் பூசைகளுடன் அனைத்து விசேட நாட்களும் உரிய குடிவழி மரபினரால் சிறப்பாக கொண்டாடப் படுகின்றது. முன்னர் 21 நாளாக இருந்த திருவிழா தற்போது 10 நாளாகக் குறைவு பட்டு நிற்கிறது. ஆடிப் பூரணையில் இவ்வாலயத் தீர்த்தோற்சவம் இடம் பெறும். விரதங்களில் கந்தசஷ்டி விரதம் சிறப்புற அனுஷ்டிக்கப்படுவதோடு சூரன் போரும் பெரு விழாவாகக் கொண்டாடப்படும்.

## 4. மண்டூர்க் கந்தசுவாமி கோயில்

மட்டக்களப்புப் பிரதேச நீண்ட பாரம்பரிய வழிபாட்டு முறைகளையும் அதனோடு கூடிய பண்பாட்டுக் கோலங்களையும் இயற்கையோடியைந்த இறைவழிபாட்டினையும் மெருகு குறையாது இன்னும் கட்டிக் காக்கின்ற பெருமை மண்டூர் ஆலயத்திற்கே உண்டு. இதனோடு காலத்தால் முந்திய ஆலயங்களும் சமகால ஆலயங்களும் தத்தமது ஆரம்ப நெறிமுறைகளிலிருந்து படிப்படியாகத் தங்களை விடிவித்து வேதியரின் நெறிமுறைகளுக்குள் சிக்குண்டு பிரதேச சிறப்பியல்புகளை இழந்து விட்ட நிலையில் மண்டூர் முருகன் ஆலய வழிபாட்டு முறைகள் அடிப்படையில் மாறாதிருப்பது பெரிதும் கவனத்தை ஈர்க்கின்றது. இதே சிறப்பியல்புகள் இப்பிரதேசத்துக்கு அப்பால் கதிர்காமத்திலும் பேணப்படுகின்றன. சிங்கள மக்களிடையே காணப்படும் 'குமர தெய்யோ' வழிபாட்டு முறைகளும் இச்சாயலை ஒத்திருப்பதை அவதானிக்க முடியும். தமிழரின் ஆதிவழிபாட்டாகக் கருதப்படும் முருக வழிபாடானது பொதுவாக இத் தன்மையானதாகவே தென்னிந்தியாவிலும் நீண்டகாலமாக நிலைபெற்றிருந்தது. தமிழ் நாட்டில் பல்லவர் ஆட்சியின்போதும் அதன் பின்னரும் ஏற்பட்ட தாக்கங்கள் தமிழரின் பண்டைய வழிபாட்டு முறைகளை மாற்றி அமைத்ததை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

மட்டக்களப்பின் தென் கோடியில் சுமார் 30 மைல் தொலைவில் பரந்த வாவிக் கரையில் கோவில் கொண்ட முருகப் பெருமானுக்கு கி.பி. 12ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மண்டூரின் குறு நில மன்னன் மண்டு நாகன் கோவில் கட்டியதையும் தொடர்ந்து மதிசுதன், கலிங்க மாகோன் போன்றோர் புணரமைப்பு வேலைகளை மேற்கொண்டு சிறப்பித்திருப்பதையும் வரலாறு கூறும். எனினும் இவ்வாலயம் கட்டியெழுப்பப் படுவதற்கு அனேக ஆண்டுகளுக்கு முன்னர் தில்லைமரத்தில் எழுந்தருளிய வேலுக்கு அப்போது அப்பகுதியில் வசித்த வேடுவர்களே நீண்ட காலம் வழிபாடு இயற்றினர் என்பதற்குப் போதிய சான்றுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. ஆலய நடைமுறைகளும் இதனையே வெளிக்காட்டுகின்றன. நீண்ட காலமாக கதிர்காம கந்தனுடன் இணைத்துப் பேசப்படும் மண்டூர் தில்லை வடிவேலன், மண்டூர் பழம் பதியை சின்னக் கதிர்காமமாகவே கொண்டுள்ளான். இப்பகுதி மக்களிடையே பேசப்படும் பலாப்பழக் கதையும் இதனை உறுதி செய்யும். வாயில் சீலை கட்டி மௌன பூசை மேற்கொள்ளும் பரம்பரைப் பூசகர் கதிர்காமத்தில் கப்புராளை எனவும் மண்டூரில் கப்புகனார் எனவும் அழைக்கப்படுதலை நாம் பார்க்கின்றோம்.

மட்டக்களப்பில் முருகன் ஆலயங்கள் பொதுவாகக் கிழக்கு நோக்கியே அமைந்திருக்கும் இன்னிலையில் மண்டூர் முருகனுக்குத் தெற்கு நோக்கிய பார்வை இருப்பது கவனிக்கத்தக்கது. அடியார்களை இயம கண்டத்திலிருந்து பாதுகாப்பதற்காகவே இந்த நிலை எனக் கூறப்பட்டாலும் கதிர்காமம் நோக்கிய பார்வையாக இதனைக் கருத முடியும். கதிர்காமத்தைப் போன்று மூலஸ்தானத்தே திரைமறைவில் இருக்கும் வேலுக்கு படி கடவாது வாயில் சீலை கட்டி அதன் முன் மண்டபத்துள் நின்று கப்புகனார் பயபக்தியோடு மௌன பூசை செய்வது முன்னதாக மறைவாகச் செய்யப்பட்ட அமுதினை வெள்ளைச் சீலையில் சுற்றி காவில் கட்டி தோளில் சுமந்து நேர் பார்வையும் நிமிர்ந்த நடையுமாக அதற்குரியவர் ஆலயத்துள் கொண்டு செல்வதும் ஒரு பரவசத்தை ஏற்படுத்தும். கப்புகனார் குடி வளியில் முறையான அனுஷ்டானங்களின் பின் முழுமை பெற்ற ஒருவர் முருகனுக்கு பூசை செய்யும் தகுதியைப் பெறுதலே 'படிகடத்தல்' ஆகும். இன் நிகழ்வு மிகவும் சிறப்பாக அச்சமூக மக்களால் கொண்டாடப்படும்.

தில்லை மரத்தில் எழுந்தருளிய வேலுக்கு மண்டூரில் ஆதி வாசிகளான வேடுவரே நீண்ட காலம் வழிபாடு இயற்றியவர்களாவர். அவர்களது பண்டைய வசிப்பிடங்களை கட்டன் குளம், சுணையன் கல் போன்றவை நினைவுறுத்துகின்றன. அவர் வழி வந்தோர் மண்டூரின் சொந்தக் குடிகளாகவும் ஆலயத்தின் முக்கிய பங்காளியாகவும் இன்றும் வாழ்கின்றனர். முற்குக வன்னிமைகளின் கட்டுக் கோப்புக்குள் சிறப்பான ஆலயங்கள் கொண்டுவரப்பட்ட பின்னர் மண்டூரைச் சுற்ற வர வளமோடு வாழ்ந்த சீர்பாத குல மக்களுக்கு (குறுமன்வெளி, கோட்டைக் கல்லாறு, பெரிய கல்லாறு, துறை நீலாவணை) இவ்வாலயத்தைச் சிறப்பிக்கும் பெரும் பங்களிப்பு வழங்கப்படலாயிற்று. இதனடிப்படையில் குறித்த வரன்முறைகளுக்கு ஒவ்வ ஆலயத்தில் வண்ணக்கர் எனும் நிர்வாகப் பொறுப்பு கவுத்தன் குடி வேளாளருக்கும், பொருளாதாரப் பேணுகை கட்டுப்பாடு சார்ந்த கணக்கப் பிள்ளை எனும் நான்கு பதவிப் பொறுப்புக்கள் குறித்த நான்கு கிராமத்தவர்களுக்கும் கோவிலின் உட் கடமைகள் கோவிலாருக்கும், பூசைப் பொறுப்பு கப்புவ குடியினருக்கும் அக் காலத்தே அப்பகுதியில் வாழ்ந்த சமூகத்தினரின் தகுதி வேண்டி திருவிழாக்களும் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தில் மூன்று காலப் பூசையுடன் ஏனைய இந்துப் பண்டிகைகளும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. இதிலே கந்தசஷ்டி விரதம் முக்கியத்துவம் பெற்றதாகும். ஏனைய ஆலயங்களைப் போன்று இங்கு கந்த புராணம் படிப்பதில்லை, மாறாகச் திருச்செந்தூர் புராணமே படிக்கப்படுகின்றது. மேலும் சூரனைச் சம்காரம் செய்யும் விழாவும் நிகழ்த்தப்படுவதில்லை. வேடுவப் பெண்ணான வள்ளிக்கு முதன்மையளிக்கும் நிகழ்வுகளே இங்கு முதன்மை பெறுகின்றன. சூரசம்காரம் இடம்பெற்ற இடம் திருச்செந்தூர் என்பார்கள். எனினும் இந்த இடத்தில் அமைந்திருக்கும் வள்ளி குகைக் கோவிலையே ஆதிக்கோவிலாக குறிப்பிடுவதுண்டு. தமிழருக்கான முருக வழிபாடு வள்ளியை மட்டுமே இணைத்திருந்தது. இந்து நெறியானது மதம் என்பதிலும் வாழ்க்கை முறை என்பதையே வலியுறுத்தும். அதனுள் ஏற்பட்ட ஆரியத்தின் தாக்கமே பின்னர் வந்த தேவயானை வழிபாடாகும். மண்டூர் வழமையான தமிழர் வழிபாட்டினை இறுக்கமாக பற்றி நிற்பதால் ஆரிய வழிபாட்டு முறைகள் உட்புகுதலை அது தடுத்து நிறுத்தியது. மண்டூரைத் தென்னிந்திய ஆய்வாளர்கள் கண்டுகொள்வார்களேயானால் அது ஒரு சிறந்த ஆய்வுக் களமாக அவர்களுக்கு நிட்சயம் அமைந்து விடும். கந்தசஷ்டியின் மூன்றாம் நாள் இடம் பெறும் வள்ளி திருமண நிகழ்வு ஒரு பாரம்பரியத்தை வெளிக்கொணர்கிறது. மாப்பிள்ளை வீட்டார், பெண் வீட்டார் என இரு பக்கமும் மக்கள் குழும மட்டக்களப்பாரின் பாரம்பரிய திருமண முறையினை அடியொற்றியதாக குரவை ஒலியுடன் இடம் பெறும் மானசீகமான முருகன் வள்ளி திருமண நிகழ்ச்சி நம் சிந்தனையைத் தூண்டுவதாகும். ஆரியப் பெருமையை வெளிக்காட்டும் சூரசம்காரம் இல்லாதிருப்பது திராவிடப் பெருமையின் அடையாளமே.

ஆவணிப் பூரணையைத் தீர்த்த திருவிழாவாகக் கொண்டு 21 நாள் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். பண்டைய காலத்தில் ஆலயங்களின் அமைப்பு முறையில் கொடித்தம்பம் இடம் பெறுவதில்லை. அதன் வளியே இவ்வாலயத்திலும் திருவிழாவிற்காகக் காட்டில் இருந்து வெட்டிக் கொண்டுவரும் கொக்கட்டி மரக் கம்பே மூலஸ்தான திரைச்சீலைக்குப் பக்கமாக வெளிப்புறத்தில் நடப்பட்டு அதில் நெற்கதிர்கள் கட்டப்படும். அதுவே கொடி மரமாகும். அதே போன்று கோவிலின் நான்கு பக்கமும் நான்கு திரைக் கொடிகளும் வள்ளி தேவயானை கோவில்களில் இரண்டுமாக கொடிமரங்கள் நாட்டப்படும். இவை ஆறும் ஆறுபடை வீடுகளைக் குறிப்பதாகக் கூறுவாரும் உண்டு. திருவிழாவின் போது 5ம் திருவிழா முதல் அதற்கு என உரியோர் சங்குகளை ஊதி வலம் வருவர். இதுவே சந்தி மறித்தலாகும். சுவாமி வீதி உலா வருகையில் வண்ணார் தலைமையில் சுவாமி முன்னால் சீலை ஒன்று ஏந்திப் பிடித்தவாறு பின்னடையாய் நடந்து வருதலும் வேடச் சாதியரில் ஒருவர் வில் அம்பு கொண்டு இரு பக்கமும் பார்த்தவாறு பாதுகாவலாக முன் செல்வதும் ஒரு பாரம்பரிய நிகழ்வாகும். தீர்த்தத் திருவிழா கடலோடு இணைந்த மட்டக்களப்பு வாவியில் மூங்கிலாறு சங்கமிக்கும் சாகர சங்கமத்தில் நடைபெறும். சுவாமி நீராடி விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் திரும்பும் போது தனது கோவிலுக்குள் செல்லாது தேவயானை கோயிலையும் தாண்டி வள்ளி கோவிலுக்குள் நுளைவதும் பின்னர் மாலையில் தன் இருப்பிடம் திரும்புவதும் மேலும் ஒரு அர்த்தப்பாட்டினைக் கொண்டிருக்கிறது. தேவயானை கோவிலின் முன்வரும் போது சுவாமியினது ஆலாத்தி பெண்கள் மயக்கமுறுவது முருகன் தன்னைப் புறக்கணித்து விட்டு வள்ளியை நாடிச் செல்வதைத் தாங்காத தேவயானையின் சீற்றத்தின் அடையாளமாக கொள்ளப்படுகின்றது.

தீர்த்தம் முடிவுற்ற மூன்றாம் நாள் சுவாமி கோவிலின் பின்புறமாக குமார தம்பிரான் கோவிலில் வேடர் பூசை இடம் பெறும். அங்கு மண் குடுக்கைப் படையலில் மான் கறியும் வைக்கப்படும். அன்றிரவு பின்புற வெளி வீதியில் கள்ளுடனான மடைப்பலி கொடுத்து அடுக்குச் சடங்கு எனும் வேடர்களுக்கான வெறியாட்ட விழா நடைபெறும். இதே போன்ற விழா மட்டக்களப்பின் வடபால் வாகரையிலும், கதிர்காமத்திலும் விந்தனை, குமணை போன்ற வேடர் பகுதியிலும் தென்னிந்தியாவில் மலைஜாதி மக்களிடமும் இன்னும் காணக்கூடியதாயுள்ளது. திருவிழாவின் போது அடிக்கப்படும் மேளம் பல்வேறு அர்த்தப்பாட்டைக் கொண்டிருக்கும். முதற் கேட்கும் மேள ஒலி அரட்டமேளம் ஆகும். பின்னர் சுவாமி பூசை மேளம், உள்வீதி உலாவுக்கான மேளம், வெளிவீதி உலாவுக்கான மேளம், திசை மாறுதலுக்கான மேளம், சுவாமி உட்புகுதலுக்கான மேளம் என மேள ஒலி வேறுபடும். மண்டூர் மக்கள் வீட்டில் இருந்தவாறே மேள ஒலியைக் கொண்டு ஆலய நிகழ்வுகளை அறிந்து கொள்வர். பாரம்பரிய வழிபாட்டு முறைகளால் மண்டூர் பழம்பதி மட்டக்களப்புக்குப் பெருமை சேர்ப்பதை நாமும் பெருமையாகக் கொள்ளலாம்.

## 5. சித்தாண்டிக் கந்தசுவாமி கோயில்

மட்டக்களப்பின் வடபால் பதின்மூன்று மைல் தொலைவில் ஏழு தளக் கோபுரத்துடன் அழகாகக் காட்சி தருவது சித்தாண்டித் திருத்தலமாகும். தொடக்க காலத்தே சித்திர வேலாயுதர் ஆலயம் எனக் குறிப்பிடப்பட்ட இவ்வாலயம் தற்போது கந்தசுவாமி கோவில் என அழைக்கப்படுகின்றது. இதனது வரலாற்றுக் காலம் குறித்து தெளிவாக அறியமுடியாதிருப்பினும் இவ்வாலயத்திற்கான முதற் கோவில் கி.பி. 17ம் நூற்றாண்டின் மையப்பகுதியில் கட்டப்பட்டிருக்கலாம். எனினும் இக் கோவிலை வேடர்களுடன் தொடர்புபடுத்தும் குறிப்புக்களும் குமரத்தன் கோவில் வழிபாடும் வள்ளியம்மைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவமும் இதனது வரலாற்றுக் காலத்தை இன்னும் பல ஆண்டுகள் முன்னோக்கிப் பார்க்கவே வாய்ப்பாக அமையும். இது குறித்து மேலும் ஆய்வுகள் அவசியமாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலயாத்திரை ஒன்றினை மேற்கொண்டு வந்த சிகண்டி எனும் சித்தர் தான் கொண்டு வந்த வேலினை இங்கு வைத்து பூசை செய்தாரென்றும் ஆண்டி போன்ற தோற்றம் கொண்ட இச் சித்தராண்டியே சித்தாண்டி என்ற பெயரால் அழைக்கப்பட்டு அதுவே ஊர்ப்பெயரானது எனக் கூறுவாரும் உளர். இவ்வாலயம் பிற்பட்ட காலத்தை கொண்டிருப்பதால் மன்னர் தம் மானியங்கள் இதற்கு கிடைக்க வாய்ப்பில்லை. மாகோன் காலத்திற்கும் பிற்பட்டதான இவ்வாலயம் அதன் சிறப்பின் நிமித்தம் சூழவர வாழ்ந்த சமூகங்களின் பங்களிப்பைக் குறைவரப் பெற்றிருந்ததனாலே தேசத்துக் கோவில் அல்லது திருப்படைக் கோவில்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வாலயம் மட்டக்களப்பின் முக்கிய ஆலயங்கள் கொண்டிருந்ததான வீர சைவர் எனும் சங்கமர் பூசை முறைகளையே அண்மைக்காலம் வரைதானும் கொண்டிருந்தது. கடந்த கால் நூற்றாண்டுகளாக இதன் பூசை முறைகள் பிராமணக் குருமாரின் கைக்குள் சென்றதற்கான சரியான காரணம் தெரியவில்லை.

முக்காலப் பூசைகளுடன் எல்லா விசேட தினங்களும் இங்கு சிறப்புப் பூசைகளாக அனுஷ்டிக்கப்படுகின்றன. திருவெம்பாவை ஒரு பெருவிழாவாகவே கொண்டாடப்படுகின்றது. திருவிழாவின் போது இங்கு வள்ளியம்மனுக்குச் சிறப்பு அலங்காரங்களுடன் கூடிய மூலஸ்தானப் பூசை நடைபெற, தெய்வானை அம்மனுக்கான பூசை மூடிய திரையுள் நடைபெறுகின்றது. திருவிழாவானது ஆவணி வளர்பிறையில் பிரதமையில் கொடியேறி பூரணையில் தீர்த்தத்துடன் முடிவுறும். இங்கு 12 நாள் நடைபெறும் மயில்கட்டு திருவிழா வெகு சிறப்பாக அமையும். மழை வேண்டி ஊர்மக்கள் கொம்பு முறித்தலும் சித்தாண்டிக்கு பெருமை சேர்ப்பதாகும்.

## 6. வெருகல் சித்திரவேலாயுதர் ஆலயம்

மட்டக்களப்பின் வடபுறத்தெல்லையில் மகாவலி கங்கையின் ஒரு கிளையாக வெருகல் கங்கை பாய்கிறது. கங்கையின் மறு கரையில் திருகோணமலையின் எல்லைக் கோட்டில் முருகன் சித்திரவேலாயுதராகக் கோவில் கொண்டுள்ளார். ஆலயம் திருகோணமலை நிர்வாக அலகுக்கு உட்பட்டிருந்தாலும் நீண்ட காலமாக மட்டக்களப்பு பிரதேசக் கோவிலாகவே இது கொள்ளப்படுகின்றது. இம் மக்களின் பெரும் பங்களிப்பு இக் கோவிலுக்கு இருப்பதே இதற்கான காரணமாக அமையலாம். சித்தாண்டி ஆலயத்தைப் போன்றே வெருகலம்பதிக்கும்சரியான கால வரையறையைக் கணக்கிட முடியவில்லை. குளக்கோட்டன் பற்றிய பாடலில் குறிப்பிடப்படும் 'வெற்றிபுனை மயூர சித்திர சங்கார வேல்' எனும் பாடலடிகள் வெருகலையே குறிப்பிடுவதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவின் திருநெல்வேலி செட்டிகுலத்தைச் சேர்ந்த நல்லைநாதச் செட்டியாரே இவ்வாலயத்தை அமைத்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. பின்னர் இவ்வாலயம் ஈச்சிலம் பற்றுப்பகுதி திமிலர் சமூகத்தாரிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. இத் திமில சமூக மக்களே கலிங்கர் வருகைக்கு முன்னர் மட்டக்களப்பில் வாழ்ந்தவர்கள் எனவும் கலிங்கரால் வெளியேற்றப்பட்ட இவர்கள் வெருகலை அண்டிய பகுதிகளை வாழ்விடமாக்கிக் கொண்டார்கள் எனவும் அறிய வருகின்றது.

தினமும் மூன்று காலப் பூசை நடைபெறும் இத் திருத்தலத்தில் ஏனைய ஆலயங்களைப் போன்றே விசேட தினங்களும் விரதங்களும் அனுஷ்டிக்கப்படுகின்றன. இவ்வாலயத்தின் வருடாந்த திருவிழா ஆவணிமாத உத்திரட்டாதியில் ஆரம்பித்து பதினெட்டு நாட்கள் இடம் பெற்று 19ம் நாள் தீர்த்தோற்சவத்துடன் முடிவுறும். 13ம் நாள் திருவிழா கதிர்காமத்தை நினைவுறுத்தும். அன்றைய தினம் சீலையில் சுற்றப்பட்ட இயந்திரப் பொட்டியை மறைத்தபடி யானை அலங்காரத் தண்டிகையில் பக்திப்பரவசத்துடன் எடுத்துவர, கதிர்காம சுவாமி ஊர்வலம் வருவார். இது கதிர்காம உற்சவத்தின் போது முருகனுக்கான இயந்திரப் பெட்டியை யானையின் மேல் கொண்டு வருதலை நினைவுறுத்தும். இதனாற்போலும் வெருகலை சின்னக்கதிர்காமம் எனக் குறிப்பிடுவர். 19ம் நாள் அதிகாலை தீமிதிப்பு இடம்பெற்ற பின்னர் தீர்த்தோற்சவம் நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் விஸ்ணு வழிபாடு

**–திரு. கிருஷ்ணபிள்ளை (திமிலைத் துமிலன்)** B.A., Dip. in Ed.–

*மட்டக்களப்பு மக்கள் பெரும்பாலானோர் சிவநெறிச் செல்வர்கள் ஆயினும், அவர்கள் காத்தற் கடவுளான விஸ்ணுவையும் வழிபடுகின்றனர். ஆயினும் அவர்கள் வைணவர்களைப் போல திருமண் அணிவதில்லை. சிவசின்னமாகிய திருநீறே அணிகின்றனர். இங்குள்ள விஸ்ணு கோயில்களிலும் திருநீறே பயன்படுத்தப்படுகின்றது. மட்டக்களப்பு மக்கள் பயன்படுத்தும் திருநீறு சாணத்தைச் சுட்டெடுத்த பொடியல்ல. வெண்களியாலான திருநீற்று உருண்டைகளை இங்குள்ள கடைகளில் பெறலாம். அத்தோடு கதிர்காமத்துத் திருநீற்றையும் அணிகின்றனர். கதிர்காமத்துத் திருநீறு கூட வெண்களிப் பொடியென்பதைக் குறிப்பிடலாம். இந்த வகைத் திருநீறு ஒரு வகையில் வைணவர் அணியும் திருமண்ணுக்குச் சமமானதே.*

*மட்டக்களப்பில் திமிலதீவு, வந்தாறுமூலை, கல்லடி, களுதாவளை, குருக்கள்மடம், பழுகாமம், காரைதீவு, தம்பிலுவில், போன்ற விரல் விட்டு எண்ணக்கூடிய இடங்களிலேயே விஸ்ணுவாலயங்கள் காணப்படுகின்றன. அவை கிட்டினன் கோயில் என்றே அழைக்கப்படுகின்றன. இங்கெல்லாம் சைவத் தமிழர்கள், வைணவக்கடவுளாகிய விஸ்ணுவை வழிபடக்காரணம், சிவத்தின் ஒரு திருக்கோலம் விஸ்ணு என்ற அடிப்படையும், விஸ்ணுவே காத்தற் கடவுள் என்ற கொள்கையுமாகும். அதுமட்டுமன்றி மட்டக்களப்புப் பெருநிலம், மருதமும் முல்லையும் கலந்த நிலமாக இருப்பதுவும் காரணமாகலாம். சங்ககால ஒழுக்கத்தில் முல்லை நிலக்கடவுள் மாயோன் என்பதை நாமறிவோம். மட்டக்களப்பு மக்களின் பொருள்வளம்,நெற்செய்கையிலும், மந்தை வளர்ப்பிலும் தங்கியிருந்தது என்பது உண்மை. மந்தை வளர்ப்போரின் தெய்வம் மாயோன் என்பதால் அவர்கள் விஸ்ணுவையும் வழிபடுதெய்வமாகக் கொண்டனர் எனலாம். இந்தவகையில் விஸ்ணுவழிபாடு தமிழருக்குப் புதுமையானதல்ல என்பதை உணரலாம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமாலுக்குச் சக்தி தங்கையாவாள். இதனால் மட்டக்களப்பில் கண்ணகியம்மன் உற்சவங்கள் முடிவடைவதைத் தொடர்ந்து விஸ்ணுவாலய உற்சவம் ஆரம்பிக்கின்றது. கிருஸ்ணன் பிறந்த நட்சத்திரம் திருவோணமாகும். வடஇந்தியாவில் ஓணம் பண்டிகையும் இதேநாளில் நிகழும் என்பதை அறிவோம். "ஒன்பது கோளும் உறவு கொள்ளும் வேளையிலே, இன்பசுகந்த வசுவென்னும் முகூர்த்தமதில், சீரான செல்வத்திருவோண நாளினிலே பேராளன் வந்து பிறந்தான் காண் அம்மானை என்று" கிருஸ்ணனின் பிறப்பை கஞ்சன் அம்மானை கூறுகின்றது.

வைகாசித் திங்களில் வரும் இந்த திருவோணநாளினிலே, பெரும்பாலும் மட்டக்களப்பு விஸ்ணுவாலயங்களில் உற்சவம் தொடங்குகின்றது. அதனைக் கிருஸ்ணன் கோயில் சடங்கு என்றே கூறுவர். கண்ணகி உற்சவத்தை கண்ணகியம்மன் சடங்கு என்று குறிப்பிடும் வழக்கம் இத்துடன் ஒப்பு நோக்கத்தக்கது. சடங்கு என்ற சொல்லுக்கு திருமணம் என்ற கருத்துண்டு. விஸ்ணுவாலய உற்சவத்தின் இறுதியில் கிருஸ்ணனுக்கு திருமணம் ஒன்றும் நிகழ்வதால் இவ்உற்சவம் சடங்கு என்ற சொல்லால் குறிக்கப்படுவதாக இருக்கலாம். மேலும் சமூகத்தின் விசேடநிகழ்ச்சிகள் யாவும் சடங்கென வழங்கத்தக்கவை என்ற மானிடவியற்கருத்தும் இங்கு குறிப்பிடத்தக்கது. கண்ணகை உற்சவத்திலும் குளுத்திக்கு முன்னர் உள்ள இரவிலும் நிகழ்வது கலியாணச்சடங்காகும். கிருஸ்ணன் கோயிலில் இடம்பெறும் கலியாணச் சடங்கைக் கலியாணப்படிப்பு என்றும் கூறுவதுண்டு. அன்றிரவு கஞ்சன் அம்மானையிலுள்ள உருப்பிணிக்கும் கிருஸ்ணனுக்கும் திருமணம் நிகழ்ந்த பகுதி படிக்கப்படுவதால், அன்றைய உற்சவம் இப்பெயர் பெற்றிருக்க வேண்டும்.

பொதுவாக மட்டக்களப்பிலுள்ள கோயில்களில் உற்சவத் தொடக்கத்தை 'கதவு திறத்தல்' என்றே குறிப்பிடுவர். கண்ணகை கோயில்கள் ஆண்டுதோறும் பூட்டியே வைக்கப் பட்டிருக்கும். ஒரு வருடத்தில் நடக்கும் ஒரேயொரு உற்சவத்திற்காகவே, அவ் வருடத்தில் முதன் முதலாகக்கதவு திறக்கப்படும். அதனாற் போலும் எல்லாக் கோயில்களின் உற்சவத் தொடக்கங்களும் 'கதவு திறத்தல்' என்ற பெயரால் வழங்கப்படுகின்றன.

மட்டக்களப்பு விஸ்ணு கோயில்களில் கதவு திறக்கப்பட்ட நாளிலிருந்து இறுதி நாட்கல்யாணச் சடங்கு வரை ஒவ்வொருநாளும் கஞ்சன் அம்மானை படிக்கப்படும். கஞ்சன் அம்மானை ஏட்டுப் பிரதிகளாகவே இருந்தது. இவ்வேடுகள் கோயில்களின் புனிதச்சின்னங்களாகப் பாதுகாக்கப்பட்டன. உற்சவ காலத்தில் படிக்கப்படும் ஏட்டை வைப்பதற்காக ஒரு விசேட பெட்டி பயன்படுத்தப்பட்டது. அப்பெட்டி ஏட்டுப் பெட்டியென வழங்கப்பெற்றது. தெய்வங்களுக்கு மடை வைப்பது போல ஏட்டுப் பெட்டியிலும் மடை வைப்பது வழக்கம். கஞ்சன் அம்மானை படிப்பதற்கென உரிமை பெற்ற ஒருவரோ அல்லது அவரினது மரபினரோ கோயிலில் இருப்பர். கோயிற் பூசகரே கஞ்சன் அம்மானை படிப்பதுமுண்டு. படிக்கப்படும் கதைப்பகுதியை பக்தர்கள் குழுமியிருந்து பயபக்தியுடன் கேட்பர். பெரும்பாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களே கதைகேட்பதில் முன்னிற்பர். அம்மானையை ஒருவர் படிக்க மற்றொருவர் பலன் சொல்வதுமுண்டு. திமிலதீவு விஸ்ணுவாலயச் சடங்கின் போது அந்த நாட்களில் தேசிகமணி அருணாசலதேசிகர் ஆலய முன்றிலிருந்து கஞ்சன் அம்மானைக்குப் பயன் சொன்னது பற்றிய செய்திகளை அறிய முடிகின்றது.

மட்டக்களப்பு விஸ்ணுவாலயங்களில் தொடக்க காலத்தில் வெறும் சடங்குகளே நடத்துவார்கள். அவிபாகங்கள் படைக்கப்பட்டு பூசையோடு நாள் தோறும் கஞ்சன் அம்மானை படிக்கப்பட்டு வந்தது. இறுதி நாள் கல்யாணச் சடங்கு நடைபெறுவதோடு உற்சவம் முற்றுப் பெற்றது. மறுநாள் அமுது கொடுக்கப்படுகின்றது. அன்று கோயிலுக்கு நேர்கடனாக வந்த ஆடு, மாடு, கோழி, தென்னங்கன்று முதலியன விற்கப்படுகின்றன. அதை அடுத்து மாலையில் மடை பிரிக்கப்பட்டு சடங்கில் தொடர்பு கொண்ட குடும்பங் களுக்கும் அடியார்களுக்கும் கொடுக்கப்படுகின்றது.. இந்த மடை பிரித்தலில் வண்ணான் ஒரு முக்கிய பங்காளியாவான். மடையில் குறிப்பிட்ட ஒரு கணிசமான பகுதி அவனுக்குக் கொடுக்கப்பட்டது. இத்தோடு சடங்கு பூரணமாக நிறைவெய்தி கதவு சாத்தப்பட்டது. ஆரம்ப காலங்களில் இவ்வாறு அடைக்கப்பட்ட கிருஸ்ணன் கோயில் கதவுகளும் அம்மன் கோயில்களைப் போல வருடம் முழுக்க அடைக்கப்பட்டிருந்தன. காலகதியில் விஸ்ணு கோயில்களில், வாரத்தில் வெள்ளி, சனியாகிய இரு நாட்களில் பூசை நடக்கும் வழக்கம் ஏற்பட்டது. இதன் அடுத்த வளர்ச்சியாக நித்திய-தினசரி பூசைகள் இடம் பெற்றன.

இவ்வாறு வருடம் ஒரு தடவையே ஆலயக்கதவு திறக்கப்பட்டமைக்குக் காரணம் என்ன? மட்டக்களப்பு மக்கள் அன்று தமது ஜீவனோபாயத்துக்கு நெற்செய்கையையும் மந்தை வளர்ப்பையும், மீன் பிடித்தலையுமே நம்பியிருந்தனர். அதிகமான வயல் நிலங்கள் வானம் பார்த்த பூமியாகவேயிருந்தன. மழையை நம்பி விதைத்தனர். அறுவடை செய்த பின் பெற்ற நெல்லையும், கால்நடைப் பிரயோசனங்களையும் வைத்துக் கொண்டே அடுத்த போகம் வரை காலத்தை-யோட்டினர். ஓய்வு காலத்தில் கூத்துப்பழகி அரங் கேற்றுவதில் ஈடுபட்டனர். ஆகவே நாள் தோறும் கோயிலைத் திறந்து பூசையில் ஈடுபடும் வாய்ப்பும் வசதியும் இருக்கவில்லை. பூசையில் ஈடுபடும் நாட்களில் அவர்கள் சுத்தமாக புனிதமாக இருக்க வேண்டுமென விரும்பினர். வருடம் முழுக்க சுத்த போசனத்தோடு இருப்பதுவும் சாத்தியமற்று இருந்தது. இவ்வாறான காரணங்களால் நித்திய பூசையில் ஈடுபடாது வருடம் ஒருமுறை கதவு திறத்தல் நடந்திருக்கலாம்.

இவ்வாறு சடங்கு இடம் பெற்ற விஸ்ணு கோயில்களில் காலமாற்றம், சமூக மாற்றம் மற்றும் தேவைகள் காரணமாக பூசையில் ஒரு படிமுறை வளர்ச்சி ஏற்பட்டிருக்கலாம். கால கதியில் சடங்குகள் திருவிழாக்களாக மலர்ச்சி கண்டன. இதற்கு எடுத்துக்காட்டாக திமில தீவு விஸ்ணுவாலயத் திருவிழாக்களின் தனித்துவத்தை இனி நோக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திமில தீவு விஸ்ணுவாலயத்தில் சடங்கு முறையைத் திருவிழாவாக மலரச் செய்தவர் சின்னையாப் பூசகர் ஆவார். வைகாசி மாதத்து இறுதியில் திருவோண நாளில் திருவிழா ஆரம்பிக்கும் கொடியேற்ற வைபவம் இங்கு இடம் பெறுவதில்லை.

முதலாம் நாள் திருவிழா மாங்கனி பறித்தல் என்ற நிகழ்வோடு இடம் பெறும். இவை கஞ்சன் அம்மானைக் கதை நிகழ்வுகளைக் கொண்டிருக்கும்.

இந்த முதலாம் நாள் திருவிழாவில், கஞ்சன் அம்மானை படிப்பு, கஞ்சன் வேட்டைக்குப் புறப்படுதல் வரை நிகழும். படிப்பு நிறுத்தப்பட்டு கஞ்சனின் உருவத்தோடு, தங்கைகள், உரோகிணி, தேவகி, கணவர் வாசுதேவர், ஆகியோர் வேட்டைக்குப் புறப்படுவர். காட்டில் ஒரு மாமரத்தில் காணப்படும் மாங்கனியைப் பறித்துத் தருமாறு தங்கைகள் கஞ்சனைக் கேட்க, அவன் அம்பினால் வீழ்த்தி உண்ணக் கொடுப்பான். அதை அறிந்த பயாசுதன் என்ற முனிவர் வெளிப்பட்டு கனியை உண்டவனின் வயிற்றுச் சந்ததியால் அதனை அறுத்தவன் மடிவான் என சாபமிடுவார். இந் நிகழ்வு நாடக நிகழ்வாக நிகழும். இத்தோடு முதலாம் நாள் திருவிழா முடிவுறும்.

இரண்டாம் நாள் திருவிழா பூதகி வதையாகும். கஞ்சனால் ஏவப்பட்ட பூதனைமுலையில் கண்ணன் பாலுண்டு அவளை வதைக்கும் நிகழ்வு இதில் இடம் பெறும். மூன்றாம் நாள் திருவிழா 'மருது கால்சாய்தல்' என்ற பெயர் கொண்டது. கஞ்சனால் ஏவப்பட்ட மத்தன், மதாமத்தன் என்ற இருவர் மருத மரமாக நிற்பர். அவர்களை உரலுடன் கட்டுண்ட கண்ணன் வதைப்பது இத்திருவிழாவில் நிகழும். நான்காம் நாள் திருவிழா கன்று கொண்டு கனிக்கெறிதல் ஆகும். இதில் சுகந்தன் விகந்தன் என்னும் அசுரர் இருவர் விழா மரமாகவும் கன்றாகவும் நிற்பர். கண்ணன் கன்றைப் பிடித்து விழா மரத்தில் எறிந்து இருவரையும் வதைப்பது காட்டப்படும்.

ஐந்தாம் நாள் திருவிழாவில் கூத்தரைக் கொல்லுதல் இடம் பெறும். கஞ்சனால் ஏவப்பட்ட ஒன்பது அசுரர்கள் கூத்தாடிகளாக கண்ணனிடம் வந்து தாம் கூத்தாடுவதாகவும், பரிசாக கன்றுகள் தருமாறும் கேட்பார். கண்ணன் தானே கூத்தாடி கூத்தரைக் கொன்றொழிப்பான். ஆறாம் நாள் திருவிழாவில் நரகாசுரன் வதம் இடம்பெறும். ஏழாம் நாள் திருவிழா கஞ்ச சம்மாரமாகும். ஏராளமான மக்கள் கஞ்சசம்மாரம் காண வந்து கூடுவர். கஞ்சன் கண்ணனால் கொல்லப்பட்ட பின் ஈமக்கிரியைகள் எல்லாம் நடைபெற்று முடியபொழுது விடிந்து விடும். எட்டாம் நாள் திருவிழாவில் உருப்பிணி கல்யாணம் நிகழும். கலியாணக்கால் வெட்டி வருதல், கல்யாணக்கால் நடுதல், சோடனை செய்தல், திருக்கல்யாணம், கல்யாணக் கால் சுற்றுதல், சுவாமி, உருப்பிணி சமேதராய் எழுந்தருளுதல் என்று நிகழ்வுகள் யாவும் இடம்பெற விடிந்து விடும். இதனோடு திருவிழாக்கள் நிறைவடையும். அடுத்த நாள் அமுது கொடுக்கப்படும். இவை திமிலதீவு மகாவிஸ்ணுவாலயத் திருவிழா நடைமுறைகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திமில தீவு மகாவிஸ்ணுவாலயம் சுமார் 250 ஆண்டு பழமையானது எனக் கருதப் படுகிறது. திமில தீவு மகாவிஸ்ணுவாலயம் மட்டக்களப்பிலுள்ள ஏனைய விஸ்ணு ஆலயங்களையெல்லாம் விட மிகவும் பழமையானதாகும். அங்குள்ள பாரிய அரச மரத்தின் வயதை அடிப்படையாகக் கொண்டு அவ்வாலயம் கி.பி 12 ம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனத் துணியலாம். வந்தாறு மூலை மகாவிஸ்ணுவாலய உற்சவத்தின்போது மக்கள் தங்களைக் கண்ணனது கோத்திரமாகப் பாவித்து ஆடல் பாடல்களில் ஈடுபடுவர். விஸ்ணு வரலாறு கூறும் கூத்துக்களும் இடம் பெறுகின்றன. இங்கு ஆனிப் பூரணையில் நடக்கும் தீர்த்தத்தின்போது தயிர் முட்டி விளையாட்டும் நடைபெறுகின்றது. பெரியாழ்வார் பாடிய கண்ணனின் குழந்தைப் பருவப்பாடல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. கண்ணன் தயிர் களவிடல், யசோதை கண்ணனைக் கட்டிப் போடுதல் என்பனவும் நடிக்கப் படுகின்றன. புரட்டாதிமாதப் பூரணையில் இங்கு கஞ்சனம்மானை படிக்கப்படுகிறது. படிப்பின் இறுதியில் நொண்டிக் கூத்தும் இடம் பெறுகிறது. வந்தாறு மூலை மக்கள் பலரும் கண்ணனதும், கண்ணன் குடும்பத்தினதும் பல்வேறு பெயர்களைக் கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

பழுகாமம் விஸ்ணுவாலயத்தில் ஆவணி அபரபக்கத் திருவோணத்தில் உற்சவம் தொடங்கிபதினொரு நாட்கள் திருவிழா நிகழ்கிறது. கஞ்சன் அம்மானையும் படிக்கப்படுகிறது. ஐந்தாம் நாள் உருப்பிணி கல்யாணமும் பதினொராம் நாள் திருவேட்டையும் நடைபெறுகின்றன. பழுகாமத்தில் நிகழும் திருவேட்டை, வந்தாறு மூலையில் மான் வேட்டையாக இடம் பெறுகின்றது.

இவ்வாறு மட்டக்களப்பில் நிலவிவரும் வழிபாட்டினை நோக்கும் போது, கால்நடைகள் ஏராளமாக வளர்க்கப்பட்ட பகுதிகளிலேயே தொடக்க காலத்தில் இவ் வழிபாடு இடம் பெற்றதென்பதைத் தெளியலாம். விஸ்ணு ஆலயங்கள் உள்ள கிராமங்களில் ஆரம்பகாலத்தில் ஏராளமான பசுமந்தைகள் வளர்க்கப்பட்டு, பசுக்களின் காவலனாக மாயவன் வழிபடப்பட்டிருக்க வேண்டும். மட்டக்களப்புக் கிராமங்களில் பசு அல்லது எருமைகளில் முதல்முதல் கறக்கும் பாலை விஸ்ணுவாலயத்துக்குக் காணிக்கையாக்கும் வழக்கம் உள்ளது. மிகப் பழமையான விஸ்ணுவாலயங்கள் குளக்கோட்டனால் கட்டப்பட்டனவாகக் கருதப்படுகின்றன. இக்கருத்து எந்தளவு உண்மை என்பது ஆராயப்பட வேண்டும். இங்குள்ள விஸ்ணுவாலய வழிபாடுகளின் போது கஞ்சன் அம்மானைப் படிப்பு முக்கிய இடம் பெறுவது கவனிக்கத்தக்கதாகும்.

காத்தற் கடவுளாகிய கண்ணன் வழிபாடு அன்றிலிருந்து இன்று வரை தொடர்ந்து வந்தாலும், மட்டக்களப்பில் அந்த வழிபாடு போர்க்காலச் சூழ்நிலையில் மேலும் முக்கியத்துவமும் சிறப்பும் பெற்று விட்டதைக் காண்கிறோம். மட்டக்களப்பு மக்கள் சைவநெறியில் நிற்பவர்களாயினும் விஸ்ணுவையும் சைவநெறிமுறைகள் தவறாது வழிபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். முழுமுதற்கடவுளாகிய சிவனின் ஐந்தொழில்களில் ஒன்றாகிய காத்தற்றொழில் மூர்த்தி மகாவிஸ்ணுவாவார். அவரை வழிபட்டு அருள் பெற நம்மவர் முன்நிற்பது விந்தையில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்தில் மந்திரபூர்வ பத்ததி முறை வழிபாடு

**– மு. பவளகாந்தன்** B.A. (Hons.) Dip. in Ed., M. Ed. –

இலங்கையின் பல பாகங்களிலும் மந்திரபூர்வ பாரம்பரிய பத்ததி முறை வழிபாடு நீண்டகாலமாக இந்து சமூகத்தினிடையே வழங்கி வந்திருக்கின்றது. நாளடைவில் அது மறைந்து போகலாயிற்று. எனினும் மட்டக்களப்பு மாவட்டத்திலே அது இன்றும் நன்கு வேருன்றிய ஆலமரம்போல பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவது மட்டக்களப்புத் தமிழகத்திற்கே உரித்தான ஒரு விசேட அம்சமாகும்.

இப்பத்ததிகள் முனிவர்களால் ஆக்கப்பட்டுக் காலம் காலமாக சந்ததி வழியாகக் குருகுல முறையில் போதிக்கப்பட்டு வந்துள்ளன. இப்பூசை முறையைக் கற்றவர்கள் பூசகர், கட்டாடி, கப்புவன், குருக்கள் எனப் பல்வேறு நாமங்களால் அழைக்கப்படுகிறார்கள். இப்பூசை முறைகளைக் கற்றவர்கள் கைதேர்ந்த மந்திரவாதிகள் ஆவர். இவர்கள் தமது குருமூலமாக ஒரு தெய்வத்தைத் தியானம் செய்யும் முறையை அறிந்து கொண்டு அத்தெய்வத்தைத் தியானம் செய்து அதன் அருளைப் பெற்றுக்கொண்டவர்களாவர். அத்தெய்வம் 'வாலாயம்' அல்லது 'வாலை' என அழைக்கப்படுகிறது. மந்திரங்களுக்கு மேலாக இவர்கள் வேறுபல நூல்களையும் கற்றுத் தெளியவேண்டும். குருக்கள்கோடலி, அடுக்குநிலைபோதம், குருபதேசம், ஆசாரமுறைகள், சோதிடம், வைத்தியம் (அடிப்படை விடயங்கள்) என்பன அவற்றுள் சிலவாகும். மேலும் சில கிரியை முறைகளை (கைபாகம்) அனுபவரீதியாகச் செய்யும் திறனையும் பெற்றுக்கொள்ள வேண்டும். தீயகுணம் படைத்தவர்களுக்கு இவற்றைக் கற்பிக்க வேண்டாம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரமும், வாகடமும் ....
...............................
சுந்தரமாம் புகழ்குலத் தோனாலும்
துட்டருக் கிம்மூன்றும் கொடுப்பராகில்
அந்தரத்தில் எழுநரகில் அழுந்திப் பின்னும்...

இவ்வாறு முறைமையாகப் பயிற்றுவிக்கப்பட்டு வாலை சித்தி பெறவந்தவர்களுக்கு மட்டுமே அப்பியாசம் பலிதமாகும். இது வழிபாட்டு முறையில் காணப்படும் ஒரு சிறப்பம்சம் ஆகும்.

## ஆலய அமைப்பு

பத்ததி முறை வழிபாட்டிற்கு நிரந்தரமான கட்டடங்களாலமைந்த ஆலய அமைப்பு அவசியமானதொன்றல்ல. இயற்கையான மரங்களிலோ, தற்காலிகமாக ஆக்கப்பட்ட பந்தல்களிலோ இப்பூசைகள் நடாத்தப்படுகின்றன. இவ்வாறு பந்தல்கள் இடப்படும் போது கருவறையின் பிரமாணத்திற்கமைய ஏனைய மண்டபங்கள் வகுக்கப்படுகின்றன. இது ஒரு மனிதனின் அமைப்பாக அமையும். கருவறையில் அமையும் மூல்மூர்த்தம் ஒவ்வொன்றுக்கும் இன்ன இன்ன காவல் தெய்வங்கள் என வகுத்து கூறப்பட்டுள்ளது. உதாரணமாக கண்ணகை அம்மனுக்கு காளியம்மன், வீரபத்திரர், வயிரவர், நாகதம்பிரான், நரசிம்மர் என்பன காவல் தெய்வங்களாகும்.

"வாகாகக் காளியுடன் வலதுபுறம் வீரன்
.......................................................
பத்தினியாள் மனையினிலே பரிவாரமென வகுப்பாம்"

இவர்களுக்கும் பந்தல் வகுக்கப்பட்டு வழிபாடு இயற்றப்படும். (கருவறையிலுள்ள சிம்மாசனம் படிகளைக் கொண்ட அமைப்பு உடையது.)

## கும்பங்கள்

பத்ததி முறையிலான வழிபாட்டு முறையில் விக்கிரங்களை விட, கும்பங்கள் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. கருவறையில் பல கும்பங்கள் மந்திர பூர்வமாக நிறுத்தப்படுகின்றன. கும்பங்கள் பொதுவாக மாவிலைகளாலன்றி வேப்பிலைகளாலேயே அமைகின்றன. (கும்பங்கள் நிறுத்தும் முறை மிக விரிவானதாகையால் இங்கு தரப்படவில்லை) அம்மன் முகக்களைகள் அபிசேகம் (கலசமாட்டி) செய்யப்பட்டு கும்பங்களுடன் சேர்த்து அம்மனின் உருவமாக ஆக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்காசனத்திலே வைக்கப்பட்ட பல கும்பங்கள், மடைகள், வட்டாமடைகள் என்பனவற்றை மூடி பல படைகள், சேலைகள் சாத்துவதன் மூலம் (அடுக்குச் சாத்துதல்) சிங்காசனம் முழுவதுமாக ஒரு உருவமாக அம்மன் திருக்கோலம் அமைக்கப்படுகிறது. இது பிரபஞ்சத்தின் கோலத்தை காட்டி நிற்கும்.

தேவலோக சஞ்சரியான அம்மன் மந்திரபூர்வமான கிரியைகள் மூலம் இருக்கும் பங்களிலே தங்கி அருளைப் பாலிக்கிறாள். பூசைகளின்போது வேப்பம் பத்திரம், தாம்ரைப்பூ, கமுகம்பாளை, என்பன முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

## நிவேதனப் பொருள்கள்

இச்சடங்கு முறைகளுக்கே உரியதான நிவேதனப் பொருள்கள் உண்டு. பல நிவேதனப்பொருட்கள் ஒருங்கு சேர்க்கப்பட்டு ஒரு தொகுதியாக நிவேதனம் செய்யப்படுகிறது. இத்தொகுதி 'மடை' என்று அழைக்கப்படுகின்றது. இதில் வெற்றிலை பாக்கு, பலவகைப் பழங்கள், கரும்பு, கமுகம்பாளை பூ முதலியன அமைந்திருக்கும். அண்டத்தினதும் எமது உடலினதும் இயக்கத்தின் கூட்டாக உள்ள தன்மையை இது விளக்கி நிற்கிறது.

பல பழங்கள், கரும்புச்சாறு, சர்க்கரை, கற்கண்டு, பனங்குட்டான், சின்ன வெங்காயம் முதலியவைகளின் சேர்க்கையால் தயாரிக்கப்படும் பாணக்கம் இன்னோர் விசேட நிவேதனப் பொருளாகும்.

பாற்பொங்கல், சர்க்கரைப் பொங்கல், கறியமுது, கூழ், தயிர், பலகாரம், துள்ளுமா போன்ற பள்ளையப் பொருட்கள், தீ என்பவையும் விசேட நிவேதனப் பொருட்களாகும்.

நரசிம்மர், வீரபத்திரர், வயிரவர்... போன்ற ஆண் தேவதைகளுக்கு அரிசிமாவிலே செய்யப்படுகின்ற உறட்டி விசேடமான நிவேதனப் பொருளாகின்றது.

மூர்த்தங்கள் ஒவ்வொன்றுக்கும் விசேடமான நிவேதப் பொருள்கள் சில உண்டு. விரிவஞ்சி, தனித்தனி விளக்கப்படவில்லை. அபிசேகத்தின் போது சாதாரணமான அபிசேகப் பொருட்களுடன் முறைமையாகப் பல வாசனைப் பொருட்களையும் புனிதப்படுத்தக்கூடிய பொருள்களையும் கூட்டி தயாரிக்கப்பட்ட 'வாடை' முக்கியமான இடத்தைப் பெறுகிறது. மஞ்சள், குங்குமம், வாடை என்பன புனிதப்படுத்தும் பொருட்களாயும் மங்கலப் பொருட்களாயும் அமைகின்றன (தயாரிப்பு முறைகள் விளக்கப்படவில்லை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடையாளப் பொருட்கள்

சடங்குகளின்போது சில விசேடமான அடையாளப் பொருட்கள் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

பிரம்பு, சிலம்பு, அம்மானைக்காய், அக்கினிச் சிலம்பு, பந்து, வேல், வாள், சூலம், வயிரவர் பொல், சாட்டைக்கயிறு, மணி, பல்வேறு தீபக்கால்கள் என்பன பொதுவானவற்றுள் சில. (இவை தயாரிக்கப்படும் முறைகள் அவற்றின் பிரயோகம் என்பன விரிவஞ்சி இங்கு தரப்படவில்லை).

## வாத்தியக் கருவிகள்

பிரதான வாத்தியக்கருவி பறைமேளமும், குழலுமாகும் அதற்கு மேலாக, பூசகர் தமது மந்திர உச்சாடனத்தின் போது உடுக்கு, சவுணிக்கை என்பனவற்றை உரிய தாளத்தில் இசைப்பார். அம்மானைக்காய், சிலம்பு என்பனவும் இசை எழுப்பப் பயன்படுகின்றன. இந்த இசைகள் முறைப்படி இசைக்கப்படும் போது எமது சிந்தை எம்மையறியாமலே அன்னையின் பால் ஈர்க்கப்பட்டுவிடுகிறது.

## வேண்டுதல்கள் நிறைவேற்றும் முறைகள்

பக்தர்கள் தாங்களே தங்களை வருத்தி வாயலகு இடுதல், பச்சிலைக்காவடி எடுத்தல், தீச்சட்டி எடுத்தல், அங்கப் பிரதட்சனை செய்தல், அடி அழித்து வழிபடுதல், தீ மிதித்தல் முதலிய முறைகளில் தம்மை அர்ப்பணித்து வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்கின்றனர். அன்னை என்ற ரூபத்தில் கருணைக் கடலாகத் தேவியைக் காணும் பக்தர்கள் தாம் தவறு செய்யும்போது தண்டிக்கப்படுவோம் எனும் அச்சமுடையவர்களாயும் உள்ளனர்.

அச்சம் உள்ள இடத்திலே பற்று இருக்க முடியுமா? முடியும் என்பதற்கு இவ்வழிபாட்டு முறை சாட்சியாகிறது.

அகவல், அறவிளி, தாலாட்டு, காவியம், கும்மி என்பன இவ்வழிபாட்டு முறையில் இடம்பெறும் தோத்திரப் பாடல்களாகும். அம்மானைப்பாடல், திருக்குளிர்ச்சி தேரேற்று, மங்களம், வாழி என்பன குறிப்பான சில மூர்த்தங்களுக்கு உரிய குறிப்பிட்ட வேளைகளில் பாடப்படும் பாடல்களாகும். இவை உரிய தாள மெட்டுடன் உடுக்கு, சவுணிக்கை, சிலம்பு ஒலிகளோடு பாடப்படுவது எம்மைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்திவிடும் தன்மை கொண்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னிமார் பூசை

தேவகன்னியர்களைக் கும்பத்திலும் மடைகளிலும் வழிபடுதலுக்கு மேலாக பூப்பெய்தாக பெண்களைக் கன்னிமாராக நினைத்து அவர்கள் அம்மனுக்கு ஆலாத்தி ஏந்த அவர்களைத் தேவ கன்னியர்களாக வழிபடுவதும் அவர்களுக்கு அமுதளித்து மகிழ்வூட்டுவதும் தனிச்சிறப்பானதோர் நடைமுறையாகும்.

## தெய்வம் ஆடுதல்

சடங்கின் போது மனிதர்கள் சந்நதம் கொண்டு தெய்வம் ஆடுதலும் அவர்களினூடாகத் தேவியும் காவல் தெய்வங்களும் பக்தர்களுக்கு அருள் வாக்குக் கூறுதலும் மற்றொரு சிறப்பம்சம் ஆகும். வித்துவப் போட்டி காரணமாக ஒரு பூசகர் ஆட்டுவிக்கும் தெய்வத்தை மற்றொருவர்ஆடவிடாது தடுப்பதும் அதனை முன்னையவர் வென்று தெய்வத்தை ஆட்டி வரம் பெறுவதும் உண்டு. இவ்வாறு தடுத்தல் 'கட்டுதல், படுகளம் இடுதல், தம்பனம் செய்தல்' என்று பல வகைகளில் நிகழும். அவற்றை வெல்பவர் 'வெட்டுதல், எழுப்புதல்' என்ற செய்கைகளைப் பிரயோகிக்கிறார்.

## பூசை முறைகள்

ஒவ்வொரு பெயரால் தேவி அழைக்கப்படும்போதும் அந்த மூர்த்தத்தின் அவதார வரலாற்றுக்குப் பொருத்தமானதோர் பூசை முறையைப் பத்ததி கொண்டுள்ளது. பொதுவாக பத்ததிகள் முதலில் அகவற் பாக்களாகக் கூறப்பட்டுப் பின்னர் மந்திரங்கள், கிரியைகள், இயந்திரங்கள் என்பனவற்றை விளக்குகின்றன. அகவற்பாக்களிற்கு உதாரணமாகக் கண்ணகை அம்மன் பத்ததியிலிருந்து சில அடிகள் வருமாறு :

"மந்திரமோதி மாது கண்ணகைக்கும்
ஆசானை புரிந்து பூசனை செய்ய
உவகை சேர் பந்தலில் உகப்புடன் போட்டு
பாங்கரசாணியாம் வதுவை வகுத்து
நடுவொரு காலிடை நாகமியற்றி
.........................................
காளி, மாரி, பேச்சி, கண்ணகை, கடல்நாச்சி, துரோபதை."

எனும் தெய்வங்கள் பரவலாக வணங்கப்படும் பெண் மூர்த்தங்களாகும் வயிரவர், வீரபத்திரன், நரசிங்கர், பெரியதம்பிரான், வதனமார் எனும் தெய்வங்கள் ஆண் மூர்த்தங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய எல்லா ஆலயங்களிலும் நாகதம்பிரான் வழிபடப்படுவதோடு பல ஆலயங்கள் நாகதம்பிரானை மூல மூர்த்தியாகவும் கொண்டுள்ளன.

வெவ்வேறு மூர்த்தங்களுக்கான பூசை முறைகளில் சிறு சிறு வேறுபாடுகள் உண்டெனினும் பொதுவான சில அம்சங்களும் உண்டு. அவை கீழே தரப்படுகின்றன:

மண்டபம் காவல் செய்தல் அல்லது கதவு திறத்தல் எனும் கிரியையுடன் சடங்கு ஆரம்பமாகிறது. ஆரம்ப நாளன்று தினமும் வழிபாடு நடைபெறும். (பொதுவாக) பிள்ளையார் ஆலயமொன்றிலிருந்து அம்மன் எழுந்தருளிக் கொண்டு வருவதுடன் சடங்கு ஆரம்பமாகிறது. (நிரந்தரக் கட்டடமாக அமைத்துத் தினமும் பூசை நடைபெறும் ஆலயங்களில் இக்கிரியை இடம் பெறுவதில்லை.) 3, 5, 7, 9, 10, 11 நாட்கள், சடங்கு நடைபெறும் நாட்களின் எண்ணிக்கையாக அமைகின்றன. விக்கிரகம் அல்லது முகக்களைக்கு அபிசேகம் செய்யப்பட்டு கும்பங்கள் வைக்கப்பட்டு, மடைகள் வைக்கப்பட்டு தினமும் குறைந்தது 2 வேளை சடங்கு நிகழ்த்தப்படும். பொதுவாக அதிகாலை வேளையும், மாலை வேளையும் சடங்கு நிகழ்கிறது. முதலில் பிள்ளையாருக்கும் அதனைத் தொடர்ந்து பரிவாரத் தேவர்களுக்கும் பூசை நிகழ பின்னர் மூலமூர்த்தி கருப்பூசை நிகழும். இவ்வேளை தெய்வங்களை ஆட்டுதல் இடம்பெறும். முதல் நாளிலே மூலமூர்த்தியையும் ஏனைய பரிவாரகத் தெய்வங்களையும் அவர்களுக்குரியதான மேடைகளில் பூசகர் நிறுத்தி வைக்கிறார்.

3ஆம், 5ஆம், 7ஆம் நாளாகிய ஒற்றைப்படை நாள் ஒன்றில் ஆலயத்திலிருந்து அம்மனை எழுந்தருளச் செய்து ஊரில் உள்ள பொருத்தமான இடமொன்றில் அரசு, வேம்பு, அல்லது பூவரசு மரமொன்றின் கிளை ஒன்றினை வெட்டிக் கொணர்ந்து மண்டபத்தில் முறைப்படி நாட்டி அதற்குச் சேலைகளால் அடுக்குக் கட்டி அம்மனுருவாகச் சோடனை செய்து அதனருகே கன்னியருக்கும் மடை, கும்பம் வைத்து அடையாளங்கள் சூழ வைத்து பூசை செய்யப்படுகின்றது. இது கன்னிக்கால் அல்லது கல்யாணக்கால் என அழைக்கப்படும்.

மூல மூர்த்தி பூசை முடிந்ததும் பூசகர் அல்லது தலைமைத் தெய்வம் அம்மன் முகக்களை ஒன்றுடன் பாளை, பத்திரம், பிரம்பு சகிதம் அம்மனாக வேடம் தாங்கி அம்மன் உருவேறிய நிலையில் கலியாணக்காலை மூன்று தடவையும் பின்னர் ஆலயத்தை ஒரு தடவையும் வலம் வருவார். இவ்வேளை காவல் தெய்வங்களாக உருவேற்றப்பட்ட தெய்வங்களும் அம்மனுடன் வீதி உலா வரும் அவ்வேளை அம்மனைப் போற்றிப் புகழ்ந்து அகவல், தாலாட்டு, கும்மி, காவியம் முதலிய தோத்திரப் பாடல்கள் உடுக்கு, சிலம்பு, பறைமேளம், குழல் இசைகளுடன் பாடப்படும். கன்னியர்கள் ஆலாத்தி சகிதம் அம்மனுடன் சேர்ந்து வலம் வருவர்.

ஒரு நாளில் அம்மனை ஊர்வலமாக ஊரினுள் அழைத்துச் சென்று ஊரின் எல்லைகளில் காவல் தெய்வங்களுக்குப் பலியிட்டு ஊர் காவல் செய்யப்படுகிறது. இதன்மூலம் ஊரினை அம்மனும் காவல் தெய்வங்களும் துன்பங்கள் வராமலும், அனர்த்தனங்கள் நிகழாமலும் காக்கின்றன என்பது நம்பிக்கை. (இது எல்லா மூர்த்தங்களுக்கும் பொருந்தாது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி நாளன்று ஆலய முன்றலில் மூன்று அடுப்பு மூட்டி பானைகளுக்கு நூல் சுற்றி ஆலயத்தை வலமாக வந்து அடுப்பில் ஏற்றி மந்திரபூர்வமாக அக்கினி மூட்டி பாற்பொங்கல் செய்யப்பட்டு பால் பொங்கியதும் பொங்கிய அமிர்தம் அம்மனுக்கு நிவேதனம் செய்யப்படும். இது 'விநாயகப் பானை' என அழைக்கப்படுகிறது. அம்மனுக்கு வழங்கப்படும் அதி உன்னதமான நிவேதனப் பொருளாக இவ்வமிர்தம் கொள்ளப்படுகிறது. அதனைத் தொடர்ந்து பானையுள் அரிசி சேர்த்துப் பொங்கி அவ்வமுது மூலமூர்த்திக்கும் காவல் தெய்வங்களுக்கும் நிவேதனம் செய்யப்படும். இதேநாளில் (பொதுவாக) நாகதம்பிரானுக்குப் பக்தர்கள் பொங்கல் செய்து வழிபாடு நிகழும். சடங்கு நிகழ்வின் உச்சகட்டக் கிரியையாகக் கருவறையில் இடம் பெற்றுள்ள மூலமூர்த்தத்தை பொறுத்து தீ மிதிப்பு, திருக்குளிர்ச்சி அல்லது பள்ளயப் பூசை இடம்பெறும். கண்ணகை அம்மன் ஆலயங்களில் திருக்குளிர்ச்சி முக்கியத்துவம் பெறுகிறது. அம்மனைக் கோபம் தணியுமாறு வேண்டி நிகழும் கிரியை இதுவாகும்.

காளியம்மன், மாரியம்மன் ஆலயங்களிலே தீமிதித்தலைத் தொடர்ந்து காவல் தெய்வங்களுக்குப் பலிபூசையும், தொடர்ந்து பள்ளயப் பூசையும் இடம் பெறும். சர்க்கரை பொங்கல், தயிர், கூழ், பலகாரம், உறட்டி, பாணக்கம், துள்ளுமா போன்ற விசேட நிவேதனப் பொருட்கள் படையலாக அம்மனுக்கும் காவல் தெய்வங்களுக்கும் நிவேதனம் செய்யப்படும். சில மூர்த்தங்களுக்கு மதுவும், பள்ளயத்தின் போது சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

தெய்வமாடுபவர்களுக்கு சாட்டைக்கயிற்றினால் அடிப்பதன் மூலம் சாட்டைப் பலியும் கொடுக்கப்படும். சில மூர்த்தங்களுக்கு இறுதிக் கிரியையாக யாகம் வளர்த்து யாகத்தில் பலியிட்டு வேள்வி செய்யப்பட்டு வந்துள்ளமை வரலாற்று உண்மை. தற்போது இவை கைவிடப்பட்டுவருகின்றன. பலியிட்டு வேள்விகள் நிகழ்த்தும் முறைகளை ஆகமங்களும் கொண்டுள்ளன.

சடங்கு அனைத்தும் முடிவுற்றதும் அம்மனுக்கு வாழிபாடி, தேரேற்றும் நிகழ்வு இடம்பெறும். எழுந்தருளப்பட்டு தமது தற்காலிகமான பந்தலுக்கு அழைத்து வரப்பட்ட அம்மனையும் காவல் தெய்வங்களையும் தேரேற்றித் தேவுலகு செல்ல விடை கொடுக்கும் நிகழ்வு இதுவாகும். இந்தப்போதிலே கும்பத்திலே அம்மனுக்குப் பூப்போட்டு வணங்கி பின்னர் அது இயற்கை நீர்நிலை ஒன்றில் சொரிந்து விடப்படுகிறது.

அன்றிரவு வயிரவர் சடங்கு நிகழ்த்திக் காவல் தெய்வமான வயிரவரை ஆலயத்தையும் ஊரினையும் காவல் புரியுமாறு வேண்டப்பட்டு ஆலயக்கதவு பூட்டப்படும்.

எட்டாம் நாளில் 'எட்டாமடை' எனவும் சில மூர்த்தங்களுக்கு 'பூமடை' என்ற பெயரிலும் வேண்டுதல்கள் தோத்திரங்களால் துதித்து சடங்கு காலத்தில் ஏற்பட்ட தவறுகளைப் பொறுத்தருளுமாறு வேண்டிக் கொள்ளுதல் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமூர்த்தங்களின் தன்மைக்கேற்பத் தீர்த்தம் எடுத்தலும் (இயற்கை நீர் நிலையிலிருந்து ஆலயப் பாவனைக்குரிய தீர்த்தம் கொண்டு வருதல்) நெல்லுப்பெட்டி எடுத்தலும், அதனைக் குற்றி விநாயகப் பானைக்கான அரிசியினைப் பெறுதல் என்பனவும் இடம்பெறும். இவ்விபரங்கள் இங்கு தரப்படவில்லை.

அடையாளப் பொருட்கள் எவ்வாறு செய்யப்படவேண்டும் அவற்றின் பரிமாணங்கள் என்ன என்பதற்கு நியமங்கள் உள்ளன. அவை செய்யப்படவேண்டிய முறைகளும் உள்ளன. உதாரணமாகக் கொடிமரம் எவ்வாறு ஒரு தத்துவத்தின் அடிப்படையில் அமைக்கப்படுகிறதோ அவ்வாறே பொற்பிரம்பு அல்லது வெள்ளிப்பிரம்பும் ஒரு தத்துவ அடிப்படை கொண்டது. இதன் நீளம், பருமன் என்ன மரத்தில் செய்யப்படவேண்டும் பொன் அல்லது வெள்ளிப்புரி எவ்வாறு சுற்றப்பட வேண்டும், எவ்வாறு பிரம்பிற்குப் பூண்கள் இடப்பட வேண்டும், இது பின்னர் என்ன கிரியை மூலம் பூசைக்குரியதாக்கப்படல் வேண்டும், என்பதற்கெல்லாம் முறைகள் உண்டு. யோகிகள் கூறுவது போன்று மனிதனின் சக்தியை எழுப்புவதை ஒத்ததே பிரம்பிற்கும் உயிரூட்டும் செயலும். இவற்றை விபரிப்பின் கட்டுரையை விரிவாக்க நேரிடும் என்பதால் இவை இங்கு விளக்கப்படவில்லை. அவ்வாறே கும்பங்கள் வைத்தல் பின்னர் அவற்றைப் பிரித்தல் எவ்வாறு செயற்படுத்த வேண்டும் என்ற விபரங்களும் விளக்கப்படவில்லை. சடங்கு முறைகளில் நடைபெறும் கிரியைகள் பற்றிப் பொதுவான ஒரு வரைவு தரப்பட்டுள்ளது.

இங்கு கூறப்பட்டவை பொதுவாக எல்லாச் சடங்குகட்கும் உரியன எனக் கொள்ளல் வேண்டும். சில குறிப்பான மூர்த்தங்களுக்கு இங்கு தரப்படாத வேறு கிரியைகளும் இடம்பெறும். அவ்வாறே இங்கு கூறப்பட்ட சில கிரியைகள் இடம்பெறாமலும் இருக்கும். தனிப்பட்ட மூர்த்தங்களுக்கான வழிபாடுகளை எடுத்துரைப்பவர்கள் அந்தந்த மூர்த்தங்களுக்கே உரித்தான கிரியைகளை விரித்துரைப்பர் என எதிர்பார்க்கின்றேன்.

விரிவஞ்சி கிரியைகளுக்கான தத்துவ அடிப்படைகள் இங்கு விளக்கப்படவில்லை.

--

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பின் கண்ணகி அம்மன் வழிபாட்டு முறைகள்

**– பி. மகேஸ்வரலிங்கம் B.A. –**

*மட்டக்களப்புத் தமிழகத்தில் கண்ணகி அம்மன் வழிபாடு பிரசித்தமானது. இதனை நிகழ்த்துபவர் கட்டாடிமார், கப்புகனார் என அழைக்கப்படுகின்றனர். சடங்கு நிகழும் நாட்கள் தொகையில் ஊருக்கு ஊர் வித்தியாசமுண்டு. இக்கட்டுரை பொதுவாகக் கண்ணகி அம்மன் வழிபாட்டு முறையினையும் அடுத்த கட்டுரை குறிப்பிட்ட ஒரு கோயிலில் நடாத்தப்படும் வழிபாட்டு முறையினையும் கூறுகிறது. (பதிப்பாசிரியர்)*

கண்ணகி அம்மன் வழிபாடு மட்டக்களப்பின் பிரதான தெய்வ வழிபாடாயிருப்பதுடன், அது ஒரு புராதன வழிபாடுமாகும். பாடும் மீன்களின் நாடு என மட்டக்களப்புத் தமிழகத்தை அழைப்பர். கண்ணகி அம்மனின் நாடு என்ற பெயரும் இப்பகுதிக்குப் பொருத்தமானது. கண்ணகி அம்மன் வழிபாட்டு முறைமை கேரளத்து உறவாலும், யாழ்ப்பாணத்து உறவாலும் ஏற்பட்ட ஒன்றாகும்.

மட்டக்களப்பில் 19ஆம் நூற்றாண்டுக்கு முன் தோற்றம் பெற்ற கண்ணகையம்மன் கோயில்கள் பற்றித் தெரிந்து கொள்வதற்கு ஊர்சுற்றுக் காவியம், மழைக்காவியம், கூவாய்குயில், வசந்தன் முதலிய பாடல்கள் உதவி செய்கின்றன.

பட்டி நகர் தம்பிலுவில் வீரமுனை காரைநகர்
பவுசு பெறு கல்முனை கல்லாறெரிவில் மகிளூர்
செட்டிபாளையம் புதுக்குடியிருப்பு
செல்வமுறு மகிழடித்தீவு முதலைக்குடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்ட திக்கும் புகழும் வந்தாறுமூலை நகர்
ஆங்காங்கு நித்திய கல்யாணியாய் அமரும்
மட்டவிழ் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை
மனதில் நினைக்க வினை மாறி ஓடிடுமே.

என ஊர்சுற்றுக் காவியம் கூறுகின்றது. மேலும் பண்டைய கண்ணகையம்மன் கோயில்கள் இருந்த ஊர்களாக நீலாவணை, கொக்கட்டிச்சோலை, கன்னங்குடா, ஈச்சந்தீவு, தாண்டன்வெளி, களுவாஞ்சிக்குடி முதலிய ஊர்களும் மேற்படி பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாறு 20ஆம் நூற்றாண்டுக்கு முன் மட்டக்களப்பின் எல்லாப் பகுதிகளிலும் இருபதுக்கு மேற்பட்ட கண்ணகி கோயில்கள் இருந்தன. 1964ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாநிலத்தில் 25 கண்ணகையம்மன் கோயில்கள் இருந்ததாகப் பண்டிதர் வி.சீ. கந்தையா கூறுவார். தற்பொழுது கிட்டதட்ட 50 கண்ணகையம்மன் கோயில்கள் இம் மாநிலத்தில் உள்ளன. எனவே 20ஆம் நூற்றாண்டில் அதிகமான கண்ணகையம்மன் கோயில்கள் இங்கு தோற்றம் பெற்றுள்ளன. இவையெல்லாம் கிராம மக்களின் ஒன்றிணைந்த விருப்பத்தின் பேரிலேயே தோற்றம் பெற்றவையாகும்.

## கோயில் அமைப்பு

மட்டக்களப்பு தெய்வ வழிபாட்டில் கோயில்கள் பெருமளவு முக்கியம் பெறுவதில்லை. ஆண்டுக்கு ஒரு முறை நிகழும் இத்தகைய சடங்குகள் பெரும்பாலும் தற்காலிக பந்தலிலேயே செய்யப்பட்டு வந்தன. இவ்வாறு சடங்கு செய்வதற்கு போடப்படும் பந்தல்கள் மண்டபங்கள் என அழைக்கப்பட்டன. கண்ணகையம்மன் சடங்குகளை பொறுத்த மட்டில் இத்தகைய தற்காலிக பந்தல்கள் ஒரு போதும் செய்யப்படுவதில்லை. தென்னை ஓலைகளால் வேயப்பட்ட தற்காலிக பந்தலைக் கோயிலாக அமைத்தே இச்சடங்கு நிகழ்த்தப்பட்டு வந்தது. இதனால் அமைப்பில் சிறியனவாக இருந்தாலும் கண்ணகையம்மன் கோயில்கள் மிகப் பழங்காலத்திலேயே மட்டக்களப்பில் தோன்றத் தொடங்கின எனலாம்.

பழைய கண்ணகி அம்மன் கோயில்கள் பெரும்பாலும் மூன்று பெரும்பகுதிகளைக் கொண்டிருந்தன. அவை மூலஸ்தானம், கலியாணக்கால்மண்டபம், முன்மண்டபம் என அழைக்கப்பட்டன. மூலஸ்தானத்தில் விக்கிரகம் வீற்றிருக்கும் மேடை முன்பக்கமாக ஒன்று அல்லது இரண்டு படிகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது.

ஆகமமயப்படுத்தப்படாத கண்ணகியம்மன் கோயில்களின் கருவறைகளில் பெரும்பாலும் உலோக விக்கிரகங்களே வைக்கப்பட்டிருந்தன. கலியாணக்கால் மண்டபத்தின் மத்தியில் கலியாணக்கால் நாட்டுவதற்குரிய இடம் அமைக்கப்பட்டிருந்தது. மேலும் கொம்பு விளையாட்டு நடைபெறும் கண்ணகியம்மன் கோயில்களில் கருவறையின் இரு புறத்திலும் இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டறைகள் இருந்தன. இவ்விரண்டறைகளும் கொம்பு விளையாட்டுக்குரிய இரு சேரியாகும். இவ்விளையாட்டுக்குரிய பொருட்களை களஞ்சியப்படுத்து-வதற்காக பயன்படுத்தி வந்தனர். இத்தகைய மட்டக்களப்பின் பண்டைய கண்ணகியம்மன் கோயில்கள் அனைத்தும் மடாலயமுறையிலேயே அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### வழிபாட்டில் மக்கள் எதிர்பார்க்கை

மட்டக்களப்பு மக்கள் கண்ணகையம்மனிடம் முக்கிய இரண்டு விடயங்களைத் தருமாறு வேண்டினர். அவை உடல் நலம், செழுமை. கண்ணகையை சாந்தப்படுத்தாவிட்டால் சூடு பொருந்திய நோய்களுக்கு ஆளாக வேண்டுமென இவர்கள் அஞ்சினர். கண்ணகையின் கோபத்துக்கு ஆளாகினால் வைசூரி, குக்கல், வெப்பு, சின்னம்மை, வயிற்றுக்கடுப்பு, பெரும்சுரம், கண்ணோய் முதலியவற்றால் வருந்த நேரும் என்று நம்பினர்.

இத்தோடு

நாடு செழித்து நன்மழை பெய்து
செந்நெல் விழைந்து தேசம் தழைத்து
மனுநீதி செழித்து மன்னர் அரசு

செங்கோல் ஓங்கி சிறப்புடன் மனுக்குலம் வாழக் கண்ணகியின் கருணை மட்டக்களப்பாரால் நாடப்பட்டது. இவற்றிற்கு மேலாக இவ்வுலக வாழ்க்கைக்கு வேண்டிய பல்வேறு நலன்களும் இவ்வன்னைத் தெய்வத்திடம் எதிர்பார்க்கப்பட்டது.

### நித்திய பூசை

மட்டக்களப்பில் கண்ணகைக்கு நித்தியபூசை நிகழ்த்தக் கூடாது என்பது கட்டுப்பாடு. வருடமொரு பூசையும், வெளவால் உறைந்த கோயிலுமே இவளுக்குரியனவாகக் கொள்ளப்பட்டது. இதனால் இங்கிருந்த கண்ணகையம்மன் கோயில்கள் அச்சத்துக்குரிய இடங்களாக இருந்து வந்தன. தற்காலத்தில் ஆகமமயவாக்கத்துக்கு உட்பட்ட கோயில்களில் நித்திய பூசை நிகழ்வது சாதாரணமாகிவிட்டது.

### சடங்கு நிகழும் காலம்

கண்ணகி மதுரையை எரித்தது, கயவாகு மன்னன் பத்தினித் தெய்வத்துக்கு விழா எடுத்தது, சிங்கள மக்கள் பத்தினியை வழிபடுவது இவையெல்லாம் ஆடி மாதத்துக்குரியவை.. இதனைத் தவிர்த்து வைகாசி மாதத்திலேயே தமிழர்கள் கண்ணகிக்கு சடங்கு செய்து வருகின்றனர். வைகாசித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கள் வருவேன் என்ற வரிசைக்கியைந்து மண்ணுலகில் இருந்து கண்ணகையம்மன் விண்ணுலகம் சென்றதாகக் குளிர்த்திப் பாடல் கூறுகின்றன.

இதில் வைகாசித் திங்கள் என்பது என்னாளைக் குறிக்கும் என்பதில் இரண்டு கருத்துக்கள் நிலவி வருகின்றன. அவற்றில் ஒன்று வைகாசிப் பூரணையை அடுத்துவருகின்ற திங்கள் கிழமையென்பது இவ்விரு கருத்துக்களையும் கொண்டு இங்கு கண்ணகையம்மன் கோயில்களில் வைகாசிப் பூரணை சடங்கின் இறுதி நாளாகவும், ஏனைய கோயில்களில் இப்பூரணையை அடுத்து வருகின்ற திங்கட்கிழமை இறுதி நாளாகவும் கொள்ளப்படுகின்றன. பொதுவாக இக்கண்ணகையம்மன் சடங்கு வைகாசி மாதத்தில் நிகழ்வதால் மட்டக்களப்பு மக்கள் வைகாசிச் சடங்கு என்றும் அழைப்பர்.

## சடங்கு நிகழ்வுகள்

இச்சடங்கு நிகழும் நாட்கள் தொகையில் ஊருக்கூர் வித்தியாசமுண்டு. வசதி படைத்த சில ஊர்களில் இது ஒன்பது நாட்கள் நிகழும். வேறு சில ஊர்களில் ஏழு நாட்களாகவும் அதிகமான ஊர்களில் ஐந்து நாட்களாகவும் இச்சடங்கு நடத்தப்பட்டு வருகின்றது. சடங்கின் ஆரம்பநாள் கதவு திறத்தல் என்று கூறப்படும். மாரியம்மன், காளியம்மன் சடங்கைப் பொறுத்தமட்டில் இவ்வாரம்ப நாள் நிகழ்வைக் கும்பம் வைத்தல் என்று கூறுவர். கண்ணகையம்மன் சடங்குகள் கோயில்களில் மட்டும் செய்யப்படுவதுடன் இவ்வம்மன் கும்பத்தில் ஆவாகனம் செய்யப்படுவதில்லை ஆகையினாலும், வருடமெல்லாம் பூட்டப்பட்டிருந்த கதவு சடங்கிற்காக திறக்கப்படுவதாலும் இந்நிகழ்வு கதவு திறத்தல் எனப்படுகிறது.

கண்ணகையம்மன் சடங்கில் இறுதி மூன்று நாட்களும் அதி முக்கியம் வாய்ந்தவை. முதலாம் நாட் சடங்கு கலியாணப்படிப்புச் சடங்கு அல்லது கலியாணக்கால் சடங்கு என அழைக்கப்படும். அன்றைய தினம் மட்டக்களப்பு வழக்குரை காவியத்தின் கலியாணக் காதை, கோயிலில் பாடப்படும், அத்தோடு பூவரசு அல்லது வேம்பு நேரிய தடி ஒன்று தெரிந்தெடுக்கப்பட்ட இடத்தில் வெட்டி ஊர்வலமாகக் கொண்டு வந்து கலியாணக்கால் மண்டபத்துள் நாட்டுவதும் அன்று நிகழும், இக்கால் பாவனை செய்து சேலை என்பனவெல்லாம் அணிவிக்கப்படும். குறித்த மூன்று நாட்களும் இக்கலியாணக்கால் சுற்றும் நிகழ்வு பக்தியூட்டும் நிகழ்வாக இருந்துவருவதை கண்ணகையம்மன் கோயில்களில் அவதானிக்கலாம். கலியாணச் சடங்கிற்கு அடுத்த நாள் சடங்கு பச்சை கட்டுச் சடங்கு எனப்படும். அன்று வழக்குரையில் உள்ள அடைக்கலக் காதை பாடப்படும். மதுரையில் மாதரி வீட்டில் புகுந்த கண்ணகைக்கு சமையல் செய்வதற்காக காய்கறிகள் கொடுக்கப்பட்டதை இச்சடங்கு குறிக்கும். இக்கதையில் கூறப்பட்டுள்ள காய்கறிகள் ஒவ்வொன்றாகச் சொல்ல கட்டாடியார் அவற்றை எடுத்து அம்மன் முன் காணிக்கையாக வைப்பது இதில் முக்கிய நிகழ்ச்சியாகும். இறுதிநாள் சடங்கு குளிர்த்திச் சடங்கு எனப்படும். அன்றைய பகலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குரையில் கொலைக்களக்காதை பாடப்படும். இதனால் கோயில் சோக மயமாயிருக்கும் அன்று மதியச் சடங்கு நடத்தப்படமாட்டா. இதன் பின் மாலை வேளையில் வழக்குரைக்காதை பாடுவர். இதையடுத்து குளிர்த்தி சடங்குக்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும். வழக்குரையில் இறுதிக் காதையாகிய குளிர்த்திக் காதை பாடிய பின் இரவில் இறுதி யாமத்தில் வைகறைப் பொழுதில் திருக்குளிர்த்தி நடைபெறும்.

கலியாணச் சடங்கிலன்று பலகார வகைகள் படையல் செய்து பிரசாதமாக பகிர்வது, பச்சைக்கட்டு சடங்கில் அன்று கறியமுது படையல் செய்து பிரசாதமாகக் கொடுப்பது வழக்கம். குளிர்த்தி சடங்கிலன்று அம்மனை, பாணக்கம் குளிர்த்தி பாட்டு ஆகியவற்றால் பக்தி சிரத்தையோடு குளிரச் செய்வது நம் உள்ளத்தையும் நெகிழச் செய்யும்.

## சடங்கு செய்யும் முறை

மட்டக்களப்பில் பாரம்பரியமாகச் செய்யப்படும் சடங்குகளை நிகழ்த்துவதற்குரிய முறைகளைக் கூறுவன பத்ததிகள். இவற்றைப் பத்தாசிகள் என்றும் கூறுவர். கண்ணகையம்மன் சடங்கு செய்யும் முறையைக் கூறுவது கண்ணகையம்மன் பத்தாசி. இதில் இரண்டு வகைப் பத்தாசி உண்டு. இவை இரண்டுக்கும் இடையே சில நுணுக்கமான வேறுபாடுகள் இருப்பதாக கட்டாடிமார் கூறுவர். கண்ணகையம்மன் சடங்கில் வழிபாட்டுக்குரிய மூன்று இடங்கள் முக்கியமானவை. அவை கருவறை, கலியாணக்காலடி, குளிர்த்திப் பந்தல் இம்மூன்று இடங்களிலும் கும்பங்கள், மடைகள், படையல்கள் எவ்வாறு தெய்வங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதைப் பத்தாசிகள் கூறும்.

இங்குள்ள சுதேச வழிபாடுகளை முன்னின்று செய்பவர்கள் பூசாரிகள் எனப்படுவர். இவர்கள் மந்திரவித்தாண்மை மிக்கவர்கள். இவற்றுள் கண்ணகையம்மன் சடங்குகள் நடத்துபவர்கள் கட்டாடிகள் எனப்படுவர். இவர்கள் பத்ததி முறைப்படி சடங்கு செய்தாலும் இவர்களின் சடங்குகளில் மந்திரங்கள் முக்கியம் பெறுவதில்லை. பாரம்பரியமாக செய்து வந்ததை தொடர்ந்து செய்வதே இவர்கள் இயல்பு. இவர்கள் பெரும்பாலும் மருமக்கள் வழியில் பரம்பரையாக வந்தவர்களாக இருப்பர். இக்கட்டாடி முறையில் பக்தியும் மன்றாட்டும் மிக முக்கிய இடம் பெற்று வந்தன. இவர்களால் பூசையின் போது கருவறையில் கண்ணகையம்மன் அகவலே பெரும்பாலும் பாடப்படும்.

கண்ணகியம்மன் கோயில்களில் சடங்கின் போது தெய்வமாடுவதில்லை. விதிவிலக்காக இங்குள்ள துறைநீலாவணை தாண்டவன்வெளிக் கோயில்களில் தெய்வமாடி வருகின்றனர். இவ்வாறு ஆடுவதற்கு சுயவிருப்பே காரணம் அல்லாமல், கோயில் இதனை ஆதரிப்பதில்லை. எனினும், பெரும்பாலான கண்ணகையம்மன் கோயில்களில் கட்டாடிமார் உருக்கொண்டாடுவதை அவதானிக்கலாம். இது பக்தி மயப்படுதலால் தோன்றும் நிலை தடுமாற்றம் எனக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சடங்கும் கலைகளும்

மட்டக்களப்பில் வழிபடுகின்ற தெய்வங்களுள் கண்ணகையம்மனோடு பக்தி இலக்கியங்களும், கலைகளும் பெரிதும் தொடர்புபட்டிருப்பதைக் காணமுடிகின்றது. மட்டக்களப்பிலுள்ள பெரிய பக்தி இலக்கியம் கண்ணகி வழக்குரை. இந்நூல் கண்ணகி அம்மன் சடங்கின்போது முற்றிலும் படித்து முடிக்க வேண்டியது கட்டாயம். அத்தோடு அம்மனைக் குளிர்விக்க என்றே தோன்றிய சிறுநூல் குளிர்த்திப் பாடல். இது குளிர்த்திப் பந்தலில் உரிய முறையில் பாடப்பட்டால் கண்ணகை குளிர்வாள் என்பது மக்கள் நம்பிக்கை. இவற்றோடு காவியங்களும் அகவலும், உடுக்கு, தவில், சிலம்பு, அம்மானைக்காய் ஒலிகளோடு பாடுவது கண்ணகையம்மன் கோயில்களில் கிடைக்கும் பக்தி விருந்தாகும். வசந்தன் ஆட்டத்தால் கண்ணகியின் சீற்றத்தைத் தவிர்த்து மகிழ்விக்கலாம் என்பது இங்குள்ளோர் நம்பிக்கை. இதனால் இச்சடங்குகளில் வசந்தன் ஆட்டம் முக்கியமாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது. மேலும் கொம்பு விளையாட்டிற்கும் கண்ணகியம்மன் சடங்கிற்கும் உள்ள தொடர்பு அவதானிக்கத்தக்கது. பாணமையிலுள்ள பத்தினியம்மன் கோயில் சடங்கில் ஒவ்வொரு நாளும் கொம்பு விளையாடுவது வழக்கம். எனவே பழைய பத்தினியம்மன் கோயில்களிலெல்லாம் கொம்பு விளையாட்டோடு சடங்கு நடத்தப்பட்டிருக்கும் என நம்பலாம். இன்றைய நிலையில் கண்ணகையம்மன் கோயில்களில் கொம்பு விளையாடினாலும் அது சடங்கோடு தொடர்புபடுத்தப்படுவதைக் காணவில்லை.

## முடிவுரை

இன்றைய நிலையில் கண்ணகையம்மன் கோயில்கள் எல்லாம் ஆகம மயமாக்கப்பட்டு வருகின்றன. இதனைக் காரைதீவு, தம்பிலுவில், செட்டிபாளையம், மகிழடித்தீவு எனப் பல ஊர்களிலும் காணமுடிகிறது. இதனால் கண்ணகையம்மன் சடங்குகளும் ஆகமமயமாக்கத்தை படிப்படியாகத் தழுவ நேரிடுகின்றது. சில கண்ணகியம்மன் கோயில்களில் பாரம்பரியமுறைமைக்கும் ஆகம முறைமைக்கும் மோதல் தோன்றுகின்ற நிலையும் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைதீவு கண்ணகியம்மன் கோயில் வழிபாட்டு முறைகள்

– செ. **மணிமாறன்** B.A., Dip. in Ed. –

காரைதீவு கண்ணகி அம்மன் கோயில் மட்டக்களப்புத் தமிழகத்தில் பழமை வாய்ந்த கண்ணகி அம்மன் கோயில்களுள் ஒன்று. இங்கு வருடா வருடம் வைகாசி பூரணையை அடுத்து வரும் திங்கட்கிழமை இரவு பொங்கலும், குளிர்ச்சிப் பூசையும் நடைபெறுவது வழக்கம். இங்கு பூசை பண்ணும் பூசகர் கப்புகனார் என்று அழைக்கப்படுகின்றார். இதற்காக இதற்கு முன்வரும் திங்களன்று கதவு திறப்பதற்காக ஞாயிற்றுக்கிழமை இரவு மஞ்சள் தடவப்படக்கூடாது, மாவிடிக்கப்படக்கூடாது, மச்சம் மாமிசம் எடுக்கப்படக்கூடாது, வீட்டு விலக்கானவர்கள் வெளியே வரப்படக்கூடாது என அறிவித்து மிகுந்த அமைதியான முறையில் ஊர் கட்டுப்பாடுகளுடன் பூசை முறையினை ஆரம்பிப்பார்.

திங்கட்கிழமை இரவு கடல் தண்ணி எடுப்பதும், கலியாணக்கால் வெட்டுவதுமான கிரியைகள் நடைபெறும். கடல்நீர் எடுப்பதற்கு வேண்டிய பூசை திரவியங்களுடன் மேள தாள வாத்தியங்களோடு கப்புகரைக் கூட்டிக் கொண்டு கடற்கரை செல்வர். அங்கு கடல்நாச்சி அம்மனுக்கு மந்திரபூர்வமாய் மடைபோட்டு, பூசைநடத்தி, கடல் நீர் எடுத்து வருவார்கள். அந்நீரைக் கொண்டே கதவு திறப்பதும், விளக்கேற்றுவதும் நடைபெறும். கல்யாணக்கால் வெட்டுவதற்கு சன்னிதானத்தில் பெரிய மடைபோட்டு கிரியை நடாத்தி ஒரெ வெட்டில் காலை வெட்டுவர். அடுத்தநாள் பந்தல் சோடித்து அம்மனுக்கு அபிஷேகம் செய்வதற்கான ஆயத்தங்கள் செய்து பத்ததி முறைப்படி பூசையை ஆரம்பித்து அபிஷேகம் நடக்கும். பின் அரிசி பரப்பி அட்சரம் தாபித்து கும்பங்களையும் அதற்குரிய மடைகளையும் ஆங்காங்கு வைத்துப் பரிவார தெய்வங்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பு மடைபோட்டு ஆடைஆபரணங்களால் அம்மனை அலங்காரம் செய்வர். அதன்பின் கல்யாணக்கால் மண்டபம் வந்து அங்குவைக்க வேண்டிய கும்பங்களையெல்லாம் தாபித்து அதற்குரிய கிரியைமுறைகளை மந்திர பூர்வமாய் கூறி வணங்குவர்.

பிற்பகல் பூசைக்கு பச்சை கட்டி, அதற்கு படைத்து பூசையை ஆரம்பிப்பர். தம்மை அலங்கரித்து உருத்திராக்க மாலைகளை அணிந்து கப்புகனார் திரை திறந்து அம்மனுக்கு தூபதீப ஆராதனைகளை நடத்துவார். இது கண்கொள்ளாக் காட்சியாகும். பார்ப்பவரை மெய் சிலிர்க்க வைத்துவிடும். பின்னர் வழக்குரை ஏட்டுப்பூசை நடாத்த இரண்டு பேர் சேர்ந்து காப்புச் சொல்லி அதனை ஆரம்பிப்பர்.

வழக்குரை தொடர்ச்சியாக இரவு பகலாய் எட்டு நாட்களுக்கு படித்து வருவர். அங்கு அம்மனுக்கு முன் வெள்ளை விரித்து உரல் போட்டு கப்புகனார் உடுக்கையோடு உரலினருகில் இருந்து ஊர்சுற்றுக் காவியம் படிக்க ஒவ்வொரு பாடலுக்கும் உற்சாகத்துடனிருந்து உடுக்கை அடிப்பர். முடிவிலே வாழிபாடி எல்லோரும் வணங்குவர்.

இப்படியாக ஏழு நாட்களும் பூசை நடந்து எட்டாம் நாள் திங்களன்று கப்புகனார் உபவாசமிருந்து இரவு ஆறு மணிக்கு முழுக்காடி மாற்றுடுத்து மந்திர பூர்வமாய் படிகடந்து உட்சென்று அம்மனுக்கு அபிஷேகம் செய்து அலங்கரித்து அரிசி பரப்பி ஆங்காங்கு சொல்லப்பட்ட தெய்வங்களுக்கும் பழம், பாக்கு, வெற்றிலை கொண்டு பத்ததி முறைப்படி மடைபோட்டு பக்கத்தில் உள்ள தேவர்களுக்கும் பரப்பு மடைபோடுவர். பின்னர் கல்யாணக்கால் மண்டபம் வந்து அதற்குரிய கிரியைகள் எல்லாம் மடைபோட்டு மந்திரபூர்வமாய் கும்பராதனை பண்ணுவர். பின்னர் குளிர்ச்சி பாடுவதற்கு கலசம் வைத்துத் தீர்த்தம் வார்த்தும் பத்திரம், பழம், பாக்கு, வெற்றிலை, அம்மாளின் கால் சிலம்பு என்பனவற்றையும் அவ்விடம் வைப்பர்.

இவைகளையெல்லாம் முடித்துக் கொண்டு கப்புகனார் பொங்கலுக்குரிய ஏற்பாடுகளைச் செய்வர். அதாவது சன்னிதானத்தின் முன் திரை வளைத்து அக்கினி மந்திரத்தால் அடுப்பு மூட்டி புதிய பச்சைப் பானை மூன்றை அடுப்பிலேற்றி பாலை மந்திர பூர்வமாய் ஊற்றி பொங்கல் பொங்குவர். அன்று பகல் தொடக்கம் வழக்குரையைப் படித்துக் கொண்டே இருப்பர். நேர்கடனும் வந்து குவிந்த வண்ணமே இருக்கும். ஒவ்வொரு வீட்டிலிருந்தும் மடைப்பெட்டி வந்து கொண்டேயிருக்கும். அன்னிய ஊரவர்களும் வந்து அம்மாளைத் தரிசித்து நேர்கடன் செய்து கொண்டே செல்வர். ஆயிரக்கணக்கானோர் அங்கப் பிரதிஷ்டையும், கர்ப்பூரச் சட்டியும் ஏந்திக் கொண்டே வழிபடுவர். காவடிகளும் வந்து கொண்டேயிருக்கும். எல்லோரும் கண் விழித்துப் பாட்டைக் கேட்டுக் கொண்டே இருப்பர்.

இப்படி இருக்கக் கப்புகனார் பொங்கல் பானையை இறக்கி உள்ளே கொண்டு சென்று அம்மனுக்கும், அதனைச் சார்ந்த தெய்வங்களுக்கும் படைத்து, வேறு சருவக்கிடாரத்தில் பொங்கிய சாதத்தை நூற்றுக்கு மேற்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடுக்கைகளில் போட்டு கோயிலுள் குவித்து அம்மனுக்கும், பரிவாரத் தெய்வங்களுக்கும் நைவேத்தியம் செய்வர். இவையெல்லாம் முடிய பூசை ஆரம்பமாகும். அப்போது சன்னிதான முன்வாசல் வரை பாவாடை விரித்து இருபக்கமும் அடியார்கள் ஆவலுடன் கும்பிட்டுக் கொண்டு நிற்க, மேளதாள மணியோசைகள் முழங்க கப்புகனார் பட்டு வஸ்திரம் உடுத்து உருத்திராக்க மாலை அணிந்து அலங்கரித்து பயபக்தியுடன் நின்றுகொண்டு அடுக்குத்தீபம் எடுத்துக் காட்டுவார். அப்போது திரை திறக்கப்படும். அந்நேரத்தில் அம்பாளைத் தரிசிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். பூசை முகம் பார்த்த மாத்திரத்தில் எல்லோரும் பரவசமடைந்து தாங்கள் நினைத்ததைச் சொல்லி வேண்டியவற்றை வேண்டி வழிபடுவர். அடுக்குத் தீபத்திற்குப் பின் மற்றைய தீபங்களும் முறையாகக் காட்டி உபசாரங்கள் எல்லாம் செய்து கப்புகனார் தனது வணக்கத்தை மந்திரபூர்வமாய் செய்து நிற்பர். பின்னர் கப்புகனார் உடுக்கையுடன் கல்யாணக்கால் மண்டபம் வந்து அவ்விடத்தில் செய்ய வேண்டிய பூசைகளை முடித்து குளிர்ச்சி பாட ஆரம்பிப்பர். அப்போது இருவரும் சேர்ந்து அமைதியான முறையில் குளிர்ச்சி பாடுவர். இது எல்லோருக்கும் கேட்பதற்கு இனிமையாகவும், இதமாகவும் பார்ப்பதற்கு பரவசமாகவும் இருக்கும். பாடும்போது கப்புகனார் உடுக்கை அடித்துச் சிலம்பை ஒலித்தும் இருப்பார். பாடல் முடிவில் வாழிபாடப்படும். இதில் எல்லோரும் சேர்ந்து பாடியும், பெண்கள் குரவை போட்டும் கோலாகலமாக கும்பிட்டு வாழ்த்துவர். இதனைக் கண்டு அம்பாளும் அனுக்கிரகம் புரிவார். இத்துடன் குளிர்ச்சி நிறைவு பெறும். இதிலுள்ள தீர்த்தங்களை எல்லோருக்கும் பிரசாதமாகக் கொடுப்பார். இதனைமிக ஆவலுடன் பக்தர்கள் பெற்று தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் செல்வர்.

காலாகாலமாக கப்புகனார் இம்முறையிலே பூசை நடத்தி வந்தனர். இப்பொழுதும் இப்படியே நடைபெற்று வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாரியம்மன் கோயில் வழிபாட்டு முறைமைகள்

**– த. சுரமஞ்சரி B.A. (Hons.) –**

மட்டக்களப்பு தமிழகத்தில் மாரியம்மன் வழிபாடானது புராதன காலந்தொட்டு நிலவி வருகின்றது. கிராமம், நகரம் என்ற பாகுபாடு இன்றி அனைத்து இந்து மக்களாலும் சாதி பேதமின்றி வழிபடப்பட்டு வருகின்ற ஒரு தெய்வமாக மாரியம்மன் காணப்படுகிறது. விவசாயம் செய்கின்ற மக்களுடன் இத்தெய்வம் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. விவசாயம் செய்ய மழை கொடுக்கும் கடவுளாக மாரி என்ற தெய்வத்தை அவர்கள் வணங்குகிறார்கள். அத்தோடு அனைத்து மக்களும் அம்மை நோய்க்குரிய கடவுளாகவும் இத்தெய்வத்தினை வணங்குவதைக் காணலாம். எனவே மாரியம்மன் தெய்வம் வளத்திற்குரிய கடவுளாகவும், நோய் தீர்க்கும் கடவுளாகவும் காணப்படுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் பல மாரியம்மன் கோயில்கள் காணப்படுகின்றன.. மட்டக்களப்பு நகரிலேயே மட்.ஊறணி கொத்துக்குளத்து மாரியம்மன் கோயில், மட்.கோட்டமுனை புன்னையம்பதி மகாமாரியம்மன் கோயில், தாமரைக்கேணி முத்துமாரியம்மன் கோயில், அமிர்தகழி முத்துமாரியம்மன் கோயில், கூழாவடி முத்துமாரியம்மன் கோயில் போன்றவை முக்கியமானவை.

இவ்வாலயங்கள் அனைத்திலும் இரண்டு முறைகளில் பூசைகள் நடைபெறுகின்றன :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறை (வேதாகம முறை)

2. ஆகமம் சாராத வழிபாட்டு முறை (பத்ததி முறை)

பெரும்பாலான ஆலயங்களில் பத்ததி வழிபாட்டு மரபிலே சடங்குகள் நிகழ்கின்றன. ஆனாலும் ஒரு சில ஆலயங்களில் திருவிழாவும் செய்யப்படுகின்றது.

மட்டக்களப்புத் தமிழகத்தில் பெருவாரியாகவுள்ள மாரியம்மன் ஆலயங்களில் ஆகமமுறைசாராத பத்ததி வழிபாட்டு மரபிலே சடங்குகள் நடைபெறுகின்றன. இவ்வழிபாட்டு முறையில் பிராமணியச் செல்வாக்கோ, வேதாகமத் தாக்கங்களோ இல்லை என்றே கூறவேண்டும். இவ்வழிபாட்டினை பரம்பரை பரம்பரையாக உருவாகின்ற பூசாரிமார்களே செய்கின்றனர். இவர்கள் பத்ததி முறையில் தனது அனுபவம், ஆற்றல், திறமை போன்றவற்றின் உதவியுடன் தனது மந்திர வலிமையினாலும் கடவுளர்க்கு வழிபாட்டைச் செய்வது வழமை. மாரியம்மன் பத்ததியைக் கொண்டு தான் பூசைகளை நிகழ்த்துவர். 'பத்ததி' என்றால் எந்தக் கடவுளர்களுக்கு எவ்வாறு பூசைகளை நிகழ்த்துவது என்பனவற்றைக் கூறுவதுடன் அதனுடன் தொடர்புடைய மந்திரங்களையும் விதிமுறையாக கூறுகின்ற அகவற்பாவினால் அமைந்த நூல் அல்லது ஏடு எனப்படும்.

மாரியம்மன் பத்ததி கூறும் வழிபாட்டு முறைகளை பின்வருமாறு வகுத்துக் கூறலாம் :

1. இடத்தைத் தெரிவுசெய்தலும் பந்தல் போடுவதற்கான கன்னிக்கால் நடுவது பற்றியும் கதவு திறப்பது பற்றியும் கூறப்படுகின்றது.

(உ- ம்)

**கதவு திறத்தல் மந்திரம்**

"ஓம் கௌஷகமா முனி வந்து நிற்கின்றேன்
உலக மாதாவுக்க திருப் பொங்கல் திருப்பணி
விடை செய்ய திருக்கதவே தாழ் திறவாய் ..
என்று கூறலாம்."

2. மாரியம்மன் தெய்வத்தோடு இணைந்த துணைத்தெய்வங்களுக்குரிய பந்தல்களைப் போடுவது பற்றியும் கூறப்படுகின்றது.

3. ஒவ்வொரு தெய்வத்திற்குமுரிய கும்பம், மடைகளை வைத்து ஆசார உபசாரம் செய்யும் முறைமை பற்றியும் இதில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கும்பம் வைத்து மடைவைத்து ஒவ்வொரு தெய்வத்திற்குமுரிய மந்திரங்களைச் சொல்லி அந்தந்தப் பந்தலில் அந்தந்த தெய்வங்களுக்குமுரிய கும்பங்களைக் கொண்டு வைத்தல் பற்றியும் கூறப்படுகின்றது.

5. சடங்களுக்குரிய மந்திரங்கள், தெய்வமாடுபவர்களுக்கு உருவேற்றும் மந்திரங்கள் தெய்வம் ஆடுபவர்களை கட்டும் மந்திரம், மலை ஏற்றுவதற்கான மந்திரம், கட்டிய தெய்வத்தை மீண்டும் வெட்டி ஆடவைக்கும் மந்திரம் என்று பல மந்திரங்களை இந்த பத்ததி வழிபாட்டு நூலில் காணலாம்.

**உருவேற்றும் மந்திரம்**

"ஓம் அரகரமாரி சரணம் சரணம்
திரிபுரையாளே சரணம் சரணம்..."

**கதவடைப்பு மந்திரம்**

"ஓம் திருக்கை திரும்படி திருக்கதவு
திருவாசனமே நம..."

**தெய்வங்களை மலை ஏற்றும் மந்திரம்**

"தேரேறத் தேரேறத் தேவர்கள் தேரேறு
தேரேறத் தேரேறத் தேவகன்னி தேரேறு
பெருச்சாளி மீதேறி வடிவேலர் தேரேறு
இடபத்தின் மீதேறி ஈஸ்பரனார் தேரேறு"

ஆடுகின்ற தெய்வத்தை கட்டுகின்ற மந்திரம் (படுகளம் போடுதல்) :-

"ஓம் சண்டி, சகண்டி வல்லெகும்பி நீயதே பார் பார்
திருமால் குரு மண்லடத்திவுள்ள தேவாதிகள் எல்லாம்
கலங்க கட்டினேன் உனதுரு துமவடுகன் ஆனேன்
இவர் மேலே வரப்பட்ட சர்வ தேவதைகளும் வராமல்
மறி மறி கட்டு கட்டுவேசுவா கா"

6. இறுதிச் சடங்கு செய்யும் முறைமையும் அதாவது குளிர்த்தி அல்லது பள்ளயம் செய்வது பற்றியும் கதவடைப்பு முறைமைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரியம்மன் வழிபாட்டு முறையானது வருடத்திற்கு ஒரு முறை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி குளிர்த்தி அல்லது பள்ளயத்துடன் முடிவடையும். இந்தக் கோயில்களில் ஐந்து அல்லது ஏழு நாட்கள் சடங்கு நிகழும். இந்த நாட்களின் எண்ணிக்கை ஆலயத்தின் பொருளாதார வரும்படிக்கு அமைய தீர்மானிக்கப்படும். இந்த சடங்கு ஆனிப் பூரணையில் முடிவடையும்.

மாரியம்மன் கோயில்களில் கதவு திறத்தல் கும்பச் சடங்கு தவநிலைச் சடங்கு, கன்னிமார் சடங்கு, கலியாணச் சடங்கு, தீக்குளிப்பு, விநாயகப் பானை எழுந்தருளல், குளிர்த்தி அல்லது கும்பம் சொரிந்து பள்ளயம் கொடுத்தலுடன் முடிவடையும். சில ஆலயங்களில் இறுதி நாளன்று குளிர்த்தியும், கும்பம் சொரிய கடலுக்கு சென்று வருவதும், சில ஆலயங்களில் பள்ளயமும் கொடுப்பது வழமையாகும்.

மாரியம்மன் கோயில்களில் இறுதி நாளன்று நடக்கும் பள்ளயம் முக்கியம் பெறும். பெரிய பானையில் பொங்கல் செய்து ஏழு கன்னிப் பெண்கள் தெரிவுசெய்து ஏழு மடைவைத்து பொங்கல் படைத்து அந்த ஏழு கன்னிப் பெண்களும், தெய்வமாடுபவர்களும் மாரியம்மன் கடவுளாக ஆடுபவரும் கோயிலைச் சுற்றி வந்து கால் கழுவி அந்தப் பிள்ளைகளை அமர இருத்தி பூசைகள் நிகழ்த்தி ஒருவயது முதிர்ந்த பெண் அவர்களிடம் மடிப்பிச்சை வாங்கிக் கொண்டபின் அந்தப் படையலுடன் பிள்ளைகளை எழுப்பிவிடுவதும் இந்நிகழ்வில் இடம்பெறும். இதுபோன்று ஒரு வழிபாட்டுமுறை வீட்டிலும் நடைபெறுகின்றது. சில இந்து மக்கள் வருடத்திற்கு ஒரு முறை வீட்டிலும் அல்லது அம்மை நோய் வந்து தீர்த்தம் வார்த்த நாள் அன்றும் தண்ணீர் சோற்றுப் பள்ளயம் செய்து சடங்கு நிகழ்த்துவது வழமை.

மாரியம்மன் கோயில்களில் தெய்வமாடுதலுடன் கட்டுச் சொல்வதும் வழமை. கட்டுச் சொல்வதை 'தெய்வ வாக்காக' எடுத்து மக்கள் பல நேர்த்திகளை ஆலயத்திற்குக் கொடுப்பதைக் காணலாம். இது தவிர மக்கள் நேர்த்திக்காக கற்பூரச்சட்டி எடுத்தல், தீப்பாய்தல், அலகு போடுதல், அங்கப் பிரதட்சணை செய்தல், கலியாணக் கால் சுற்றுதல், பிள்ளை விற்று வாங்குதல் போன்றவற்றைச் செய்வார்கள்.

மாரியம்மனுக்கு வருடத்திற்கு ஒரு முறை சடங்கு செய்வதால் ஊரில் பஞ்சம், பட்டினி, நோய்கள் ஏற்படாது என மக்கள் நம்புகின்றனர். இதனை விளக்க ஒரு காவியம் உண்டு.

"மகமாரி யென்றுனை நினைப்பவர் தமக்கு
வாதமொடு பித்தஞ் சிலேற்பனங் கண்நோய்
வகைதோஷ மானதொரு நோய் கிரக தீவினைகள்
பாடுபட் டோடுமுன் நாமங்கள் சொன்னால்
விளை செந்நெல் மழைபெய்து நீடூழி வாழி..."

என்ற பாடல் மூலம் மாரியம்மன் வாதத்திற்கும், நோய்க்கும் உரிய கடவுளாக இருக்கிறாள் என்பதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மாரியம்மன் கோயில் கதவு திறந்த தினத்தில் இருந்து கதவடைப்பு சடங்கு மட்டும் ஊர் மக்கள் அனைவரும் சந்தோசமாக இச்சடங்கினை நடத்துவதைக் காணலாம். அந்த ஊரே கோலகலமாக இருப்பதையும் காணலாம்.

மட்டக்களப்பு நகரில் சில மாரியம்மன் ஆலயங்களில் ஆகமம் சார்ந்த வழிபாடு நிகழ்வதையும் காணலாம். உதாரணமாக மட்.கோட்டைமுனை புன்னையம்பதி மகாமாரியம்மன் ஆலயத்தைக் குறிப்பிடலாம். இவ்வாறு மாற்றம் பெற்றாலும் மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதேசத்தில் உள்ள அனைத்து ஆலயங்களிலும் பத்ததி வழிபாட்டு முறையிலே சடங்குகள் இன்றும் நிகழ்ந்து வருவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்தில் காளி வழிபாடு

– விஸ்வப் பிரம்ம ஸ்ரீ வை.இ.எஸ். காந்தன் குருக்கள் –

வேதகாலம் முதல் சங்ககாலம் வரை உலகளாவிய ரீதியில் பரந்திருந்த தொன்மை வழிபாடு தாய்த்தெய்வ வழிபாடாகும். தாய் - மெய் என்ற தத்துவத்தை உயர்நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆதிவழிபாடே இவ்வழிபாடாகும். சங்க இலக்கியங்களில் வீரத் தெய்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கொற்றவை வழிபாடும் தாய்த் தெய்வ வழிபாட்டின் அடித்தளமே.இவ்வழிபாடு உலகளாவிய ரீதியில் பலவகையான நெறிமுறைகளில் வழிபடப்பட்டாலும் மட்டக்களப்பில் மந்திர வழக்கில் இவ்வழிபாடு தனித்துவமாகப் பேணப்படுகின்றது.

மட்டக்களப்பு தமிழகத்தில் காளியம்மன், மாரியம்மன், பேச்சியம்மன், துரோபதையம்மன், கண்ணகையம்மன் ஆகிய அம்மன் வழிபாடுகள் முதன்மை பெறுகின்றன. இவ்வழிபாட்டில் ஆகமம் சார்ந்த, ஆகமம் சாராத நெறிக்குட்பட்டவையாக வழிபாட்டு முறைகள் அமைந்திருக்கின்றன. இவ்வகையில் மிகப்பழமை வாய்ந்த வழிபாடாக ஆகமம் சாராத மந்திர முறையில் சடங்கு வழிபாடாக கருதப்பட்டு வரும் வழிபாடே இம்மக்களால் பக்தி பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிபாடாகும். இக்கட்டுரை மட்டக்களப்புத் தமிழகத்தில் காளிவழிபாடு பற்றிக் கூறுகிறது.

வடமொழியில் காலி என்ற சொல்லே மருவி காளி என்று எழுதப்பட்டும் பேசப்பட்டும் வந்துள்ளது. காளி என்றால் காலத்தை மாற்றுபவள் என்று பொருள்படும். பத்திரகாளி, வடபத்திரகாளி, சிங்கமாகாளி, ரணசூலகாளி, திரிசூலகாளி, வீரம்மாகாளி, வீரபத்திரகாளி, சுடலைகாளி, தட்சனாகாளி என்று பெயர்களால் காளிஅம்பாள் அழைக்கப்பட்டாலும் இவை அனைத்தும் ஒரே காளியைத்தான் குறிப்பிடுகின்றன. உருத்திர அம்சமாகிய ஆதிசிவனிலிருந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிய வீரபத்திரரோடு இடப்பாகத்தே அமைந்த அன்னை உமையம்மவளின் ருத்ரி அம்சமாக காளி தோன்றினாள். வீரபத்திரருடன் தோன்றி தக்கன் யாகத்தை அழித்ததனால் வீரபத்திரகாளி எனப்பெயர் பெற்றாள். பத்திரை என்றால் காத்தல் என்று பொருள்படும். கொடியோர்களிடம் இருந்து எம்மைக் காப்பவளே பத்திரகாளியாகும்.

மட்டக்களப்பில் ஏறாவூர் பத்திரகாளியம்மன் கோயில் பெரியபோரதீவு ஸ்ரீபத்திரகாளியம்மன் கோயில், சேனைக்குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயில், சம்மாந்துறை பத்திரகாளியம்மன் கோயில் ஆகிய நான்கு கோயில்களும் மிகப் பழமை வாய்ந்த காளி கோயில்களாகும். இதேபோல் புளியடிமடுக் காளிகோயிலும் மிகப் பழமை வாய்ந்த காளிகோயில் ஆகும்.

இக்காளி வழிபாட்டில் மட்டக்களப்பு மண்ணில் இரண்டு வகையான பத்ததிகள் பேணப்பட்டு வருகின்றன. அவையாவன விஷ்வப் பிரம்மகுல மக்கள் பூசை செய்யும் அடையல் பத்ததி. ஏனைய மக்கள் பூசை செய்யும் கும்பபத்ததி. இதில் அடையல் பத்ததி எனப்படுவது கம்மியர்களின் குலத்தொழில் செய்யும் பட்டறை எனப்படும் அடையலை வழிபடு பொருளாகக் கொண்டு செய்யப்படும் பூசை முறையினை நெறிமுறையாகக் கொண்டது.

இதற்கு அமைவாக "கட்டடையல் பூசைமடை கொண்ட மாதாவே காளித்தேவியே பூசை கொண்டருளும்" என்றும் "படைகளிலே சமர் செய்து பாதகரைக் கொன்றழித்து அடையலிலே ஆட்சி செய்யும் அம்மே நீ கண்வளராய்" என்றும் "கட்டடையல் பூசை கொண்டவளாம் விஷ்வ கம்மியர்க்கு குல தெய்வமவள்" என்றும் மேற்குறித்த அடையல் பத்ததிக்கு சான்றாகப் பாடல்கள் உள்ளன அடையல் பத்ததியின் பூசைமுறைகள் அகவல்பாவாக எழுதப்பட்டுள்ளன. அதில்

"சீர்புகழ் செல்வ திரிபுரை திருவாம்
பார்புகழ் பத்திரகாளி பாவையர் தமக்கு..."

எனத் தொடங்கும் பூசைவிதி அகவலின் ஒரிடத்தில் "அந்தம் இலங்கும் அடையல் இடத்தே ஒன்பது கும்பம் ஒளிர்பெற நிறுத்தி" என வருகின்றது. இந்த அடையல் பத்ததியில் முழுமையாகவே காளிக்கே அனைத்துப் பூசைகளும் ஒருமுகப்பட்டுள்ளது. 'சுற்றுமடையும் துலங்க நிறுத்தி' என்ற விதிப்படி அம்மனின் சிங்காசனத்தைச் சுற்றி 'சப்தகன்னிகள்' எனப்படும் ஏழு கன்னிகளுக்கு மடைவைக்கப்படும். இவ்வேழு கன்னிகளுக்கு முறையே மூவேழு இருபத்தொரு மடைகள் அமையும். 'ஏர்பெறும் எட்டு வைரவர் காவல்' என்ற விதிப்படி அம்மனின் மூலஸ்தானத்திற்கு வெளிப்பகுதியிலுள்ள எட்டுக்கற்களிலும் அட்ட வைரவருக்கு மடை வகைப்படும். "இருளன் மருளன் இவர்கள் தமக்கு பெருமடை வாசல் பேண நிறுத்தி" என்ற விதிக்கமைய இரண்டு பக்க வாசலிலும் காவல் தெய்வமாகிய இருளன், மருளன், இருளி, மருளி ஆகியோருக்கு பெருமடை நிறைவாக வைத்தல் வேண்டும்(ஆண் தெய்வங்களுக்கு இருளன் மருளன் இதுவே ஆகம முறைப்படி துவாரபாலகர்). இதுவே அடையல் பத்ததியிலுள்ள முக்கிய விதிமுறைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பப் பத்ததியும் காளி பூசையும்

கும்பப் பத்ததி கும்பத்தின் மூலம் அம்மனை கொலு வைக்கும் முறையினைத் தெளிவாகக் கூறுகின்றது. வால, திரிபுரை, புவனை எனும் மூன்று சக்திகளுக்கு கும்பம் வைத்து சடங்கு தொடங்குவார்கள்.

வாலை - பாலா - இச்சா சக்தி - மாரி - லட்சுமி - வாலை

திரிபுரை - திரிபுரா - கிரியா சக்தி - காளி - துர்க்கை - அருள்

புவனை - புவனா - ஞானா சக்தி - பேச்சி - சரஸ்வதி - சித்து.

இதுவே மூன்று சக்தியின் அடிப்படைத் தத்துவம் ஆகும். மாரியம்மன் சடங்கில் வாலைகும்பம் நடுவிலும், திரிபுரை புவனை கும்பம் வாலைக் கும்பத்தின் இடம் வலமாக வரும். அதேபோல் காளி சடங்கில் திரிபுரை கும்பம் நடுவிலும் ஏனைய இரண்டு கும்பங்களும் வலமிடமாக வரும். அதேபோல் பேச்சியம்மன் சடங்கிலும் புவனை கும்பம் நடுவிலும் ஏனைய இரு கும்பங்களும் வரும். இப்படி கும்பப் பத்ததி மூன்று சடங்கிலும் காளி, மாரி, பேச்சி மூன்றையும் ஒரு முகப்படுத்தியுள்ளது.

அடையல் பத்ததியில் மாரி பேச்சிக்கு இடமின்றி பட்டறைக்கும் காளிக்குமாக முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. கும்பப் பத்ததியில் காளி, மாரி, பேச்சி ஆகிய மூன்று தெய்வங்களுக்கும் பள்ளயம் நிறைவாக முடிகிறது. அடையல் பத்ததி நோர்ப்பும், பலியும் சடங்கின் நிறைவாக உள்ளது. கும்பப் பத்ததியில் மாரியம்மனுக்கும், காளியம்மனுக்கும் வினாயகப்பானை எழுந்தருளப் பண்ணி பாற்பொங்கலிட்டு சர்க்கரை அமுதோடும், கன்னிமார் பூசையோடும் பள்ளயம் நிறைவு பெறுகிறது. பேச்சியம்மனுக்கு தண்ணிச்சோற்றுப் பள்ளயம் நிறைவில் வைக்கப்படுகின்றது. அடையல் பத்ததியில் சோறுகறி காளிக்கு நைவேத்தியமாக வைத்து மதுக்கொடுத்து பலி கொடுத்து சடங்கு நிறைவு பெறுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி படபத்திரகாளி கோயில், பெரிய போரதீவு பத்திரகாளிகோயில், ஓந்தாச்சிமடம் பத்திரகாளி கோயில், பெரியகல்லாறு பத்திரகாளிகோயில், அம்பாறை மாவட்டத்திலுள்ள பாண்டிருப்பு பத்திரகாளியம்மன் கோயில், அன்னமலை பத்திரகாளி கோயில், அக்கரைப்பற்று பத்திரகாளி கோயில், தம்பிலுவில் பத்திரகாளி கோயில் ஆகிய யாவும் பட்டறையை மூலமாகக் கொண்டு அடையல் பத்ததியின் மூலம் சடங்கு செய்து வருகின்ற ஆலயங்களாகும். இதிலும் ஆரையம்பதி, பெரிய போரதீவு ஆகிய இரண்டைத் தவிர மற்ற இடங்களில் கும்பப் பத்ததியும் அடையல் பத்ததியோடு கலந்து சடங்கு விதியாக உள்ளது.

பெரிய போரதீவு காளிகோயிலில் கனவு கண்ட பத்ததியே அடையல் பத்ததியின் மூலமாகவுள்ளது. ஏறாவூர் பத்திரகாளி கோயிலில் முழுமையாக அடையல் பத்ததியின்றி கும்பபத்ததியே பூசைவிதியாக உள்ளது. அடையல் பத்ததியிலுள்ள காளிகாதல் எனப்படும் சடங்கின் நிறைவில் பாடப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களில் கம்மியருக்கும் காளிக்குமான தொடர்புகள் பற்றிய பாடல்கள் அதிகளவு காணப்படுகின்றன. கும்பப் பத்ததியில் அத்தகைய பாடல்கள் இல்லை. ஏறாவூர் பத்திரகாளி கோயில், கரவெட்டி காளிகோயில், புளியடிக் காளிகோயில் போன்ற கோயில்களிலும் இக்கும்பப் பத்ததி பேணப்படுகின்றது. வீரபத்திரர், வைரவர், பிடாரி வைரவர், பிரத்தியங்கிரிக்காளி, சிங்கநாதர் (நரசிங்கர்) காடேறி, வராகி, வதனமார் ஆகிய தேவதைகளுக்கு அடையல் பத்ததியில் முதன்மைத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கும்பப் பத்ததியில் மேற்குறித்த தேவதைகளோடு மாரியம்மன், பேச்சியம்மன், துரோபதையம்மன், காத்தவராயன், மாடன், குத்துக்கிழவி போன்ற தேவதைகளும் முதன்மைத்துவம் பெறுகின்றன.

மட்டக்களப்பு மண்ணிலுள்ள இந்த இரண்டு பத்ததிகளும் வெவ்வேறு வகையான விதிகளைக் கூறினாலும் அடிப்படையில் திரிபுரையாகிய காளியை முதன்மைப்படுத்தியதாக அமைகின்றது. இத்தோடு அதிகளவு பத்திர காளியம்மன் ஆலயங்களில் நிறைவு நாளில் தீப்பாய்தல் எனும் நிகழ்வு சமகாலத்தில் சிறப்பாக இடம் பெறுகின்றது.

காளி வழிபாடு ஆரம்ப காலங்களில் திராவிடர்களின் கொற்றவை வழிபாடாக இருந்த காரணத்தால் காளியை யுத்த தேவதையாகக் கண்ட ஆரியர்கள் துர்தேவதையாகவும், காவல்தேவதையாகவும், சிறுதேவதையாகவும் கருதி உயர் நிலையில் ஏற்றுக் கொள்ளாமல் தாழ்வு நிலையில் தள்ளி வைத்தனர். இக்காளி வழிபாடு முதன் முதலில் உலகம் ஏற்கும் படியாக வைத்த மகான் ராமகிருஷ்ணபரமஹம்சரே. அத்துடன் மகாகவி காளிதாசின் வரலாறும், விக்கிரமாதித்தன் வரலாறும் காளிதேவியின் சிறப்புக்கு வழி சமைத்தன. "யாதுமாகி நின்றாள் காளி எங்கும் நீ நிறைந்தாய்" என்ற மகாகவி பாரதியின் மனஈர்ப்பின் பக்தியம் காளிவழிபாடு மக்கள் பால் ஈர்க்கப்படுவதற்கு காரணமாயின.

எனவே தொன்மை வாய்ந்த காளி வழிபாடு மட்டக்களப்பு மண்ணில் தெய்வ மணங்கமழும் மந்திர வழிபாடாக கலந்து இயங்குகின்றது. பழமையும் பெருமையும் வாய்ந்த தூயதமிழில் சடங்கு விதியாக அமைந்த வழிகாட்டலை பாதுகாப்பதும் இத்தகைய பத்ததிகளின் மூலம் மந்திர பூர்வமாகிய மண்டூர் மண்ணின் மாண்பினை உலகறியச் செய்வதும் தலையாய கடமைகளாகும். காலமகா சக்தியாகி காளிவழிபாடு இன்றைய காலத்தின் தேவையாகவும் அமைவதோடு மக்கள் மத்தியில் மிக பக்தி பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிபாடாகவும் அமைகின்றது. கண்ணகியம்மன், மாரியம்மன், காளியம்மன், துரௌபதையம்மன், பேச்சியம்மன் போன்ற சக்திமிகு தெய்வ சக்திகள் மட்டக்களப்பு மண்ணை பத்திரமாகப் பாதுகாத்து இருக்கின்றன. பாரிய தாக்கங்கள் ஏற்படா வண்ணம் இத்தெய்வ சக்திகள் துணையாகவிருந்து காப்பாற்றி இருக்கின்றன.

ஆகவே காளி வழிபாடு மட்டுநகர் மண்ணில் கலந்த வழிபாடு, கனிந்த வழிபாடு. அவ்வழிபாட்டின் மூலம் நல்லதோர் வழிபாட்டினை காண்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் திரௌபதையம்மன் வழிபாடு

– பே. சச்சிதானந்தம் B. A. (Hons.) –

மட்டக்களப்பு தேசம் வடக்கே வெருகல் ஆற்றையும் தெற்கே பூமுனையையும் எல்லைகளாக கொண்ட பெரு நிலப்பரப்பாகும். இங்கு ஆகம முறைக்கு மாறாக "பத்ததிகளை" கொண்டு வழிபாடு செய்யும் பாரம்பரியம் சிறப்புற்று விளங்குகிறது. இப்பத்ததி வழிபாட்டில் திரௌபதியம்மன் வழிபாடும் மிக முக்கியமான ஒன்றாக மிளிர்கின்றது. இந்த வகையிலே மட்டக்களப்பு தேசத்திற்கு திரௌபதை வழிபாடு தாதன் என்பவனால் அறிமுகப்படுத்தப்பட்டதாகவும், அது மட்டக்களப்பின் முதன்முதல் வழிபாடாக இடம்பெற்றதாகவும், அவ்வழிபாட்டுமுறையை அடியொற்றியே மட்டக்களப்பின் ஏனைய இடங்களான பழுகாமம், கல்லடித்தெரு, மட்டிக்களி, மகிழவெட்டுவான் போன்ற இடங்களுக்கும் இவ்வழிபாடு பரவியதாகவும் அறிஞர்கள் கூறுகின்றனர். இங்கு இடம்பெறும் வழிபாட்டு முறைகள் பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலய வழிபாட்டு முறையை அடியொற்றி இருந்தாலும் அவற்றுக்கிடையே சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன. இந்த அடிப்படையில் பாண்டிருப்பு திரௌபதியம்மன் வழிபாட்டு முறைகள் விரிவாக இக்கட்டுரையில் கூறப்படுகின்றன.

## பாண்டிருப்புத் திரௌபதையம்மன் வழிபாடு

பாண்டவர்கள் பாஞ்சாலியுடன் உறைந்து இருந்த இடம் "பாண்டிருப்பு" ஆகிற்று எனக் கூறப்படுகிறது. இது மட்டக்களப்புக்கு தெற்கே சுமார் 25 மைல் தொலைவில் கல்முனைக்கு அருகாமையில் அமைந்துள்ளது. இங்கு திரௌபதையம்மன் ஆலயம் அமைவதற்கு "தாதன்" காரணமாக இருந்தான் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதன் கல்வெட்டு கூறுகிறது. அவனால் இங்கு ஆரம்பிக்கப்பட்ட ஆலயம் வழிபாட்டு முறைகளும் தற்பொழுதும் வருடாவருடம் புரட்டாதி மாதம் வரும் செவ்வாய்க் கிழமை கதவு திறக்கும் வைபவத்துடன் ஆரம்பிக்கப்பட்டு பூரணை தினத்தை உள்ளடக்கியதாக வரும் ஒரு வெள்ளிக்கிழமையன்று தீ மிதித்தல் நிகழ்வுடன் முடிவடைகின்றது. இவ்வாலயத்தில் இடம்பெறும் நிகழ்வுகளாவன:

கொடியேற்றச் சடங்கு, சமயம் எடுத்தல், சுவாமி எழுந்தருளப் பண்ணும் சடங்கு, நாட்கால் வெட்டும் சடங்கு, கலியாணக் கால் வெட்டும் சடங்கு, வனவாசம் போகும் சடங்கு, தவநிலைச் சடங்கு, தீமிதிப்புச் சடங்கு, பாற்பள்ளயச் சடங்கு என்பன. இவற்றை சற்று விரிவாக நோக்குவோம்.

**கொடியேற்றச் சடங்கு**

இன்றைய தினம் பாண்டிருப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்திலுள்ள பாண்டவர், திரௌபதி ஆகியோரது சிலைகளை எடுத்துவந்து கடற்கரைக்கு கொண்டுசென்று கடலில் அவற்றை கழுவி பின் அவற்றை திரௌபதையம்மன் ஆலயத்தில் வைப்பர். அதன்பின் அங்கு எடுத்துவரப்படும் கடல் நீரை மூலஸ்தானத்தில் வைத்து, பிள்ளையார் ஆலயத்திலிருந்து கொண்டு வரப்பட்ட வெள்ளை நிறத் துணியில் கிருஷ்ணனின் 10 அவதாரங்களையும் குறிக்கும் சின்னங்கள், சூரியன், சந்திரன், மணி, தீபக்கால் போன்றவற்றை வரைந்து அதனைக் கொடியாகக் கருதி அன்றைய தினம் அதிகாலை ஐந்து (05) மணியளவில் பாண்டவர்களில் தலைவரான தருமரால் அக்கொடி ஏற்றப்படும். இதனையே *கொடியேற்றச் சடங்கு* என அழைக்கின்றனர். இதுவே விழாவிற்கான கால்கோளாக அமைகிறது.

**சமயம் எடுத்தல்**

இது தாதனுடன் தொடர்புபட்டதாகும். இவனால் தாபிக்கப்பட்ட அட்சரப் பேளையை பூசை பண்ணி சந்தன மண்டபத்திற்குள் கொண்டு வந்து மடையில் வைத்து பஞ்சபாண்டவர், திரௌபதி, கிருஷ்ணர், கட்டுக்கு நிற்போர் யாவருக்கும் உரிய ஆயுதங்களை கொடுக்கும் நிகழ்ச்சியே *சமயம் எடுத்தல்* என்பது குறிக்கின்றது.

**சுவாமி எழுந்தருளப் பண்ணுஞ் சடங்கு**

கிருஷ்ணர் துவாரகாபுரத்தில் இருந்து அஸ்தினாபுரம் வரல் என்ற நிகழ்ச்சியே "சுவாமி எழுந்தருளப் பண்ணல்" எனும் சடங்கு குறிக்கின்றது. பெரும்பாலும் சமயச் சடங்குகள் புனைவுகளை நடித்துக் காட்டுவதாக, அதற்கு செயல் உருவம் கொடுப்பதாக அமைகிறது. இதன்படி துவாரகாபுரம் எனக் காட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து அஸ்த்தினாபுரம் எனக் கொள்ளும் திரௌபதியம்மன் ஆலயத்துக்கு பஞ்சபாண்டவர் எனக் கொள்வோரால் கிருஷ்ணரது சிலை எடுத்து வருதலைக் குறிக்கிறது.

## நாட்கால் வெட்டும் சடங்கு

நாட்கால் வெட்டுதல் என்னும் நிகழ்வு திரௌபதை எப்பொழுது அக்கினியில் பிறந்தாளோ அந்த தினத்தை நினைவுபடுத்துவதற்காக செய்யப்படுகின்றது. அதாவது திரௌபதி யாகத்தில் இருந்து பிறந்தவள் என்பதை உறுதிப்படுத்தவே இச்சடங்கு இடம்பெறுகிறது எனக் கூறுகின்றனர். அன்று வெட்டப்படும் நாட்காலே (வீரமரம்) பதினெட்டாம் (18) நாள் தீமூட்டுவதற்கு பாவிப்பர். அந்நாட்கள் சடங்கு முடிவடையும் வரை ஆலய மூலஸ்தானத்திலே இருக்கும். அத்தோடு அம்மரத்தை வெட்டும் போது மக்கள் அதன் இலைகளை எடுத்து தமது வீடுகளுக்கு கொண்டு செல்வர். அது அவர்களுக்கு செல்வத்தை கொடுக்கும் என மக்கள் நம்புகின்றனர். அத்தோடு நோய் பிணியை நீக்குவதாகவும் நம்புவர்.

## கல்யாணக்கால் வெட்டும் சடங்கு

சுயம்வரத்துக்கு கால்கோள் இடுவதற்குரிய ஏற்பாடாகவே கல்யாணக் கால் வெட்டும் சடங்கு இடம்பெறுகின்றது. இக்கல்யாணக்கால் வெட்டும் சடங்கு கொடியேறி 12ம் நாள் இடம்பெறும் இந்நிகழ்வு பாண்டிருப்பில் உள்ள "கொஸ்தாப்பர்" நிலத்தில் வளர்க்கப்பட்ட பூவரசமரத்துக்கு பூசை முடித்து வலம் வந்து பூசித்து வீமன் அம்மரத்தில் ஏறி தடி ஒன்றை வெட்டுதல் கல்யாணக்கால் வெட்டுதல் ஆகும். அவ்வாறு வெட்டப்பட்ட தடியை அம்மனாகச் சோடனை செய்து ஆலயத்தில் வைத்து பூசை இடம்பெறும்.

## வனவாசம் போகும் சடங்கு

இச்சடங்கு கொடியேறி 16ம் நாள் ஆரம்பமாகிறது. இச்சடங்கினை பாண்டிருப்பின் சலவைத் தொழிலாளர்கள் செய்கின்றனர். இங்கு துரியோதனனுடன் சூதாடித் தோற்ற பஞ்சபாண்டவரும், திரௌபதியும் வனவாசம் செல்வது போன்ற பாரதக் காட்சி அபிநயித்துக் காட்டப்படுகின்றது. பாண்டவருக்கும் திரௌபதிக்கும் வேடம் தாங்கியுள்ளோரை மக்கள் பாரதம் கூறும் பஞ்சாண்டவர்களாகவும். திரௌபதியாகவும் நினைத்து பூசிப்பர். திரௌபதி அம்மன் ஆலயத்தை அத்தினாபுரமாக வைத்து அதனின்று புறப்பட்டு மணற்சேனை, நற்பிட்டிமுனை, சேனைக் குடியிருப்பு ஆகிய கிராமங்களுக்கு சென்று திரும்புதல் வனவாசம் சென்று திரும்புவதாகக் கணித்து அபிநயிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவநிலைச் சடங்கு

அருச்சுனன் சிவனிடம் பாசுபதம் பெறுவதற்காக தவம் செய்வதையே இச்சடங்கு விளக்கி நிற்கிறது. இது கொடியேற்றி 17ம் நாள் இடம் பெறும் சடங்காகும். அந்நாள் இரவு சுமார் இரண்டு மணியளவில் நடைபெறும். இதற்கு அருச்சுனன் தவநிலைக்குச் செல்ல கோயில் மூலஸ்தானத்தில் இருந்து சந்தன மண்டபத்தை நோக்கி வருவார். இவர் உடலெங்கும் முத்து வெள்ளை காவி உடை தரித்து உருத்திராக்க மாலை அணிந்து, கையில் வில் அம்பு, முதுகில் அம்புராக் கூட்டுடனும் வருவார். அதேவேளையில் சந்தன மண்டபத்தில் தருமர் இருப்பார். அவரை அருச்சுனர் மூன்று (3) முறை சுற்றி வலம் வந்து வணங்குவார். அப்பொழுது,

ஆண்டி வடிவெடுத்து
சந்நியாசி நான்
அரிய தவம் போறேன் அண்ணை...

என்ற பாட்டை பாட தருமர் தலையசைத்து அருச்சுனனை சிவனிடம் பாசுதம் பெற ஆசியுடன் விடை கொடுத்து அனுப்புவார். அவ்வாறு விடைபெற்று செல்லும் போது பல தடைகள் ஏற்படும். அவற்றை வெற்றி பெற்று அர்ச்சுனர் குறித்த இலக்கை அடைகிறார். அருச்சுனர் தவநிலைக்கு செல்வதற்கு ஆலயத்துக்கு முன் ஒரு கோபுரம் அமைக்கப்பட்டு அதில் அவர் ஏறுவார். அதற்கிடையில் அவரை ஏலகன்னி இடைமறித்தல், பன்றி மறித்தல் என்பன இடம்பெறும். அவற்றை தாண்டி அவர் தனது பயணத்தை தொடர்ந்து மீண்டும் வந்து தருமரை வணங்கி விடை பெறுவர். இந்நிகழ்வே தவநிலை சடங்கு.

## தீமிதிப்புச் சடங்கு

மகாபாரதத்தில் பஞ்சபாண்டவர்கள் தங்கள் பாவங்களை எல்லாம் நீக்கி புதுப்பிறவி எடுத்தல் எனும் கருத்தினைச் சித்தரிக்கும் வகையிலே 18ம் நாள் தீப்பாயும் சடங்கு இடம்பெறுகிறது. அன்று அதிகாலையில் வீர கும்பம் நிறுத்தல் சடங்கு இடம்பெற்ற பின்னரே தீப்பாயும் சடங்குக்குரிய ஆயத்தங்கள் செய்யப்பட்டு அன்று மாலை தீப்பாயப்படும். தீப்பாய்தல் என்பது தீமையில் இருந்து பாய்தல் எனப் பொருள்படும்" எனக் கூறுகின்றனர். தீப்பாய்வதனால் தீமைகளில் இருந்து விடுபடுகின்றனர். அவர்களுடைய பாவங்கள் அனைத்தும் எரிக்கப்படும் என நம்புகின்றனர். அதனாலேயே தீப்பள்ளயம் என திரௌபதியம்மன் வழிபாடு அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாற்பள்ளயச் சடங்கு

இறுதிநாள் பள்ளயச் சடங்கு இடம்பெறும். பாரதப் போரில் மாண்ட பாண்டவர்களின் குலாதிகளுக்காகச் செய்யும் பிதிர் வழிபாடே இதுவாகும். இச்சடங்கு நடைபெறுவதற்கு முன்பு போரில் பஞ்சபாண்டவர்கள் வெற்றி பெற்றதன் நிமித்தம் தருமருக்கு முடிசூட்டு விழா இடம்பெறும். இவ்வேளையில் அனைவரும் அமர்ந்திருந்து பாரதக்கதையின் இறுதிப் பகுதி படிக்கப்பட்டு முடித்து வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து கிருஷ்ணரால் தருமருக்கு முடிசூட்டப்படும். இதனைத்தொடர்ந்தே பாற்பள்ளயச் சடங்கு இடம்பெறும். இங்கு ஊர் மக்கள் கோயில் முன்றலில் பொங்கல் பொங்குவார்கள். ஒவ்வொரு பொங்கல் பானையில் இருந்தும் ஒரு அகப்பை பால் வீதம் எடுத்து பெரிய பானை ஒன்றுக்குள் நிரப்புவர். பின் கட்டாடியார் தீபாராதனையுடன் செய்ய பின்னால் மேளதாள ஒலியுடன் திரௌபதி பாற்பானையை சுமந்து வந்து கட்டாடி தீக்குழிக்கு தீபாராதனை காட்டியபின் தருமர் ஒரு பாத்திரத்தினுள் பாலை எடுத்து தீக்குழியில் ஊற்றுவார். இதனைத் தொடர்ந்து ஏனையவர்கள் ஊற்றுவர். இதனால் அவர்களின் நோய் பிணிகள் நீங்கும் என நம்புவர்.

எனவே மேற்படி பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலயத்தில் இடம்பெறும் சடங்குகள் யாவும், மகாபாரதக் கதையை எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளன. இவ்வாலயச் சடங்குமுறைகளைப் பின்பற்றியே மட்டக்களப்பின் இதர திரௌபதியம்மன் ஆலயங்களிலும் சடங்குகள் இடம்பெறுகின்றன.

## பழுகாமம் திரௌபதி அம்மன் ஆலயம்

"சிங்காரகண்டி" என தொல் பெயரால் அழைக்கப்படும் பழுகாமம், மட்டக்களப்பில் சுமார் 20 மைல் தொலைவிலுள்ள களுதாவளைக்கு மேற்குப்புறமாக படுவான் கரையில் அமைந்த இடமே பழுகாமம் ஆகும். இங்கு கதர்காம யாத்திரியர் ஒருவரால் இவ்வழிபாடு சுமார் 18ம் நூற்றாண்டளவில் ஆரம்பிக்கப்பட்டதாக கூறுவர். அன்று முதல் இங்கு திரௌபதி வழிபாடு மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

இங்கு மாதச் சடங்குகளாக சித்திரை மாதப் பிறப்பன்று சித்திரைச் சடங்கு, வைகாசிப் பிறப்பில் வைகாசிச் சடங்கும், கார்த்திகை, மார்கழி, தைப்பொங்கல் சடங்குகள் விசேட சடங்குகளாகும். இங்கு பாண்டவர் கொலு சடங்கில் கலந்து சிறப்பிப்பர். இது பொதுவாக திரௌபதி அம்மன் வழிபாட்டில் காணப்படும் ஒரு பொதுவான அம்சமாகும். இவை தவிர சித்திரா பௌர்ணமி, வைகாசிப் பௌர்ணமி, ஆனி உத்தரம், ஆடிப் பௌர்ணமி, ஆடி அமாவாசை, ஆவணி ஓணம், நவராத்திரி, ஐப்பசி வெள்ளி, கந்தசஷ்டி, கார்த்திகை தீபம், விநாயக சஷ்டி, திருவெம்பாவை, தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம் ஆகிய விசேட காலங்களில் சிறப்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைகள் நடைபெறுகின்றன. இவ்வழிபாடுகள் இவ்வாலயத்திலே சிறப்பாக ஏனைய திரௌபதியம்மன் ஆலயங்களைவிட, கொண்டாடப்படுகின்றன.

மேலும் ஆண்டு விழா இங்கு பாண்டிருப்புத் திரௌபதி அம்மன் ஆலயத்திற்கு எதிராக இடம்பெறுவதை அவதானிக்கலாம். ஆடிமாதம் கதிர்காமத் தீர்த்தத்தை அடுத்துவரும் வெள்ளிக்கிழமை தீமிதிப்பு வைபவம் சிறப்பாக நடைபெறும். தீமிதிப்புக்கு முந்திய வெள்ளிக்கிழமை கதவு திறக்கும் நிகழ்வு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து சமய சடங்கு நிகழ்வுகள் நடைபெறும். இங்கு பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயச் சடங்கைப் போல வனவாசம் நிகழ்ந்தாலும் திரௌபதி தவிர்ந்த பாண்டவர் கொலுவும், கட்டாடிமாருமே வனவாசம் போவர். (திரௌபதி அம்மன் ஆலயத்தைப் போல கதலி வனம் அழித்தல், அர்ச்சுனன் தவநிலை என்பனவும் இடம்பெறுகின்றன. அத்துடன் தீப்பள்ளயத்துடன் சடங்கு முடிவுறும். இத்தீப்பள்ளயம் பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலயத்திலும் இடம்பெறுகிறது. எனவே, இரண்டு இடங்களிலும் வழிபாட்டு முறைகளில் சில ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் இடம்பெறுகின்றன.

## புளியந்தீவு (கல்லடித்தெரு) அம்மன் ஆலயம்

மட்டக்களப்பு நகரமானது மட்டக்களப்பு வாவி கடலோடு கலக்கும் பகுதியினை அண்டி ஏறக்குறைய நான்கு மைல் சுற்றளவுடையதாய் விளங்குகின்ற புளியந்தீவு எனும் தீபகத்தே இக்கோயில் அமைந்துள்ளது. இவ்வாலயம் பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலய ஆண்டு விழாவின் போது ஆரம்பிக்கப்பட்டு சுமார் 10 நாட்களே இடம்பெறுகிறது. இங்கு சடங்கின் போது ஐவர் கொலு, கட்டுக்கு நிற்போர் போன்றோர் முக்கியம் பெறுவர். இவ் ஐவர் கொலு பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயத்தைப் போலல்லாமல் ஆண்டுதோறும் நிருவாக சபையினால் தீர்மானிக்கப்படுகிறது. இங்கு இடம்பெறும் ஒருசில நிகழ்வுகள் பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலய சடங்குடன் அடியொற்றி இடம்பெற்றாலும் பாண்டிருப்பில் இடம்பெறும் 18ம் நாள் திருவிழாவிற்கு பதிலாக 10 நாள் திருவிழா இடம்பெறுதல், போன்றன இவ்விரு ஆலயங்களுக்கும் இடையே உள்ள சடங்கு வேறுபாடுகளைக் காட்டுகின்றன.

## மட்டிக்களி திரௌபதியம்மன் ஆலயம்

மட்டிக்களி மட்டக்களப்பு நகரத்துக்கு வடகிழக்கிலே சுமார் 85 கிராமங்களை உள்ளடக்கிய கிராமம். இது அமிர்தகழி, மட்டிக்களி ஆகிய இரண்டு கிராமங்களையும் இணைத்தவாறு இரண்டு கிராமசேவகர் பிரிவுகள் உள்ளடக்குகின்றன. இங்கேயே மட்டிக்களி கிராமம் அமைந்துள்ளது. அங்குள்ள திரௌதியம்மன் ஆலயம் ஆரம்பத்தில் தீப்பாய்தல் இடம்பெறாத ஆலயமாக இருந்தது. இதற்குப் பதிலாக தண்ணிச்சோற்றுப் பள்ளயம் கொடுப்பதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்கை நிறைவு செய்தனர். 1993ம் ஆண்டு இடம்பெற்ற ஆலய கும்பாபிஷேகத்தின் பின் பங்குனி உத்தரத்தை உள்ளடக்கியதாக ஒரு வெள்ளிக்கிழமை ஆரம்பித்து அடுத்த வெள்ளிக்கிழமை தீப்பாய்தலுடன் சடங்கை முடிப்பர். இங்கு 18நாள் பாரதக் கதை படிப்பதற்கு பதிலாக சுமார் 9 நாட்களில் சடங்கு வசதியின்மை காரணமாக நிறைவு செய்யப்படும்.

இங்கும் வனவாசம் சடங்கு, கதலிவனம், தவநிலைச் சடங்கு, தீப்பாய்தல் என்பன பாண்டிருப்புத் திரௌபதி அம்மன் ஆலயத்தைப் போல் நடைபெறுகின்றன. ஆனால், அவற்றிலிருந்து சற்று வித்தியாசமாகவே இப்பிரதேச வழக்கிற்கு ஏற்ப சில நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. இங்கு வருடாந்த சடங்கு தவிர்ந்த வெள்ளிக்கிழமைகள், பௌர்ணமி நாட்கள், மற்றும் விசேட நாட்களிலும் பூசைகள் இடம்பெறுகின்றன.

## புதூர் திரௌபதையம்மன் ஆலயம்

"ஆயித்தியன் காடு" எனப்படும் தற்போதைய மட்டக்களப்பு வைத்தியசாலைப் பிரதேச மத்தியிலேயே புதூர் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ள திரௌபதியம்மன் ஆலயத்தில் திரௌபதியம்மனின் முகம் மட்டுமுள்ள சிலை வைத்து வழிபாடு இடம்பெறுகிறது. இவ்வாலயத்தில் தற்பொழுது 5 நாட்கள் சடங்குகள் நடைபெறுகின்றன. கலியாணக்கால் வெட்டும் சடங்கு, தீப்பாய்தல், தவநிலை என்பன பிரதான சடங்குகளாகும். இங்கும் ஐவர் கொலு வைக்கப்படுகிறது (பாண்டிருப்பு திரௌபதியம்மன் கோயிலைப் போல).

இவ்வாலயத்தின் ஆண்டுவிழா பாண்டிருப்புத் திரௌபதியம்மன் ஆலயத் திருவிழா ஆரம்பித்து 13ம் நாள் ஆரம்பமாகிறது. இவ்வாறு ஆரம்பமாகும் சடங்கு ஐந்து நாள் தொடர்ந்து நடைபெறும். இறுதியில் வரும் வெள்ளிக்கிழமை வீரகம்பம் வெட்டி, தீமூட்டி, தீப்பாய்ந்து பின் தண்ணீர்ச் சோற்றுப் பள்ளயத்துடன் ஆலயத் திருவிழா நிறைவு பெறுகிறது. இங்கு பாண்டிருப்பை அடியொற்றி இடம்பெற்றாலும், "தண்ணிச் சோற்றுப் பள்ளயம்" இவ்வாலயத்துக்கு தனித்துவமானதாகும்.

## மகிழவெட்டுவான் திரௌபதையம்மன் ஆலயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான் கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள மகிழவெட்டுவான் எனும் கிராமத்தில் அமைந்த திரௌபதியம்மன் ஆலயம், ஆரம்பகாலத்தில் முனீஸ்வரன் கோயில் என அழைக்கப்பட்டது. இவ்வாலயத்தில் 05 நாள் சடங்கு இடம்பெறும். முதல்நாள் கதவு திறத்தல், ஐவர் கொலுவினர் பூசை செய்தல் என்பனவும், இரண்டாம் நாள் குடும்பச் சடங்கு (பூசை) செய்தல் என்பனவும், மூன்றாம் நாள் கலியாணக்கால் வெட்டும் சடங்கும், கதலிவனம் அழித்தல் என்பன இடம்பெற்று இறுதியில் தீப்பாய்தலுடன் சடங்கு முடிவுறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மட்டக்களப்பு பிரதேசத்தில் இடம்பெறும் திரௌபதியம்மன் வழிபாடு தாதனால் அறிமுகப்படுத்தப்பட்டது முதல் அவ்வழிபாடு பாண்டிருப்பு திரௌபதையம்மன் ஆலயத்தை அடியொட்டி "ஒன்றைப் போல செய்தல்" என்பதன் அடிப்படையில் பாரதக் கதையை நடித்துக் காட்டும் சடங்காக அமைந்த இத் திரௌபதி வழிபாடு, மட்டக்களப்பு பிரதேசத்தின் இதர பகுதிகளுக்கும் பரவி அவ்வப் பிரதேச வழக்கிற்கு ஒவ்வ சிறப்புடன் இடம்பெற்று வருகிறது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்தில் பெரிய தம்பிரான் வழிபாட்டு முறை

**– சி. சந்திரசேகரன்** B.A. (Hons.) –

மட்டக்களப்பு மதவழிபாட்டு மரபில் கிராமியத் தெய்வவணக்க முறை இன்று வரை முன்னிலைப்பட்டு நிற்பது பிரதானமானதொரு அம்சமாகும். இம்மரபில் சாதிக்குழும அடிப்படையில் குலதெய்வங்களை வகுத்துக்கொண்டுள்ளமை முக்கியமானது. பிற்பட இதில் மாற்றங்கள் ஏற்பட்டு விட்டாலும் சில சாதிக்குழுமங்கள் இன்றுவரை அம்மரபைப் பேணி வருகின்றன. இதில் பெரியதம்பிரான் வணக்கமும் ஒன்றாகும்.

மட்டக்களப்புச் சடங்குமுறை வழிபாட்டில் பெரியதம்பிரான் வழிபாடு தனித்துவமான ஒரு முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட பத்ததிமுறையொன்றின் அடிப்படையில் மெற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் வந்தாறுமூலை, சித்தாண்டி, ஏறாவூர் ஐந்தாம் குறிச்சி, அரசடி கோட்டமுனை ஆகிய இடங்களில் அமைந்துள்ள பெரிய தம்பிரான் ஆலயங்களின் சடங்கு நிகழ்த்துகையின் அடிப்படையில் இக்கட்டுரை எழுதப்படுகிறது.

இவ்வாலயங்களது வருடார்ந்த சடங்கு பெரும்பாலும் 5 அல்லது 7 நாட்களில் நிகழ்த்தப்படுகின்றது. சடங்கின் தொடக்க நிகழ்வாக 'மடையெடுப்பு' என்னும் வைபவம் நிகழும். அதாவது பூசைசாமான்கள் வைக்கப்பட்டுள்ள குறித்த வீட்டிலிருந்து (கவுடா வீடு) பூசாரிமார், தேவாதிகள் சகிதம் ஆலயத்துக்குப் பூசைப்பொருட்களை எடுத்துச் செல்வதாகும். பூசைப்பொருட்களை பெட்டியில் வைத்து தேவாதிகள் சுமந்து வர வெள்ளை பிடித்து மத்தளம், மணி, சங்கொலியுடன் மடையெடுப்பு நிகழும்.

மடையெடுப்புப் பொருட்கள் ஆலய வெளி மண்டபத்தினுள் வைக்கப்பட்டதும் அவற்றைப் பூசைக்கு ஆயத்தம் செய்வர். பின்னர் சுவாமிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிஷேகம் நிகழும். சில ஆலயங்களில் இதற்கு முன்பாக மண்டபம் காவல் பண்ணி கதவு திறத்தல் என்ற நடைமுறை உண்டு. ஓமம் வளர்த்து யாகம் செய்து கொடும்பாவி எரித்து வீதிச்சந்தியில் போட்டு விட்டு அதன் பின் அபிஷேகம் செய்வதுண்டு. அபிஷேக முடிவில் மூலமூர்த்திகளுக்கு மடைவைக்கப்படும். அதனைத் தொடர்ந்து ஆலயத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வீரபத்திரர். வீரமாகாளி, வதனமார், காவற்காரன், மாரியம்மன், கடலாச்சியம்மன், நாகதம்பிரான், திரிசூலவைரவர், கட்டாடிமுதலிமார், குமாரதெய்வம், நரசிங்க வைரவர், போன்ற பரிவார மூர்த்தப்பந்தல்களில் அபிஷேகம் இடம் பெற்று மடை வைக்கப்படும். பின் மூல பரிவார மூர்த்தங்களுக்குப் பூசை நடைபெற்றதும் அலங்கார பூசைக்கான ஆயத்தங்கள் இடம் பெறும். தேவாதிகளைக் கொலுவில் நிறுத்தி அவர்களுக்குப் பூசை இடம் பெறும். முதலில் தலைக்கட்டாடிக்கு மந்திர உச்சாடனம் செய்து உருவேற்றி அடுத்து ஏனைய தேவாதிகளுக்கு உருவேற்றப்படும். இதனை அடுத்துப் பூசாரியார் திரைதிறந்து அலங்காரப் பூசை நடத்துவார்.

தேவாதிகள் தெய்வமாடி கடவுளுக்குப் பூப்போட்டதும் ஆலயத்தைச் சுற்றிவருவர். முதலில் பூசாரியார் தலைக்கட்டாடியை அழைத்துக் கொண்டு ஆலயத்தைச் சுற்றிவருவார். ஆலயத்தின் முன்பாக வந்ததும் அவ்விடமுள்ள வீரபத்திரர் பந்தலில் கையிலுள்ள கத்தியை (கிறிஸ்) வைத்து விட்டு வெளிமண்டபக் கம்பத்தைப்பிடித்துத் தொங்கி ஆடுவார். அடுத்ததாக கொலுவுடன் எல்லாத் தேவாதிகளும் ஆலயத்தை ஆடி வலம் வருவர்.

அடுத்து ஒவ்வொரு பரிவாரப்பந்தலிலும் அதற்குரிய தேவாதிகளின் ஆட்டத்துடன் சடங்கு நிகழ்த்துவர். ஆடிமுடிந்ததும் மலையேறல் (தணிதல்) இடம் பெறும். ஒருவரே பல தெய்வத்துக்கும் ஆடுவதுண்டு. அவ்வாறானவரில் ஒரு தெய்வம் மலையேறியதும் "இன்ன தெய்வத்துக்குரிய திருநாமத்தைக்கூறு" என்று அவர் பூசாரியிடம் கூற பூசாரி அத்தெய்வத்துக்குரிய ஆயுதத்தைக் கொடுத்து அதற்கான மந்திர உச்சாடனத்தையும் செய்து உருவேற்றுவார். இவ்வாட்டங்களின் போது 'வாக்குக் கொடுத்தலும்' நிகழும்.

பின் தம்பிரான் ஆலய இறுதிப்பூசையும் பூப்போடலும் பிரசாதம் பகிரலும் இடம் பெற்று முதல்நாள் சடங்கு நிறைவுறும். அன்று ஒருநேரச் சடங்கு மட்டுமே நடக்கும்.

இரண்டாம் நாள் பகலில் மடையெடுப்புடன் சடங்கு ஆரம்பிக்கும். இன்றைய தினம் தீக்குளிக்கான கம்பு வெட்டல் சடங்கும் நடைபெறும். எருக்கிலை (ஒருவிதமரம்) மரம் உள்ள குறித்த இடத்திற்கு பூசாரி, தேவாதிகள் சகிதம் சென்று அங்கு மடைவைத்து பூசை பண்ணி 3 துண்டு எருக்கிலைக் கம்பு வெட்டி எடுத்துக் கொண்டு வந்து கோயிலினுள் பூசையில் வைப்பர். அன்றைய தினம் தீக்குளி இடத்தேர்வுச்சடங்கும் நடக்கும். தீக்குளிக்கான இடத்தையும். அளவையும் தேவாதிகள் குறித்துக்காட்ட நான்கு மூலைக்கும் கம்பு நட்டு கயிறு கட்டுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் நாள் (இறுதி நாளன்று இரு நாளுக்கு முன்) வாழைக்குலை பழுக்கப்போடல் சடங்கு நடைபெறும். மடையெடுக்கும் வீட்டில் பெரிய கிடங்கு வெட்டப்பட்டு அதனுள் வைக்கோல் வாழைச்சரவைகள் போடப்படும். வாழைக்குலைகளை வெளியே பரவி வைத்து அவற்றை மஞ்சள் நீரால் கழுவி முதலில் பெரிய குலையொன்றைப் பூசாரி தலைமைக் கட்டாடியிடம் கொடுத்து,

"வங்காளன் கூளன் அஞ்சுதன் வானவர் செய்வேலையெல்லாம்
கங்காசலத்திலே முழுக்காட்டி அமுதுபடியூட்டி"

என்ற மந்திரத்தை உச்சரிப்பார். பின் இருவரும் அக்குலையை மடுவினுள் வைத்து விட்டு அடுத்த குலைகளையும் வைப்பர், பின் கிடங்கின் மேல் ஓலை, தடிகள் பரவி மண் பரவி, சுற்றி புரி இழுத்து பத்திரம் போட்டுக் காவல் பண்ணுவர். பின் மதியச்சடங்கு நடைபெறும்.

மூன்றாம் நாள் பிற்பகல் நடைபெறும் மற்றொரு சடங்கு சுவாமி வீதி வலம் வருவதாகும். நிறைகுடம் எடுத்து பட்டுச் சாத்தி ஊர்வலம் செல்லும் போது அலங்கரிக்கப்பட்ட குதிரை வாகனத்தையும் எடுத்துச் செல்லல் குறிப்பிடத்தக்கது. வீதிவலம் செல்லும் போது அவ்வூரிலுள்ள ஏனைய கோயில்களுக்கும் சென்று அங்கு பட்டுச் சாத்தி தீபாராதனை நிகழ்த்தப்படும். அன்றிரவு மக்கள் தம் வீட்டிற்கு முன்பாக நிறைகுடம் வைத்துத் தம்பிரானைத் தரிசிக்கும் போது தேவாதிகளின் வாக்கினையும் பெறுவர். மீண்டும் ஊர்வலம் ஆலயத்தை அடைந்ததும் அன்றைய இராச்சடங்கு நிகழ்த்தப்படும்.

இறுதித்தினத்திற்கு முதல் நாள் (4ம் நாள்) விஷேட தினமாக அமையும். அன்று பிற்பகல் விஷேட மடையெடுப்பு விழா ஊர்வலமாக இடம் பெறும். கவுடா வீட்டிலிருந்து பூசைச்சாமான்களோடு வினாயகப்பானை (சாடி) எனப்படும் பிரதானப் பொங்கல் பானையை எடுத்து வருதல் சிறப்பு நிகழ்வாக அமையும். அன்று கவுடா வீட்டில் 3 கவாய்கள் முறுக்கப்படும் (3 சேலைகளை எடுத்து ஒவ்வொன்றினுள்ளும் ஒவ்வொரு பாக்கு, வெற்றிலை, பழம், கமுகம்பாளை என்பவற்றை வைத்து தனித்தனியாக மூன்றாக மடித்துக் கயிறாக முறுக்கி எடுப்பது), இதில் ஒன்றை தலைமைப் பூசாரிக்கும், மற்றதைத் தலைக்கட்டாடிக்கும், அணிவதுடன் மூன்றாவது வினாயகப் பானையினுள் வைக்கப்படும். பின் வினாயகப் பானையையும் பூசைச்சாமான்களையும் சுமந்து கொண்டு தெய்வங்கள் ஆட வாத்தியம் இசைக்க ஆலயம் நோக்கி வருவர். சாடியை மணம் முடிக்கா ஆண்களும் பூசைப் பொருட்களை மணமாகாப் பெண்களும் தூக்குதல் இவர்களது மரபு (சில இடங்களில் இதில் மாற்றமுண்டு). இவ்வேளையில் மக்கள் நிறைகுடம் வைத்து தரிசனம் செய்வர். அத்துடன் சந்திக்குச் சந்தி தேங்காய் வெட்டிக் கொடுத்து வருவது வழக்கம். இது 'விடங்கு' கழித்தல் எனப்படும். இவ்வீதியுலாவின் போது மந்திர வித்தாண்மையுள்ளவர்கள் தேவாதிகளைக் கட்டுவதும் அதனைப் பூசாரிமார் வெட்டுவதும் பிரதான நிகழ்வாக இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து கோயிலுக்கு அருகிலுள்ள சந்தியில் இளனிகுத்தல் எனும் நிகழ்வு இடம் பெற்றதன் பிற்பாடு மந்திரவாதிகளின் கட்டுப்பலிக்காது என்பர். பின் கோயில் வளவினுள் புகும் போது வாயிலில் 3 தேங்காய் வெட்டி ஒரு கோழிப் பலி கொடுத்து விட்டு வருவர். கோழியை அறுக்காது பூசாரியும் தலைக்கட்டாடியும் கோழிக்கு மந்திர உச்சாடனம் பண்ணி ஒரு பக்கமாக எறிந்து விடுவது குறிப்பிடத்தக்கது.

பின் வினாயகப் பானையை காவற்காரன் பந்தலில் வைத்து பூசை நிகழ்த்தி விட்டு அதனை மூலஸ்தானத்தில் கொண்டு வைத்து பூசை பண்ணுவர். அடுத்து பொங்கல் ஆயத்தங்கள் இடம் பெறும். நள்ளிரவில் கோயிலுக்கு முன்னே மூன்று கட்டைகள் நட்டு அதற்குப் பாலால் அபிஷேகம் செய்து அதனுள் (அடுப்பு) மந்திரம் வரைந்து அதிலே மடைவைத்து தெய்வத்தைத் தியானித்து காவியம் பாடி அடுப்பை மூட்டுவர். பானையைப் பூசனை பண்ணி கோயிலைச் சுற்றி எடுத்துச் சென்று அடுப்பில் வைத்து பாலை ஊற்றுவர். பால் பொங்கி வளியுமட்டும் காவியம் பாடுவர். பால் பொங்கும் போது தேவாதிகள் தாமாக உருவேறி ஆடுவர். இப்பானைக்குப் பக்கமாக இரு பக்கப் பானைகளும் வைத்துப் பொங்குவர். இந்நிகழ்வு நடைபெறும் இடத்தைச் சுற்றி வெள்ளைச் சீலையால் மறைக்கப்பட்டு அதனுள் பூசாரி, தேவாதிகள், நிர்வாகத்தினர் ஆகியோர் மட்டுமே இருந்து இச்சடங்கை செய்வது மரபாகும். இப்பானைகள் பொங்கி முடிந்த பிற்பாடு ஒவ்வொரு பரிவார மூர்த்தங்களுக்குமான பொங்கல் இடம் பெறும்.

அதிகாலையில் படையல் இடம் பெறும். படையலுக்கு முன் 'அரிசி எறிதல்' இடம் பெறும். பூசாரியும் தலைக்கட்டாடியும் மூன்று பிடி அரிசியை எடுத்து கோயில் முன் பந்தலுக்கு மேலே எறிவர். இது ஒரு பலியாகக் கருதப்படும். பின் மூல பரிவார மூர்த்தங்களுக்கு பொங்கல் படைக்கப்பட்டு அதிகாலையில் பூசை நிகழும். தேவாதிகள் தெய்வமாடிக் கொண்டு தீக்குளியடிக்கு வந்து தீப் பாய்வர். முதலில் தலைக்கட்டாடியும் பின் மற்றைய கட்டாடிகளும் அடுத்து பூசாரியும் பின் மக்களும் தீப்பாய்வர். தீக்குளிக்கான தீமூட்டல் நான்காம் நாள் இடம் பெறும். குளியின் நான்கு மூலையிலும் நான்கு மடை வைக்கப்படுவதுடன் குளியினுள் யந்திரம் வரைந்து ஒரு மடை வைக்கப்பட்டு அதில் ஆலயத்தினுள் வைக்கப்பட்டுள்ள எரிக்கிலங்கம்புகளை வைத்து கற்பூரம் பற்றவைத்து தீமூட்டப்படும். பின் வேம்புக் கட்டைகள் அடுக்கப்படும்.

இறுதி நாள் நிகழும் மற்றொரு சடங்கு 'செவ்வாட்டு' எனும் ஆட்டமாகும். தலைக்கட்டாடியும் 30 கன்னிப் பெண்பிள்ளைகளும் ஒரு வகை ஆட்டத்தினை ஆலய மண்டபத்தினுள் ஆடிப் பின் கடலாச்சியம்மன் பரிவாரத்தடிக்கு வந்து ஆடுவர். இறுதி நிகழ்வுகளில் ஒன்றாக 'பலிகருமம்' நிகழும். ஒவ்வொரு பரிவாரத் தெய்வப்பந்தலிலும் குறித்த தெய்வத்திற்கு ஆடும் தேவாதிக்குச் சாட்டைப்பலியும் மடைப்பலியும் கொடுக்கப்படும். அதன் பின் பால், பழம், கரைத்து தலைக் கட்டாடியும், பூசாரியும் ஆலயத்தின் நான்கு மூலைக்கும் எறிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின் தேவாதிகளின் 'ஆயுத ஒப்படைப்பு' இடம் பெறும். கட்டாடி முதலிமார் பந்தலில் தேவாதிகள் ஆயுதங்களை ஒப்படைத்ததும் தலைக்கட்டாடி அவற்றைத் தோளில் வைத்து கோயிலை வளைத்து விட்டு அப்பந்தலுக்குக் கொண்டு வருவார். அப்போது அங்கு பொங்கல் படைத்து பூசை நடைபெறும். அவ்வேளையில் காவியம் பாடுவர். கட்டாடி முதலிமார் என்பவர்களைத் தமது மூதாதையர்களாகக் கொள்ளும் இவர்கள் இவ்வேளையில் அவர்களை நினைத்து அழுவது குறிப்பிடத்தக்கது.

காவியம் பாடி முடிந்ததும் 'பூப்போடல்' இடம் பெறும். பின்னர் மூலஸ்தானத்திற்குச் சென்று பூசாரியார் தம்பிரானின் பிறப்பு, வளர்ப்பு வாசித்து வாழி பாடுவார். இறுதியாக மூல, பரிவார மூர்த்திகளுக்கு வைக்கப்பட்ட கும்பங்களை எடுத்து ஆலயத்தை வலம் வந்து ஆலயக்கிணற்றில் சொரிவர். முடிவில் 'அன்னதானத்துடன்' சடங்கு நிறைவுறும்.

சடங்கு முடிந்து மூன்றாம் நாள் 'இடும்பன் பூசை' எனும் சடங்கு இடம் பெறும். ரொட்டி, கஞ்சா, கள்ளு, சாராயம் போன்றன வைரவர் பந்தலில் வைத்து மௌனபூசை இடம்பெறும்.

வருடார்ந்த சடங்கு நாட்களைத் தவிர விசேட தினங்களில் விசேட பூசைகளை நிகழ்த்துகின்ற மரபையும் இவர்கள் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே இத்தகைய வழிபாட்டு முறைகளை நோக்குமிடத்து மட்டக்களப்பு கிராமிய தெய்வ வணக்க முறைகளின் சில கூறுகளுடன் பொதுமைப்பாட்டினைக் கொண்டுள்ள அதேவேளை தனித்துவமான பல வழிபாட்டு மரபுகளையும் பின்பற்றி வருவதனை அவதானிக்க முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்தில் வதனமார் வழிபாட்டுமுறை

– சு. சிவரெத்தினம் B.A. (Hons.) –

வதனமார் என்பது மாடுகட்டும் தெய்வமாகும் இதில் கள்ளவதனன், காக்காவதனன், குழுவதனன், பாலவதனன், பால்முட்டிவதனன் என பலவகைத் தெய்வங்கள் உண்டு. இவற்றில் பாலவதனன், குழுவதனன் என்பவையே முக்கியமான தெய்வங்களாகும். மட்டக்களப்பில் இவர்களுக்கு தனிப்பட்ட கோயில்கள் எதுவும் கிடையாது. ஆயினும் பின்வரும் சந்தர்ப்பங்களில் இவர் வழிபடப்படுகிறார் :

1. சில வீடுகளில் வருடாவருடம் வைரவருக்குப் பந்தலிட்டு பூசைகள் செய்து வழிபடப்படும். அவ்வேளைகளில் சிலரில் வதனமார் வந்து முறபடுவர். அப்போது அவர்கள் பந்தலில் இருக்கும் கயிற்றை எடுத்துக் கொண்டு ஆடுவதுடன் சிறுபிள்ளைகளை அழைத்துப் பழமும் தண்ணீரும் கொடுத்து 'ஹாய்' எனச் சத்தமிட்டு ஆடுவர். அப்போது சூழஉள்ளவர்கள் இவரிடம் கட்டுக்கள் கேட்டு வழிபடுவர்.

2. மாரி, காளி, வைரவர் போன்ற கோயில்களில் வதனமாருக்கு என்று தனிப்பட்ட பந்தலிடப்பட்டிருக்கும். தாய்த்தெய்வத்திற்கு பூசை ஆரம்பமானதும் குறிப்பிட்ட பந்தலடியில் வதனமார் தெய்வம் வந்து ஆட ஆரம்பிக்கும். அப்போது வதனமார் காவியம், வதனமார் அகவல் என்பன பாடப்படும். வதனமாருக்கு ஆடுபவர் கோயிலுக்கு வந்த சிறு பிள்ளைகளை அழைத்து ஒருவரை ஒருவர் இடுப்பில் பிடிக்கும்படி கூறி அவர்களை ஒரு கயிற்றால் பிணைத்து அவர்களை இழுத்துக் கொண்டு கோயிலைச் சுற்றி ஓடி தனது பந்தலுக்கு வந்து பழம், தண்ணீர் கொடுத்து மாடுகளைக் கலைப்பது போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஹாய்' எனச் சத்தமிட்டுச் சிறுவர்களைக் கலைத்து விடுவார். இதன் போது பக்தர்களால் வதனமார் தெய்வம் பயபக்தியுடன் வழிபடப்படும்.

3. வெல்லாவெளி மாரியம்மன் கோயிலில் வதனமாருக்கு என்று ஒரு சடங்கு சிறப்பாகச் செய்யப்பட்டு வழிபடப்படும்.

மட்டக்களப்பில் வழக்கில் இருக்கும் இம்மூன்று வழிபாட்டு முறைகளிலே மூன்றாவதே மிக முக்கியத்துவம் கொடுத்து வழிபடப்படுகின்றதை அவதானிக்கலாம். இதற்கு காரணம் வெல்லாவெளியில் உள்ள நாதனையில் வதனமார் இருக்கின்றார் என்னும் நம்பிக்கையாகும். அதாவது வதனமார் ஊர் சுற்றுக்காவியத்தில் வதனமாரும் கன்னிமாரும் மதுரையிலிருந்து கும்பகோணம், இராமேஸ்வரம், திருகோணமலை, கந்தளாய், கொட்டியார நகர், கிளிவெட்டி, தம்பன்கடவை, தம்பலகாமம், கந்தமலை, பாணமை நாகமுனை, அறுகாமம் என்பவற்றின் ஊடாக வந்து சிலர் வதனவெளி என்னும் இடத்தில் இருக்க இன்னும் சிலர் திருக்கோயில், பட்டிநகர், தளவைக்குடா, காரைநகர், கல்முனை, ஆகிய இடங்களில் வாழ்ந்து பின்பு நாதனையில் கனிகள், தேன்கூடு, மாடு ஆகியவற்றைக் கண்டு நாதனையில் வாழத்தொடங்கினர். இங்கு குழுமாடு கட்டியும், மதயானைகளை அடக்கியும், தேனெடுத்தும் வாழ்ந்து வரும் போது தங்களுடைய மாடுகள் அனைத்தும் காணாமல்போக வதனமாரும் மற்றையோரும் கொக்கட்டிச்சோலைதான்தோன்றீசரத்தைத் தொழுது மாடுகள் தேடி மணல்பிட்டியால் வரும்போது காட்டெருமைகளை வெள்ளைக்கிடா ஒன்று வெட்டியழிக்க வதனமாரும் வீரர்களும் வெள்ளைக் கிடாவைக் கட்டவர அனைவரையும் வெள்ளைக்கிடா வெட்டிக்கொன்றதும், காக்காவதனன் கைலாயம் சென்று சுவாதியம்மையிடம் கூற சுவாதியம்மை பூலோகம் வந்து அனைவரையும் உயிர்ப்பித்து எச்சில்பட்ட நீங்கள் இனி என்னுடன் வரவேண்டாம் இங்கிருந்து பூசை, பொங்கல் ஏற்று பட்டிக்குப்பட்டி பாலமிர்தம் உண்டு மகிழ்ச்சியாய் இருங்கள் என்று கைலாயம் சென்றார் எனக் கூறுகின்றது.

இதன் காரணமாக வெல்லாவெளி மாரியம்மன் கோயில் சடங்கின் வதனமாருக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதனைக் காணலாம்.

வெல்லாவெளி மாரியம்மன் கோயில் ஆனி மாதம் ஆரம்பமாகி 9 நாள் நடைபெற்று தீர்த்தோற்சவத்துடன் முடிவுறும். சடங்கில் ஏழாம் நாள் சடங்கே வதனமாருக்கு உரியதாக விளங்குகின்றது.

காலையில் அம்மன் மடைப் பெட்டி, பாற்குடம், பாலவதனனின் ஆயுத பெட்டி என்பவற்றை எடுத்துக் கொண்டு வெள்ளையடித்து ஊர்வலமாக கோயிலுக்கு மேற்கே சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கப்பால் உள்ள கல்லடி பிள்ளையார் அடி என்னும் இடத்திற்கு வெல்லாவெளி ஊரைச் சுற்றி பின் பிரதான வீதி வழியாக கல்லடிப் பிள்ளையாரடியை நோக்கிச் செல்வர். முன்னால் வைரவர், காத்தான், காளி, வீரபத்திரர், பேச்சி போன்ற தெய்வங்கள் ஆடியபடியும். உடுக்கு, பறை என்பன இசைத்த படியும் வதனமார் ஊர் சுற்றுக் காவியம், காத்தான் கும்மி, காத்தான் பாடல் என்பன பாடப்பட்டு கோலாகலத்துடனும் ஊர்வலம் செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லடியைச் சென்றடைந்ததும் ஒரு மலைமேல் இருக்கும் புற்றின் மேல் ஏறி அதற்குப் பூசைகள் செய்து பள்ளையம் கொடுக்கப்படும்.

பின் சுவாதியம்மன் இருக்கின்ற மலைக்கு வந்து மேல் ஏறி தேங்காய் உடைத்து வழிபட்டபின் கீழ் வைக்கப்பட்டு இருக்கும் மடைக்குப் பூசை செய்வர். பின் இங்கிருந்து அருகில் உள்ள கல்லடிப் பிள்ளையாரடி என்னும் மலைக்குச் செல்வர். செல்லும் வழியில் தீப்பாய்வதற்கு என தீக்கட்டையெடுக்கச் சென்ற வண்டிகள் திரும்பி அம்மன் வருகைக்காக தீக்கட்டையை காட்டி எடுக்கும் படி ஆலயத்தலைவரிடம் கூறி எடுத்து கொண்டு பிள்ளையாரடி செல்வார்கள். அங்கு தீக்கட்டையை வைத்து விட்டு பாலவதனன், அம்மன், பூசாரியார் என்பவர்களுடன் சில முக்கியமானவர்களும் மலை மேல் ஏறி மடை வைத்து பூசை ஆரம்பமானதும், பாலவதனன் ஆடத்தொடங்குவார். அவருக்கு அம்மன் தண்டையும் இரு பொல்லுகளையும் கொடுத்து மாடு மேய்த்து வரச் சொல்லி அனுப்புவார். அவர் அவற்றை வாங்கிக் கொண்டு மாடுகளைச் சாய்ப்பது போல் சாய்த்துக் கொண்டு மலையை வலம் வருவார். வரும் போது கூ; ஆ என மாட்டைக் கலைத்து வந்து மலையின் கீழ் இருக்கும் பக்தர்களுக்கு தெரியும் வண்ணம் இருந்து மாட்டை மேய விட்டுவிட்டு நித்திரை செய்வார். அப்போது அவரை வெள்ளைக் கிடா வெட்ட அவர் இறந்தது போல் கிடப்பார். அப்போது அம்மன் வந்து அவரை எழுப்பி மடை இருக்கும் இடத்திற்குக் கூட்டிச் சென்று தேன் வெட்டி வரும் படி கோடாலியைக் கொடுத்து அனுப்புவார். அவர் மேல் உள்ள மலைகளை அண்ணார்ந்து பார்த்து தேன் எங்கிருக்கிறது எனத்தேடித் திரிந்து தேன் இருப்பதாக தான் உணர்ந்த மரத்தை தேர்வு செய்து அதற்குப் பூ வைத்துக் கும்பிட்டு விட்டு கோடாலியால் அம்மரத்தை வெட்டுவது போல் ஆடுவார். அப்போது தேன் பூச்சி குத்துவது போல் ஆடி, ஊதி, ஊதித் தேன் பூச்சிகளைக் கலைத்து தேன் எடுப்பார். பின்பு அம்மன் வந்து அழைத்துச் சென்று வேட்டையாடி வரும் படி வில் அம்புகளை எடுத்துக் கொடுக்கும். அவர் அவற்றை எடுத்துக் கொண்டு வேட்டையாடுவது போல் ஆடுவார். அதன் பின் அம்மன் கயிற்றைக் கொடுத்து குழுமாடு பிடிக்க அனுப்பும். அவர் கயிற்றுடன் மலையை வளைத்து பதுங்கிப் பதுங்கிவர அம்மனும் அவருடன் கூடவே பதுங்கி வந்து ஒரு வாழைப்பழத்தையும் கமுகம் பூவையும் சேர்த்து மாட்டைக் கட்டுவது போல் கட்டி சந்தோசத்தில் சத்தமிட்டுக் கட்டியதைத் தூக்கி பக்தர்களிடம் காட்டுவார். பக்தர்கள் மிகப் பக்திப்பரவசத்தில் பாலவதனனை வழிபட அம்மனும் பூசாரியுமாக சேர்ந்து பாலவதனனை பாலால் முழுகவார்ப்பார். பின்பு மலைமேல் வைத்த மடையில் இருந்து வாழைப்பழம், பொங்கல் என்பவற்றை இரு பெட்டியில் வைத்து பாலவதனனுக்கு பள்ளயமாகக் கொடுப்பார். பாலவதனன் அவற்றை ஏற்றுக் கொண்டதும் அவருடைய கடமைகள் முடிவுற்று மலையேறி விடுவார்.

இந்த வழிபாட்டின் மூலம் இப்பிரதேச கால் நடைகள் நோய்களினின்றியிருக்கவும், கால்நடைகள் பெருகவும், பாலவதனன் தமக்கு உதவுவதாக மக்கள் நம்புகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்தில் குமார தெய்வ வழிபாடு – புராதன இந்து வழிபாட்டு முறைகளுள் ஒன்று

– கு. ரவிச்சந்திரன் B. A. (Hons.) –

மட்டக்களப்பில் வழங்கும் வழிபாடுகளுள் குமார தெய்வ வழிபாடும் ஒன்று. குமார தெய்வ வழிபாட்டில் மந்திர பத்ததியில் அமைந்த கட்டுதல், வெட்டுதல் என்கிற விடயங்கள் இல்லை. தெய்வத்தை மன்றாட்டு மூலம் தமது உடலில் வரவழைத்து சிலர் தெய்வமாக மாறி தெய்வ வாக்கினை மக்களுக்குச் சொல்லுதல் இந்த வழிபாட்டின் அடிநாதமாக உள்ளது.

ஆகம / பத்ததி வழிபாடுகளுக்குள் அடங்காத தனித்துவமான வழிபாடாக இது உள்ளது.

இவ்வழிபாட்டினரின் பிரதான தெய்வம் "குமார" என்பதாகும். இரண்டாயிரம் பரிகலத் தெய்வங்கள் தம்மிடம் இருப்பதாக இத்தெய்வத்தை வழிபடும் சமூகத்தினர் நம்புகின்றனர். பத்தினியம்மா, தெங்கிரியம்மா, ஒட்டிப்பட்டு, ஓராப்பட்டு, நலப்பட்டு, இந்திமர் நாச்சி, தெவுத்தன் தெய்வம், மாறாத் தெய்வம், உத்தியாக்கள், செம்பகநாச்சி, கரடித் தெய்வம் என்பன இவற்றுள் சில. இந்த அடிப்படையில் இச்சமூகத்தினர் வேட கலைத் தெய்வங்களையே வணங்குகின்றனர்.

மட்டக்களப்பில் முகத்துவாரம், குடியிருப்பு (வேடர் குடியிருப்பு) தளவாய், கழுவன்கேணி, சித்தாண்டி, கிரான், சந்திவெளி, வாழைச்சேனை (கல்குடாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி) நாசிவன் தீவு. இறால் ஓடை, வாகரை. பொண்டுகள் சேனை. கோங்கனை, பால்சேனை, திராய்மடு, வாகனேரி, முறுத்தானை, பனிச்சங்கேணி, கட்டுமுறிவு, பழுகாமம் எனும் இடங்களில் குமாரதெய்வ வணக்கம் கணப்படுகின்றது.

நகர்ப்புறங்களுக்கு அண்மையில் உள்ள கிராமங்களில் குமார ஆலயம் கல்லால் குடிசை வடிவிற் கட்டப்பட்டுள்ளது. காடுகளை அண்டிய கிராமங்களில மரங்களே குமார ஆலயமாக உள்ளன. சடங்கு நடைபெறும் தினத்தில் காட்டு மரங்கள் தறிக்கப்பட்டு பந்தல் போடப்பட்டு இலை குழைகளாலும் பந்தல் மேயப்பட்டு அப்பந்தல்களிலேயே சடங்கு நடைபெற்று, சடங்கு முடிந்ததும் பந்தல் பிரிக்கப்பட்டும் விடுகிறது. குமார தெய்வத்துக்கு 5 நாள் சடங்குகள் நடைபெறும். அவை பின்வருமாறு அமையும் :

முதலாம் நாட் சடங்கு - ஆலய அமைப்போடு தொடர்புடைய சடங்கு

இரண்டாம் நாட் சடங்கு - உத்தியாக்களுக்கு (இறந்த மூதாதையருக்கு) உரிய சடங்கு.

மூன்றாம்நாட் சடங்கு - சாதாரண சடங்கு

நான்காம் நாட் சடங்கு - கூடாத நோய்களை ஏற்படுத்தும் துட்டத் தெய்வங்களுக்குரிய சடங்கு.

ஐந்தாம் நாட் சடங்கு - தேன் கொடுத்தல், ஆனை கட்டுதல் போன்ற நிகழ்வுகள் நடைபெறும் சடங்கு.

இச்சடங்குகளின் போது தெய்வங்கள் கப்புகனார் என்பவர்களில் வெளிப்படும். அவர்கள் அத்தெய்வங்களாக மாறி ஆடுவார்கள். இவ்வண்ணம் வெளிப்படும் தெய்வங்கள் ஆண்தெய்வங்களாயின் தெய்வ உருக்கொள்ளும். கப்புகன்மார், பனை ஓலை, குருத்தோலை என்பனவற்றை கழுத்திலும் இடுப்பிலும் கட்டியபடி காலிற் சலங்கை கட்டி கையில் ஆயுதம் ஏந்தி ஆடுவர். பெண் தெய்வங்களாயின் சேலையணிந்து பெண் பாவனையில் ஆடுவார்.

சடங்கின் ஆரம்பத்திலிருந்து இறுதிநாள் சடங்கு வரை இது நடைமுறையில் இருக்கும். சடங்கின் போது ஒவ்வொரு தெய்வத்திற்கும் பாட்டு வித்தியாசமான பாசையிலும் மொழியிலும் பாடப்படும். அப்பாட்டுடன் கொட்டு எனப்படும் தாளமும் பறையில் இசைக்கப்படும். ஒவ்வொரு தெய்வத்தின் வருகைக்கும் எத்தனை கொட்டு என்பது வாசிப்போருக்குத் தெரியும். இக்கொட்டு வாசிப்போர் இவ்வாசிப்பு முறையினை அடுத்த சந்ததிக்குக் கையளிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் நாட் சடங்கு

இது ஆலயத்தை அமைக்கும் சடங்காகும். முதலில் சடங்கிற்கான இடம் தெரியப்பட்டு அந்த இடம் (வளவு) புல்லு, பூண்டு என்பன அகற்றி துப்புரவு செய்யப்படுகின்றது. மறுநாள் காலை கப்புகனார் (பூசகர்) வீட்டில் இருந்து தெய்வங்களின் சிலைகள், தெய்வங்கள் பாவிக்கும் ஆயுதங்கள் (வில், கம்பு, வாள், ஈட்டி, சலங்கை) போன்ற உள்மடைக்குரிய சாமான்கள் உள்ள பெட்டி என்பன கோயில் அமைந்துள்ள இடத்துக்குக் கொண்டு வரப்பட்டுக் கோயிலின் முன் வைக்கப்படுகின்றன. அவ்விடத்தில் பனையோலைப் பாய் விரிக்கப்பட்டு அதன்மேல் கட்டாடி (சலவைத் தொழிலாளி) வெள்ளைத் துணி விரிக்க அதன் மேல் விளக்கு ஒன்று வைக்கப்பட்டு அந்த விளக்கு தலைமைக் கப்புகனால் கொளுத்தப்படும். பின்னர் அவ்விடத்தில் கன்னிமாருக்கு மூன்று மடை வைக்கப்படும், கன்னிமாருக்குரிய வேலைகள் முடிந்ததும் பெட்டி தலைமைக் கப்புகனாரால் தூக்கப்பட்டு கோயில் அமைந்துள்ள வளவைச் சுற்றி வந்து அவ்விடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பந்தலுள் பெட்டி வைக்கப்படும். இப்பெட்டிக்கு அருகில் ஐந்து மடைகள் வைக்கப்பட்டு, அவ்விடத்தில் மீண்டும் ஒரு விளக்கும் அருகே ஒரு மடையும் வைக்கப்படும். குமாரருக்கும் அவ்விடத்தில் ஒரு மடை வைக்கப்பட்டதும் கொட்டு எனப்படும் பறை இசைக்கப்பட அம்மடை வைத்த பிரதான கப்புகனில் குமாரர் என்கிற தலைத்தெய்வம் முற்பட்டு ஆடத் தொடங்கும். இவர் ஆடத் தொடங்கியதும் ஏனைய கப்புகன்மார் பாடத்தொடங்குவர். பின்வருவது அவர்கள் பாடும் பாடல்களுள் ஒன்று :

ஈந்தா கேடோ... ஏ... கமோ கமணாய்
முந்தே கணமாய் ஏ... ஏகாம்ப வணங்கிலாதோ
அம்மையே கணபூஜை தெய்யோ டொதுங்கா
ஏ... ஏ... மலகவத்தில் பின்னாவோ நவுனங்
ஏ .... வா வாப்பு காணங் ....

குமார தெய்வம் எந்தெந்த இடத்தில் எந்தெந்தப் பந்தல்கள் போட வேண்டும் என்றும், எந்தெந்த இடங்களில் எந்தெந்த தெய்வங்களை வைக்க வேண்டும் என்றும், ஏனைய கப்புகன்மாருக்குச் சொல்லும். சில வேலைகளை இதனைப் பார்த்துக் கொண்டிருக்கும் பக்தர்களை அழைத்து ஒப்படைக்கும். இவற்றை கப்புகன்மாரும், பக்தர்களும் பக்தி சிரத்தையுடன் செய்து முடிப்பர். பின் குமாரர் மீண்டும் ஆடி வந்து கட்டாடியிடம் ஒரு சேலைத் துண்டை வாங்கி அதனை ஒரு பந்தலின் மேல் எறியும். அதன் பின்பே கட்டாடி கோயிலுக்கு வெள்ளை கட்டத் தொடங்குவார். பின் இத் தெய்வம் சென்று விடும்.

பந்தல் வேலைகள், மடைக்குரிய காய், கனி, பூ என்பன ஒழுங்குபடுத்தப்பட்டு வெட்ட வேண்டியவற்றை வெட்டிக், கழுவ வேண்டியவற்றைக் கழுவி முடிந்த பின்னர், குமார தெய்வம் கூறியதற்கிணங்க மடைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்படும். (நான் பார்த்த போது குமார சிலையும், ஒரு அம்மன் சிலையும் ஒரு வைரவர் சூலமுமே மடையில் வைக்கப்பட்டிருந்தன. ஏனைய தெய்வங்களுக்குச் சிலைகள் இல்லை. பதிலாக மடைகள் மாத்திரமே வைக்கப்பட்டிருந்தன. மடைக்குரிய தெய்வத்தை அவர்கள் பெயர் சொல்லி அழைத்தனர்.

ஆரம்பத்தில் முதன்முதலாக முற்படும் குமார தெய்வம் சடங்கு வைபவம் நன்றாக நடக்கும் என்றும், எல்லாத் தெய்வங்களும் வந்து முற்படும் என்றும், பூசைகளை இன்ன இன்னமாதிரிச் செய்யுங்கள் என்றும் கூறிச் செல்லும். மடைக்குரிய வேலைகள் முடிந்ததும் *ஆலாத்தி* என்றொரு தெய்வம் கையில் திரிப்பந்தம் கொண்டு எல்லாப் பந்தல்களுக்கும் தீபம் காட்டுவது போல காட்டிச் செல்லும்.

ஆலாத்தித் தெய்வம் இவ்வண்ணம் அக்கினியால் ஆலாத்தி எடுத்து முடிந்ததும் அடுத்ததாக இன்ன தெய்வம் வரும் என்று கப்புகனாரிடம் கூறிவிட்டு குமாரபந்தலுக்குச் செல்லும். அதன்பின் வேறு பல தெய்வங்களும் கப்புகனாரில் முற்படும். இத்தகைய நிகழ்வு நள்ளிரவு ஒன்றரை மணி தொடக்கம் இரண்டு மணி வரை தொடர்ந்து நடைபெறும். அன்றைய தினம் வரவேண்டிய தெய்வங்கள் அனைத்தும் வந்ததும் அன்றைய நாட் சடங்கினை முடிப்பர்.

## இரண்டாம் நாட்சடங்கு

இரண்டாம் நாட் சடங்கு உத்தியாக்களுக்குரிய சடங்காகும். இச்சடங்கின்போது முதலாம் நாள் வைக்கப்பட்ட மடைகள் அனைத்தும் கலைக்கப்பட்டு புதியமடைகள் வைக்கப்படும். பின்னர் தெய்வங்களுக்கு அபிசேகம் செய்வர். ஆலாத்தித் தெய்வம் அன்று வராது. உத்தியாக்களே முதலாவதாக வருவர். உத்தியாக்கள் என்போர் சடங்குக்கு வந்த அக்குறிப்பிட்ட சமூகமக்களின் இறந்த தாய், தந்தை, சொந்தக்காரன், பாட்டனார், பாட்டிமார் போன்றவர்களாவர் (பிதிர் வழிபாட்டை ஒத்த வழிபாடு இது).

உத்தியாக்களுக்குரிய தாளம் கொட்டில் இசைக்கப்பட தலைமைக் கப்புகனார் மீது உத்தியாக்கள் முதலில் முற்படுவர். ஏனைய கப்புகன்மார் உத்தியாக்களுக்குரிய பாடல்களைப் பாடுவர். பின் உத்தியாக்கள் வந்து முற்படும் கப்புகன்மார் வில் அம்பு தாங்கி ஆடுவர். கப்புகன்மாரில் முற்பட்ட உத்தியாக்கள் தாம் யாரென்று அடுத்த கப்புகனாரிடம் கூற அவர் உத்தியாக்களுக்குரிய உறவினர்கட்கு அவ் வுத்தியாக்களின் (முன்னோரின்) பெயர்களைக் கூறுவார். அவ் உறவினர்கள் இறந்த தம் மூதாதையரை அக்கப்புகனானிற் காண்பர். இவ்வேளை அச்சமூக மக்கள் தமது இறந்த மூதாதையர் உண்ட உணவு, குடித்த பானம் முதலியவற்றை ஒரு பெட்டியில் வைத்து வெள்ளைச் சேலையால் மூடி வைத்திருப்பர். உத்தியாவாக வரும் நபர் பந்தலின் முன் போடப்பட்டிருக்கும் உரலில் அமர்ந்து விடுவார். அவர் சட்டியிலிருக்கும் தண்ணீரை எடுத்துக் குறிப்பிட்டவர்களின் முகத்தில் எறிந்து அவரது உறவினர்களைக் கூப்பிட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில் இருத்தி நலம் விசாரித்து, அவர்களுடன் கதைத்து அவர்கள் பெட்டியில் வைத்திருக்கும் பொருட்களைத் தமது மூக்கினால் முகர்ந்து பின் அந்தப் பெட்டியில் இருக்கும் பொருட்களை எடுத்து உண்டும், குடித்தும், மற்றைய தன் உறவினர்கட்குக் கொடுத்தும் தன் வாரிசுகளைக் கட்டி அணைத்து மகிழ்ந்தும், முகர்ந்தும் விட்டுச் செல்வார்.

இந்த வழிபாட்டு முறை மட்டக்களப்பில் ஏனைய சடங்கு முறைகளின் காணப்படாத வேட வெள்ளாள சமூகத்திடம் மாத்திரமே காணப்படும் ஒரு சடங்கு முறையாகும். சடங்கில் உத்தியாக்கள் பிரசன்னமாகி ஆடினாற்தான் ஏனைய தெய்வங்கள் ஒழுங்காக வரும் என்பது இவர்களது நம்பிக்கை. இந்தச் சடங்கில் குமார தெய்வத்தை வழி நடத்திய இச்சமூகத்தவரது மூதாதையர் அனைவரும் பிரசன்னமாவர்.

உத்தியாக்கள் வந்த பிறகு கப்புகனார் மீது குமாரகலை, அம்மன் கலை, தெவுத்தன் கலை, மாறாக்கள், நாச்சிமார் போன்ற பல தெய்வங்கள் வெளிப்படும். ஒவ்வொரு தெய்வமும் வாக்குச் சொல்லுதல், நூல் போடுதல் ஆகிய பணிகளைச் செய்யும். பின்னர் குமாரர் மீண்டும் வந்து ஆலயத்தை ஒப்பெடுத்ததும் இரண்டாம் நாட் சடங்கு முடிவடையும்.

## மூன்றாம் நாட் சடங்கு

மூன்றாம் நாட் சடங்கைச் சாதாரண சடங்கு என்று குறிப்பிடுகின்றனர். இச் சடங்கின் போது இவர்களது மூதாதையர்கள் ஆதரித்த தெய்வங்கள் எனக் கருதப்படும் வேட கலைத் தெய்வங்கள். அனைத்தும் கப்புகனாரில் வெளிப்படும். இத்தெய்வங்கள் பல வடிவங்களில் வருவதாகக் கூறுகின்றனர்.

*குமாரத்தெய்வம்* கொழும்புக் குமாரர், கண்டிக் குமாரர், அழகுக் குமாரர், காலிக் குமாரர் எனவும் *மாறாத் தெய்வம்* தோரணமாறா, கித்துள்மாறா, கித்துள்பெனி மாறா என்றும் *தெவுத்தன் தெய்வம்*, கல்லட தெவுத்தன், கடவத்த தெவுத்தன், பானகாவுற தெவுத்தன், குருநாகல தெவுத்தன், மாத்தளை தெவுத்தன், பொல்லுக்காரன் எனவும் உருமாறி இச்சடங்கில் முற்படும்.

இச்சடங்கில் தெய்வங்கள் அனைத்தும் முற்பட்டு அனைத்துப் பக்தர்களுக்குமுள்ள குறைநிறைகளை அவர்களிடம் சொல்லுவதை இந்த நாள் சடங்கின் போது அவதானிக்கலாம். இந்தநாட் சடங்கிலே பக்தர்கள் வாக்குக் கேட்பதற்காக பல இடங்களில் இருந்தும் வருவார்கள். இந்த நாளில் பல சாதியைச் சேர்ந்தவர்களும், பல இனத்தைச் சேர்ந்தவர்களும் வந்து கட்டுக் கேட்பதையும் நூல் போடுவதையும் அவதானிக்கலாம்.

கட்டுச் சொல்லுதல் ஒரு முக்கிய அம்சமாகும். கட்டு என்பது தெய்வ வாக்காகும். தெய்வம் ஆடுபவர் பக்தர்களாக நின்று பார்ப்போரில் ஒருவரைத் தண்ணீர்ச் சட்டியிலிருக்கும் தண்ணீரை எறிந்து கூப்பிட்டு தெய்வத்திற்கு அருகாமையில் நிறுத்தி அவர்களுக்கு அவர்களது பிரச்சனைகளைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுவார். இவை சுவாமிக்கும் பக்தருக்கும் நடக்கும் நேரடி உரையாடலாக இருக்கும். இவ்வழிபாட்டால் பக்தனும் சுவாமியும் நேருக்கு நேர் உரையாடுகிறார்கள். பக்தர்கட்கு சொல் விளங்காத விடத்து ஏனைய கப்புகன்மார் விளக்குவர்.

பக்தனுக்குப் பிரச்சனைகள் இருப்பின் தண்ணீர்ச் சட்டிக்குள் இருக்கும் வெற்றிலைகளுள் மூன்றை எடுத்து அவற்றை உற்றுப் பார்த்தபின் பக்தனின் தலையைச் சுற்றி மேலே எறியும். வெற்றிலைகள் பாடத்தில் (கவிழ்ந்து) விழுந்தால் பிரச்சனைகள் சுலபமாகத் தீராது என்றும், வெற்றிலைகள் நேராக விழுந்தால் இலகுவாகத் தீரும் என்றும் குறிகண்டு சொல்லும்.

## நான்காம் நாட் சடங்கு

இச் சடங்கு மூன்றாம் நாட் சடங்கு போலவே இடம்பெறும். வாக்குச் சொல்லுதலே இச் சடங்கிலும் முக்கியமானதாகும். ஆனால், நான்காம் நாளில் கப்புகனாரில் முற்படும் தெய்வங்கள் பயங்கரமான தெய்வங்களாகும். இவை நீலிக் கூட்டம் எனப்படும். மாந்தி, அயோத்தியா, குருவிலி, மனமுந்தா, ராஜிகராஜா, ராஜபணிக்கா, மாமந்தியா, எரிகணுமுந்த போன்ற சிறுபிள்ளைகளின் நோயோடு சம்பந்தப்பட்ட தெய்வங்கள் இவை. இத்தெய்வங்களைப் பறவைகள் என்பர். இவை பறவை வடிவில் வருகின்றன என்பது இம்மக்களின் ஐதீகம். இத்தெய்வங்களோடு மூன்றாம் நாட் சடங்கில் வந்த தெய்வங்களும் புதிதாக வரும் தெய்வங்களும் வந்து முற்படும். பயங்கர நோய் தரும் தெய்வங்களைக் குமார தெய்வம் கட்டுப்படுத்தும்.

## இறுதி நாட் சடங்கு

இறுதி நாட் சடங்கு சிறப்பான சடங்காகும். இச்சடங்கு மாறா தெய்வத்தோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. தோரணமாறா, தேன்பூச்சி மாறா, பணிக்க மாறா, வதனமாறா போன்ற தெய்வங்கள் தோன்றி வேடர்களின் பழைய தொழிலான தேன் எடுத்தல், ஆனை கட்டல், மாடு பிடித்தல் போன்ற தொழில் ரீதியான நிகழ்வுகளை நிகழ்த்தும் சடங்கு இது.

இறுதிச் சடங்கிற்கு முதல் நாளிரவு விநாயகப்பானை எழுந்தருளப் பண்ணுவர். அன்றிரவு பலகாரம் வடிக்கும் தெய்வம் வந்து முற்படும். அதற்குப் பலகாரம் வடிப்பர். மாவை பலகாரத்திற்கெனப் பிரட்டி ஆயத்தம் செய்து வைத்து, அடுப்பில் எண்ணெய் கொதிக்க வைத்து ஆயத்தமாயிருக்க பலகாரம் வடிக்கும் தெய்வம் கப்புகனாரில் வந்து முற்பட்டு பிசைந்த மாவை கொதிக்கும் எண்ணெயில் இட்டு பின்னர் கொதிக்கும் எண்ணெய்க்குள் இருந்து மூன்று முறை பலகாரங்களை எடுத்து மடையில் வைக்கும். தெய்வம் பலகாரத்தை எடுத்ததற்குப் பிறகு ஏனையோர் பலகாரத்தை வடிக்கத் தொடங்குவர். அதன் பின் இரவு மூன்றரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியளவில் விநாயகப் பானை இரண்டாவது கப்புகனாரினாலும் இன்னொரு பானை மூன்றாவது கப்புகனாரினாலும் காவப்பட்டு, பெண்கள் குலவையிட ஆலய வலம் வரப்படும். குமார தெய்வம் பானைக்குக் காவலாக இரு கம்புகளை குறுகலாக X வடிவில் தாங்கி வரும். சுற்றி வந்ததும் கோயில் வாசலில் வைத்து பொங்கல் செய்யப்படும். பானையையும் பொங்கலையும் ஒப்படைக்கக் குமாரர் மீண்டும் வருவார். பால் பொங்கிப் பானை மூடப்பட்டதும் அன்றிரவு நிகழ்வு முடிவடையும்.

அடுத்த நாள் காலை பத்து மணி தொடக்கம் இறுதிச் சடங்கு நடைபெறும். காலை வேளையில் மாறா தெய்வம் கப்புகனில் முற்படும். முதலில் தோறண மாறா என்ற தெய்வம் முற்படும். அங்கு போடப்பட்டிருக்கும் அலங்காரமான தோரணத்தை அசைத்துப் பார்த்து அது பிழை கூறும். பின் தேன்பூச்சி மாறா தோன்றி தோரணத்தின் மேல் ஏறி தேன்பூச்சி எடுப்பதாக அபிநயித்துக் காட்டும். இந்நிகழ்வுக்கு என தோரணம் ஒன்று போடப்படும். 20 அடி உயரம் கொண்ட ஒரு பெரிய மரம் நாட்டப்பட்டு அதில் குறுக்காக கொடிகட்டப்பட்ட கம்புகளை வைத்துக் கட்டி, குருத்தோலை, குழைகளால் அது அலங்கரிக்கப்படும். உச்சியில் மூன்று கும்பா குடங்களும் வைக்கப்பட்டிருக்கும். தோரணத்தின் அடியில் மடை வைக்கப்பட்டிருக்கும்.

## தேன் எடுக்கும் நிகழ்வு

இந்நிகழ்வில் பிரதான கப்புகனார் மீது மாறாத் தெய்வம் வெளிப்பட்டுப் பக்தர்களாகிய பார்வையாளர்களிடம் அதிக பக்தி கொண்டோர் என நினைக்கும் ஒரு பக்தனிடம் தேன் பூச்சி இருக்கிறதா? என்று கேட்டு அவர் இல்லை என்றால், இந்த வழியிற் சென்றால் பூச்சி கிடைக்கும் என மாறாத் தெய்வம் கோடாரியையும் பெட்டியையும் கொடுத்து அனுப்பி வைக்கும். அவர் திரும்பி வந்து கோடாரியையும், பெட்டியையும் மடையில் வைத்த பின்னரே மாறாத் தெய்வம் கப்புகனில் முற்பட்டு தோரணத்தில் ஏறும். ஏறிப் பார்த்துவிட்டு இறங்கும். பின்னர் மீண்டும் பூச்சிப் பெட்டியுடனும், கோடரியுடனும் மற்றொரு பக்கமாகத் தோரணத்தில் ஏறி உச்சிக்கு மாறாவும், இன்னொரு கப்புகனும் செல்வர். உச்சியில் வைக்கப்பட்டிருந்த கும்பா குடங்களைக் கோடரியாற் கொத்திக் கீழே வீழ்த்தும். பின்னர் கீழே இறங்கி வரும். வரும்போது கீழே நின்ற இன்னொரு மாறாத் தெய்வம் (இதனை படுகிடை மாறாத் தெய்வம் என்பர்) தென்னம்பாளையின் பூவால் இறங்கி வந்த மாறாவுக்கு எறியும். இறங்கி வந்த மாறா தேன்பூச்சி குத்தியது போலத் துடிக்கும். பின் தரையில் விழுந்து படுக்கும். அதனைக் குமார பந்தலுக்கு முன் வளர்த்தாட்டி விடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனைகட்டும் நிகழ்வு

இறுதி நாள் சடங்குகளில் இதுவும் ஒன்று. மூன்றாவது கப்புகனார் மீதுதான் இத்தெய்வம் பிரசன்னமாகும். இது ஆனைகட்டும் தொழில் செய்யும் தெய்வமாகும். இங்கு ஒரு பக்தர் ஆனையாக அபிநயிப்பார். இன்னொருத்தர் அதனைத் தேடித் திரிபவராக வருவார். பணிக்க மாறாவுக்கு ஆடுபவர் அவ் யானையை எய்வது போல அபிநயிப்பர். பணிக்கருக்கு ஆடுபவர் யானையைக் கட்ட எத்தனிப்பர். அப்போது அலியன் யானையானது குட்டி யானையைக் கட்டவிடாது. ஆனையைக் கட்ட வந்த பணிக்கர் அங்கும் இங்கும் பார்த்து அலியன் யானையைக் கண்டு பயந்தவர் போல அபிநயித்து மறைவர். பின்னர் இன்னொரு பணிக்கருக்கு ஆடுபவர் வில்லம்புடன் வந்து அலியன் யானையை எய்து கொல்வர். பின்னர் முதன்முதலாக ஆனை தேடி வந்த பணிக்க மாறாவாக வந்தவர் யானையின் குட்டியைக் கட்டி இழுத்து யானைக்குப் புல், தண்ணீர் எல்லாம் கொடுத்து இவ் யானை குமாரருக்கு என்று சொல்லி ஆடிச் செல்லும். இதேபோல மாடுகட்டும் சடங்கும் நடைபெறும்.

## கரடித் தெய்வம்

ஆனை கட்டும் நிகழ்வுக்குப் பின்னர் இவ்வாலயத்தின் முற்றத்தில் கரடித் தெய்வத்திற்கு என அமைக்கப்பட்ட இடத்தில் இரண்டாவது கப்புகனில் கரடித் தெய்வம் வந்து முற்படும். இத்தெய்வம் பெண்ணின் உடை உடுத்து ஆடி வந்து கரடிக்குரிய இடமான கரடிக் குற்றி நாட்டப்பட்டு இருக்கும் இடத்தில் குற்றியின் மேல் ஏறி இருந்து கரடியின் அபிநயங்களைச் செய்யும். இதைப் பார்த்து நின்ற இன்னொரு கப்புகன் கரடியின் வயிறு காய்ந்திருக்கிறது என்று கூற பக்தர்கள் கரடித் தெய்வத்திற்கு வாழைப்பழம், இளநீர் என்பன கொடுப்பர். அத்தெய்வம் அவற்றை வாங்கி உண்ணும். பின்னர் அது கரடி போல நடந்து, ஆடிக் குமார பந்தலுக்குச் செல்லும்.

## சடங்கு நிறைவு (கன்னிமார் சடங்கு)

மேற்கூறிய நிகழ்வுகள் நிறைவு பெற்றதும் கன்னிமாருக்குச் சடங்கு நடைபெறும். கன்னிமாராக 7 சிறு பெண்களைக் கன்னிமாருக்குரிய பந்தலுக்குள் அமரச் செய்வர். பின்னர் அம்மன் கலைத் தெய்வங்கள் பிரதான கப்புகனில் முற்பட்டுக் கன்னிமாருக்குரிய பிரதான பூசையைச் செய்யும். இதில் கன்னிமார் ஒவ்வொருவர் முன்னாலும் விளக்கு வைத்து, பஞ்சாமிர்தம் கொடுத்து மடை வைக்கப்படும். அக்கன்னிமார் முன் பொங்கல் பரிமாறப்படும். அக்கன்னிமாரிடம் பக்தர் மடிப்பிச்சை எடுப்பார்கள். பின்னர் கன்னிமாரை இத்தெய்வம் தீர்த்தச் சட்டி இருக்கும் இடத்திற்குக் கொண்டு சென்று விட்டுவிட்டு அம்மன் கலைத் தெய்வம் குமார பந்தலுக்குச் செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் இறுதியாகக் குமார தெய்வம் முற்பட்டு ஆடி வந்து தண்ணீர்ச் சட்டிக்கு அருகிலே நின்று தண்ணீரை எடுத்து எல்லோருக்கும் படக்கூடிய விதத்தில் எறியும்.

இது சடங்கின் இறுதி நிகழ்வாகக் கருதப்படும். எல்லாப் பக்தர்களும் இவ்வேளை தீர்த்தச் சட்டிக்கு அருகில் வருவார்கள். ஒரு துளித் தண்ணீராவது தம் உடம்பில் பட வேண்டும் என்பதற்காக. பின்னர் சட்டியிலுள்ள தண்ணீரை ஏனைய கப்புகன்மாரும் வந்து நின்று வீசுவர்.

சடங்கு முடிந்து மூன்று நாட்களுக்குப் பின்னர் பூச்சடங்கு ஒன்று செய்து பழையபடி தலைக் கப்புகனார் வீட்டில் இருந்து எடுத்து வந்த கோயில் சாமான்களை மீண்டும் எடுத்துச் செல்வர்.

இது ஒரு புராதன வழிபாட்டு முறை போல தெரிகிறது. மட்டக்களப்பின் புராதன இந்து வழிபாடு என இதனைக் கூறலாம். மந்திரம், பத்ததி அற்ற மன்றாட்டு வணக்க முறையே இதன் வழிபாட்டு முறையாகும். அத்தோடு பழமையான தொழிலான தேன் எடுத்தல், ஆனை பிடித்தல், மாடு பிடித்தல் என்பனவற்றை நினைவுறுத்துவதாகவும் இவ் வழிபாட்டு முறை அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்தில் வைரவர் வழிபாட்டுமுறை

**– பூ.ம. செல்லத்துரை –**

*1505ஆம் ஆண்டின் பின் ஏற்பட்ட அந்நிய மதத்தவரின் வருகையின் பின் சின்னாபின்னமாக்கப்பட்ட சிவாலயங்கள், சீர்குலைந்துபோன சிவவழிபாடுகள் சிதைவுற்ற வேளையில் அந்நிய மதத்தவரின் அடக்குமுறைக்குப் பயந்து உருவமற்ற திரிசூல வழிபாடாக வீடுகள் தோறும் பயபக்தியோடு வணங்கப்பட்ட வழிபாடே வைரவ வழிபாடாகும். வடகிழக்கு தொடக்கம் சிங்கள மக்கள் மத்தியிலும் இவ்வைரவ வழிபாடு சிறப்புற்று இருக்கின்றது. வடபகுதியில் சிறுதெய்வ வழிபாடு என்று ஒதுக்கப்பட்டிருந்த வைரவ வழிபாடு நாளடைவில் ஆகமம் சார்ந்த ஞானவைரவ வழிபாடாக உயர்த்தப்பட்டது. இதில் கிழக்குப் பகுதியாகிய மட்டக்களப்பு தமிழகத்தில் மந்திர வழிபாட்டோடு கலந்து தனிப்பெரும் வழிபாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.*

*1911ஆம் ஆண்டு காலப் பகுதியில் காளிகாமடு எனும் பகுதியிலிருந்து மண்ணுக்குள் கண்டெடுக்கப்பட்ட நாலடி உயரமான தனிக் கருங்கல்லில் செதுக்கப்பட்ட மிகத் தொன்மையான வைரவர் சிலையொன்று 82 ஆண்டுகளாக ஏறாவூர் பத்திரகாளியம்மன் ஆலயத்தில் வழிபாடு செய்யப்பட்டு 1989ஆம் ஆண்டில் புதிய வைரவர் ஆலயம் கட்டுவதற்காக வெளியே எடுத்து வைக்கப்பட்ட வேளையில் 1990ஆம் ஆண்டு வன்செயலால் அவ்வாலயத்துள்ளிருந்த அம்மன் விக்கிரகம் உடைக்கப்பட்டிருந்தது. உடைந்த விக்கிரகங்களை கோயிலில் வைக்கக் கூடாது என்பதனால் ஒரு சிற்பாசாரியின் வார்த்தையைக் கேட்டு மட்டக்களப்பின் சைவசமயத்தின் தொன்மைக்கு சான்றாக விளங்கிய அவ்வைரவர் சிலையையும் உடைந்த விக்கிரகங்களுடன் சேர்த்து புன்னைக்குடா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலிலே கொண்டு போட்டார்கள். இதேபோல் இன்னோர் பழம்பெரும் வைரவர் சிலை மட்டக்களப்பு நகரிலுள்ள கோட்டமுனை புன்னயைம்பதி மகமாரியம்மன் ஆலயத்தில் பூசைவழிபாடுகளாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இதற்கடுத்து மட்டக்களப்பு மண்ணில் தனிப்பெரும் ஆலயமாகவும், அந்த சக்தி கொண்ட வைரவராகவும் விளங்குகின்ற புகையிரத நிலையத்திற்கு அருகாமையிலுள்ள வைரவர் கோயில் மிகப் பெரும் பழமை வாய்ந்தது. இவ்வாலயத்தில் முழுமையாக வைரவர் வழிபாடும் நரசிங்க வழிபாடுமாகக் கலந்து செய்யப்படுகின்றன.

மட்டக்களப்பு மந்திர வழிபாட்டில் ஆதிவைரவர், காலவைரவர், மாலைவைரவர், ஏவல் வைரவர், குத்து வைரவர், சுடலை வைரவர், பாதாள வைரவர் என்று மந்திர வழிபாடுகளால் வைரவர் போற்றப்படுகின்றார். வெட்ட மந்திரங்களில் காலவைரவன் வெட்டு, குடலைவைரவன் வெட்டு, பாதாள வைரவன் வெட்டு என்று வெட்டு மந்திரங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. அம்மன் ஆலயங்களில் காவல் தெய்வமாக கருதப்படுகின்ற வைரவர் வீடுகளில் குலதெய்வ வழிபாடாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றார். வைரவர் பத்ததி மட்டக்களப்பில் குறைவாகக் காணப்பட்டாலும் அம்மன் சடங்குப் பத்ததிகளில் வைரவருக்கான பூசை விதிகள் கூறப்பட்டுள்ளன. மட்டக்களப்பு வைரவர் கோயிலுள்ள ஒரு வைரவ பத்ததியும் ஏறாவூர் தளவாயில் இருந்தவரும் மட்டக்களப்பு வைரவர் கோயிலில் முன்னாள் பூசகராக இருந்தவருமான மாந்திரிக விற்பன்னர், லாடசங்கிலிப் பூசகர் அவரிடமிருந்த பத்ததியும் வைரவர் பலிமுறைப் பத்ததி எனும் பத்ததியும் மிகப் பழம் பெரும் பத்ததிகளாகும். இப்பத்ததிகளில் ஒன்பது வைரவருக்குரிய பூசை முறைகள் குறிக்கப்பட்டுள்ளன. எட்டு வைரவரோடு திரிசூல வைரவரையும் சேர்த்து பூசைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அம்மன் ஆலயங்களைச சுற்றி "ஏர்பெறு மெட்டு வைரவர் காவல்" என்ற விதிக்கமைய மூலஸ்தானத்தின் பின்புறமாக திரிசூல வைரவருக்கும் சேர்த்து ஒன்பது வைரவருக்கும் மேடைகளில் மடைபரவி வழிபாடு செய்யப்படும்.

மட்டக்களப்பிலுள்ள சைவப்பெருமக்களின் வீடுகளில் ஒவ்வொரு ஊருக்கும் ஏற்ற வகையில் வைரவ வழிபாடு செய்யப்பட்டிருக்கின்றது. இதில் எழுவான்கரையாகிய நகர்ப்புறங்களில் இக்குலதெய்வ வழிபாடு குறைந்து காணப்பட்டாலும் ஒரு சில வீடுகளில் இவ்வழிபாட்டை இடைவிடாது செய்து வருகின்றனர். படுவான்கரை பிரதேசத்தில் இவ்வழிபாடு மிகக் கவனமாக பேணப்பட்டு வருகின்றது. இவ்வழிபாடு இரண்டு வகையாக செய்யப்பட்டு வருகின்றது. ஒரு சில இடங்களில் பகலில் மாரியம்மனுக்கு சர்க்கரையமுது பள்ளயம் கொடுத்து இரவில் வைரவருக்கு பூசை செய்வார்கள். வேறு இடங்களில் இரவில் வைரவருக்கு மட்டுமான சடங்கு நடைபெறும். கிராமத்துக்கு கிராமம் இவ்வழிபாடு வேறுபட்டாலும் குலதெய்வ வழிபாடாக அனைவரும் ஒருமுகமாக ஏற்றுக்கொள்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரவ வழிபாட்டு விதிகள்

வீடுகளில் ஆதி வைரவரையே குலதெய்வமாக ஏற்றிருக்கின்றார்கள் இவ்வைரவரை வழிபடும் இடத்தை "வைரவர் பந்தலடி" என அழைப்பர். இப்பந்தல் சுவாமி அறைக்கு முன்பாக வெளி வாசலில் அமைக்கப்படும். இதில் நிரந்தரப் பந்தல் என்றும் நிரந்தரமல்லாத பந்தல் என்றும் இரண்டு வகை உண்டு. பூவரசம் கம்பை சுத்தம் செய்து மிக அழகான முறையில் தட்டுப்பந்தலாகக் கட்டி தென்னம் குருத்துக்களால் அலங்கரிப்பார்கள். இக்கம்புகளால் கட்டப்படும் பந்தல் நிரந்தரமில்லாத பந்தல். இவை சடங்கு முடிந்து 3ம் நாளே பிரிக்கப்படும். நிரந்தரமான பந்தல்கள் பலமான மரங்களினாலும் கற்களினாலும் கட்டப்பட்டிருக்கும். இவ்வைரவ வழிபாட்டில் தென்னம்பாளை முக்கிய இடத்தைப் பெறும். தென்னம்பாளையை உரித்து அதற்கு மஞ்சள் பூசி வைரவர் பந்தலின் நடுவினுள் கட்டி இருப்பார்கள். அத்தென்னம்பாளையிலேயே சூலத்தையும் இணைத்திருப்பார்கள். இளநீர் இரண்டு பக்கமும் சீவி இளநீரில் வைரவா யந்திரத்தை எழுதி ஜெபம் பண்ணி பந்தலுள் வாழையிலை போட்டு அரிசி போட்டு அரிசியில் வைரவர் யந்திரம் எழுதி அதற்கு தூபதீபம் காட்டி இளநீர் வைத்து மடை பரவப்படும். அம்மடையில் மொந்தன் வாழைப்பழம் பிரதானமாக வைக்கப்படும். அரிசிமாவில் ரொட்டி செய்து அதையும் நெய்வேத்தியமாகப் பகிர்வர். சில இடங்களில் பாணக்கம், துள்ளுமா, வெண்பொங்கல் அல்லது சர்க்கரைப் பொங்கல், வடை என்பன படைக்கப்படும். இதில் ரொட்டியே பிரதான நெய்வேத்தியமாகும். சில இடங்களில் கஞ்சா ரொட்டி, கள்ளு, சாராயம் என்பனவும் வைக்கப்படுகின்றன. இவ் ரொட்டி செய்யப்படும்போது சில இடங்களில் தேங்காய்ப்பூ, உப்பு என்பன கலந்து செய்யப்படுகின்றன. சில இடங்களில் இவை கலவாது தனிமாவில் ரொட்டி செய்யப்படுகின்றது. கமுகம்பாளை. தாமரைப் பூக்களால் அம்மடை அலங்கரிக்கப்பட்டு தனித்தமிழில் பூசை நடைபெறும். அப்பூசையில் அகவல் காவியம் என்ற இரண்டு வகையான பாடல்கள் பாடப்படும். இதில் அகவலில்,

> சீர்புகழ் வைரவர் செந்தமிழ் உரைக்க
> கார்புகழ் மேனி கணபதி அருளே

எனத் தொடங்கி

> விக்கினம் தீர்க்கும் விறும வைரவா
> செப்பிய மாங்கனி திகழ்தட்டுறட்டியும்

என்றும்

> ஐயும் கிலியும் அகோர வைரவா
> சௌவும் கிலியும் சங்கார வைரவா

என்றும் அவ்வகவல் தொடர்ந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமாய் வந்து நான் செய்பூசையை
நண்பாய் ஏற்பாய் நமஸ்தே நமஸ்து

என்று அவ்வகவல் நிறைவு பெறுகிறது. அதேபோல் காவியமெனும் உடுக்கிசைச் சிந்தில்


நிலவுபுனை குலவுசடை யோனுருவ மாகி
நிறமான வயிரவ சொரூபமென வந்து
அலகுசூ லாயுத கபாலமு மேந்தி
ஆதிவயி ரவராகி வந்தமெய்ப் பொருளே
குலவுவலெள் ளிலைசெங் கரும்பினொடு பூகமடல்
குங்கிலிய தீபமொடு செங்கமல மலரும்
இலகுமகில் சந்தனங் கஸ்தூரி கற்பூர
மிளநீ ரடன்மடைக வெற்றுகந் தவனே

என்ற காவியம் இளநீர் மடையின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது. நிறைவில் வாழிபாடி மலரிட்டு வழிபாடு செய்வார்கள். இவ்வைரவ வழிபாட்டில் வைரவருடைய வாகனமாகிய நாய்க்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. தவிட்டு ரொட்டி எனப்படும் தனித்தவிட்டினால் செய்யப்படும் ரொட்டி வைரவரின் வாகனத்துக்குரிய ரொட்டி என்று கருதப்படுகின்றது.

இவ்வைரவ வழிபாடு மட்டக்களப்பு சைவமக்களின் மனத்தில் நிறைந்த வழிபாடாக அமைகின்றது. தங்களுடைய வீடுகளை குலதெய்வமாகிய வைரவர் பாதுகாக்கின்றார் என்றும் ஏவுதல், பில்லி, வஞ்சனை, சூனியம் போன்ற கொடியவினைகள் வாராமல் பாதுகாக்கின்றார் என்றும் மக்கள் மனதில் ஆழமான நம்பிக்கை வேரூன்றி உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக் கலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புப் பிரதேச இந்துக் கோவில்களின் கட்டிட சிற்பப் பாரம்பரியம்

**– க. தங்கேஸ்வரி பீ.ஏ. (தொல் சிறப்பு) –**

## முன்னுரை

*மட்டக்களப்புப் பிரதேசம் முழுவதும் ஆதித்திராவிடர் வாழ்ந்த மிகத் தொன்மையான பிரதேசம் என்பது பல்வேறு ஆய்வுகள் மூலம் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆதித்திராவிடர் வழிவந்தவர்களே இயக்கர், நாகர் என்பதும் அவர்களின் சந்ததியினரே இன்றைய வேடர் இனத்தவர் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.*

*அந்த வகையில் கிழக்கிலங்கையில் இந்து வணக்க முறைகளில் ஆதித்திராவிட வணக்க முறைகளும், வேடர் சம்பிரதாய முறைகளும் கலந்திருப்பதை அவதானிக்கலாம். ஆலயத் தோற்றங்களும் அதன் அடிப்படையில் எழுந்து பின்னால் மாற்றமடைந்தன.*

*தென்னாசியாவில் உருவான இந்துமதம் மட்டக்களப்பு பிரதேசத்திலும் நிலைபெற்றது. மிக நீண்ட வரலாற்றினைக் கொண்ட மட்டக்களப்பு, பிரதேச கட்டிட சிற்ப பாரம்பரியமானது அக்காலத்து மக்களின் சமூக, சமய நம்பிக்கைகளைக் கொண்டதாக அமைந்தது. மட்டக்களப்பின் இந்துக்கோவில் கட்டிட சிற்ப பாரம்பரியத்தை பின்வரும் முறையில் அணுகுதல் சிறந்தது.*

1. *ஆதித் திராவிடக் குடிகளின் இயற்கை வழிபாட்டு அமைப்பு முறை*
2. *ஆதித் திராவிடக் குடிகளின் பந்தல், மேடை, அமைப்பு முறை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இயக்கர், நாகர்களின் பெருங்கற்கால கட்டிட சிற்ப முறை
4. பௌத்த மத வருகையுடன் ஏற்பட்ட இந்துக் கட்டிட முறை
5. சோழர் கால திராவிடக் கட்டிட முறை
6. பாண்டியர் கால திராவிடக் கட்டிட சிற்ப முறை
7. விஜயநகர நாயக்கர் கால கட்டிட சிற்ப முறை
8. தற்கால ஆகமவிதிசாரா/ஆகமவிதி சார்ந்த கட்டிட முறை

## ஆதித் திராவிடர்களின் இயற்கை வழிபாட்டுக் கட்டிடமுறை

ஆதித் திராவிடர்களின் தொன்மையான வழிபாடு, பாரம்பரியங்களைக் கொண்ட மட்டக்களப்புப் பிரதேசத்திலே புதிய கற்காலம் முதல் இந்து சமய வழிபாட்டுச் சான்றுகள் காணப்படுகின்றன. "சபரர்" எனப்பட்ட ஒரு வேடர் இனத்தவர் வாழ்ந்த இடம் சபரர் கமவாகும். இங்கு அமைந்துள்ள கடுகு இனத்தை அடியொட்டிய வழிபாடுகள் மட்டக்களப்புப் பிரதேசத்தின் பல பண்டைய தலங்களிலும் இடம்பெறுகின்றன. குறிப்பாக உகனை, மண்டூர், வெருகல், போரதீவு, கொக்கட்டிச்சோலை போன்ற பழம்பதிகளில் இத்தகைய பாரம்பரிய பூசை முறைகள் இன்றும் காணப்படுகின்றன. பந்தலிட்டு பூசை செய்யும் பாரம்பரியமும் இன்றும் இப்பிரதேச வேடர்களிடமும் நிலைத்துள்ளது.

## திறந்த வெளிக் கோயில்களின் கட்டிடமுறை

புதிய கற்கால மக்கள் கடம்பு, வேம்பு, ஆல் போன்ற மர வழிபாட்டையே கொண்டிருந்தனர். இதுவே "கந்தழி" வழிபாடு எனப்பட்டது. இவ்விதம் வழிபட்ட மரத்தடியிலே கல், வேல் என்பவற்றை நாட்டி வழிபட்டனர். அம்மரம் பட்டபோது அது லிங்க வழிபாடாக பரிணமித்தது. அப்போது "கோயில்" என்ற கட்டிடமே இருக்கவில்லை. அம்மரத்தடியே "கோவில்" எனப்பட்டது.

இதுவே அக்கால கோயில் முறையின் ஆரம்பமாகும். மட்டக்களப்பு பிரதேசத்திலும் தொன்மைக் காலத்தில் இத்தகைய முறையே காணப்பட்டுள்ளது எனலாம். இவை மர அடியிலும் மலைக் குன்றுகளிலும் எழுந்தன.

## ஆதித்திராவிட லிங்க, வேலி, வழிபாட்டுக்கான பந்தல், மேடை கட்டிடமுறை

பழங்கால மக்கள் மரம், மலை, ஆறு, விலங்குகள் போன்றவற்றை வழிபட்டது போல மட்டக்களப்பு பிரதேச மக்களும் மரத்தடியிலே பூசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துள்ளனர் என்பதற்கு ஆதாரங்கள் உள. ஒரு தலை, இரு தலை, முத்தலை சூலங்களை வழிபட்டனர். இதுவே சிற்ப வளர்ச்சியின் ஆரம்ப படிமுறையாகும். அத்தெய்வத்தை மழை, வெயிலில் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக திறந்தவெளிக் கோயில் பின்னர் கொத்துப் பந்தல்களாக உருவெடுத்தன. அதனுடன் மர அடியில் களிமண் மேடைகளையும் அமைத்து, அதில் சூலத்தினை நட்டு வழிபடும் முறையும் அக்காலத்தில் ஏற்பட்டது. இன்று பெரிய கோயில்களாக விளங்கும் கதிர்காமம், வெருகல், மண்டூர், கொக்கட்டிச் சோலை, உகந்தை போன்றன இத்தகைய முறையில் அமைந்தவை.

கிழக்கிலங்கையில் கிடைக்கும் பல பிராமிக் கல்வெட்டுக்கள் இத்தகைய ஒரு தலை, இரு தலை, முத்தலை, சூல வழிபாட்டுக்கு ஆரம்பமாகின எனலாம். இவை முருகன், சிவன், கொற்றவை, வயிரவன், முருகன் முதலிய கடவுளாக உருவெடுத்தன.

## இயக்கர்களின் நாகர்களின் பெருங்கற்கால கட்டிட சிற்ப முறை

பெருங்கற்கால இயக்கர், நாகர் என்போர் ஆதிதிராவிடரில் இருந்து முதிர்ந்த மக்கள் பண்பாடு உடையவர்கள் என்பதை புராண இதிகாச மூலம் அறிகிறோம். "உரகபுரம்", "புஜக நகரம்" முதலியன கொற்கையிலே ஆதிநாகர் வாழ்ந்த இடமாகும். "புர, புஜ" போன்ற பெயர்களை மகாவம்சமும் குறிப்பிடும். இயக்க மன்னன் இராவணன் தென் இலங்கை மன்னன். கிழக்கிலங்கையையும் சேர்த்து ஆட்சி செய்தவன். இக்கால கட்டடிடங்களைக் காண முடியாவிட்டாலும் அவை அழியும் பொருட்களான மரம், மண், மூங்கில், வைக்கோல், புல், பனைஓலை போன்றவற்றால் அமைக்கப்பட்டவை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

## நடுக்கற்கள் மூலம் உருவாகிய இந்துமத கட்டிடமுறை

புதிய கற்கால மக்கள் இறந்தோரை புதைத்த புதைகுழிகளை அலங்கரிப்பதை முக்கியமாகக் கொண்டனர். அதற்கு ஆதிகால கல்லறைகளே சான்றாகின்றன. கல்மேடைகள் (Dolmen grave) குடைவரைக் குகைகள் (Rock cut cave), குத்துக்கற்கள் (menhir), (தொப்பக் கற்கள்) குடைக்கற்கள் (Umbrella stone), கல்லறைகள் (cist grave) எனப் பலதரப்பட்ட விதத்திலே அமைக்கப் பெற்ற கல்லறைகளும் அவற்றினுள்ளே இடப்பட்ட பொருட்களும் உதாரணமாகின்றன. இக்கல்லறைகளுக்குள்ளே மேற்குறிப்பிட்ட சூலங்களும் கிடைக்கப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இதுவே பின்னர் வீர வழிபாட்டுக்குரிய கோயிலாகவும் உருவெடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுக்கற்கோயில்கள்

மேற்கூறப்பட்ட இறந்தோரைப் புதைத்த நடுகற்குழிகளிலே வீரர்களுக்கு அமைந்தவை நடுகற்கோயில் பாணியாகும். விழுப்புண் பெற்ற வீரர்களுக்கும், அரசர்களுக்கும், பெரியோர்களுக்கும் இத்தகைய கோயில்கள் எழுப்பப் பெற்றன. பல்லவர்கால கட்டிட முறை இவ்விதம் வளர்ச்சி பெற்ற ஒன்றேயாகும். மட்டக்களப்புப் பிரதேசத்திலும் இவ்விதம் எழுப்பப் பெற்ற கோயில்களில் பழுகாமம் திரௌபதி அம்மன் கோயிலும் அதன் சுற்றாடலுமாகும்.

## மரக் கோவில் கட்டிடமுறை

ஆதித்திராவிடர்களின் மரக்கோவில்களை நிகர்த்த வகையில் ஆதிநாகர்களும் மரக்கோவில்களை அமைத்தனர். நாகர்முனை திருக்கோவில் எனப்பட்ட திருக்கோவில். நாகர்கள் வாழ்ந்த இடமாகிய உகந்தை போன்ற கோயில்கள் ஆரம்ப காலங்களில் இத்தகைய மரக்கோவில்களாகவே அமைந்திருத்தல் வேண்டும் எனலாம். யட்டாளவெகரவில் காணப்பட்ட நாகசிற்பம், கொத்தியாபுலையில் கிடைத்த ஐந்து தலை நாகம் (மட்/கச்சேரியில் உள்ளது) போன்றன இத்தகைய மரக்கோவில்களில் இருந்திருக்க வேண்டும். காலவோட்டத்தில் மரக் கட்டிடம் அழிவுற இச்சிற்பத் தட்டுகள் எஞ்சியிருக்க வேண்டும். கருங்கல் செங்கல் கட்டிட சிற்ப அமைப்புக்கு முன்னோடியாக மரக்கட்டிட முறையே இருந்துள்ளது. மட்டக்களப்புப் பிரதேசத்திலும் பல பண்டைய கோவில்கள் இவ்விதமே அமைந்திருத்தல் வேண்டும். (பழுகாமம் திரௌபதை அம்மன் கோயிலின் கருவறை மரத்தால் அமைக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம்)

## பௌத்த மத வருகையுடன் ஏற்பட்ட இந்துக் கட்டிடமுறை

பௌத்த மத வருகையின் பின்னரே ஈழத்தில் கட்டிட, சிற்ப முறையில் திருப்பம் ஏற்படுகின்றது. இந்திய கட்டிட, சிற்ப முறையுடன் தொடர்புடையதான கட்டிடபாணி கலந்து கொள்கிறது. அது (அ) அனுராதபுர காலம் (ஆ) பொலநறுவக் காலம் (இ) கம்பளைக் காலம் (ஈ) கண்டிக் காலம் (உ) கொழும்புக் காலம் என்ற அடிப்படையிலே வளர்ச்சி பெற்றது. இக்கட்டிட முறையானது குப்த, பல்லவ, சோழ, பாண்டிய பாணியில் கலப்புற்று வளர்ச்சி பெற்றது. ஆனால் மட்டக்களப்பு கட்டிட பாணியானது திராவிட பாணியில் வளர்ச்சி பெற்றுள்ளதைக் காண முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பில் சோழர் கால கட்டிடமுறை

சோழர் இராஜரட்டையைக் கைப்பற்றி அனுராதபுரம், பொலநறுவ போன்ற இடங்களை முற்றாகவே ஆட்சி செய்தனர். திருகோணமலையிலும் சோழர் பாணி கட்டிடங்கள் பல உள்ளன. உரோகணை இராச்சியத்தில் அமைந்திருந்த மட்டக்களப்புப் பிரதேசத்தில் திருக்கோவில், கொக்கட்டிச்சோலை, கோயில்போர தீவு மட்டும் ஒரே விதமான கட்டிட அமைப்பைக் கொண்டவையாகும். இங்கு தனிப்பட்ட பல தமிழ்ச் சிற்றரசுகள் இருந்தமையினால் சோழராட்சியின் நேரடி நிர்வாகத்திற்கு உட்படவில்லை. எனினும் சோழராட்சியின் கட்டிட பாணியில் கருவறை, இடைகழி, முன்மண்டபம் என்ற அமைப்பில் இக்கோயில்கள் எழுந்தன. இராஜேந்திர சோழனின் தாயாரான வானவன்மாதேவி நினைவாக கட்டப் பெற்ற வானமாதேவி ஈஸ்வரமுடையார் கோயில் அமைப்பில் இக்கோயில்கள் அமையப் பெற்றன எனலாம்.

திருக்கோவில் சோழ, பாண்டிய இளவரசர்கள் திருப்பணி செய்ததாகவும், மனுநேய கயவாகு என்னும் சோழ இளவரசன், திருத்திக் கட்டியதாகவும் சோழநாட்டிலிருந்து சிற்பிகளைக் கொண்டு வந்ததாகவும் வரலாறு கூறுகிறது. ஆகவே சோழர் செல்வாக்கும் கட்டிட பாணியும் இருந்துள்ளது.

கொக்கட்டிச்சோலையில் உள்ள இரண்டு தேர்களும் சோழராட்சிக் காலத்தில் சோழநாட்டிலிருந்து சிற்பிகளைக் கொண்டு வந்து தருமசிங்கன் என்பவனால் அமைக்கப் பெற்றது என மட்டக்களப்பு மான்மியம் கூறும்.

## பாண்டியர்கால கட்டிடமுறை

13ம் நூற்றாண்டில் தென்இந்திய திராவிட சிற்பப் பாணியில் முக்கியம் பெறுவது பாண்டியர் பாணியாகும். கர்ப்பக்கிரகம், இடைகழி, அகிருத மண்டபம் என்ற அமைப்புடன் பரிவார தெய்வக் கோயில்கள், பர பிரகாரங்கள், 'கோபுரம் போன்ற பல அமைப்புகளை உடையது.

கட்டிடத்தின் பகுதியானது அடித்தளம், சுவர், தண்டு, இடைக்கட்டு, கலசம், கமலம், பலகை, போதிகை, பூதகணவரி, கொடுங்கை, யாழி, நந்தி, கழுத்து, கூடு, சிகரம், மகாபதிமம், ஸ்தூபி ஆகிய உறுப்புக்களும் அமையப்பெற்றது. திருக்கோவில், போரதீவு, கொக்கட்டிச்சோலை ஆகிய இடங்களில் இத்தகைய உறுப்புகள் அமையப் பெற்றன. ஏற்கனவே பிற்காலச் சோழர் காலத்திலும், பாண்டியர் காலத்திலும் இவை புனரமைப்பு செய்யப்பட்டிருக்கலாம். திருக்கோவிலில் மூன்று சுற்றுப் பிரகாரம் இருந்ததாக குவரோஸ் அடிகளார் குறிப்பிடுகின்றார். திருக்கோவில் ஏழு பாண்டிய இளவரசர்கள் கட்டியதாகக் கூறும் ஒரு வரலாறும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜயநகர நாயக்கர் பாணி

மட்டக்களப்பு பிரதேசத்தில் நாயக்கர் தொடர்பு ஓரளவு இருந்தாலும் ஆலய கட்டிடங்கள் இல்லை. மட்டக்களப்பு மான்மியம் கூறும் கண்டி மன்னன் வகுத்த சில விடயங்களை அவதானிக்கத் தக்கது. கண்டி மன்னன் போக்குவரத்து செய்த பாதையாக "கண்டியக் கட்டு" என்னும் மண்முனை - பழுகாமம் ஊடாக செல்லும் பாதை பயன்படுத்தப்பட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலையில் உள்ள இரண்டு தேர்களும் கட்டிட சிற்ப முறையை நோக்கினால் நாயக்கர் காலப் பண்புகள் காணப்படுகின்றன. ஆனால் தேர்கள் சோழர் காலத்தில் தருமசிங்கன் என்னும் சிற்றரசனால் சோழநாட்டிலிருந்து சிற்பிகள் வரவழைத்துச் செய்யப்பட்டதாக மட்டக்களப்பு மான்மியம் கூறும். எனவே நாயக்கர் பாணி என்று திட்டவட்டமாக எதுவுமே காணப்படவில்லை எனலாம்.

## ஆகம விதி சாரா கட்டிட அமைப்பு முறைகள்

தென் இந்திய தொடர்பினாலும் பிராமணத் தொடர்புகளினாலும் ஆகம விதிப்படி பூசைகள் செய்யும் நடைமுறை ஏற்பட்டது. இதனால் இரண்டு விதமான பூசை நடைமுறைகளும், கட்டிட முறைகளும் ஏற்படத் தொடங்கியது எனலாம். ஆகம விதி சாரா வகையில் கட்டிடங்களும், பூசைகளுமே இன்றும் நடைமுறையில் உள்ளன.

கதிர்காமம், மண்டூர், வெருகல் ஆலயங்களில் நடைபெறும் பூசை முறைகள் ஆகம விதிப்படி நடக்கும் பூசைகளை விட வேறுபட்டவை. பூசகர் வாய் கட்டிப் பூசை செய்வார். திரைமூடிப் பூசை நடைபெறும். மந்திரங்கள் இல்லை. திரைக்கு வெளியே தீபம் மட்டும் காட்டப்படும். கர்பக்கிரகத்தில் மூல மூர்த்தியின் விக்கிரகம் இருக்காது.

இத்தகைய ஆலயங்களில் வாசல் கோபுரமும் இல்லை. கர்ப்பக்கிரகத்தின் மேல் விமானமும் இல்லை. ஆலயத்தில் ஆகம முறையிலான மண்டபங்கள் இல்லை.

இவ்வாலயங்களில் அலங்காரமான தூண்களோ சிற்ப வேலைப்பாடுகளோ இல்லை. ஆலய மேற் கூரையின் உச்சியில் ஒரு கலசம் மட்டும் காணப்படும்.

இதற்கான காரணங்களை அறியும் போது பிரமிப்பு ஏற்படும். "பிரமாண்டமான சிற்ப வேலைகள் வேண்டாம்" எனப் பணிவிடை ஆகி உள்ளதாம் என கூறுவர் (பணிவிடை என்பது தெய்வ வாக்கு). இதற்கு உதாரணம்: மண்டூர், கதிர்காமம் ஆகியவற்றைச் சொல்லலாம்.

ஆகமம் சார்ந்த ஆலயக் கட்டிடங்களின் அமைப்புக்கு விதி முறைகள் இருப்பது போல, ஆகமம் சாரா ஆலயக் கட்டிட அமைப்புக்கும் விதிமுறை இருக்கிறது. ஆனால், அது மிகவும் இலகுவானது. கருவறைக் கட்டிடம் மட்டுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்படுவதனால் கட்டிட அமைப்பில் சாஸ்திர நுட்பங்கள் மிக எளிமையானதாகவே உள்ளன.

## பந்ததி முறை ஆலயக் கட்டிடங்கள்

கிழக்கிலங்கையில் உள்ள அம்மன் கோயில்கள் மற்றும் கிராமியக் கோவில்களில் நடைபெறும் பூசைகள் மந்திர உச்சாடனம், உடுக்கு வாசித்தல், தெய்வம் ஆடுதல், கட்டுச் சொல்லுதல் முதலியவை ஆகம முறை அனுஷ்டானங்களுக்கு நேர் மாறானவை. பூசகர்கள் தமிழிலே மந்திர உச்சாடனம் செய்வார்கள். சமஸ்கிருதம் துளியும் கிடையாது.

கட்டிட அமைப்பும் சிற்ப முறைகளும் வித்தியாசமானவை. சாதாரண வீடு போன்ற அமைப்பில் ஆலயம் அமைந்திருக்கும். கருவறை மட்டுமே ஆலயமாக அமையும். மண்டபங்களோ, சிற்பங்களோ இங்கில்லை. தூண்கள், கோபுரம், விமானம் எதுவும் கிடையாது.

பரிவார தெய்வங்களுக்கு "பைரவர் பந்தல்" அமைப்பிலான சிறு சிறு பெட்டிக் கூடுகளே அமைக்கப்பட்டிருக்கும். அநேகமான ஆலயங்களில் ஆண்டுக்கொருமுறை கதவு திறந்து ஒரு வாரம் அல்லது பத்துநாள் "சடங்கு" (உற்சவம்) நடைபெறும்.

மிக அபூர்வமாக இரண்டொரு அம்மன் கோயிலில் மட்டும் ஆகம விதிப்படி பூசைகள் நடைபெறுகின்றன. உதாரணம்: காரை தீவு கண்ணகை அம்மன் கோயில், பெரியபோர தீவு பத்திரகாளியம்மன் கோயில், புன்னைச் சோலை காளிகோயில் போன்றன.

கண்ணகி அம்மன் திரௌபதி அம்மன் மூர்த்தங்கள் சிலப்பதிகார, மகாபாரத இதிகாசங்களில் வரும் கதாபாத்திரங்கள் என்பது குறிப்பிடத்தக்கன. இவ்வகையில் காளியம்மன், பேச்சியம்மன், மாரியம்மன், கோயில்களும் வயிரவர், வீரபத்திரர், நரசிங்கர் போன்ற பல கோயில்களும் இடம்பெறும்.

இக்கோயில்களில் வருடாந்த உற்சவங்களில் போடப்படும் பந்தல்கள். பந்தல் அலங்காரங்கள், கட்டிட சிற்ப அமைப்புக்குள் அடங்குபவை. தென்னை ஓலைகளினால் பல வகைகளில் இங்கு அமைக்கப்படும் அலங்கார வளைவுகள் தோரணங்கள் இன்னும் சரியாக ஆராயப்படவில்லை.

## மட்டக்களப்பின் சிற்ப பாரம்பரியம்

மட்டக்களப்பின் கட்டிட பாரம்பரியம் போலவே சிற்ப பாரம்பாரியமும் மிக நீண்ட வரலாற்றினைக் கொண்டது. கட்டிடக்கலையுடன் இணைந்ததான சிற்ப அம்சங்கள் சில முன்னரே கட்டிட அமைப்புடன் சேர்ந்து நோக்கப்பட்டு விட்டன. தெய்வ வழிபாட்டுடன் தொடர்புறும் சிற்ப வடிவங்களின் பாரம்பரியத்தை மட்டும் மிகச் சுருக்கமாக இதனுடன் நோக்கலாம். அவை வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஆதித் திராவிட வழிபாட்டின் இயற்கை வழிபாட்டுத் தெய்வங்கள்:
மரம், மலை, ஆறு, குளம், மிருகங்கள்.

2. ஆதித் திராவிடரின் திறந்த வெளித்தெய்வங்கள்:
வேல், கல், இரு தலை, ஒரு தலை, முத்தலைச் சூலங்கள்

3. பெருங்கற்காலச் சிற்பங்கள்:
ஒரு தலை, இரு தலை, முத்தலைச் சூலங்கள்.

4. பெருங்கற்கால மரச் சிற்பங்கள்:
கோல் (வீரபத்திரனுக்குரியது) மரத்திலான சிலைகள் (பழுகாமம் திரௌபதி அம்மன் கோயிலில் உள்ளது)

5. பௌத்த மத வருகையுடன் ஏற்பட்ட சிற்பமுறை:
கருங்கல், செங்கல் சிற்பங்கள்.

6. சோழராட்சியின் போது தென்னிந்தியாவினின்றும் தருவிக்கப்பட்டவை:
கற்சிலைகள். வெண்கலச்சிலைகள், ஐம்பொன், தங்க விக்கிரகங்கள்.

7. பாண்டியராட்சியின் போது கொணரப்பட்டவை:
கருங்கல், வெண்கலம், ஐம்பொன், தங்க விக்கிரகங்கள்.

சீமந்துச் சுதையினால் செய்யப்பட்டவை :
அவ்வக் காலங்களில் பாவிக்கப்பட்ட நீறு போன்ற சுதைகளினாலும் தற்போது சீமந்து சுதையின் முக்கியத்துவம் அதிகம் பாவிக்கப்பட்டுள்ளது. சீமந்து சாந்து செங்கல் அமைப்புக் கோயில்களில் இன்று சீமந்து சிற்பங்களும், கொங்கிறீட் பிளேட்டுகளும் அமைக்கப்படுகின்றன. பளிங்குக் கல் சுவர், நிலத்திற்கு பதித்து அமைக்கப்படும் கோயில்களும் அதிகம் உள்ளன.

எனவே, மட்டக்களப்பின் சிற்ப, கட்டிட வரலாறானது ஆதித்திராவிட வழிபாட்டுடன் இயற்கை வழிபாட்டில் ஆரம்பித்து, திறந்த வெளிக்கோயில் அறிமுகமாகி, பந்தல் மேடையில் மாறி, மரக்கோவில் முறையில் மாறி கருங்கல், செங்கல் கட்டிட அமைப்பில் சீமெந்து சுதையுடன் கூடிய கட்டிட, சிற்ப பாரம்பரியங்களுடன் - ஆகமம் சாரா - பத்ததி, ஆகமம் சார்ந்த நடைமுறைகளுடன் தொடர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு ஆனைப்பந்தி ஸ்ரீசித்தி விக்னேஸ்வரர் ஆலயச் சிற்பங்கள் – ஒரு விவரணம்

– திருமதி. எஸ். கேசவன் B. A. (Hons.) –

**முன்னுரை**

*மனித நாகரிகத்தின் வளர்ச்சியில் கலையின் பங்கு மகத்தானதாகும். கலைகள் நம் புலன்கள் தீவிரமாக இயங்குமாறு செய்கின்றன. உள்ளத்தை நெகிழ்விக்கின்றன. உள்ளத்தை மட்டுமல்ல உடல் முழுவதையும் பூரித்து புத்துயிர் பெற வைக்கின்றன.*

*கோயில் திருவுருவங்கள் எல்லாம் புராண இதிகாசக் கதைகளோடு சம்பந்தம் உடையவை. இந்த உருவங்கள் கல்லினாலும், செம்பினாலும், மரத்தினாலும், சுதைப் பொருளினாலும் அமைக்கப்படுகின்றன.*

*இந்தச் சிற்பச் செல்வங்கள் முழுவுருவச் சிற்பம், புடைப்புச் சிற்பம் என இரு வகைப்படும். ஒரு பொருளின் முன் பின் இரு புறங்களையும் முழுமையாகப் புலப்படுத்துவது முழுவுருவச் சிற்பம் எனப்படும். அவ்வாறின்றி உருவங்களின் ஒரு புறம் மட்டும் புலப்படுமாறு அமைப்பது புடைப்புச் சிற்பமாகும்.*

*இங்கு மட்டக்களப்பு ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலயத்தில் உள்ள சிற்பங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆலய அமைவிடம்

கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு நகரத்தில் புளியந்தீவு என்னும் இடத்தில் ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வர ஆலயம் உள்ளது. மட்டக்களப்பில் சிறப்பு மிக்க தீவுப் பகுதியாகிய புளியந்தீவு ஒல்லாந்தர் காலம் தொடக்கம் தலைநகரின் நகரப் பகுதியாக விளங்குகின்றது. இத்தீவு 30 மைல் நீளமனான வாவியினால் சூழப்பட்டு அழகும், அமைதியும் நிறைந்த உயர்ந்த மண்மேட்டையும் அதனோடு இணைந்த வயல் நிலங்களையும் கழிமுகத்தையும் கொண்டுள்ளது.

### ஆலய வரலாறு

மட்டக்களப்பு ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் கோயில் வேடர்கள் வாழ்ந்த காலத்திலிருந்து வணங்கப்பட்டு வந்தது. புளியந்தீவிலே பெரு வெள்ளம் ஏற்பட்ட காலங்களில் காடுகளில் வாழ்ந்த யானைக் கூட்டங்கள் பந்தி, பந்தியாக வந்து தங்கித் தப்பிப் பிழைத்த வழக்கும் இருந்ததால் இப்பகுதி ஆனைப்பந்தி என்று பெயர் பெற்றுள்ளது. யானைக் கூட்டங்கள் யாவும் இங்கிருந்த கோயிலுக்கு எந்தவித இடையூறும் செய்யாது வணங்கிச் சென்றமையால் ஆரம்பத்தில் "கல்" வடிவமாக இருந்த "சாமி"ஆனை முகக் கடவுளாக இருத்தல் வேண்டுமென்று கருதி ஆனைப்பந்தி பிள்ளையார் என்று அழைக்கப்பட்டார்.

## மட்/ஆனைப்பந்தி பிள்ளையார் கோயிலிலுள்ள நால்வகைச் சிற்பங்கள்

1. சுதைப் பொருட் சிற்பங்கள்
2. மரச் சிற்பங்கள்
3. கருங்கற் சிற்பங்கள்
4. உலோகச் சிற்பங்கள்

### 1. சுதைப் பொருட் சிற்பங்கள்

1945ம் ஆண்டு இக்கோயிலில் மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்ட பின்னர் 1965ம் ஆண்டு அடுத்த மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன் பின்னர் 1997ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேம் நடைபெற்ற போதே புதிய சுதைச் சிற்பங்கள் விமானத்தில் அமைக்கப்பட்டன. அத்துடன் இரண்டு புதிய உட்கோயில்கள் அதாவது கஜலட்சுமிக்கும் சுப்பிரமணியருக்கும் கட்டப்பட்டன. இக் கோயிலின் கோபுரத்திலும் அழகிய சுதைச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயிலின் சுதைப் பொருட் சிற்பங்களை ஆக்கிய சிற்பி ஆழ்ந்த கலை ஞானத்தையும், அறிவையும், புதிய நுட்பங்களையும், அழகியல் உணர்வையும் பெற்றவர் என்பதை அவர் புடைப்பு சிற்பங்கள் எடுத்துக் காட்டுகின்றன. பார்ப்பவரை பல தடவை பார்த்துச் சிந்திக்க வைக்கும் வண்ணம் தம் கைவண்ணத்தை எடுத்துக் காட்டியுள்ளார். இங்கு காணப்படும் சுதைச் சிற்பங்கள் மிகவும் பிரகாசமுடையதாகவும், மெருகூட்டப்பட்டதாகவும் விளங்குகின்றன. ஆனைப்பந்தி பிள்ளையார் கோயிலில் காணப்படும் விமானத்தை எடுத்து நோக்கும் போது இது இரு தளங்களைக் கொண்டு விளங்குகின்றது.

தென் திசை

விமானத்தின் தென் திசையில் ஆஞ்சநேயர் (அனுமான்) கண் திறந்தபடி இருந்த நிலையில் விஷ்ணுவின் காலடியிலிருந்து வணங்கிக் கொண்டிருக்கின்றார். இதனையடுத்து விஷ்ணு ஐந்து தலை நாகத்தின் மேல் யோக சயனத்திலுள்ளார். ஐந்து தலை நாகங்களும் விஷ்ணுவிற்கு குடை பிடித்துக் கொண்டிருப்பது போல சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. இவரது நாபியிலிருந்து தாமரைத் தண்டு வளர்ந்து சென்று தண்டின் மேல் தாமரை பூத்துள்ளது. அதன் மேல் பிரம்மா வீற்றிருக்கின்றார். தாமரைத் தண்டு கூட உயிர்த்துடிப்புள்ளதாக விளங்குகின்றது. விஷ்ணுவின் காலை சீதேவி வருடிக் கொண்டிருக்கிறாள். பூமிப் பிராட்டியார் இவரது இடப்புற கீழ்க் கையைப் பிடித்துக் கொண்டிருக்கின்றார். இவ்வாறு அமைந்த சிற்பம் கண்ணையும் கருத்தையும் கவர்வதாக உள்ளது. கம்பருடைய சிற்பம் மிகக் கச்சிதமாக படைக்கப்பட்டுள்ளது. அவர் நிமிர்ந்து கையில் கம்பராமாயணத்துடன் வீற்றிருக்கின்றார். இதனையடுத்து தட்சணாமூர்த்தி நான்கு முனிவர்களுக்கு அறம் போதித்தது இடம்பெற்றுள்ளது. இங்கு தட்சணாமூர்த்தியின் சாந்த வடிவத்தைக் காணலாம். நான்கு முனிவர்களும் உண்மையில் ஞானத்தை அறிந்து விட்ட நிலையில் உருவாக்கப்பட்டுள்ளார்ள். விநாயகர் தந்தத்தை உடைத்து மகாபாரதம் எழுதும் காட்சியை நினைவுபடுத்து முகமாக சிருஷ்டிக்கப்பட்டுள்ளார். அடுத்து வேடன், வேடுவிச்சி போன்ற சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன. இவர்களது கண்கள் கோபத்தை வெளிக்காட்டுகின்றன.

மேற்குத் திசை

இத்திசையில் நம் கவனத்தைத் திருப்பும் போது கீழ்த்தளத்தில் இரு மருங்கிலும் விநாயகர் சிற்பங்கள் காணப்படுகின்றன. இதில் பிறைசூடிய நெற்றிக் கண்ணையுடைய விநாயகரும் சிற்பமாகவுள்ளார். ஒரு கையில் அங்குசமும், மறுகையில் கயிறும் வைத்துள்ளார். நடுவில் விஷ்ணு தம் இரு மனைவியருடன் வீற்றிருக்கின்றார். சீதேவி ஒரு கையில் தாமரைப்பூவை ஏந்தியுள்ளார். பூதேவி ஊமத்தம்பூவை (நீலம்) ஏந்தியுள்ளார். இச்சிற்பங்களுக்கு மேல் இடப்புறத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணன் புல்லாங்குழல் இசைக்கின்றார். எதிரே ராதை "ரபான்" என்ற இசைக்கருவியை இசைத்துக் கொண்டிருக்கிறாள். இதற்கு மேலுள்ள தளத்தில் நடன விநாயகர் நடனமாடிக் கொண்டிருக்கின்றார்.

வடக்குத் திசை

இங்கு பால கணபதி, சக்தி கணபதி சிற்பங்கள் உண்டு. சக்தி கணபதி இருந்த நிலையில் இடது காலை மடித்து, அம்மடி மீது குழந்தை ஒன்றைத் தூக்கி வைத்திருப்பது போல சக்தியை தூக்கி வைத்துள்ளார். அடுத்து நடுவில் அன்னத்தின் மீது பிரம்மதேவர் வீற்றிருக்கின்றார். அவரது இரு மருங்கிலும் அவர் தம் மனைவியர் (காயத்திரி, சாவித்திரி) காணப்படுகின்றனர். யோக கணபதி உருத்திராக்க மாலையை கையில் வைத்துள்ளார். உருத்திராக்க மாலை உண்மையான உருத்திராக்க மாலை போன்று கோர்க்கப்பட்டுள்ளது. இச்சிற்பங்களுக்கு மேல் இடப்பக்கம் அல்லிராணி வாளுடன் காணப்படுகின்றாள். எதிரே வலப்பக்கம் அருச்சுனன் இடது கையில் வில்லைத் தாங்கி வலது கையால் அம்புகளை எடுப்பது போல் படைக்கப்பட்டுள்ளார். இச்சிற்பங்கள் உடல் வளைவுகள், நெளிவுகள் , சுழிவுகளுடன் உருவாக்கப்பட்டிருப்பது அற்புதமானது.

கிழக்குத் திசை

விஷ்ணு கணபதி விஷ்ணுவின் அம்சங்களுடன் சங்கு சக்கரம், தண்டாயுதத்துடன் காணப்படுகின்றார். நீல நிறத்தில் அமைக்கப்பட்டுள்ள விஷ்ணு கணபதியின் சிற்பம் சிறப்பாயுள்ளது.

இவ்விமானத்தில் மொத்தம் பன்னிரு விநாயகர் சிற்பங்கள் ஆங்காங்கே பெருச்சாளிகளும் உள்ளன. பல கலைகளும் விமானத்தின் அழகை மெருகூட்டுகின்றன. இந்த விமானத்தை எட்டு அழகிய மாதர்களும் நான்கு ஆண்களும் (விமானம் தாங்கிகள்) தாங்கியுள்ளதாக காணப்படும் சிற்பங்கள் உயிரோட்டமாக உள்ளன. கைகளை உயர்த்தி விமானத்தை தாங்குவது பார்க்கின்ற கண்களுக்கு விருந்தாக உள்ளது.

விமானத்திலிருந்து சற்று விலகி (அர்த்தமண்டப வெளிப்புறச் சுவர்) உள்ள கட்டடத் தொகுதியின் மேல் விநாயகர் மாம்பழம் பெற்ற காட்சி அற்புதமாக உள்ளது. முருகன் மயில் மீது பறந்து செல்லும் கோலத்தில் படைத்துள்ளார் சிற்பி. முருகன் உண்மையாகவே மயில் மீதேறி பறப்பது போல் இருக்கும் இச் சிற்பம் பார்ப்பவர் மனதை கொள்ளை கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏனைய சுதைப் பொருட் சிற்பங்கள்

ஆலயத்தின் மேற்கில் கஜலட்சுமிக்குரிய கோபுரத்தில் இரண்டு யானைகளுக்கிடையே இருந்த நிலையில் கஜலக்சுமி சிற்பத்தை காணலாம். இரண்டு யானைகளும் பாய்ந்து வந்து மலர்மாலையை லட்சுமிக்கு அணிவிப்பது போன்று, தும்பிக்கையில் மலர்மாலையை ஏந்தியுள்ளவாறு காணப்படுகின்றன.

சுப்பிரமணிய சந்நிதானத்திலும் வள்ளி தெய்வானையுடன் முருகன் காணப்படுகின்றார். முருகனின் பின்புறமாக தோகைகளை ஒடுக்கிய நிலையில் மயில் காணப்படுகின்றது.

பைரவர் சந்நிதானத்தில் உயிருள்ள நாய்கள் போன்று ஆறு நாய்கள் உள்ளன.

வசந்த மண்டபத்தை நாம் பார்க்கின்ற போது இதன் வாயிலில் மேற்புறத்தில் நடுவில் விநாயகர் மீது வீற்றிருக்கின்றார். வலப் பக்கத்தில் புலித்தோலுடன் கூடிய சிவனும் பார்வதியும் இடபத்தின் மீது அமர்ந்துள்ளனர். இடப்புறம் முருகன் மயிலில் வள்ளி தெய்வானையை தம் ஒவ்வொரு மடிமீது வைத்திருக்கும் சிற்பக் காட்சிகள் அனைத்தும் சிறப்பானவை.

வசந்த மண்டபத்தின் வெளிப்புறச் சுவரில் கணபதி நடுவில் வீற்றிருக்க இடப்பக்கத்தில் மடப்பள்ளி ஐயரும் வலப்பக்கத்தில் பூசை செய்யும் குருக்களும் படைக்கப்பட்டுள்ளனர். இச்சுவரின் நான்கு கோணங்களிலும் நான்கு பூதங்கள் கையில் சங்குகளுடன் காணப்படுகின்றன. பூதங்களின் இருமருங்கிலும் காளை மாடுகள் அசைபோடும் விதத்திலுள்ளன. மணிக்கூட்டுக் கோபுரங்களிலும் நடனமாடும் விநாயகர் சிற்பமும் உண்டு.

### 2. மரச் சிற்பங்கள்

திருக்கோயிலில் உற்சவங்களுக்கு இன்றி அமையாது வேண்டப்படுவன இறைவன், இறைவிக்குரிய வாகனங்களாகும் · வாகனங்களை அமைக்கும் கலை தனிப்பட்டது. இவற்றை அமைக்க அன்றும் இன்றும் மரத்தையே பெரும்பாலும் பயன்படுத்தி இருக்கின்றார்கள். மரத்தால் அமைந்த வாகனங்களை வெள்ளி, தங்கம் முதலிய தகடுகளால் மூடி அழகுறுத்தும் வழமை தென்னாட்டில் காணப்பட்டது. அந்த முறையைப் பின்பற்றியே இங்கும் வெள்ளித் தகடுகள் ஆங்காங்கே பொருத்தியும் அமைத்த வாகனங்களைக் காண முடிகின்றது.

### ஆனைப்பந்திக் கோயிலில் காணப்படும் வாகனங்கள்

1. குதிரை - எல்லா மூர்த்திகளுக்கும் பொதுவானது.
2. இடபம் - சிவன்
3. மூஷிகம் - விநாயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சிங்கம் - சக்தி
5. மயில் - கந்தன்

போன்ற வாகனங்கள் காணப்படுகின்றன.

இங்கு காணப்படும் குதிரைவாகனம் இயல்பான உருவில் பாய்ந்து விரைந்து ஓடும் கோலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. குதிரை முன்னும், பின்னும், தாழ்ந்தும், பதிந்தும், மேலே எழும் வண்ணம் அசைந்து பாயும் நிலையில் உள்ளது. வெள்ளித் தகடுகள் ஆங்காங்கே சிற்பி பொருத்தியுள்ளதால் பார்ப்பதற்கு கண்ணையும் கருத்தையும் ஈர்ப்பதாக உள்ளது.

தோகை விரித்து நிற்கும் கோலத்தில் மயில், வாயினை அகலத் திறந்து பாயும் நிலையில் சிங்கம், மூஷிகம் என்பன நின்ற நிலையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதுதவிர கோயிலின் முகப்பு வாயிலில் காணப்படும் வாயிற்கதவு அழகிய மரச் சிற்பங்களாலானது. ஒவ்வொரு பாதிக் கதவும் முப்பது சதுரங்களாக பிரிக்கப்பட்டு முப்பது சிற்பங்கள் வீதம் இரண்டு கதவுகளிலும் அறுபது சிற்பங்கள் கண்ணைக் கவரும் விதத்தில் அமைந்துள்ளது. விநாயகர் பல்வேறு வடிவங்களில் செதுக்கப்பட்டுள்ளார்.

### 3. கருங்கற் சிற்பங்கள்

இக்கோயிலில் காணப்படும் கருங்கற் சிற்பங்களுள் ஒன்று கருவறை மூலமூர்த்தி. இவ்விக்கிரகம் ஏறத்தாழ இரண்டரை அடி உயரம், இரண்டரை அடி அகலமுமுடைய ஆசனத்தில் அமர்ந்ததொன்றாகும்.

நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் மனோன்மணி அம்பாள் கருங்கல் விக்கிரகம் அமைந்துள்ளது. இடது கீழ்க்கை இடுப்புக்குக் கீழே தொடையில் வைக்கப்பட்டுள்ளது. வலது கீழ்க்கை அபயகரமாக உள்ளது. வலது மேல், இடது மேல் கைகளில் தாமரை மலர்கள் உள்ளன.

முருகன் வள்ளி தெய்வானையுடன் நின்ற நிலையில் காணப்படுகின்றார். இவர் நான்கு கைகளுடன் மயிலுடன் காணப்படுகின்றார். முருகனின் இடது கீழ்க்கரம் இடுப்பின் கீழ் தொடையைப் பிடித்தவாறு காணப்படுகின்றது.

வள்ளி, தெய்வானை சிற்பங்கள் டோலகந்த நிலையில் உள்ளனர்.

சண்டேஸ்வரர் இருந்த நிலையில் இருகைகளுடன் உள்ளார். வலது கால் தொங்கிய நிலையிலும் இடக்கால் மடக்கிய நிலையிலும் உள்ளது. வலக்கையில் தண்டக் கோல் உள்ளது. தியான நிலையில் உள்ளார்.

வைரவரின் வாகனமாகிய நாய் பின்னால் நிற்க, வைரவர் முன்னால் நான்கு கைகளுடன் வீற்றிருக்கின்றார். நாயின் முகம் வைரவரை பார்த்துக் கொண்டிருப்பது போல ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக நவக்கிரகம், பலிபீடம், சிவலிங்கம், கஜலட்சுமி, முருகன் கற்சிற்பங்களும் இக்கோயிலில் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. உலோகச் சிற்பங்கள்

ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயிலில் தெற்கு வாசலில் உலோகச் சிற்பங்கள் உண்டு. இங்கு காணப்படும் உலோகச் சிற்பங்கள் :

1. நடராஜர், சிவகாமி அம்மை
2. முருகன் வள்ளி தெய்வானை
3. ஆறுமுகன்
4. தண்டாயுதபாணி
5. விநாயகர்
6. பஞ்சமுக விநாயகர்
7. சந்திரசேகர மூர்த்தியும், அம்பாளும்
8. சந்தான கோபாலர் (பாலகிருஷ்ணன்)
9. வைணவ துர்க்கை
10. மாணிக்கவாசகர்
11. கண்ணகி அம்மன்
12. நாகம்

நடராஜ விக்கிரகம் நடனமாடிய நிலையில் உள்ளது. சடாமகுடத்தில் இருந்து இரு மருங்கிலும் ஐந்து சடைகள் விரிந்து பரவியுள்ளது. முகத்தில் சாந்தம் தவழும் புன்சிரிப்பு முறுவலிக்கின்றது.

ஆறுமுகனின் கரங்களில் சக்தி, சரம், கட்கம், துவஜம், கதை, வில், குலிசம், கேடயம், ஆரம் பங்கஜம் ஆகிய ஆயுதங்கள் பத்துக் கரங்களில் விளங்க, முன்னிரு கரங்கள் வரத அபயகரமாக உள்ளன. நிற்கும் நிலையில் காணப்படும் இவ் உருவம் பத்மபீடத்தில் சமநிலையில் உள்ளது.

பழனி முருகன் துறவிக் கோலத்தில் காணப்படும் நிலையில் மொட்டைத் தலையும் உருத்திராக்கமும் காவியுடையும் பூண்டு கோவணாண்டியாக விளங்கும் திருக்கோலத்தில் காணப்படுகின்றார்.

ஐந்து தலை நாகம் குடை பிடிக்க காளிங்க நடனம் புரியும் நிலையில் சந்தான கோபாலர் வெகு அருமையான சிற்பமாக வார்க்கப்பட்டுள்ளார். வலக்கால் தூக்கியாடும் நிலையில் உள்ளது. இடக்கால் நிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறாக நான்கு வகைச் சிற்பங்களை மட்./ ஆனைப்பந்தி விக்கினேஸ்வரர் ஆலயத்தில் கண்டு தெளியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு இந்துக் கோயில்களும் அவைக்காற்றுக் கலைகளும்

**– சி. பரமேஸ்வரி** B. A. (Hons.) –

மட்டக்களப்பு தமிழகத்தில் காணப்படும் இந்துக் கோயில்களில் இடம்பெறும் வருடாந்த உற்சவ திருவிழாக்களிலும், விசேட பூசை திருவிழாக் காலங்களிலும், விழாவினை சிறப்பிக்கும் வண்ணம் அவைக்காற்றுக் கலைகள் நிகழ்த்தப்படுகின்றன. ஒருவர் அல்லது பலர் முன்னே நிகழ்த்துனர்களால் நிகழ்த்திக் காட்டப்படும் கலைகளே அவைக்காற்றுக் கலைகளாகும். பார்வையாளர்கள் அவையில் அமர்ந்திருக்க அவர்களுக்காகவே நிகழ்த்துனர்களால் இவை ஆற்றுகை செய்யப்படுகின்றன. கூத்து, கரகம், வசந்தன், கும்மி, கோலாட்டம், நாடகம், நடனம், சங்கீதம் என்பன அவைக்காற்றுக் கலைகளாகும்.

இந்த வகையில் மட்டக்களப்பிலுள்ள ஆலயங்கள் இந்துமதத்தை வளர்க்கின்ற இடமாகவும், கலைகளை வளர்க்கின்ற ஸ்தாபனமாகவும் தொழிற்படுகின்றன எனலாம். மட்டக்களப்பு இந்துக் கோயில்களை மூன்று வகைப்பாட்டினுள் உள்ளடக்கலாம். அவையாவன:

1. ஆகம முறைப்படி பிராமணக் குருக்கள் பூசை செய்யும் ஆலயங்கள்.
2. பத்ததி முறையில் தீட்சை பெற்ற பூணூல் அணிந்த சைவசமய குருக்கள் பூசை செய்யும் ஆலயங்கள்.
3. பூணூல் அணியாத பூசாரி ஆகியோர் பூசை பண்ணும் ஆலயங்கள் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை விட வீடுகளிலும் பூசை பண்ணுகிற முறைகளும் இங்கு காணப்படுகின்றன.

இந்த வகையில் ஆகம முறையில் அமைந்த ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் சூரன் போர் போன்ற நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இவை பார்வையாளர் மத்தியில் ஒரு சடங்காகவே நிகழ்த்திக் காட்டப்படுகின்றன. இதனை நாடகம் என்று எவரும் எண்ணுவதில்லை. சூரபத்மனுடன் முருகன் செய்த போரையும், சூரனை முருகன் வதைத்து அவனைச் சேவலாகவும், மயிலாகவும் மாற்றி அருள் கொடுத்த கதையையும் கோயில் வெளியில் நிகழ்த்திக் காட்டும் நிகழ்ச்சியே சூரன் போர் ஆகும். இது ஒரு சமய நிகழ்வாகவே இங்கு நிகழ்த்தப்படுகின்றது. இவ் நிகழ்வு கோயிலின் பெரு வெளி அரங்காகக் கொண்டு மரத்தினாற் செய்யப்பட்ட பிரமாண்டமான சிலையினை ஒருசாரார் வீதி வெளியிற் காவிக் கொண்டு நிற்க முருகன் திருவுருவை இன்னொரு சாராற் காவிக் கொண்டு வர நிகழ்த்தப்படும் அவைக்காற்றுகையாகும். வீரபாகு, பூதகணங்கள், தேவ கணங்கள் ஆகியோருக்குச் சில குறிப்பிட்ட மக்களே வேடமேற்றிருப்பர். வீரபாகு தேவர் சூரனிடம் தூது செல்வார். சூரனிடம் வாதிடுவது போல் சூரன் சிலையை தாங்கியவர்களிடம் கூறுவார். மீண்டும் வந்து முருகனிடம் போருக்குப் போகும்படி கூறுவார். இங்கும் கோயிலின் வெளி வீதியைச் சுற்றி போர் நிகழும். பின்பு முருகன் வேலை எறிந்ததும் சூரனின் தலையை இச் சிலையை தாங்கியவர்களில் ஒருவரே அறுப்பார். (ஐயரே வேலை எறிவார்) இறுதியில் சூரன் மாமரமாக வருவான். இங்கு கோயில் குருக்களே வேலினால் மாமரத்தைப் பிளப்பார். அப்போது மாமரம் சரியும். இவற்றுடன் இக் காட்சி நிறைவு பெறும். இந் நிகழ்வினை எவரும் நாடகம் என்று கருதுவதில்லை. எனினும் இவை அவைக்காற்றுக் கலைக்குள்ளே அடங்கும்.

இரண்டாவது வகைக் கோயில்களான தீட்சை பெற்ற பூணூல் அணிந்த சைவசமய குருக்கள் பூசை செய்யும் ஆலயங்களில் வருடாந்த உற்சவ திருவிழாக்களில், திருவிழாக்களை சிறப்பிக்கும் வண்ணம் இடம்பெறும் கரகம், வசந்தன், கூத்து, கோலாட்டம், கும்மி, நாடகம், பரதநாட்டியம், சங்கீதம் என்பனவற்றை இரண்டாவது வகை அவைக்காற்றுக் கலைகளாகக் கொள்ளலாம்.

இங்கு ஆடப்படும் வசந்தன், கோலாட்டம், கரகம் என்பன ஆரம்பிப்பதற்கு முன் பாடப்படும் வாழ்த்துப் பாடல்கள் இந்துக் கடவுளரை வாழ்த்தி ஆரம்பிப்பதாகவே அமைந்திருக்கும். இதனை விட இங்கு ஆடப்படும் நாடகம், கூத்து, நடனம், சங்கீதம் என்பனவும் இந்துக் கடவுளர் புகழ் பாடுவனவாகவும், அற்புதங்களை எடுத்துக் கூறுவதாகவுமே அமைந்திருக்கும். உதாரணமாக சிறுத்தொண்டர் நாடகம், அல்லி நாடகம், மார்க்கண்டன் நாடகம் என்பவற்றின் உள்ளடக்கம் இந்துமத புராண இதிகாசக் கதைகளைக் கொண்டதாகவே அமைந்திருக்கும். இந்த வகையில் இவ் இந்து ஆலயங்கள் இந்துக் கலைகளை வளர்க்கின்ற ஒரு இடமாக தொழிற்படுகின்றன எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை இரண்டு வகை ஆலயங்களையும் தவிர பூணூல் அணியாத பூசாரி ஆகியோர் பூசை பண்ணும் ஆலயங்களில் இடம்பெறும் மாரியம்மன் காவியம், கண்ணகி ஆலயங்களில் பாடப்படும் கண்ணகி வழக்குரை, விஷ்ணு கோயில்களில் பாடப்படும் கம்சன் அம்மானை என்பன தாளம், உடுக்கு வாத்தியங்களுடன் தெய்வத்திற்கு மடை வைத்து பாடப்படுகின்றன. இவை உண்மையிலேயே மக்களுக்காகவே சிலரால் பாடப்படுகின்றன. இவையும் ஒருவகை ஆற்றுகைக் கலைகளாகவே காணப்படுகின்றன.

இதனைவிட சுவாமி ஊர்வலங்களில் இடம்பெறும் மேளக் கச்சேரிகள் கோயிலின் வெளி வீதியில் இடம்பெறும் பறை மேளக் கூத்தர் ஆட்டம், வில்லுப் பாட்டு என்பனவும் இந்துக் கடவுளர்களை வாழ்த்திப் பாடுவதாகவும், பெருமைகளை கூறுவதாகவுமே சபையோருக்கு ஆற்றுகை செய்யப்படுகின்றன.

இவ்வாறாகவே மட்டக்களப்பு தமிழகத்தில் காணப்படும் இந்துக் கோயில்கள், இங்கு ஆற்றுகை செய்யப்படுகின்ற கலைகள் புராண, இதிகாசக் கதைகளைக் கூறுவனவாகவும், இறைவனை வாழ்த்திப் பாடுவதாகவுமே அமைந்துள்ளன. எனவே இவ்வாலயங்கள் இந்துக் கலைகளை பேணி வளர்க்கின்ற ஒரு நிறுவனமாகவும் தொழிற்படுகின்றன எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்தின் கூத்துக் கலையில் இந்துமதச் செல்வாக்கு

– M.P. ரவிச்சந்திரா B. A. (Hons.) –

மட்டக்களப்புத் தமிழரின் கலை பண்பாட்டு அடித்தளத்தினை நிலைநிறுத்தியுள்ள ஒரு தேசிய கலை வடிவமாகக் கருதப்படும் தமிழ் கூத்துக் கலையானது ஆரம்ப காலத்தில் சடங்கு நிலைப்பட்டதாக இருந்தது. பின்னர் நாடக வடிவமான கூத்துக் கலையாக இது பரிமாணம் பெறுகின்றது.

இறை நம்பிக்கையை அடிநாதமாகக் கொண்டு உருவாக்கம் பெற்ற இச்சடங்குகள் சமுதாய மாற்றப் போக்குகளுக்கு இசைந்து கலைவடிவமாக உருப்பெறுவதை அவதானிக்க முடிகின்றது. இந்த வகையில் இக் கூத்துக்கள் மட்டக்களப்புத் தமிழரிடையே பண்டு தொட்டு வழங்கி வருகின்றன.

மட்டக்களப்புத் தமிழரிடையே ஆடப்படும் கூத்துக்களிடையே பாடல் வகைகள், கதைப் பொருள், கதைப் போக்கு, கூத்து நிகழ்த்தப்படும் முறைமை என்பவற்றுக்கிடையே ஒருமைப்பாடு உண்டு. ஆயினும், பிரதேச வேறுபாடுகளுக்கு அமைவாக அவ்வப் பிரதேசங்களின் தனித்துவங்களை இக்கூத்துக்கள் உள்வாங்கி நிற்கின்றன. இந்த வகையில் மட்டக்களப்புத் தமிழர்களாகிய இந்துக்களிடையேயும், கிறிஸ்தவர்களிடையேயும், முஸ்லிம்களிடையேயும் ஆற்றுகைக்குட்பட்டிருக்கும் இக்கலைவடிவமானது மதநிலைப்பட்ட கோட்பாடுகளின் அடியாக அதன் உள்ளார்ந்த பண்புகளை உட்பலமாகக் கொண்டு துலங்குகின்றன எனலாம். இப்பின்புலத்தில் நின்று மட்டக்களப்புத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தின் கூத்துக் கலை வடிவத்தில் இந்துமதக் கருத்துக்கள் செல்வாக்குப் பெற்றிடும் நிலையை நோக்குவது பொருத்தமுடையது எனக் கருதுகின்றேன்.

மட்டக்களப்புக் கூத்துக்களில் கிறிஸ்தவ மதக் கருத்துக்களைக் கதைக் கருவாகக் கொண்டு உருவாக்கப்பட்டவைக்குச் சிறந்த சான்றாக ஞானசவுந்தரிநாடகம், ஜெனோவா நாடகம், பாஸ்கா கூத்து போன்றவற்றைக் கருதலாம். இங்கு இக் கலைவடிவத்தின் கருத்துக்கள் வேதாகமக் கதைகள், திருப்பாடுகள் இவற்றினூடான மதமாற்றக் கருத்துக்கள் தீமையை ஒழித்து நன்மையை நிலைநிறுத்தும் தத்துவ போதகங்கள், இறை போதனைகள், புதுமைகள், தியாகங்கள் என்ற பின்னணியில் வியாபித்திருப்பதை அவதானிக்கலாம். இக்கூத்துக்களில் கடவுள் பாத்திரத்திற்கு மரியாதை கொடுக்கும் விதத்தில் அப்பாத்திரம் ஏற்று ஆற்றுகை செய்பவருக்கு ஆட்டம் மிக மிகக் குறைவாக அரிதாக இருக்கும். இக்கூத்துக்களில் தான் ஆர்மோனியம் - டொல்கி போன்ற வாத்தியக் கருவிகள் பயன்படுவதை நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது எனலாம்.

இதேபோல் தான் மட்டக்களப்புத் தமிழகத்தில் வாழ்கின்ற இஸ்லாமிய மக்களிடையேயும் அப்பாஸ் நாடகம், அலிபாதுஷா நாடகம் போன்றவை ஆற்றுகை செய்யப்பட்டன ஒரு காலத்தில்.

இந்தத் தளத்திலிருந்து சற்று வேறுபட்ட முறைமையில் மட்டக்களப்புத் தமிழ் இந்துக்களின் கூத்துக்கள் அமைந்திருக்கின்றன. மட்டக்களப்பு கூத்துக்களில் மத்தளம், தாளம் போன்ற கருவிகள் பக்கவாத்தியக் கருவிகளாக பயன்படுத்தப்படுகின்றன. ஆட்ட முறைமைகளில் பிரதேசத்திற்குப் பிரதேசம் சிறு சிறு வேறுபாடுகள் நிகழ்வதைக் காணலாம். இதற்கு பிரதேச வேறுபாடுகளும் அக்காலகட்ட சமூகப் பொருளாதார அரசியற் சூழ்நிலைகளும் காரணமாக இருக்கக் கூடும். ஆயினும், இப்பிரதேசங்களில் ஆற்றுகைக்குட்பட்ட வடமோடி, தென்மோடிக் கூத்துக்களில் வடமோடிக் கூத்துக்கள் இந்துசமயத் தத்துவங்களைப் போதிக்க, தென்மோடிக் கூத்துக்கள் உள்ளூர் வீரசாகசக் கதைகளைக் கூறுவனவாக அமைந்தன எனலாம். இந்த வகையில் மட்டக்களப்பில் ஆடப்பட்ட தென்மோடிக் கூத்துக்கள் முப்பத்திநாலு என்றும், வடமோடிக் கூத்துக்கள் எழுபத்தியிரண்டு என்றும் கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் தமது மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் எனும் ஆய்வு நூலில் வரையறுத்துக் காட்டியுள்ளார் (பக்கம். 279). இவ் ஆற்றுகை வடிவங்களில் தொண்ணூறு வீதமானவை இந்துமத தத்துவங்களை வலியுறுத்துபவையாக அமைந்திருப்பதைக் காணலாம்.

மட்டக்களப்புத் தமிழகத்தில் ஆடப்பட்ட வடமோடிக் கூத்துக்களில் இந்து தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட புராணக் கதைகளில் கந்தபுராணக் கதைகள், பெரிய புராணக் கதை, விநாயக புராணம், பாகவத புராணம், மார்க்கண்டேய புராணம், கருட புராணம் போன்ற கதைகளும், கற்பனைக் கதைகளும், இராமாயணக் கதைகளும் அவற்றின் கிளைக் கதைகளும் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியக் கதைகளும் இக்கூத்துக்களின் கருப் பொருளாக விளங்குகின்றன. சிவன், திருமால், கிருஷ்ணன், முருகன், விநாயகர், அம்மன் போன்ற தெய்வங்கள் முழுமுதற் பொருளாகச் சித்தரிக்கப்படுகின்றன எனலாம்.

காத்தவராயன், வாளபிமன், மார்க்கண்டன், இராமர் கதை, விசய மனோகரன், பாரதப் போர், கர்ணன் போர், பாஞ்சாலி சபதம், அனுவுருத்திரன் கூத்து, ஆடக சவுந்தரி, அருச்சுனன் தபசு, இராம நாடகம், சித்திரபுத்திரன் நாடகம், ஸ்ரீ கணேசர் கல்யாணம், சிறுத்தொண்டன் நாடகம், நரகாசுரன் வதை, நாரதர் கலகம், ஜெயசீலன் தீர்த்த யாத்திரை, கண்ணகியம்மன் நாடகம் எனப் பல கூத்துக்கள் ஆற்றுகைக்குட்பட்டிருந்ததைக் காணலாம்.

இந்தப் பின்புலத்தில் நின்று மட்டக்களப்புத் தமிழர்களின் பண்பாட்டு அடித்தளத்தை நோக்குகையில் மட்டக்களப்புத் தமிழர்களின் கலைத் தளத்தில் அவர்களின் இந்துமதப் பண்பாட்டுத் தளம் ஆழ வேரோடியிருப்பதை செவ்வனே அவதானிக்கலாம். அக்காலகட்ட மக்களின் கிராமியச் சூழலை அவர்களது நம்பிக்கையை அதன் அடிநாதமான சடங்கு நிலைப்பட்ட இந்துமத அனுஷ்டானங்களை அதற்காக அப் பயிலுகையை மேற்கொண்ட முறைமையை இந்த ஆற்றுகைக் கலை வடிவங்கள் ஊடாக அவதானிக்கலாம்.

இந்த வகையில் மட்டக்களப்பு தமிழர்களது இக்கலை வடிவத்தில் சைவ, வைஷ்ணவ சித்தாந்தக் கருத்துக்கள் வணக்க முறைமைகள், வரமருளல் அடியவர்களுக்கு ஏற்படும் சோதனைகள், வேதனைகள், துன்பங்கள், அற்புதங்கள் ஊடாக உலகம் நிலையற்றது, செல்வம் நிலையற்றது, விருந்தோம்பலின் சிறப்பு, பக்தி உணர்வு போன்ற பல்வேறுபட்ட இந்துமத தத்துவங்கள் போதிக்கப்பட்டன. மேலும் இறைவன் எங்கும் வியாபித்திருப்பவர், இரக்கம் கொண்டவர் என்பதையும் உலகில் நன்மைகளை நிலைநிறுத்தி தீமைகளை அழித்தொழிப்பவர் என்பதையும் அதற்காகவே அவர் யுகம் தோறும் அவதாரம் எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதையும், தீமையின் வடிவங்களாக அசுரர்களையும் அரக்கர்களையும், துஷ்ட தெய்வங்களையும் உருவகிக்க மிகக் கொடூரமும், அவலட்சணமும் மிகுந்த தோற்றங்களை உடையவர்களாகவும், கோரமானவர்களாகவும் இத்திய பாத்திரங்களைப் படைப்பித்திருக்கின்றனர். மேலும், இறைவன் நல்லவர், வல்லவர், அனைத்தையும் அறியக் கூடியவர், உலக உயிர்களின் மட்டில் மிகுந்த இரக்கம் உள்ளவர் இந்த உயிர்களுக்கும் தம்மீது அன்பு கொண்ட அடியவர்களுக்கும் துன்பம் தோன்றும் போது அவர் ஒரு பொழுதும் பொறுத்துக்கொள்ள மாட்டார் எனவும் தீயதன் கொடுமை ஒழிக்க இறைவனும் மிக ஆவேசமான நிலையில் அவதாரம் எடுப்பார் என்பதனை அக்கால சமுதாய சூழலுக்கு விளங்கக் கூடிய எளிய முறைமையில் இக் கடவுள் பாத்திரங்கள் படைக்கப்பட்டன எனலாம்.

கல்வி அறிவில்லா பாமரனுக்கு அக்காலகட்ட அறிவுசார் கலைஞர் தமக்கு விளங்கிய முறைமையில் இந்து சமய தத்துவக் கருத்துக்களால் போதிக்க இக்கலை வடிவினூடாக இப்பாத்திரப் படைப்புக்களைப் படைத்தனர் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால்தான் இக்கலை வடிவத்தின் ஆற்றுகையின் முடிவுகள் பெரும்பாலும் இறைவன் காட்சி அளித்து வரமருள்வதும், தீமையை ஒழித்து வாகை சூடுவதும் கதை முடிவு சுபமாக முடிவதும் இறைவன் அடியவர்களை ஒரு போதும் கைவிடுவதில்லை என்பதும் வலியுறுத்தப்பட்டு இந்து மதச் சித்தாத்தங்கள் பிரசாரப்படுத்துவதோடு பக்தியுணர்வையும், இறைவழிபாடு மீது மிகுந்த ஈடுபாட்டையும் ஏற்படுத்தும் நோக்கமாகவே அமைந்தன எனலாம்.

இதனால்தான் இக்கூத்துக்களின் ஆரம்பத்திலும் இறுதியிலும் காப்பு பாடும் முறை, வணக்கம் செலுத்தும் முறை என்பன இறைவழிபாட்டை அடிப்படையாகக் கொண்டு எந்த ஒரு நிகழ்வையும் ஆரம்பிக்கும் போதும், நிறைவு செய்யும் போதும் அவை பின்பற்றப்பட வேண்டுமென்ற சிந்தனையும் தோன்றுகின்றது எனலாம். இதற்கு அத்திவாரமிட்டது இந்த மட்டக்களப்புத் தமிழ்க் கூத்துக்கலை எனலாம்.

இந்த வகையில் மட்டக்களப்பு தமிழரின் கலைப் பண்பாட்டுத் தளத்தின் தன் அடையாளமாக ஈழத் தமிழரது தேசிய கலை வடிவமாக கருதப்படும் கூத்துக் கலையில் தொன்று தொட்டு வழங்கி வந்த சடங்கு நிலைப்பட்ட இந்துமதக் கருத்துக்கள் சடங்கில் நம்பிக்கை இழந்த சமூக அமைப்பினர் தோன்ற தமது இந்துமதக் கோட்பாடுகளையும் கருத்துக்களையும் செவ்வனே பாதுகாக்க சடங்கிலிருந்து நம்பிக்கை இழந்த சமூகத்தில் கலைசார் பார்வையான இவ்வடிவத்தைப் பயன்படுத்தி அதனூடாக தமது இந்துமத நம்பிக்கைகளை, தத்துவங்களைப் பிரசாரப்படுத்த முனைந்தனர் எனலாம்.

எனவேதான், நம்பிக்கையின் அடியில் இருந்து உருவாக்கம் பெற்ற சடங்கில் நம்பிக்கை இழக்க, அந்த நம்பிக்கையிழந்த சமுதாயத்தின் மத நம்பிக்கையை வளர்க்கும் ஒரு கலைவடிவமாக இந்தக் கூத்து சடங்கிலிருந்து உருவாகின்றது எனலாம். இதனால்தான் இக் கலை வடிவக் கருத்துக்கள் இந்தப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு மட்டக்களப்புத் தமிழரின் கலைவடிவத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இந்த முறைமை பற்றிய ஆழ, அகலமான தேடல் இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முன்பே பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துக்கோயில்களில் பாவிக்கப்படும் இசைக்கருவிகள்

– சு. பிரியந்தினி B.A. (Hons.) –

இசைக்கருவிகளுக்கும் இசைக்கும் மதபேதமோ இனபேதமோ கிடையாது. மட்டக்களப்பு இந்துக்கோயில்களில் பாவிக்கப்படும் இசைக்கருவிகளிலும் இத்தகைய பேதத்தினை நாம் காணமுடியாது. மட்டக்களப்பு இந்துக்கோயில்களில் காணப்படும்வழிபாட்டு முறையினை ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறை என்றும் ஆகமம் சாராத வழிபாட்டு முறை என்றும் பிரித்துப் பார்க்கலாம். இவ்விரு வழிபாட்டு முறைகளின் போது சில தனித்துவமான இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆகமம் சார்ந்த கோயில்களில் நடைபெறும் விழாக்களின் சகல விடயத்திலும் இசைக்கருவிகள் பங்கெடுப்பதனைக் அவதானிக்கலாம். ஆலயங்களில் நடைபெறும் நித்திய பூசைகள் நைமித்தியபூசைகள், உற்சவவிழாக்கள் மற்றும் விசேட விழாக்களின் போது நடைபெறும் பூசைகளில் தவில், நாதஸ்வரம், சல்லரி, சுருதிப்பெட்டி, பஞ்சமணி, சங்கு போன்ற இசைக்கருவிகள் முக்கியம் பெறுகின்றன. நைமித்திய பூசைகள் நடைபெறும்போது விசேட மந்திர உச்சாடனத்துடன் இவ் இசைக்கருவிகள் எல்லாம் சேர்ந்து ஒலிக்கும் ஒரு தன்மையினைக் காணமுடிகிறது.

அடுத்து ஆலயங்களில் விசேட விழாக்களின் போதும் திருவிழாக்களின் போதும் பல்வேறு விதமான நிகழ்வுகள் இடம்பெறும். அவ்வாறன வேளைகளின் போது இவ் இசைக்கருவிகள் இசைக்கப்படுவதனைக் காணலாம். சுவாமி வீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம் வரும்போது வேட்டைத்திருவிழா, தீர்த்தத்திருவிழா போன்ற வேளைகளிலெல்லாம் மந்திர உச்சாடனங்களைவிட இறைவனின் துதிப் பாடல்கள், பக்தி பாடல்கள், பஜனைப் பாடல்கள் என்பன பக்தர்களாலும் அதற்கென அமைக்கப்பட்ட பஜனைக்குழுக்களாலும் பாடப்படும். இவ்வேளையில் பக்க வாத்தியங்களாக தவில், நாதஸ்வரம் என்பன முக்கியம்பெறுகின்றன. இப்பக்கவாத்தியங்களின் இசை ஒலியுடன் மணியொலி, சங்கொலியும் சேர்ந்து இசை எழுப்புவதைக் காணலாம்.

இதனைவிட சிலசமயம்சுவாமி ஊர்வல வேளையில் காவடி, கும்மி போன்ற கிராமிய நடனங்களும் அதற்குரிய பாடல்களும் பாடப்படும். அவ்வேளையின் போது சிலசமயங்களில் நாதஸ்வரம் இங்கு பங்காற்றுவதனைக் காணலாம்.

நாதஸ்வரத்தின் இசைக்கு ஏற்ற வகையிலேயே தவில் வாசிக்கப்படுகின்றது. இறைவன் உலாப்புறப்படுமுன்னும் மண்டகப்படி தீபாராதனை நேரத்திலும் நாதஸ்வரத்தில் தேவாரம் ஒலிப்பதனைக் காணலாம். தவில் அலாரிப்பு கண்ட நடையில் வாசித்தவுடன் நாட்டை ராகம் நாதஸ்வரத்தில் கணீரென ஒலிக்கும். தேர் புறப்படும் போது மல்லாரி வாசிப்பதுமுண்டு. இறைவன் கோயிலை அணுகியதும் சக்தமேளம் வாசிப்பது நாதஸ்வரத்தின் தனிப்பெருமை. இத்தகைய முறையினை ஆகமம் சார்ந்த கோயில்களில் காண முடிகிறது. தவில், நாதஸ்வரம், சல்லரி, மணி, சுருதிப்பெட்டி போன்ற இசைக்கருவிகள் ஆகமமுறை சார்ந்த கோயில்களில் சிறப்புப்பெற்றிருந்தாலும் ஆகம முறை சாராத கோயில்களில் முக்கியம் பெறும் பறையும் ஆகமம் சார்ந்த கோயிலில் இரண்டாவது வாயிலில் வைத்து வாசிக்கப்படுவதனை மாமாங்கேஸ்வரர் கோயில், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில், மண்டூர் கந்தசாமி கோயில்களில் காணமுடிகிறது. ஆனால் கோயில்களில் இவ்வாத்தியங்களை வாசிப்பவர்கள் கோயிலைச் சார்ந்தவர்களாகவே இருப்பார்களே ஒழிய அந்தச் சாதியினைச் சார்ந்தவர்களாக இருக்கமாட்டார்கள்.

ஆகமம் சாராகோயில் வழிபாட்டின் போது பல்வேறு வகையான இசைக்கருவிகள் வாசிக்கப்படுவதனை அவதானிக்கலாம். இதில் முக்கியமாக சிறுதெய்வ வழிபாட்டின் போதே இசைக்கருவிகள் பாவிக்கப்படுவதனைக் காணலாம். இங்கு முக்கிய இசைக்கருவியாக 'உடுக்கு' பயன்படுத்தப்படும். கண்ணகியம்மன், மாரியம்மன், காளியம்மன், பேச்சியம்மன் முதலிய அம்மன் கோயில்களில் சடங்குக்காலங்களில் காணப்படும் காவியம், உருவேற்றம், தாலாட்டு, குளிர்த்திப் பாடல்கள் போன்றவற்றில் இன்றியமையாத இசைக்கருவியாக உடுக்கை விளங்குகின்றது.

இதனைவிட மணி, சிலம்பு, சல்லரி, மத்தளம், பறை போன்ற இசைக்கருவிகளும் பயன்படுத்தப்படுவதனைக் காணலாம். கண்ணகியம்மன் கோயில்களில் கண்ணகி வழக்குரை அதற்குரிய இராகத்துடன் உடுக்கையொலி, சிலம்பொலி போன்ற இசைக்கருவிகளின் உதவியுடன் பாடப்படுவதனைக் காணலாம். இதேபோல் ஒவ்வொரு சிறுதெய்வ வழிபாட்டின் போதும் அதற்கேயுரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவமான இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதனைக் காணலாம். உதாரணமாக செட்டிபாளையம் கண்ணகியம்மன் ஆலயத்தில் வெண்கல உடுக்கின் அற்புதம் பக்தர்களை வியப்படையச் செய்கின்றது.

இதனை விட சடங்கு நாட்களின்போதும் சிறுதெய்வ ஆலயங்களில் வசந்தன் பாடல்களைப் பாடிக் கொண்டு கோலாட்டம் ஆடுவார்கள். இங்கு பாடலின் சந்தத்திற்கேற்ப சல்லரியும், மத்தளமும் இசைக்கப்படுவதனைக் காணலாம். மேலும் கோயில்களில் அம்மன் காவியம், திருப்பொன்னூஞ்சல் பாடல், அம்மன் தாலாட்டு போன்ற பாடல்கள் பாடப்படும் போது உடுக்கும் சிலம்பும் ஒலிக்கப்படுவதனைக் காணலாம்.

இதனைவிட சடங்குகளின் போதும், ஆலயத்திருவிழாவின் போதும் இசைக்கப்படும் பறை மேளமானது குறிப்பாக கண்ணகியம்மன், மாரியம்மன் சடங்குகளில் மட்டுமே இன்று பயன்படுத்தப்படுகின்றது. பறைமேளம் இசைக்கப்படும் ஒழுங்கினை வரவுத்தாளம், அபிஷேகத்தாளம், ஆலயம் சுற்றும்தாளம், பெரியபூசைத்தாளம் என வகைப்படுத்தலாம். இதனைவிட உருவேறி ஆடுபவர்களின் ஆட்டத்திற்கேற்பவும், காவடி ஆடுபவர்களின் ஆட்டத்திற்கேற்பவும் பறைமேளமானது இசைக்கப்படுகின்றது.

"டாங்குடு டாங்குடும் டட்டானம் கெயிட்டுக் கேட்டாம்
டாங்குக் கேட்டாம் ......... டாங்குக் கேட்டாம்"

என ஆலயத்திற்கு வரும்படியும் நாங்கள் ஆலயத்திற்கு வந்துவிட்டோம் என்றும் பறைமேளத்தில் இசைப்பதனைக் காணலாம்.

தெய்வம் ஆடுபவர்களை உருவேற்றும் போது பறைமேளத்தில் ஆட்டத்தாளம் இசைக்கப்படும்.

"வந்துவிடு சன்னதம் ........ எதிரேறு சன்னதம்
வந்துவிடு சன்னதம் ...... வா வா சன்னதம்
வந்திங்க ...... வந்துவிடு சன்னதம்"

என பறைமேளத்தில் இசைக்கப்படும். மேலும் பூசைச்சாமான்கள் பட்டு, வட்டாவடை போன்றன எடுத்துச் செல்லும் போது

"டண்டாம் கேக் கே
டண்டாம் கேக் கே"

என்ற இசையொலி பறைமேளத்தில் ஒலிப்பதனைக் காணலாம்.

ஆலயத்தில் அபிஷேகம் நடந்து கொண்டிருக்கும்போது பூசாரியின் மணி ஒலியுடன் 'டாங்கிடு டண்டாம் டாங்கிடு டண்டாம்...' என இசைக்கப்படும் பறைமேளத்துடன் சேர்த்து சொர்னாளியும் தம்பட்டமும் இசைக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொர்ணாளியின் இசையானது பலவித ஏற்ற இறக்கங்களோடும் இசை லயத்தோடும் வாசிக்கப்படும். இப்பறை மேளமானது குறிப்பாக பறையர் என்னும் சாதியினராலேயே கோயில்களில் இசைக்கப்படுகின்றது.

சடங்கு நாட்களில் ஆகமம் சாராத கோயில்களில் சிலம்பு அம்மனைக்காய் போன்ற இசைக்கருவிகள் முக்கியம் பெறுகின்றன. இவற்றினை காவியங்கள் குளிர்த்திப் பாடல்கள், உருவேற்றம், தாலாட்டுப்பாடல்கள் என்பன பாடுகின்ற வேளையில் கையில் வைத்திருந்து ஒலி எழுப்புவதைக் காணலாம். எனவே சிலம்பும், அம்மனைக்காயும் சிறந்த இசைக்கருவிகளாகக் கையாளப்படுவதனைக் காணலாம்.

இந்த வகையில் மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துக் கோயில்களில் பாவிக்கப்படும் இசைக்கருவிகளை ஆகமம் சார்ந்த கோயில்களில் இசைக்கப்படும் இசைக்கருவிகள், ஆகமம் சாராத கோயில்களில் இசைக்கப்படும் இசைக்கருவிகள் எனப் பிரித்துப் பார்க்கக் கூடியதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் இரு தேர்கள்

– **கலைவாணி கந்தசாமி** B.A. (Hons.) –

## 1. மரச்சிற்பங்கள்

மரச்சிற்பங்களையுடையதாய் கொக்கட்டிச்சோலை சிவாலயத்தின் சித்திரத்தேரும், பிள்ளையார் தேரும் அமைகின்றன. இதில் சித்திரத் தேர் ஆறு சில்லுகளைக் கொண்டுள்ளது. அவை ஆறடி (6') விட்டங் கொண்டவை. அவற்றில் இரண்டு தேரின் அடித்தளத்தில் நடுவில் உள்ளது. இவ்வாறு சில்லுகளை உடைய தேர் நித்தியோற்சவத்திற்குரியதென சைவத் திருக்கோயிற் கிரியை நெறி என்ற நூலில் கூறப்படுகின்றது. இத்தேரானது பதினாறடி நீளமும் அதே அளவு அகலமும் உடையது. அதன் மேல் சித்திர வேலைப்பாடுகளோடு அமைந்த ஐந்து தளங்கள் உள்ளன. இத்தேர் சோடனைகளால் அலங்கரிக்கப்பட்ட நிலையில் இவ்வாலயத்தில் காணப்படும் அறுபதடி உயரமுள்ள கொடிக்கம்பத்தின் உயரத்தை ஒத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. இத்தேரில் பல சிற்பங்கள் அழிந்து இல்லாமல் போய்விட்டன. இவற்றில் காணப்படும் ஒரு சில சிற்பங்களைக் கொண்டே இந்த ஆய்வை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. பிள்ளையார் தேரானது பன்னிரண்டு அடி நீளமும், அதே அளவு அகலமும் உடையது. இதன் மேல் தட்டு, பதினாறடி உயரத்தில் அமைந்துள்ளது. அதன்மேல் மூன்று விதானங்கள் உள்ளன. இத்தேர் சோடனைகளால் அலங்கரிக்கப்பட்ட நிலையில் உயரத்தில் விமானத்தை ஒத்திருக்கும். (சி. பத்மநாதன் : 1994: 42-43) இத்தேரிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பங்கள் அநேகமாக அப்படியே காணப்படுகின்றன. சில சிற்பங்கள்தான் சிதைவுற்ற நிலையில் உள்ளன. இவ்விரு தேர்களைச் சுற்றியும் சிற்பங்கள் காணப்படுகின்றன. அத்தோடு இத்தேர்களில் சித்திர வேலைப்பாடுகளும். அலங்காரங்களும் இல்லாத இடமே இல்லை எனலாம்.

## 2. சித்திரத் தேர்

இத்தேரில் முன்பக்கமாக விளங்கும் மேற்குப் பக்கத்தில் யாளி வடிவமுடைய ஐந்து உருவங்கள் காணப்படுகின்றன. இவ்வைந்துயாளி உருவங்களும் முறையே நடுவில் சிறிய யாளி உருவமும் அதன் மேல் ஒருவன் மேற்குப்பக்கத்தை நோக்கியிருந்து இவ்வியாளி உருவின் தலை மேல் அம்பு போன்ற அமைப்பை வைத்துக் கொண்டிருப்பது போலும் இவருடைய பார்வை கீழ் நோக்கிய விதத்தில் உள்ளது போலும் இச்சிறிய யாளி உருவங்களின் இரு மருங்கிலும் பெரிய யாளி உருவங்கள் இரண்டாக நான்கு உருவங்களும் அமைந்துள்ளன. இக்காட்சி அமைப்பில் யாளி உருவத்தின் மேல் அமைந்துள்ள மனித உருவம், அரசனுடைய தோற்றத்தைக் காட்டுவதாகவும், இவ்வரசன் தான் ஏறியிருக்கும் அவ்வியாளி போன்ற உருவமைப்பைச் செலுத்துவதாகவும் அமைந்துள்ளது.

அத்தோடு தெற்குப்பக்கத்தின் கீழ் பாகத்தில் குதிரைப்படை, யானைப்படை, காலாட்படை போன்றன காணப்படுகின்றன. இதில் போருக்குச் செல்வதற்குரிய தன்மையுடைய குதிரைகள் ஓடுவது போன்றும் போருக்குச் செல்வதற்கு குதிரைப்படை போர்வீரர்கள் அமர்ந்திருக்கக் கூடிய விதத்தில் முதுகின் மேல் ஆடை விரித்துக் கடிவாளம் பூட்டி முன்னங்கால்களை உயர்த்திய நிலையில் வரிசைக்கிரமமாக நிற்பது போன்று செதுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பிளிறும் யானைகள் துதிக்கையை உயர்த்திப் பிடித்த படி குதிரைப்படை போன்றே செதுக்கப்பட்டுள்ளன. மற்றும் சில யானைகள் மரக்கட்டைகளையும், இலைகுழைகளையுடைய மரத்துண்டங்களையும் துதிக்கையினால் தூக்கிக்கொண்டு ஒவ்வொன்றும் எதிர்த்திசையை நோக்கியபடி வரிசைக்கிரமமாகச் செல்வது போன்று செதுக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர காலாட்படை வீரர்கள் அவர்களுக்கேற்ற (வீரர்களுக்குரிய) ஆடையணிந்து தலையில் மகுடம் கைகளில் வாள், கேடயம் போன்றன உடையவர்களாய் ஆவேச முகபாவத்துடன் நிற்பவர்களாயும் யுத்தத்திற்கு ஆயத்தமாக சங்கு ஊதுவது போன்று நிற்பவர்களாயும் குதிரை மீதேறி வாள் ஈட்டிக் கொண்டு சண்டை செய்பவர்களாயும் மற்றும் சில வீரர்கள் நிராயுத பாணியாக நிற்பவர்கள் போன்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இப்போர் காட்சியமைப்பானது அக்காலத்தில் நாட்டு மன்னர்களிடையே நடந்த போர்ச்சம்பவத்தையும் அவர்களிடமிருந்து யானைப்படை, குதிரைப்படை போன்ற படைகளையும் நினைவுபடுத்துவதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சித்திரத் தேரின் வடக்குப் பக்கத்தில் விஷ்ணு சிவன் போன்ற தெய்வங்களின் பல்வேறு வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. நான்கு கைகளுடன் விளங்கும் விஷ்ணு வலது பக்கக் காலை வலது மேற் கையால் பிடித்திருப்பது போன்று இடது கீழ்க் கை தண்டாயுதத்தை ஊண்டிய படியும், இடது மேற் கை வாள் ஏந்திய படியும் கால் ஒன்றைத் தூக்குவதும் அக்காலுக்குக் கீழ் ஒருவன் நிற்பதும் போன்ற காட்சி விஷ்ணு 3 அடி மண் கேட்டு ஓரடி விண்ணிலும், ஓரடி மண்ணிலும், மற்றடியை வைப்பதற்கு இடமில்லாமல் மாபலிச்சக்கரவர்த்தியின் தலையில் காலை வைப்பதற்கு தூக்கும் கதையை நினைவுபடுத்துவதாக உள்ளது. அதனையடுத்து இதே பக்கத்தில் குதிரை முகயாளி, யானை முகயாளி, சிங்க முகயாளி, வடிவங்களும் பூவலங்காரங்களும், நெளிவு சுழிவுகளையுடைய பல்வேறு அலங்கார வடிவங்களும், காணப்படுகின்றன. இவற்றுடன் சிவபெருமானின் பல்வேறு மூர்த்தங்கள் திருவிளையாடல்கள் போன்றன காணப்படுகின்றன. இதில் சிவனின் நடராஜ மூர்த்தம் வலது கீழ் கையில் தடியும், வலது மேற்கை சூலமும், இடது கீழ்க்கை அக்கினியும் இடது மேற்கை மானும் ஏந்திய படி ஒரு காலைத் தூக்கி ஒரு காலை ஊன்றிய படி ஆடும் நடனக் கோலம் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. இதன் இடது பக்க மூலையில் சிவன் இடபாரூடராகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். இதன் அருகில் சிவனது வீரபத்திர உருவம் சித்தரிக்கப்பட்டுள்ளது. இதில் வீரபத்திரர் வலது காலை ஊன்றி, இடது காலைத் தூக்கிய நிலையில் வலது கை கேடயத்தை ஊன்றியும் இடது கை மேலே தூக்கிய படியும் கழுத்தில் பூமாலை சுழன்றாடத் தலையை இடப்பக்கம் சரித்து அகோர முகப் பாவத்துடன் ஆடும் நடனக் கோலத்தில் அமைந்துள்ளார். தேரின் மேற்குப் பக்கத்தில் விஷ்ணுவின் நரசிங்கவதாரம் காணப்படுகின்றது. நரசிங்கர் வாயைப் பிளந்தவாறு வெளித்தள்ளிய கோரப் பற்களுடன் வீராசனமிட்டு இரணியனை மடியிற் கிடத்தி அவனது வயிற்றைப் பிளந்து குடலை வலது கையில் எடுத்தபடியும் இடது கையால் இரணியன் வயிற்றைப் பிளந்தபடியும் காணப்படும் காட்சி அகோர முகப் பாவத்தின் தத்துவரூவத் தன்மையை இச் சிற்பத்தின் ஊடாகக் காட்டுவதாக உள்ளது.

தேரின் மேற்குப் பக்க மூலை ஒன்றில் ஒருத்தியின் உடை தளர்கின்றது. மறுகணமே இடது கையால் கீழிறங்கும் ஆடையை பிடித்துக் கொள்கின்றாள். வலது கையில் மலர் ஏந்திய படி காணப்படுகின்றார். இப்பெண்ணிற்குக் கீழே நிர்வாண கோலத்தில் தலையில் இரு கரங்களையும் கூப்பிய படி நிற்கும், ஆணின் உருவம் காணப்படுகின்றது. இவற்றுடன் இன்னும் சில பாலுணர்வுச் சிற்பங்கள் இம் மேற்கு மூலைப் புறத்தில் செதுக்கப்பட்டுள்ளன.

தேரின் கிழக்குப் பக்கத்தில் பூவலங்கார வேலைப்பாடுகளும் நடன நிலை உருவங்களும் உடலாலும், கைகளாலும் பாரத்தைத் தாங்குவது போன்ற உருவங்கள் தேரின் பாகத்தைத் தாங்கியபடி சிறிய உருவங்களாக தேரின் மையத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் இப்பக்கத்தில் சுகாசனமிட்டு இலக்குமி நாராயணனாக கிருஷ்ணர் இரு கரங்களாலும் புல்லாங்குழலைப் பிடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பவராகவும் அதனை அவரே ரசிப்பது போன்ற உணர்வை வெளிக்காட்டு-வதாகவும் படைக்கப்பட்டுள்ளது.

இவை தவிர இத்தேரின் நான்கு பக்கங்களிலும் பல்வேறு அம்சங்களை வெளிப்படுத்தும் கடவுளின் மூர்த்தங்களும் திருவிளையாடல்களும் சிறிய சிற்பங்கள் மூலமாகவும் பெரிய சிற்பங்கள் மூலமாகவும் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் அனேகமானவை சிதைவுற்ற நிலையில் உள்ளன. பலவற்றை இங்கு காணவில்லை. இவற்றின் முழுமைதன்மையுடைய சிற்பங்கள் சொற்பமாகவே உள்ளன. இதனைக் கொண்டே இந்த ஆய்வினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

## 2. பிள்ளையார் தேர்

எண்கோண வடிவினை உடையதாக பிள்ளையார் தேர் தெற்குத் தென்கிழக்கு, கிழக்கு, வடகிழக்கு, வடக்கு, வடமேற்கு, மேற்குத் தென்மேற்கு, இவ்வாறு எண்கோண அமைப்பில் சிற்பங்களைக் கொண்டு விளங்குகின்றது. இந்த அமைப்பில் தெற்குக்கும் தென்கிழக்குக்கும் இடையில், தென்கிழக்கிற்கும் கிழக்கிற்கும் இடையில், கிழக்கிற்கும் வடகிழக்கிற்கும் இடையில், வடகிழக்கிற்கும் வடக்கிற்கும் இடையில், வடக்கிற்கும் வடமேற்கிற்கும் இடையில், வடமேற்கிற்கும் மேற்கிற்கும் இடையில், மேற்கிற்கும் தென்மேற்கிற்கும் இடையில், தென்மேற்கிற்கும் தெற்கிற்கும் இடையில் என யாளி வடிவங்கள் வெவ்வேறானதாகவும் ஒன்றுபடும் அம்சத்தினை உடையனவாகவும், ஒவ்வொரு திசைகளையும் பிரிப்பனவாகவும் அமைந்துள்ளன. சைவத் திருக்கோயில் கிரியை நெறி என்ற நூலானது "தேரின் அமைப்புகளில்" சதுரவடிவான தேர் நாகரம், எண்கோண வடிவிலான தேர் திராவிடம், வட்டவடிவிலான தேர் வேசரம், அறுகோணவடிவிலான தேர் அத்திரம், என தேர்களின் பல வகை உண்டு எனக் கூறுகின்றது. "பிள்ளையார் தேர்" இந்நூலில் கூறப்பட்டுள்ள எண்கோண வடிவினையுடையதாக இருப்பதால் திராவிட அமைப்பை வெளிப்படுத்துகின்ற-தெனலாம். இதனை இத்தேரில் நடுப்பகுதியில் இருந்து அடிப்பகுதி வரை காட்டும் புகைப்படம் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

இத்தேரின் தெற்குப்புறத்தில் இலக்குமி கணபதி ஆறுகைகளை உடையவராய்விசாரனமிட்டு அமர்ந்துள்ளார். இப்பிள்ளையாரின் இடப்பக்கத்தில் சிவன் ஆலிங்கன மூர்த்தத்தில் எருதின் மேல் சுகாசனமிட்டு காணப்படுகின்றார். சிவனுக்கு நான்கு கைகள் வலது கீழ்க்கை அபயஹஸ்த முத்திரையும் வலது மேற் கை பாசம் ஏந்தியும் இடது கீழ் கை உமையை ஆரோகணித்தபடியும் இடது மேல் கீழ்க்கை மானேந்திய படியும் காணப்படுகின்றது. சிவனின் ஆரோகணித்தலில் அமைந்துள்ள உமை சிங்க கர்ண ஹஸ்தத்தைமலரேந்திய படி வலக்கரம் காட்டியும் இடது கரம் ஜெய ஹஸ்தத்தை உடையதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. உமைக்கிடப்பக்கம் அதிபங்க நிலையில் நான்கு கைகளை உடையதாக ஓர் உருவம் காணப்படுகின்றது. இதற்குத் தெற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில் பிள்ளையார் உருவம் நடுவில் அமைக்கப்பட்டுள்ளது. பிள்ளையாரின் வலப்பக்கம் விஷ்ணு சமபவிக் நிலையில் நான்கு கைகளை உடையவராயும் இடப்பக்கம் ஆண்டாள், வலப்பக்கம் முனிவர் போன்ற உருவத்தையும் கொண்டு விளங்குகின்றார். விஷ்ணுவின் அருகிலுள்ள இரு உருவங்களும் அபளீக் அமைப்பில் காணப்படுகின்றன. தென்கிழக்கு மூலையில் நடுவில் முருகன் நான்கு கைகளை உடையவராக ஸ்தானக நிலையில் மயிலின் மீது சித்தரிக்கப்பட்டுள்ளார். மயிலின் காலின் கீழ் பாம்பு காணப்படுகின்றது. முருகனது வலப்பக்கத்தில் முனிவர் அல்லது அரசர் என்று கூறத்தக்க வகையில் ஓர் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வுருவத்தைப் போன்ற அமைப்பு தென்னிந்திய சிற்ப வடிவங்கள் என்ற நூலில் காணப்படும் இலக்கம் முப்பத்தெட்டுடைய படம் குறித்து நிற்கின்றது. இந்நூலில் அவ்வுருவம் அகத்திய முனிவரைக் குறிப்பதாகக் குறிக்கப்பட்டுள்ளது. தேரில் காணப்படும் உருவத்திற்கும் நூலில் காணப்படும் உருவத்திற்கும் கையமைவு முறையில்தான் வித்தியாசம் தென்படுகின்றது. நூலில் கூறப்பட்டுள்ள உருவத்தின் கைகள் இரண்டும் மணிக்கட்டுடன் முறிந்த நிலையிலும் தேரில் அமைந்துள்ள உருவத்தின் கையமைப்பு முழுமையானதாகவும் உள்ளது. முருகனுக்கு இடப்பக்கத்தில் வலது காலை மடக்கி இடது கால் மடித்து ஊன்றி இடக்கையில் தழுவும் வலக்கை இடது கணைக்காலில் படும்படி தொங்கவிட்டு ஓர் உருவம் அமைக்கப்பட்டுள்ளது.

இத் தென்கிழக்கு மூலையில் மேலே குறிக்கப்பட்டுள்ள உருவங்கள் மூன்றின் வலப்புறத்தில் யாளி வடிவமைப்பு காணப்படுகின்றது. இவ்யாளியின் வலப்புறத்தில் நிமிர்ந்து படுத்திருக்கும் ஓர் மனித உருவத்தின் மீது இன்னோர் மனித உருவம் நெஞ்சில் வலக்காலும் தொடையில் இடக்காலும் ஊன்றியபடி வலது கை சூசிமுத்திரை காட்டவும் இடது கை தண்ட ஹஸ்தத்துடனும் விளங்குகின்றது. இவற்றில் படுத்திருக்கும் மனித உருவம் அதன் மேல் ஏறி நிற்பவரின் பக்கத்தொடையை பிடித்திருக்கின்றது. இவ் ஏறிநிற்கும் உருவத்தின் வலப்பக்கத்திற்கருகில் மேலுடம்பில் இருந்து கணைக்கால் வரை ஆடையணிந்து தலையில் தொப்பி நீண்ட காது, மீசை போன்ற அம்சங்களையுடையவராய் அரசனின் சேவகன் என்று கூறத்தக்க வகையில் வலது கையில் வாள் ஏந்தியபடி இடது கையை நெஞ்சில் வைத்தபடியும் கம்பீரத்தோற்றத்துடன் சித்தரிக்கப்பட்டுள்ளார். இதன் இடப்புறத்தே சிங்கத்தின் மீது நடனமாடும் காளியின் வடிவைக் குறிக்கின்றது. இடக்கை வியாக்கியான முத்திரையும் வலக்கை லோல ஹஸ்தத்தையும் குறிப்பதோடு முகத்தில் கோப உணர்வு பிரதிபலிப்பதாகவும் உள்ளது. இந்த உருவங்களின் வெளிப்பாட்டில் அச்சுறுத்தும் தன்மையும் காமகக் குணத்தை உள்ளடக்கிய நிலையையும் காணக்கூடியதாக உள்ளது.

இத்தேரின் கிழக்குத் திசையில் பாலகிருஷ்ணரின் பல்வேறு வடிவங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. நடுவில் இறக்கைகளையுடைய ஒரு பெண் முழந்தாளில் நின்று நமஸ்காரம் செலுத்தும் பாவனையில் இன்னொரு பெண்ணை இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்களாலும் மேலே ஏந்திய நிலையில் உள்ளாள். மேலே உள்ள பெண்ணுக்கு நான்கு கைகள் முகத்தில் புன்னகை உடையவளாய் காணப்படுகின்றாள். கீழே உள்ள பெண் ஏதோ ஒன்றை ஏற்க செயல்படுவது போன்று பொறுப்புணர்வு மிக்க உணர்வை வெளிப்படுத்துபவளாய் சித்தரிக்கப்படுகின்றாள். இப்பெண்களின் வலப்பக்கம் பாலகிருஷ்ணர் ஒருதலை நாகத்தின் மீது நின்று நடனமாடுகின்றார். இக்காட்சி வாசுகி என்ற பாம்பின் செருக்கை அடக்குவதற்காக அதன் தலையில் காலை வைத்து வாலைக் கையால் பிடித்து நடனமாடிய நிலையை வெளிப்படுத்துவதாக உள்ளது. தேரில் உள்ள சிற்பத்தில் பாலகிருஷ்ணர் வலது காலை பாம்பின் தலையிலும் இடது காலை பாம்பின் முதுகிலும் வைத்து நடனமாடுகின்றார். முகத்தில் புன்னகை வெளிப்படுகின்றது. அச்சத்தை அகற்றி அன்பருக்கு அருள் பாலிக்கும் சாத்வீக திருவுருவமாகக் காட்சியளிக்கின்றார். இத்திருவுருவத்திற்கு வலப்பக்கத்தில் பாலகிருஷ்ண திருவுருவமொன்று ஒரு பசுக்கன்றுடன் வலது கை சூசி முத்திரை காட்டவும், இடது கை கடி ஹஸ்தத்துடன் அமைந்துள்ளது. இவருக்குப் பின்னால் நிற்கும் இப்பசுங்கன்று அவரின் சைகையை அண்ணார்ந்து பார்த்து நாக்கை நீட்டி அன்பாய் அவ்வேண்டு-கோளை செவிசாய்ப்பது போலவும், புன்னகை முகத்தில் ததும்ப பசுக்கன்றை தன் சைகைக்கு உட்படுத்துவது போலவும், சித்தரிக்கப்பட்டுள்ளது, நடுவில் உள்ள பெண்களுக்கு இடப்பக்கத்தில் இடுப்பில் இருந்து கால் சிதைவுற்ற ஓர் உருவம் காணப்படுகின்றது. இதன் இடப்பக்கத்தில் இரு கரங்களாலும் புல்லாங்குழலைப் பிடித்து கண்களை மூடித்தான் வாசிக்கும் இசையைத் தானே இரசித்து வாசிப்பது போன்ற பாவனையில் நின்ற கோலத்தில் பாலகிருஷ்ண உருவம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது, இக்கிழக்குத் திசையில் அமைந்துள்ள பாலகிருஷ்ணர் உருவங்கள் அனைத்தின் உடம்பிலும் ஆடைகள் இல்லை, அத்தனையும் குழந்தை வடிவில் நிர்வாண கோலத்தில் அதன் செயல்கள் ஒவ்வொன்றுக்குமுரிய உணர்வை பிரதிபலிக்கின்ற முகபாவத்துடன் படைக்கப்பட்டுள்ளன.

வடகிழக்குத் திசையில் நடராஜபெருமானின் நடராஜ தாண்டவம் காணப்படுகின்றது. நான்கு கைகளை உடையவராய் இடது மேல் கை அக்கினியும் வலது மேல் கை உடுக்கையும் வலது கீழ் கை அபயஹஸ்தமும் இடது கீழ் கை வீசிய கரமுமாகக் காணப்படுகின்றது. வலது கால் முயலகன் மீதூன்றியும், இடது கால் தூக்கிய திருவடியாகவும் நடன நிலை சித்தரிக்கப்பட்டுள்ளது. சிவனின் இடப்பக்கம் இருகரமும், தலையின் மேல் கூப்பி இடுப்பில் இருந்து முழந்தால் வரை ஆடையுடுத்தித் தியான நிலையில் நிற்கும் முனிவர் இதனையடுத்து சிவனின் வலப்பக்கம் இரு கரங்களையும் நெஞ்சில் இணைத்தபடி இடுப்பிலிருந்து கணைக்கால்வரை ஆடையும் மேற்சட்டையும் அணிந்து பயந்த சுபாவ நிலையிலும் விளங்கும் பெண் உருவம் இப்பெண்ணிற்கு நான்கு கரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வடக்குத்திசையில் நடுவில் பிள்ளையார் உருவம் தொந்தி ஆசனத்தில் படும்படியும் நான்கு கைகளையுடையவராயும் அமைக்கப்பட்டுள்ளது. சுகாசன மூர்த்தத்தில் விளங்கும் இப்பிள்ளையாரின் திருவுருவம் ஹரித்திர கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றழைக்கப்படுகின்றது. இவர் இடது மேல் கைபாசம், இடது கீழ்க்கை மோதகம், வலது மேல் கை அங்குசம், இடது மேல்கை ஒற்றை மருப்புடையவராய் சித்தரிக்கப்பட்டுள்ளன. பிள்ளையாரின் இடப்பக்கம் கௌரி சகித மூர்த்தி காணப்படுகின்றார். இவருக்கு நான்கு கைகள் வலது கீழ்க்கை அபய முத்திரை, இடது கீழ்க்கை கௌரியை ஆரோகணித்தது. வலது மேல்கை மழு, இடது கீழ்க்கை பாசம் போன்றவற்றை உடையவராய் சுகாசன மூர்த்தத்தில் அமர்ந்துள்ளார். சிவனின் இடப்புறத் தொடையில் கௌரி அமர்ந்தவளாய் வலது கை நீலோற்பவ மலரையும், இடது கை தொங்கவிட்டுக் கொண்டு காணப்படுகின்றாள். சிவன், கௌரி இருவர் முகத்திலும் புன்னகை மின்னிடுகின்றது. கௌரி சகித மூர்த்தியின் இடப்பக்க ஆஸனத்தில் அமர்ந்து இரு கால்களையும் குறுங்கால் பின்னிக்கொண்டு வலக்கை அபய முத்திரை காட்டவும், இடது கை ஏதோ ஒரு பொருளை ஏந்தியவாறும் தாடியுடன் தியானநிலையில் இருப்பதாக ஓர் உருவம் சித்தரிக்கப்பட்டுள்ளது. பிள்ளையார் வலப்பக்கம் உத்குடி ஆசனத்தில் வலக்காலை மடித்து இடக்காலை தொங்க விட்டு அபஸ்மாரபுருஷன் மீது ஊன்றியவராக நான்கு கைகளுடனும், மரத்தின் கீழ் தியான தட்சிணாமூர்த்தி உருவம் அமைக்கப்பட்டுள்ளது. இத் தியான தட்சிணாமூர்த்தியின் உருவத்தின் வலப்பக்கத்தில் கௌரி சகித மூர்த்தியின் இடப்பக்கம் இருக்கும் அதே தியான உருவம்காணப்படுகின்றது.

வட மேற்குத் திசையில் வலது காலை மடித்து இடது காலைத் தொங்க விட்டு தலையை விரித்தபடி அகோர முனிவர் தோற்றத்துடன் உடம்பில் ஆடைகள் எதுவுமின்றிய குழந்தையின் இருகால்களையும் இறுகப் பற்றிக் கொண்டு இடது கையால் தலையை ஏந்தி முலைப்பாலூட்டும் காட்சியைக் காணக்கூடியதாகவுள்ளது. இதில் அரக்கியின் அகோர முகபாவம் அரக்கியின் கடைவாய்ப்பற்கள் வெளியே தெரியும் படியும் நாக்குத் தொங்கிய படியும் வெளிப்படுத்தப்படுகின்றது. இக்காட்சியானது பாலகிருஷ்ணருக்கு நச்சுப்பாலூட்டிய பூதச்சியை நினைவுபடுத்துவதாக அமைந்துள்ளது. அரக்கியின் வலப்பக்கத்தில் தலையின் மேல் இரு கரங்களையும் தாங்கி வணங்கியபடி நின்ற நிலையில் ஓர் உருவம் காணப்படுகின்றது. அரக்கியின் இடப்பக்கத்தில் கோப முகபாவத்துடன் நின்ற நிலையில் ஓர் அம்பாள் உருவம் அமைந்துள்ளது.

அம்பாளின் இடப்பக்கத்தில் யாளி வடிவம் காணப்படுகின்றது. இவ்யாளி வடிவத்தின் இடப்புறத்தில் சூலாயுதமும், ஏந்திய படியும் அபயஹஸ்தத்துடனும் நிர்வாண கோலத்தில் இடுப்பில் வில்லும், கடைவாயிரண்டில் இரு பற்கள் வெளியே தள்ளியபடி வெளித்தள்ளிய கண்கள் நீண்ட காதுகளுடன் ஓர் உருவம் நின்ற நிலையில் அமைந்துள்ளது. இவ்வுருவம் வைரவ மூர்த்தியின் திருவுருவமாக இருக்கலாம் எனக் கூறமுடிகின்றது. இவ் வைரவ மூர்த்தியின் இடப்பக்கத்தின் முறையே பெண், ஆண், முனிவர், போன்ற உருவங்கள் காணப்படுகின்றன. பெண் உருவம் வலது கை கடி ஹஸ்தமாகவும், இடது கை அபய ஹஸ்தயாகவும் விளங்காநின்ற நிலையில் கச்சுபந்தனம் மார்பிலும், இடுப்பில் ஆடையும் அணிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுக்குரிய அம்சங்களுடன் ஆணின் வலப்புறத்தில் காணப்படுகின்றாள். ஆண்தலையில் தொப்பியும், உடல் நிறைந்தாடையும் கம்பீரத்தோற்றமும் மீசையுமுடையவராய் இருகரங்களையும் நெஞ்சில் கூப்பிய படி நின்ற நிலையில் காணப்படுகின்றார். இவரிற்கருகில் தாடியுடன் தியான நிலையில் இடுப்பில் இருந்து தொடை வரை ஆடைஅணிந்தவராய் இரு கரங்களிலும் ஏதோ பொருட்களை ஏந்தியவாறு நின்ற நிலையில் முனிவர் போன்ற உருவம் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்குத்திசையில் ஐந்து முகபாவங்களை வெளிப்படுத்தும் ஐந்து தேவிகளின் உருவங்கள் அமைந்துள்ளன. இத்தேவிகள் ஐந்தும் இடது காலை மடக்கி வலது காலைத் தொங்கவிட்டு ஆசனத்தில் ஊன்றியபடி உத்குடியாசனமிட்டு அமர்ந்துள்ளன. நடுவில் வீரத்தன்மையை வெளிப்படுத்துவதான நான்கு கைகளை உடையதான தேவி உரு ஒன்று காணப்படுகின்றது. இத்தேவியின் இடது கைகளில் உடுக்கையும், வர ஹஸ்தமும், வலது கைகளில் அங்குசமும், கத்தியும் காணப்படுகின்றன. இத்தேவியின் இடப்புறம் மெல்லிய சிரிப்புடைய சாந்தமாக முகத்தோற்றத்தையும் வலது கைகள் குடையும் அபய ஹஸ்தத்துடன் நான்கு கைகளை உடையவராய் தேவியின் உரு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்தேவியின் இடப்புறம் சரஸ்வதி தலையைச் சற்று சரித்து வலது கைகள் ஜெபமாலையும் வீணை வாசிக்கும் தன்மையையும் பெரிய இடது கைகள் புத்தகமும் வீணையையும் தாங்கியிருக்க தான் வாசிக்கும் வீணையை இரசித்து வாசிப்பது போன்ற முகபாவத்தையும் அருள்பாலிக்கும் அம்சத்தையும், நான்கு கைகளையும் கொண்டு விளங்குவதாக உள்ளது. வீரத்தன்மையையுடைய தேவியின் இடப்புறத்தில் நான்கு கைகளை உடையதாகவும் முகத்தில் புன்னகை மின்னிட அமைந்திருக்கும் தேவியின் உருவம். இத்தேவி உருவத்தில் வலப்புறத்தில் கரங்கள் கமலமும் அபயங்கள் உடையதாகவும், இடது கரங்கள் கமலமும் வரதமும் உடையதாகவும், கீர்த்தி தரும் அம்சத்தடன் வீற்றிருக்கும் இன்னுமொரு தேவியின் உருவத்தைக் காணக்கூடியதாக உள்ளது. இதில் அமைந்துள்ள ஐந்து தேவிகளின் உருவங்களிலும் ஐவகை உணர்வை சிற்பி தன் செதுக்கல் கலை மூலம் வெளிப்படுத்தியுள்ளமை மிகவும் சிறப்பாக காணப்படுகின்றது.

தென் மேற்குத்திசையில் முப்பரிமாணத் தன்மையுடைய ஓர் உருவம் குந்திக் கொண்டு இரு கரங்களையும் குறுக்காகப் பின்னி இடது முழந்தாளில் இரு கைகளையும் ஒன்றின் மேல் ஒன்றாய் அமர்த்திப்பிடித்தவண்ணம் அதன் மேல் வலப்பக்கம் தலையைச் சரித்து படுத்திருந்து ஏதோ ஒன்றைக் கற்பனை செய்து அதன் மூலம் வரும் இன்பத்தை எண்ணி சிரிப்பது போன்ற மனப்போக்குடன் தத்துபருபமாக படைத்துக் காட்டப்பட்டுள்ளது. உடம்பில் எதுவித ஆடையுமின்றி நிர்வாணக் கோலத்தில் பின் பக்கம் தெரியக்கூடிய வகையில் குந்திக் கொண்டிருக்கின்றது. இதன் விலா என்புகள் எல்லாம் அப்படியே புடைத்துக் காட்டப்பட்டுளளது. இவ்வுருவம் ஆணா? அல்லது பெண்ணா? என்று குறிப்பிட்டுக் கூற முடியாத வகையில் உள்ளது. எனினும் பெண்ணிற்குரிய அம்சத்தைப் பிரதிபலிக்கின்றது எனலாம். இவ்வுருவத்தின் செவி நீண்டு அமைந்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையானது இத்தேரிலுள்ள ஏனைய சிற்பங்களின் செவிகளில் காணப்படாத ஓர் அம்சமாகவுள்ளது. இச்சிற்பத்தின் இடது புறத்தில் நிர்வாண கோலத்தில் நின்று காதல் லீலை புரியும் இரு தம்பதிகளின் உருவம் காணப்படுகின்றது. இத்தம்பதிகளின் முகத்தில் ஓர்வகை இன்ப உணர்வைக் காணக் கூடியதாக உள்ளது. இத்திசையின் இடப்புறத்தில் யாளி வடிவம் காணப்படுகின்றது. இவ்யாளி வடிவத்தில் அருகில் சிதைவுண்ட சிற்பம் ஒன்றும் இதன் இடப்புறத்தே தியான நிலையில் அமர்ந்திருக்கும் உருவம் ஒன்றும் காணப்படுகின்றது.

பிள்ளையார் தேரில் நான்கு திசைகளிலும் உள்ள சிற்ப அசைவுகளை நோக்கின் இத்தேரின் தெற்குத் திசையிலும் வடக்குத் திசையிலும் நடுவில் பிள்ளையாரும், இவரின் அருகாமையில் சிவன், பார்வதி போன்றோரும் காணப்படுகின்றனர். அத்தோடு கிழக்குத் திசையில் பாலகிருஷ்ண வடிவங்களும் மேற்குத் திசையில் தேவிகளின் வடிவங்களும் காணப்படுகிண்றன. சித்திரத் தேரைப் போன்றே பாலுணர்வுச் சிற்பங்கள் இத்தேரிலும் தென்மேற்குத் திசை நோக்கி அமைந்துள்ளது. மற்றும் சித்திரத் தேரில் அலங்காரங்களும் செதுக்கு வேலைப்பாடுகளும் இல்லாத இடமே இல்லை எனலாம். ஆனால் இத்தேரில் செதுக்கு வேலைப்பாடு என்பதும் அலங்காரம் என்பதும் இங்கு அமைந்துள்ள சிற்பங்களிலேதான் அதிகம் காணப்படுகின்றது. சித்திரத் தேர் போன்ற செதுக்கு வேலைகள் அலங்காரங்களை இத் தேரின் எல்லா இடங்களிலும் காண முடியாது. சித்திரத் தேர், பிள்ளையார் தேர் ஆகிய இருதேர்களிலும் அமைந்துள்ள சிற்பங்கள் பெரும்பாலும் உயர் புடைப்புச் சிற்பங்களாகவே இவற்றில் முழுவடிவ சிற்பங்களாக குறிப்பிடக்கூடியதாக யாளி வடிவங்களைக் காணலாம். இவ் யாளி வடிவங்கள் பின்புறம் சற்றுப் பெரியனவாகவும் இருபக்கங்களிலும் முன் புறம் முழுமையாகத் தெரிவனவாகவும் காணப்படுகின்றன. யாளி வடிவங்களில் சிங்கமுகயாளி, குதிரைமுகயாளி, யானைமுகயாளி போன்றவை இரு தேர்களிலும் காணப்படினும் இவற்றில் சற்று வித்தியாசமான அம்சமும் வெளிப்படுகின்றது. சித்திரத்தேரில் அமைந்துள்ள மேற்குறிப்பிட்ட யாளிவடிவங்களின் தன்மையை பிள்ளையார் தேர் உள்ளடக்கியுள்ள போதிலும் யாளியின் மேல் பெண் உருவம் போன்ற ஓர் உருவம் யாளியின் கீழ் உள்ள மனித உருவத்தை ஆயுதமொன்றை ஏந்தி நிற்பது போன்று அமைக்கப்பட்டுள்ளது. சித்திரத் தேரில் அமைந்துள்ள உடலால் கைகளால் பாரம் தாங்குவது போன்ற உருவ அமைப்புக்கள் பிள்ளையார் தேரில் இல்லை. அத்தோடு சித்திரத் தேரில் அதிகளவுமிகச் சிறிய சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தகைய சிற்பங்களை பிள்ளையார் தேரில் காண முடியவில்லை. இவ்விரு தேர்களும் அளவைகளிலும் அமைப்பு முறைகளிலும் வித்தியாசப்படுகின்றன. எனினும் திராவிடத் தன்மையை வெளிப்படுத்தும் எண்கோண அமைப்பாகவே இவ்விரு தேர்களும் உள்ளன. இத் தேர்களின் வடிவங்களுக்கும் சிறிய தேர் பெரிய தேர்களின் தன்மைக்கேற்ப சிற்ப வகைகள் சிற்பங்களின் எண்ணிக்கைகள் அதிகமாகவும் குறைந்தும் காணப்படுகின்றன. சிற்ப அமைவுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மைக்கேற்பவே அமைந்துள்ளன. இவ்விரு தேர்களிலும் உள்ள சிற்பங்களிலும் அதிக வித்தியாசங்களைக் காணமுடியாது. இச் சிற்பங்களில் அநேகமானவை அவ்வவ் உருவங்களுக்கேற்ப உணர்வு வெளிப்படுத்துகின்ற முறையில் சிறப்பிடம் பெறுவதே குறிப்பிடத்தக்க ஒன்றாகும். பிள்ளையார் தேரில் ஒரு சில சிற்பங்கள் இந்த ஆய்வில் உள்ளடக்கப்படவில்லை. காரணம் அவற்றில் தெளிவின்மையும் சிற்பங்கள் சிதைவுற்ற நிலையிலும் காணப்படுவதேயாகும். இதிலுள்ள மற்றைய சிற்பங்கள் இந்த ஆய்வில் உள்ளடக்கப்பட்டுளளன.

மேற்குறிப்பிட்டுள்ள மரத்தினால் செய்யப்பட்டுள்ள தேர்கள் இரண்டும் இலுப்பை மரத்தினால் செய்யப்பட்டுள்ளன. ஏனெனில், இலுப்பை மரம் தண்ணீரிலிருந்தும் மரம் அரிக்கும் பூச்சிவண்டுகளிலிருந்தும் பாதுகாப்பைப் பெறக்கூடியது. காரணம் இம் மரத்திலுள்ள ஒரு வகை எண்ணெய் தன்மையேயாகும். அதனால் இன்றுவரை இத் தேர் பாதுகாப்பான நிலையில் பேணப்பட்டுள்ளது. இத்தேரை இணைக்கப் பயன்படுத்தியுள்ள இரும்புக்கம்பிகள் வலிமை குன்றியதால் இத்தேர்கள் செயற்பாடு நின்று விட்டதோடு இவற்றில் உள்ள சிற்பங்கள் உடைந்து கழன்று விழுந்த நிலையிலேதான் சிதைவுற்றும் அழிவுற்றுமுள்ளதே தவிர பூச்சுகளோ வண்டுகளோ துளைத்த நிலையைக் காணக்கூடியதாக இல்லை. சோழர்கள் இலங்கையை ஆட்சிக்கு உட்படுத்திய போது இலங்கையில் இருந்து இலுப்ப எண்ணெய் கொண்டு சென்று தமிழ்நாட்டில் தெய்வங்களுக்கு விளக்கேற்றியதாகக் கூறப்படும் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கருத்தும் இலுப்பை மர பயன்பாட்டை நிருபிப்பதற்கு சான்றாதாரமாகவுமுள்ளது. புராதன ஆலயமான கொக்கட்டிச்சோலை சிவனாலயத்தில் மரத்திலான தேர்களிலுள்ள சிற்பங்கள் எவ்வெவ் நிலைகளில் எப்படி அமைந்துள்ளன என்ற விபரண மூலம் மரச் சிற்பங்களின் புராதன நிலையைக் குறிப்பிடத்தக்கதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து வாழ்வும்
# இந்துச் சடங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து விஞ்ஞானம்

– எஸ். கிருஷ்ணபிள்ளை (திமிலைத் துமிலன்) B. A. (Hons.) –

இந்தச் சிறிய கட்டுரை இருளிலே தோன்றும் ஒரு மின்மினி ஒளி. இதிலே இந்து தர்மம்,விஞ்ஞானம், இந்து விஞ்ஞானம், இந்து விஞ்ஞானத்தைத் தரிசிக்கக் கூடிய ஒருசில எடுத்துக்காட்டுக்கள் என்பனவற்றிற்கு மந்திரம், மருத்துவம், சோதிடம் என்ற துறைகளினூடாக மெல்லிய ஒளி பாய்ச்சப்படும். இதன் நோக்கம், இந்து தர்மத்தின் இத்துறைகளிலெல்லாம் பரவலாக நுண்ணிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட ஊக்குவித்தலேயாகும்.

## இந்து மதம்

"இந்துமதம் தொடர்ந்து நீடிக்கும் ஒரு இயக்கம்; தேங்கி விட்ட ஒரு நிலையன்று; இயங்கும் ஒரு முயற்சி. முடிந்துவிட்ட முறையன்று, வளர்ந்து வரும் ஒரு பண்பு, நின்றுவிட்ட தோற்றமன்று" என கலாநிதி இராதாக்கிருஷ்ணன் வலியுறுத்தினார்.

இந்து என்றால் என்ன? இந்து என்பது வேதகாலத்துக்கு முந்தியே நிலவி இன்று வரை இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு நதி. அன்று அது சிந்து நதி எனப்பட்டது. இந்து என்பது சிந்து என்பதன் திரிபு ஆகும். கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே அங்கு ஒரு நாகரிகம் நிலவியது. அதுதான் சிந்துவெளி நாகரிகம். சிந்துச் சமவெளியில் வாழ்ந்தோர் தோற்றுவித்தது தான் இந்து மதம்; இந்து நாகரிகம். குமரிக் கண்டம் அல்லது லெமூரியாக் கண்டத்திலே தான் மனிதகுலம் தோன்றியது என்றொரு கருத்துண்டு. அங்கிருந்து உலகின் நாலா திசைகளிலும் குடியேறிய மனிதர் ஆங்காங்கே நாகரிகங்களைத் தோற்றுவித்தனர். பாபிலோனிய மெசபதோமிய, கிரேக்க, சீன நாகரிகங்களாக அவற்றைக் குறிப்பிடுவர். ஆரியர் பரத கண்டத்துள் நுழைந்த போது தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரித்தை விட மேம்பட்ட ஒரு நாகரிகத்தைச் சிந்துவெளி மக்களிடைக் கண்டனர். அவர்களை "அனாரியர்" என்று அழித்தொழித்தனர். ஆனால்,முழுமையாக அது முடியவில்லை. பதிலாக சிந்துவெளி மக்களின் நாகரிக அம்சங்கள் பலவற்றைத் தம்முடைமையாக்கிக் கொண்டனர். சிந்துவெளி மக்களின் ஒரு பகுதியினர் பரதகண்டத்தின் தெற்கிலும் குடியேறினர். அவர்களது செல்வாக்கிற்கு ஈழமும் இலக்கானது. சிந்துவெளி நாகரிகம் முதலியவற்றோடு கலப்புண்ட ஆசியர் பரத கண்டம் முழுக்கப் பரவினர். சிந்துவெளி மக்களிடம் சக்தி வழிபாடு, இலிங்க வழிபாடு, இயற்கை வழிபாடு என்பன இருந்ததாகக் குறிப்பிடுவர். அந்த வழிபாடு முதலியவற்றை ஏற்றுக் கொண்ட ஆரியரும் இந்து சமயத்தவர் - இந்துக்களாயினர். இஸ்லாம், கிறிஸ்தவம் என்பன கால் வைக்காத அன்றைய நிலையில் பரத கண்டம் முழுக்க இந்துக்களே நிறைந்திருந்தனர். எனவே, பரதகண்டம் இந்தியா எனப்பட்டது. மக்களும் இந்தியர் ஆயினர். ஆனால், இன்றைய நிலை வேறு. இந்தியாவில் வாழும் இஸ்லாமியரும் இந்தியர், கிறிஸ்தவரும் இந்தியரே. இந்துமதம் தன்னுள் சைவம், வைணவம், கௌமாரம். காணாபத்தியம், சௌரம், சாக்தம் முதலிய சமயங்களையும் அடக்கியது. தமிழ் நாட்டையும் ஈழத்தையும் பொறுத்து சைவமும் வைணவமும் முக்கியமானவை. அவை வைதீக சமயங்கள் எனப்படுகின்றன. இவை தம்முள் முரண்படாது வளர்வன. ஈழத்தைப் பொறுத்து சைவம் அனாதியானது எனலாம். காரணம், வேதகாலத்தின் முன்பிருந்தே - ஆரியர் வர முன்னரிருந்தே தமிழர் - திராவிடர் இங்கு சுதேசிகளாக வாழ்ந்தனர். இவர்களை ஆரியப் பரம்பரை கூறும் இதிகாசங்களும் புராணங்களும் இயக்கர், நாகர், அசுரர் என்றே வர்ணிக்கின்றன. சைவத் தமிழனாகிய இராவணன் அரக்கனாகக் காட்டப்படுகிறான். பரத கண்டத்தின் தொடர்பாலும் செல்வாக்காலும் ஈழத் தமிழர்கள், (கிறிஸ்தவர், இஸ்லாமியர் தவிர) இந்துக்கள் என்றே அழைக்கப்படுகின்றனர். இந்தப் பின்னணிகளின் அடிப்படையில் நாம் இந்து விஞ்ஞானம் பற்றிச் சிந்திக்கலாம்.

## விஞ்ஞானம்

### விஞ்ஞானம் என்றால் என்ன?

வி + நாயகர் = உயர்ந்த சிறந்த தலைவர். அதுபோல வி + ஞானம் = உயர்ந்த சிறந்த அறிவு என விஞ்ஞானத்துக்கு விளக்கம் தரலாம். இதை மேலும் சற்றுத் தெளிவாகக் கூற முயல்வோம். உலக நிகழ்வுகளை அவதானித்து, வகைப்படுத்தி, அவற்றிடையேயுள்ள உறவுகளை யறிந்துஒழுங்கு செய்த அறிவே விஞ்ஞானம். பாத்திரம் விழுகிறது, புத்தகம் விழுகிறது, தேங்காய் விழுகிறது. இவற்றில் உள்ள பொதுத்தன்மை விழுதல். ஏன் விழுகிறது? அங்கும் ஒரு பொது இயல்பு இருக்கிறது; அதுதான் பாரம் அல்லது கனம். கனமானவை கீழே விழுகின்றன. எனவே கனமானவை கீழே விழுகின்றன என்பது ஒழுங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்பட்ட உயர்ந்த சிறந்த அறிவு - அதுதான் விஞ்ஞானம். இந்த வகையில் நிகழ்வுகளைக் கவனித்து - அவதானித்து, வகைப்படுத்தி, அவற்றிடையேயுள்ள தொடர்புகளை அறிந்து, பொதுமை கண்டு, ஒழுங்குபடுத்தி அறிவு சார்ந்த சிறந்த உயர்ந்த பல அமசங்கள் இந்து சமயத்தில் - இந்து நடைமுறையில் - இந்து நாகரிகத்தில் உள்ளன. விஞ்ஞானத்தைப் பொறுத்து எந்த முடிபும் நிரந்தரமானதல்ல. கால, தேச, வர்த்தமானங்களுக்கேற்ப அந்த முடிபில் மாற்றங்கள் ஏற்படலாம். அவ்வாறான இயல்பும் இந்துமத அம்சங்களில் உள்ளன. எனவேதான் "இந்து விஞ்ஞானம்" என்ற தலைப்பு இக்கட்டுரைக்கு இடப்பட்டது. இனி இந்துமதம் சார்ந்த மந்திரம், மருத்துவம், சோதிடம் என்ற துறைகளில் காணப்படும் விஞ்ஞான இயல்புகள் சிலவற்றை நோக்கலாம்.

## மந்திரம்

"மந்திரிக்கழகு வருபொருளுரைத்தல்" - இதில் மந்திரம் சொல்பவன் மந்திரியாகிறான். இந்த மந்திரம் ஆலோசனையைக் குறிக்கிறது. நாம் குறிப்பிடும் மந்திரம் ஆலோசனையை மட்டும் குறியாது, குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக சக்தி வாய்ந்த சான்றோரால் ஒழுங்குபடுத்தித் தரப்பட்ட சாதனங்களான வார்த்தைத் தொடர்களையும் குறிக்கிறது. இங்கு மேலும் தெளிவுபெற மந்திரம் பற்றி விஞ்ஞான ரீதியான உண்மைகளைக் காணவேண்டும். மந்திரம் என்ற சொல்லோடு சேர்த்து மாந்திரீகம் என்ற மற்றொரு சொல்லையும் நாம் கையாள்கிறோம். மாந்திரீகம் என்னும்போது அச்சொல்லோடு பேய், பிசாசு, கெட்ட தெய்வம், கெட்ட ஆவி என்பவற்றை எடுத்த எடுப்பிலேயே தொடர்பு படுத்திவிடுகிறோம். அதனால் மாந்திரீகனை பில்லி சூனியக்காரன் என்று எண்ணுகிறோம். மந்திரத்தைக் கையாள்பவன் மாந்திரீகன். இந்துமதம் நல்லனவற்றுக்கே மந்திரத்தைப் பயன்படுத்துகிறது. வழிபாட்டுக்கும் மந்திரங்கள் பயன்படுகின்றன. பூசகர்கள் சமஸ்கிருதச் சுலோகங்களை மந்திரமாகக் கையாள்கின்றனர். நமது நாயன்மார்கள் தேவாரப் பதிகங்களையே மந்திரமாகப் பயன்படுத்தி அற்புதங்களைச் செய்துள்ளனர். ஏன் நமது மட்டக்களப்பிலேயே ஒரு குறிப்பிட்ட காலத்தில் மந்திரக்கலை கொடிகட்டிப் பறந்திருக்கிறது. இந்த மந்திரவாதிகளெல்லாம் இந்துமதத்தைச் சார்ந்தவர்களே. அவர்களின் வழித்தோன்றல்கள் இன்றும் உள்ளனர். ஆயினும், "மந்திரத்தால் மாங்காய் விழுத்த முடியுமா?" என்ற வினா பரவலாகக் கேட்கப்படுகிறதே! இதன் காரணம் நமது புதிய பரம்பரையினரிடம் காணப்படும் நம்பிக்கையீனமும் "மந்திரம்" பற்றிய சரியான விளக்கமும் தெளிவுமில்லாமையும்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரம் என்றால் என்ன?

கடவுளை நம்பாத மனோவைத்திய நிபுணர்கள் மனோசக்தியை நம்புகிறார்கள். உதாரணமாக சிறிது காலத்தின் முன் வாழ்ந்த கோவூரைக் குறிப்பிடலாம். அவர் மனநோயாளியை ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கச் செய்து சிகிச்சையளிப்பார். நோயாளியை உறக்கத்தில் ஆழ்த்த அவர் பயன்படுத்தும் சாதனம் அவரிடமுள்ள மனோசக்தியேயாகும். அவர் நீண்டநாள் பயிற்சி மூலம் தனது மனோசக்தியைக் குவியச் செய்யும் ஆற்றலைப் பெற்றிருந்தார். மனோசக்தி பற்றியே அறியாத நமது இந்துமத மந்திரவாதிகள் தமது மனோசக்தியைக் குவியச் செய்ய தெய்வ நம்பிக்கையோடு மந்திரங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பதுதான் உண்மை. அதாவது, அவர்கள் தமது மனோசக்தியை நெறிப்படுத்தி குறிப்பிட்ட இடத்திலே குவியச் செய்வதற்கு மந்திரங்களை ஊடகமாக - சாதனமாக - கருவியாகக் கையாள்கிறார்கள். குறிப்பிட்ட மந்திரத்தை திரும்பத் திரும்ப 108,1008 தடவைகள் உச்சரிக்க அவருடைய மனோசக்திக் குவிவு குறிப்பிட்ட இலக்கைத் தாக்குகிறது. பலநோய்களைத் தீர்க்க இச்சக்தி பயன்படுகிறது. தீயனவற்றை அழிக்கவும் இச்சக்தி பயன்படுகிறது. இந்த மனோசக்தியைத் தமது தெய்வச் சக்தியாக மந்திரவாதிகள் நம்புகிறார்கள். இச்சக்தியை நம்முன் இருக்கும் தெய்வசக்தியாக நாம் கருதுவதிலும் தவறில்லை. "கடவுள் எங்கே இருக்கிறான்? எங்கும் இருப்பான். அப்படியானால் அவன் மனிதனுள்ளும் ஏன் இருக்க முடியாது? கடவுளைப் பற்றிய முடிபுகளில் விஞ்ஞானம் நடுநிலை வகிக்கிறது. அதாவது கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதை விஞ்ஞான ரீதியாக நிருபிக்க முடியாது. ஆயினும் இறுதிநிலையிலே, "பிரார்த்தனை செய்யுங்கள்" என்று மேல்நாட்டு விஞ்ஞானிகள் கூறிவிடுகிறார்களே! ஏன்? கையறு நிலையிலே நமக்கும் மேலான சக்தியைத் தான் சரணடைய வேண்டியிருக்கிறது. இந்து மதத்தவர்கள் வாழ்க்கையில் மந்திரத்தைப் பல சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தினார்கள். நோய்களைத் தீர்க்க, வசியம் பண்ண, வழக்குகளில் வெற்றி பெற, இழந்த பொருட்களைக் கண்டுபிடிக்க, எதிரியை வெல்ல என்று பலவற்றைக் குறிப்பிடலாம். திருநீறு போடுதல், அட்சரம் கட்டுதல், காவற் பண்ணுதல், அஞ்சனம் பார்த்தல், பேயோட்டுதல், பைத்தியம் தீர்த்தல், குறிபார்த்தல் எனப் பலவற்றிற்கும் மந்திரம் பயன்பட்டது. நமது காலத்து நாகரிக வளர்ச்சி காரணமாக இவ்வாறான மந்திரக்கலை இன்று அருகிவிட்டது. நோய்கள் மாத்திரமல்ல பாம்பு தீண்டிய விஷம் இறக்குவதற்கும் மந்திரம் பயன்பட்டது. பாம்பு தீண்டியவனைக் கொணர்ந்த ஒருவன் பாம்புவிஷ வைத்தியனிடம் அச்செய்தியைச் சொல்கிறான். அவன் சொன்ன வார்த்தைகளை வைத்துக்கொண்டே என்ன பாம்பு தீண்டியது, எத்தனை பற்கள் தீண்டின? குணப்படுத்த முடியுமா? இல்லையா? என்பன போன்ற விபரங்களை வைத்தியனால்சொல்லமுடியும். "தூதன் குறி" என்ற ஒன்றை இதற்காக நம் முன்னோர் வைத்துச் சென்றுள்ளனர். இவற்றுக்கெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான ரீதியான விளக்கம் காணப்பட வேண்டும். மந்திரங்களை விட்டுச் சென்ற நமது சான்றோர்கள் அவற்றை அனுபவ ரீதியாக பரீட்சித்துப் பார்த்தே நமக்களித்திருக்கிறார்கள். எனவே அவற்றை ஆராய்ந்து அவை பற்றிய விஞ்ஞான உண்மைகளை வெளிப்படுத்த முயலவேண்டியது நமது தட்டிக் கழிக்க முடியாத கடமையாகும்.

## சோதிடம்

இந்துமத பாரம்பரியம் வளர்த்த கலைகளுள் சோதிடக்கலை மகத்துவம் மிக்கதொன்றாகும். இதன் காரணம் ஜனனம் முதல்மரணம் வரை இந்துக்களின் வாழ்வில் அது செலுத்தும் ஆதிக்கம் எனலாம். நமது சோதிடவியலின் அடிப்படை வானசாத்திரம் தான்.

வானமண்டலமும், அங்கு உள்ளனவும் காலத்தைக் கணிக்க உதவுவதோடு, காலத்தில் நிகழ்வனவற்றையும் கணிக்கப் பயன்படும் அறிகுறிகள் எனக்கருதி காலக் கணியர்கள் சில விதிமுறைகளை வகுத்தனர். அவை அறிவியலாகவும் அறிவியலையொத்தனவாகவுமுள்ளன.

பழங்காலத்தில் பாபிலோனிய, மொசபடோமிய, கிரேக்க, சீன நாகரிகங்களில் சோதிடவியல் சிறப்புற்றிருந்ததோடு வளர்ச்சியும் கண்டது.

இந்துக்களும் சோதிடக் கணிப்பில் பின்நிற்கவில்லை. அவர்கள் 12 இராசிகள், 27 நட்சத்திரங்கள், 9 கிரகங்கள் என்ற அடிப்படையில் சோதிடத்தைக் கணித்தனர், இந்துக்களில் 18 பேர் சோதிட முதல் நூலாசிரியர்கள் எனக் குறிப்பிடப்படுகிறார்கள். அவர்கள் சூரியன், பிரமன், வேதவியாசர், பராசரர், அத்திரி, உரோமர், வசிட்டர், மகரிசி, கௌசலர், யவனர், சௌனகர், மனு, பிருகு, சனகர், ஆங்கீசர், காசிபர், கார்க்கியர், நாரதர் என்போராவர். இந்துமுறைச் சோதிடத்தைக் கட்டமைத்தவர் வராகமிகிரராவார். இவரே பிறதேசத்தவரின் 12 இராசிகளையும் ஏற்றுக் கொண்டு இந்துமுறைச் சோதிடத்தை ஒழுங்கமைத்தார். சங்ககாலத் தமிழகத்திலும் பல சோதிடக் கணியர்கள் இருந்ததற்குச் சான்றுகள் உள்ளன. கணியன்பூங்குன்றனார் என்ற சங்ககாலப் புலவர் ஒரு தலைசிறந்த சோதிடக் கணியராவார்.

இந்துமுறைச் சோதிடத்தில் பிறந்த நேரத்தைக் கொண்டு வரையப்படும் கிரக நிலைப்படம் ஒன்றே ஒருவரின் பிறப்பு முதல் இறப்பு வரையான பலன்களைச் சொல்லக் கூடியதாகவுள்ளது.

இந்துமுறைச் சோதிடத்தில் உள்ள கிரகங்களோடு மேலும் சில கிரகங்களை வானநூல் அறிஞர்களான இன்றைய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளதிலிருந்து சோதிடக் கலையின் அடிப்படைகளை விஞ்ஞான ரீதியானவை என நாம் அறியலாம். சோதிடத்தின் அடிப்படை அம்சங்களை வைத்து சரியாகக் கணிக்கும் போது பலன்கள் சரியாக அமையும் என்பது ஏற்கக் கூடியதே. கணிப்பில் தவறுவிடும் சோதிடர்களால் இந்துமுறைச் சோதிடக்கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிகசிப்புக்கு இடமாகிறது. பகுத்தறிவாளர் ஏபிரகாம் கோவூர் சோதிடக் கலையைப் பரிகசித்த போது சில ஆண்டுகளின் முன் நமது சோதிடக் கலைஞர் சித்தி வினாயகம் ஆசிரியர், அவரை விவாத அரங்குக்கு அழைத்ததும் இறுதியில் அவர் சமுகமளிக்காது விட்டமை இந்துமுறைச் சோதிடக்கலையின் நிலையை நிறுவப் போதுமானது. சோதிடக்கலை விஞ்ஞானபூர்வமானது என்பதை கீழ்வரும் ஒரேயொரு அம்சத்தால் நிலைநாட்டலாம்.செவ்வாய்க் குற்றம் உள்ள ஒருவரை செவ்வாய்க் குற்றமுள்ள ஒருவரே மணக்கலாம். செவ்வாய்க் குற்றம் இல்லாத ஒருவர் மணக்கக் கூடாது என்கிறது இந்துமுறைச் சோதிடம். இதனை இரத்தப் பரிசோதனை மூலம் நிருபிக்கிறது விஞ்ஞானம். இது போன்ற வேறுபல சோதிட அம்சங்கள் விஞ்ஞானபூர்வமாக ஆராயப்பட வேண்டியவையாகும்.

## வைத்தியம்

இந்துக்களில் பல வைத்திய பரம்பரைகள் இருந்ததை நாம் அறிவோம். சித்த,ஆயுள்வேத வைத்திய முறை என அவை பெயர் பெற்றன. இவை மட்டுமல்ல,முறிவு வைத்தியம், கட்டு வைத்தியம், விஷ வைத்தியம் என்று பல்வேறு வைத்திய முறைகளும் இருந்ததை அறிவோம். மேல்நாட்டு வைத்தியம் வந்த பின்னர் இந்த வைத்திய முறைகள் அருகி வருகின்றன. இந்து வைத்திய பரம்பரையில் வந்தவர்களும் மேல்நாட்டு வைத்தியத்தையே கற்கின்றனர். அந்த வைத்தியம் உடனடிச் சுகம் தந்தாலும் நோய்கள் பூரணமாக மாறுவதில்லை. பூரண - நிரந்தர சுகத்துக்கு இந்து முறை வைத்தியமே உகந்தது என்பது ஆய்வுகள் மூலம் நிலைநாட்டப்பட வேண்டும்.

ஆயுள்வேதம் முதலிய இந்து வைத்திய நூல்களைத் தந்தவர்கள் அகத்தியர், போகர், கொங்கணர், உரோமமுனி கருவூரர், இடைக்காடர், திருமூலர், பாம்பாட்டிச் சித்தர், புலத்தியர் முதலியோராவர். இவர்களில் பலர் சித்தர்களாவர். இவர்கள் வெறுமனே வைத்தியம், மருந்துகள் பற்றி எழுதவில்லை. ஆராய்ந்து அனுபவ மூலம் கண்டவற்றையே தந்தனர். அத்தோடு அவர்கள் மெஞ்ஞானிகளாகவுமிருந்தனர். இதயத்துடிப்பையறிய இன்றைய ஆங்கில வைத்தியர் பயன்படுத்தும் சாதனம் அன்று தேவைப்படவில்லை. நாடிபிடித்துப் பார்த்தேயறிந்தனர். அதனை "நாடிக் கவி"யின் முதற் செய்யுள் இப்படிக் கூறுகிறது.

கரிமுக னடியை வாழ்த்திக்
    கைதனில் நாடி பார்க்கில்
பெருவிர லங்குலத்தே
    பிடித்திடும் நடுவே தொட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவிரலோடில் வாதம்
　　உயர்நடுவிரலில் பித்தம்
திருவிரல் மூன்றி லோடில்
　　சிலேட்டும் நாடி யாமே.

இதை இன்றைய ஆங்கில வைத்திய இதயத் துடிப்போடு ஒப்பிட்டுப் பார்த்தால் விஞ்ஞான உண்மை தெளிவாகும்.

இன்று, பலப்பல புதிய புதிய நோய்கள் தோன்றுகின்றன. "எய்ட்" நோய்க்கு இன்னும் சரியான தீர்வு கண்டுபிடிக்கப்படவில்லை. அதற்கிடையில் "சார்க்" நோய் வந்து குலைநடுங்கச் செய்கிறது. மேல்நாட்டு வைத்திய ஆய்வாளர் திணறுகின்றனர். நமது இந்துமுறை வைத்தியத்தில் அகத்தியர் முதல் புலத்தியர் வரையான சித்தர்கள் இவ்வாறான நோய்களுக்குத் தீர்வு கூறவில்லையா? இதை ஆராய்ந்து பார்ப்பது யார்? நான் ஒரு மந்திர, வைத்திய பரம்பரையில் வந்தாலும் அவற்றைக் கற்காத குறையை உணர்கிறேன். அன்று எனது தகப்பனார் தயாரித்த ஒரு குளிசை இன்று ஞாபகம் வருகிறது. அதன் பெயர் "அகத்தியர்குளிசை" என்ன வகைக் காய்ச்சலானாலும் அதை நீக்கும் வல்லமை அதற்கிருந்தது. வேறு பல நோய்களுக்கும் வெவ்வேறு அனுமானங்களுடன் கொடுத்துச் சுகப்படுத்தலாம் - அது ஒரு சர்வரோக நிவாரணி. அக்குளிசை இந்த "சார்க்" நோயைக் குணப்படுத்துமாயிருந்தால்?... இதை யார் ஆராய்வது? அன்றைய மந்திர, வைத்திய வாகடங்கள் எங்கே? யார் யாரோ உடன்பிறப்புக்களாம்... அவை மறைந்து விட்டன.

இந்து முறை சார்ந்த இவ்வித வைத்திய வாகடங்களைத் தேடிப் பெற்று, நுட்பமான வைத்திய முறைகளை ஆராய்ந்து, வெளிக்கொணர யாராவது முன்வந்தால், அது இந்துக்களுக்கு மாத்திரமல்ல. உலக மானுடவர்க்கத்துக்கே ஆற்றும் அளப்பரிய தொண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்தில் சோதிடக்கலை

**– மா. பேரானந்தம் –**

மீன்பாடும் தேன்நாடான மட்டக்களப்பு தமிழகத்தில் நடைபெறுகின்ற உலக இந்துமாநாட்டின் கருத்தரங்கில் இப்பகுதி வாழ் இந்து மக்களின் பண்பாட்டு விழுமியங்களில் சோதிட விஞ்ஞானம் எவ்வகையில் பின்னிப் பிணைந்துள்ளது என்பதை வெளிக்கொணருவது சிறப்பம்சமாகும் சோதிட விஞ்ஞானமானது தென்னிந்தியாவில் தோற்றம் பெற்றது எனினும் இலங்கையிலும் பேணிப்பாதுகாக்கப்படுகின்றது. சூரியன் முதலான 7 கோள்களையும் சாயக்கிரகமான ராகு கேதுக்களையும் 27 நட்சத்திரங்களையும் கொண்டு மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத விடயங்கள் அனைத்திற்கும் சோதிட விஞ்ஞானம் எதிர்வு கூறும் சிறப்பம்சத்தை கொண்டுள்ளது.

## 1. ஜெனன சாதகம்

ஒரு குழந்தை ஜெனன நேரத்தை மையமாகக் கொண்டு குழந்தைக்கான சாதகம் கணிக்கப்படுகின்றது. இதன் மூலம் பெற்றோர்கள் பிள்ளையின் ஆயுள் கல்வி சுகம் ஆபத்துக்கள் பகை வாகனம் தேட்டம் மகிழ்ச்சி தொழில் பெற்றோரின் ஆயுள் அவர்களின் தொழில் முன்னேற்றம் தாய்மாமன் பலன் சகோதரர் பலன் என்பவற்றோடு குழந்தையின் குணாதிசயங்களையும் அறிந்து கொள்வதில் மிகவும் முனைப்பாக இப்பகுதிவாழ் மக்கள் உள்ளனர் என்பதை இப்பகுதி சோதிடர்கள் நன்கறிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 ஏடுதிறத்தல்

பண்டைக்காலம் முதல் சைவசமய மக்களின் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் சோதிட விஞ்ஞானத்தை பார்வதிக்கும் முருகக்கடவுளுக்கும் செவிவழியூடாக உபதேசம் செய்தார். பிரம்மா கார்கி முனிவருக்கும் முருகக்கடவுள் அகத்திய முனிவருக்கும் சோதிட விஞ்ஞானத்தை உபதேசம் செய்த பின்பு முனிவர்கள் ஊடாகவே கல்வி கற்பதற்கான சுபநேரங்களை பின்பற்ற மக்களுக்கு வழிகாட்டப்பட்டது என்பது மரபு. இதில் விஜயதசமியை கணிசமாக இந்துமத மக்கள் பின்பற்ற தொடங்கினர்.

சோதிடக்கலையில் முழுநம்பிக்கை கொண்டுள்ள மட்டக்களப்பு வாழ் இந்துமத மக்கள் குழந்தைக்கு கல்வியை முதன்முதலில் கற்பிப்பதற்கு சரஸ்வதிபூசையின் போதுள்ள விஜயதசமியில் ஏடுதிறந்து வைக்கும் வைபவம் முதல் பாடசாலைக்கு தரம்-01ல் சேர்க்கும் நாள் சுபநேரமாக இருப்பதற்கு சோதிடரை அணுகி அறிந்து கொள்வதில் முக்கிய ஈடுபாட்டைக்காட்டுவதுடன் இதன் பின்பு பரீட்சைகளில் தேறுவதுபற்றி அறியவும் பல்கலைக்கழக அனுமதிக்கும் ஏனைய உயர்கல்வி பாட நெறிமுறைத் தெரிவுவரைக்கும் வழிகாண சோதிட விஞ்ஞானத்தையே நாடி நன்மையும் பெறுகின்றனர்.

## 3. தொழில்

அரச தொழில் தனியார் துறை தொழில் சுய தொழில் அறிந்து கொள்வதற்கு தங்களது ஜெனன சாதகத்தை துணையாகக் கொண்டு சோதிடரைக் கேட்டறிந்து அவ்வகையில் பயன்பெறுவதில் முழுநம்பிக்கை கொண்டவர்களாக கிழக்கு வாழ் இந்து மக்கள் இருப்பதை சோதிடர்கள் அனைவரும் அறிவார்கள். ஜெனன சாதகம் இல்லாதோர் வெற்றிலைக்குறி ஆருடகிரக நிலை மூலம் மேற்படி விடயங்களை அறிவதில் நம்பிக்கை கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

குறிப்பாக விவசாயிகள் பருவகாலத்தையே நம்பியிருப்பதனால் புதுவருடப் பிறப்பின் போது அவ்வருடத்திற்கான மழை மரைக்காலின் அளவு காப்போட்டம் என்பனவற்றை முதலிலே அறிந்து கொள்கின்றனர். இப்பகுதி மக்களின் பழமொழியான "பர்வத்தே பயிர் செய்" எனும் வாக்கியம் மட்டக்களப்பு மக்களில் சோதிட விஞ்ஞானம் வேரூன்றியுள்ளது என்பதை வெளிக்கொணருகின்றது. இங்கு பர்வம் என்பது வளர்பிறையாகும். விவசாயத்தை அனுச நட்சத்திரத்தில் ஆரம்பித்தால் விளைச்சல் அதிகமாகும் என்பதனையும் (இந்நட்சத்திரம் கற்பநாளாகக் கொண்டோர் விவசாயத்தை ஆரம்பிப்பதிலும் விளைச்சல் குறைவாகவே அமையும்) மேலும், ஜெனன சாதகத்தின் மூலம் ஜென்மத்திரைய நட்சத்திரங்கள் மூன்றிலும் விவசாயம் வியாபாரம் கல்வி ஆபரணம் அணிதல் போன்ற சுபகாரியங்களை மேற்கொள்வதிலும் ஆர்வம் காட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. திருமணம்

ஜெனன சாதகத்தின் மூலம் பொருத்தங்கள் பார்க்கப்பட்டு இல்லறவாழ்வை ஆரம்பித்து வைப்பதில் பெரும் பங்களிப்பினை பெற்றோர்கள் சோதிட விஞ்ஞானத்தையே அடிப்படையாகக் கொண்டு செயலாற்றி வருகின்றனர். 14வகை பொருத்தங்களான ஆயுள் விருத்தி, சரீரசுகம், புத்திரப் பேறு, அநுபவ சுகம், அன்பு, குலவிருத்தி, சினேகம், சந்தோசம், மாங்கல்ய விருத்தி, உறவு, புத்திரவிருத்தி, சுகம், வயது நிறைவு, தர்மார்த்த மோட்சம் என்பனவற்றில் நட்சத்திர (ஆயுள் விருத்தி) கணம் (சரீர சுகம்) ராசி (குலவிருத்தி) இரச்சு (மாங்கல்யம்) யோனி(அன்பு)ப் பொருத்தங்களான 5லும் முனைப்பாக கவனமெடுத்து சிறப்பான இல்லறவாழ்வுக்கு வழிகாட்டும் பெற்றோர்கள் மட்டக்களப்பு மண்ணிலே வாழ்வதைக் கொண்டு சோதிட விஞ்ஞானம் மக்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துள்ளது என்பதனை கண்டு கொள்ளலாம்.

காதல் திருமணத்தை ஏற்றுக்கொள்ளும் பெற்றோர்கள் அவர்களது பொருத்தம் பார்த்து குறைகள் இருப்பின் கடவுள் வணக்கம் சாந்தி செய்தல் ஊடாக வழிகாட்டுகின்றனர் என்றால் மிகையாகாது.

தாய்மை எனும் மதிப்பிலே பெண்களை உச்சநிலையில் வைத்து பேணும் முகமாக ருதுசாந்தி(பூப்பெய்தல், பருவமடைதல்) வைபவத்தை பலரிடம் நல்லாசி பெறும் பொருட்டு சிறப்பாக நடாத்தும் பெருமைக்குரியவர்களாக மட்டக்களப்பு இந்துத் தமிழ் மக்கள் உள்ளனர். ருதுவிற்கும் சாதகம் கணிக்கும் அளவிற்கு சோதிடம் இம்மண்ணோடு இணைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## 5. விஷவைத்தியம், ஆயுள் வேதவைத்தியம்

அகத்திய மாமுனிவர் இவ்வுலகிற்கு அளித்தவைத்திய முறைகள் விஞ்ஞான உலகத்திலும் நிலைத்து நிற்பதற்கு நாள் கோள் பார்த்து வைத்தியம் செய்வது ஒரு காரணமாகும்.

இருத்தை, அமாவாசை, பௌர்ணமி தினங்களில் மனநோயாளர்களுக்கு பைத்தியம் அதிகரிப்பது போல் விசம் தீண்டப்பட்டவர்களுக்கும் விஷம் அதிகரிப்பதை அனைவரும் அறிவர். மேற்படி மூன்று தினங்களிலும் சூரியன் (சிவம்) ) சந்திரன் (சக்தி ) ஆகிய இருகோள்களும் பங்குவகிக்கின்றன. ஏனைய கோள்களான செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கோள்களினாலும் ராகு, கேது சாயக் கோள்களினாலும் விஷத்தின் தன்மையை விஷவைத்தியர்கள் தூதன் குறி மூலமும், அவர்கள் நின்ற இடத்தின் ராசி, கோள்களின் பார்வையினாலும் விஷத்தின் தன்மையை அறிந்து அவர்களுக்கு விஷவைத்தியம் செய்யலாமா என தீர்மானிக்கும் அளவிற்கு சோதிடக்கலை வைத்தியத்துறையில் ஆதிக்கத்தைச் செலுத்துகின்றது . ஆயுள் வேத வைத்தியத் துறையில் திதி நட்சத்திரம் இருத்தை பௌர்ணமி ராகு காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகம் என்பனவற்றை அடிப்படையாக கொண்டு சுப நேரத்தில் தூள் இடித்தல், மருந்து உண்ணல் மேற்கொள்வதற்கு ஆயுள் வேதவைத்தியர்கள் வழிகாட்டலில் சோதிடம் வியாபகம் பெறுகின்றது. ஜென்மத்திரயம், கற்பநாள் நட்சத்திரங்களில் மருந்து உண்ணல் தவிர்க்கப்படுகின்றது. எமது மட்டக்களப்பு மண்ணில் அனேக விஷவைத்தியர்களும் ஆயுள் வேதவைத்தியர்களும் கிராமங்கள் தோறும் மக்களுக்கு அரும்பணி ஆற்றுகின்றனர்.

## 6. கட்டிடக்கலை (வாஸ்து சாத்திரம் /மனையடி சாத்திரம்)

சின்னஞ்சிறு குருவி கூட ஒருகூட்டை அமைத்துக் கொள்கின்றது. மனித வர்க்கம் இதற்கு விதிவிலக்காக கட்டிடக் கலையை தங்களது வாழ்வில் இணைத்துள்ளமைக்கு விஷ்வகர்மாவும் மயனும் காரணகர்த்தாவாகின்றனர். விஷ்வகர்மா தேவலோகத்திற்கும் மயன் அசுரர்களுக்கும் கட்டிடக்கலையின் நுட்பங்களை சோதிட விஞ்ஞானத்தின் மூலம் வழங்கியுள்ளதை வேதநூல்கள் கூறுகின்றன.

சமண பௌத்தமதங்களின் ஆதிக்கத்தால் இந்து மதம் நலிவுற்றிருந்த வேளையில் குப்தம் முதல் பல்லவர், சோழர், பாண்டியர், புஸ்பபூதி வம்ச அரசர்கள் ஆலயங்களை சோதிட வழிகாட்டலின் மூலம் எதிரிகளால் தாக்கப்படாத அளவிற்கு கட்டிடநிர்மாணம் செய்வதமைக்கான சான்றுகள் உள்ளது. இதை ஒட்டிய சான்றாக மட்டக்களப்பு மண்ணிலே கொக்கட்டிச் சோலை சிவன் கோவிலும் அமைகின்றது (பிரிட்டிசார் சிவன் கோயிலில் கால் பதித்த போது நடந்த அற்புதம் சான்றாகும்).

இதனையொட்டியே மட்டக்களப்பு தமிழகத்திலும் மனையடி சாத்திரத்தில் கூறப்பட்ட அளவுப் பிரம்மாணங்களைக் கொண்டு பெரும் வீடுகளுக்கும் மட்டுமல்லாது குடில்வீடுகளுக்கும் நிலம் வகுக்கின்றனர். இந்து மதமக்களின் கருத்திலே கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு வாசல் வீடுகள் பற்றிய நுட்பங்கள் அமைந்துள்ளதை காணக் கூடியதாகவுள்ளது.

ஆலயங்களின் நிர்மாணத்தின் போது பிரம்மஸ்தானம், விநாயகர் பதம், முருக காளி பதம், ஈஸ்வர பதம், வைரவ பதம், தேவபதம், மானிட பதம், இராட்சத பதம், பூதபதம், பேய்கள் பதம் என்பவற்றைக் கருத்தாகக்கொண்டே நிலம் பகுக்கப்பட்டு கட்டிடம் அமைக்கப்பட்டு கும்பாவிஷேகம் நடைபெறும் வரை சோதிட விஞ்ஞானத்தின் வழிகாட்டலிலே மட்டக்களப்பு மண்ணிலும் நிகழ்வுகள் நடை பெறுகின்றது.

மேலும் பில்லி சூனியங்களை ஏவிவிடும் மந்திர வாதிகளும் சோதிடத்தின் துணைகொண்டு செயல்படுவதை இம்மண்ணில் காண்கின்றோம் வேதங்களில் ஒன்றான அதர்வண வேதம் மனிதனுக்கு கேடுவிளைவிற்கும் மந்திரங்களைக் கொண்டுள்ளது. அனைத்தையும் ஒப்பு நோக்கும் போது சோதிட விஞ்ஞானம் இன்ப துன்பங்களின் பங்காளியாக அனைத்து விடயங்களிலும் இருப்பதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிப்பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு பொக்கிசக் கலை என்பதை சோதிடர் மட்டுமல்லாது அனைத்து மக்களும் தங்கள் நினைவில் பதிக்கப்பட வேண்டியதொன்றாகின்றது.

உலகின் சமகாலத்தில சோதிட விஞ்ஞானம் தனிப்பெரும் துறையாக விளங்கியுள்ளது. கி.மு 3769 வருடங்களைக் கொண்ட மேற்குலக சோதிடப் பண்டிதர் சேத் என்பவரும், பிரித்தானியாவின் நுண்கலைச்சாலையில் உள்ள பபிலோனிய (கி.மு 5000), கிரேக்க சோதிடமும் இருந்த போதும், மேற்குலகில் மனிதனின் வாழ்க்கையோடு சோதிடக் கலை அதிகளவில் ஆதிக்கத்தை மக்கள் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. இந்தியாவிலும் இலங்கையிலும் குறிப்பாக மட்டக்களப்பு மண்ணிலும் இன்று வரை இந்து மதமக்களோடு இணைந்து செயல் படுவது பெரும்பேறாகும். எனினும் சோதிடர்களும் இந்து மதநெறியியலாளர்களும் கல்வி மான்களும் புத்திஜீவிகளும் இணைந்து ஆலயங்களில் உள்ள குறைகளை தீர்ப்பதற்கும், மக்களைக் குழப்பும் இருபஞ்சாங்கங்களின் சர்ச்சையை தீர்ப்பதற்கும் இரண்டாவது இந்துமத மாநாடு வழிவகுக்கும் என்று எதிர் பார்க்கும் மக்களின் நம்பிக்கைக்கு இசைவாக நடப்போம் என உறுதி பூணுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்தில் மந்திரம்

**– இலக்கிய கலாநிதி வித்துவான் வி.சி. கந்தையா –**

## மந்திர வழக்கு

*தமிழ்ப் புலமையோடு கலை வளங்களும் நிறைந்து விளங்கும் இம் மட்டக்களப்புத் தமிழகம் பண்டை நாளிலிருந்து மந்திரப் பயிற்சிகளாலேயே ஈழத்தின் மற்றையப் பகுதிகளிற் கருதப்பெற்று வந்த ஒரு நாடு.*

*மட்டக்களப்பாரின் மந்திர ஆற்றல் புகழ் பெற்ற ஒன்றாக விளங்கத் தக்கவாறு மந்திர வழக்கும், மந்திரம் கலந்த மருந்துப் பயிற்சிகளும் இங்குள்ளாரின் நாளாந்த வாழ்விலே பின்னிப் பிணைந்திருப்பதாகவே அறிகின்றோம். அதனாலே இந் நாட்டின் பழங்கலைகள் போன்றிருந்த அம் மந்திரம், மருந்து முதலானவற்றைப் பற்றி தனிப்பட நாம் இங்கு காட்டலும் வேண்டியதாயிற்று.*

*மக்கள் வாழ்வில் படிந்து ஊறிப்போன மந்திரப் பயிற்சிகள் காலமயக்கில் விஞ்ஞானக் கலைத் தொடர்பினாலே படிப்படியாக மறைந்து வந்தாலும் மட்டக்களப்பிலே அவற்றின் சுவடுகள் அழிந்து போகாது பதிந்து கிடக்கின்றன. இத் தமிழகத்தின் கிராமப் புறங்களிலே மந்திர வித்தை செலுத்துகின்ற ஆட்சியின்பிடி இன்றும் இருக்கின்றது. பேய்கள் அல்லது கெட்ட ஆவிகள் பிடிப்பதனாலே பெரு நோய்கள் உண்டாகின்றன என்ற நம்பிக்கை உயிர்வாழ்கின்றது. அப்படிப்பட்ட நோய்களை நீக்குவதற்கு மருத்துவச்சாலைகளை விட மந்திர ஓலைகளையே மக்கள் நாடுகின்றார்கள். தமது தகுதிக்கேற்ற நல்ல மந்திரவாதிகளைக் கொண்டு இன்ன பேயினால் இந்த நோய் வந்திருக்கிறது என்று கண்டு அதற்கு மடைபோட்டும், பேயோட்டிக் கழிப்புச் செய்தும் பேயை ஓட்டிக் குணப்படுத்துகின்றனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக மந்திரச்சடங்கிற்கு தொழில் என்ற சிறப்புப் பெயர் மட்டக்களப்பில் வழங்குகின்றது. 'தொழிலாளி' என்ற சொல்லும் இங்கே மந்திரவாதிகளையே குறிப்பிடுவதொன்று. மாலைக் காய்ச்சல் போன்றவையோ அல்லது கைப் பரிபாக முறைகளுக்கு மாறாத வேறு நோய்களோ வந்தால் மக்கள் மந்திரவாதியைக் கொண்டு மந்திரஞ் சொல்லி நாற் சந்தியிலே வைத்து மாலை வேளையில் திருநீறுபோடுவார்கள் மந்திரவாதி நோயாளிக்குத் திருநீற்றை 'ஓதி' (மந்திரித்து) நெற்றியில் பூசுவது 'திருநீறு போடுதல்' என்று வழங்கப் பெறும். அத்தோடு மந்திரித்த தண்ணீரைக் குடிக்கவும், குளிக்கவும் கொடுத்தலும் இவ் வழக்கம் 'தண்ணீர் ஓதுதல்' எனப்படும். இவைகளாலும் தீராதபோது மந்திரவாதி, குறித்த நோய்க்குரிய காரணத்தை அறிய, குறிபார்ப்பான். வாழைஇலை ஒன்றில் நெல்லை அல்லது பச்சையரிசியைப் பரப்பி, வாழைப்பழம், பாக்கு, வெற்றிலை, தேங்காய், எலுமிச்சம்பழம் என்பனவற்றைக் கொண்ட 'மடை' (படைப்பு) ஒன்றனை அதன் மேல் வைப்பான். சிறிய வில்லொன்றை அம் மடைக்கு மேல் ஏந்திய வண்ணம் பிடித்துக் கொண்டு அவ் வில்லின் நாணில் பாக்குவெட்டி ஒன்றைக் கொழுவியபடி மந்திரத்தைத் தொழிலாளி முணுமுணுத்துக் கொண்டே இருப்பான். அந்த வில்லிலே, குறித்த பேயானது வெளிப்பட்டு நின்று நோயாளியை வருத்துவது என்ன என்று அவனுக்குக் குறிப்பிடும் என்பர். இருளன், மருளன், காடேறி, கரையாக்கன், குறும்பறையன், சுடலை வைரவன், கங்கை வைரவன், கலியாண வைரவன், மோகினி, பிடாரி, பேச்சி, பிணந்தின்னி, பிள்ளைகொல்லி முதலிய பல பேய்களுள் எது நோயாளியை வருத்துகின்றது என்பதைத் தெரியப்படுத்துவதோடு, பேயினாலன்றி விதிவசமான நோயினாலேயே துன்பம் நேர்ந்துள்ளதாயின் அதனையும் குறி தெரியப்படுத்தும் என்பார்கள்.

இவ்வாறான மந்திரக் குறி பார்க்கப்பட்ட பின்னரே நாம் முன்னர் காட்டியபடி பேய்க்குச் செய்து கழிக்கும் 'தொழில்' பெரும்பாலும் இங்கு நடக்கும். மட்டக்களப்பு நாட்டு மந்திரங்களுள்ளே பெயர் பெற்று விளங்குவது 'சூனியம்' செய்யும் மந்திரம். ஒருவன் தன் எதிரியினை நோய்ப் படுக்கையிலோ, அன்றி மரணக் குழியிலோ வீழ்த்தும் மந்திரச் செய்கையே சூனியம் எனப்படுவது. சூனியம் செய்தலை, செய்கை என்ற சொல்லாலேயே இங்கு குறிப்பிடுதல் வழக்கு. ஆட்டுச் செய்கை, படு சூனியம், ஏவல் என மேலும் பலவகைப்படுவது இச்செய்கை எதிராளியின் நகம், தலைமயிர் முதலியவற்றைக் கொண்டன்றி வெறும் பெயரை மட்டுமே பயன்படுத்தித் தாம் நினைத்தவற்றை அவன் மீது சாதிக்கவும் வல்ல மந்திரவாதிகளுக்கு மட்டக்களப்பு நாடு பெயர் பெற்றது. தான் குறித்தவனது காலடி மண் சூனியச் செய்கைக்காக எடுத்துக் கொள்ளப்படும். அம் மண்ணைக் கொண்டு செய்யப்படும் படு சூனியம் மட்டுமன்றி, அம்மண்ணை ஒரு பெட்டியில் அடைத்து நீண்ட கயிறொன்றில் தொங்க விட்டு மந்திர வலியினால் அப் பெட்டியினை ஆடச் செய்யும் போதெல்லாம் எதிரியையும் பெரும் துன்பங்களில் மூழ்கி ஆடவைக்கும் ஆட்டுச் செய்கையிலும் இம் மந்திரவாதிகள் மிக வல்லுனராவர். காலடி மண் முதலியவற்றில் மந்திர வலியினை ஏற்றி, இறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடும்பு, ஆமை முதலியவற்றின் மீது அவற்றுடன் மடை வைத்து நீர்க்கரையிலோ, அன்றிச் சுடலையிலோ, எதிரியின் வீட்டுவாசலிலோ இரகசியமாகப் புதைத்து வைத்து அவனை மாறாத பெரு நோய்க்குள் அழுந்தச் செய்வது படு சூனியமாகும். இச் செய்கைக்கு ஆளானவனது எலும்பு கூடப் பூட்டு நெகிழ்ந்து தீராத இன்னலுக்குள் அவன் அழுந்துதல் உண்டு. கோழி, பன்றி என்பவற்றின் மீது மந்திர வலியூட்டி எதிரியை நோக்கி அவற்றை ஏவி விட, அவை சென்று குறித்தவனைத் தாக்கிக் கொல்லவும், கொடிய பேய்களை அவ்வாறு ஏவி அவனைத் துன்புறுத்தவும் வல்ல ஏவற் சூனியகாரர் மிகமிக அச்சத்தை விளைவிப்பார்கள். ஒருவன் செலுத்திய இத்தகைய சூனியப் பேய்களை இன்னொரு மந்திரவாதி அறிந்து தடுத்தலுங் கூடும். இச் சந்தர்ப்பங்களில் மந்திரவாதிகளிடையே பெரிய போட்டிகள் ஏற்படும். தம்முயிர் போனாலும் சரி என்று இருவரும் போட்டியிற் சளையாது எதிர்த்து மந்திரப் போர் இடுதலைக் காணும்போது நமக்கு மயிர்க் கூச்செறியும்.

வேட்டையாடும்போது மந்திர வலி கொண்டு வேண்டிய விலங்குகளை மந்திரவாதி காட்டிடைச் சந்திக்கின்றான். தன் எதிரி சுடும் வெடி குறி தவறிப் போவதற்கும், வெடிபட்டு வீழ்ந்த விலங்குகள் உயிர் பெற்றோடுவதற்கும், செய்ய வல்ல மந்திரவாதிகள் இங்கே உள்ளனர். காடுகளிற் செல்லும்போது கொடு விலங்குகளால் தமக்கு ஊறு வராது காத்துக் கொள்ளவும் மந்திரங்கள் உண்டு. இவை *உடற்கட்டு மந்திரங்கள்* எனப்படும். கொலை குறித்து வந்த யானைகள் மந்திர வலியாற் கட்டுண்டு வலியிழந்து போகும் நிகழ்ச்சிகள் மட்டக்களப்பிலே இன்றும் நடைபெறுகின்றன. சண்டையிலே எதிர்த்தவனுக்கு மந்திரம் சொல்லி அறைதலினால் அவனை இரத்தம் கக்கிச் சாக வைக்கும் நெட்டை மந்திரங்கள் தனி வழிக்குத் துணை செய்வன. மந்திரம் வல்ல வலைஞர், ஆறுகளிற் செல்லும்போது முதலைகளாற் தீங்கு ஏற்படாதிருக்கவும், போதிய மீன்கள் தம் வலையிற் சிக்கவும் செய்கிறார்கள். பாம்புகள் மந்திரவலிக்கு அஞ்சி அகல்கின்றன. கடிக்க வரும் நாயினைக் கூட வாயைப் பிளந்த படியே திரும்பிச் செல்ல வைக்கவல்ல '*உறுக்கும்*' மந்திரங்கள் இந் நாட்டில் சாதாரணமானவை. சில ஊர்களில் இன்னும் மந்திரத்தால் மாடு மேய்க்கிறார்கள். மந்திர ஏவுதலின்படி எந்த விலங்கின் தீங்கும் உறாது மாடுகள் காட்டிற் சென்று மேயவும் மந்திரம் சொல்லி அழைத்தவுடன் '*பட்டி*' (மாட்டுத் தொழுவம்) நோக்கி அவை மீண்டு வரவும் செய்யவல்ல மந்திர வல்லுனர்களான உழவர்களும், இடையர்களும் இன்னும் மட்டக்களப்பில் உள்ளனர்.

பயிர்களைப் பூச்சி புழுக்கள் அழிவு செய்யாமலும், நெல், நிறைந்த பொலிகளங்களை, மழை பெய்து சேதம் செய்யாமலும், நெற்குலைகளைப் 'பூதங்கள்' அள்ளிக் குறைவு படுத்தாமலும் திருநீறு ஓதி நாற்புறமும் வீசுகிறார்கள். மந்திரம் ஓதிய திருநீற்றை எறிவதால் நெற்பயிர்கள் நோய் நீங்கப் பெறுதலோடு 'வாரி'யும் பெருகுகின்றன என்பர். காளி, பேச்சி, வீரபத்திரன் என்ற தேவதைகளுக்குரிய கோயில்களில் மந்திரப் பயிற்சியே நிறைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ப்பலி இடும் வழக்கம் இல்லாத மட்டக்களப்பின் இத்தகைய மந்திரக் கோயில்களிலே பூசினிக்காய் வெட்டுதலே பலிச் சடங்காக நடக்கின்றது. பெரிய திருநீற்றுப் பூசினிக்காய் ஒன்றை மந்திரித்து இரண்டாக வெட்டி இரத்தப் பலி போலத் தன் திறமையால் மந்திரவாதி ஆக்குகின்றான். இதுவரை கூறிய யாவும் ஆக்கத்துக்கும், அழிவைத் தடுப்பதற்கும் மந்திரவித்தை பயன்படுமாற்றை முறையே காட்டுகின்றனவெனினும் மந்திரம் என்ற சொல் பெரும்பாலும் அழிவையும் அச்சத்தையுமே எங்கும் குறிப்பதாயுள்ளது.

இந்தப் பேரச்சத்தின் தொடர்பு மட்டக்களப்பினை நோக்கும் அயலவர் பால் அங்கங்கே இன்னமும் இருந்து வருகின்றது. மட்டக்களப்பு என்றதுமே 'மந்திரம் நிறைந்த நாடு' அது என்று பயப்படுவோர் இல்லாமலில்லை. ஒருவன் தன் எதிரிக்கு மட்டுமே மந்திரவலியினால் தீமை செய்கின்றானெனினும், பொதுவாக மந்திரம் பயின்றோன் தீமைகளுக்கு உடையவன் என்றே கருதப்படுகின்றான். முன்னாட்களிலே வெளியூரவர்கள் மட்டக்களப்பாரோடு உறவு கொண்ட காலத்திலும் மந்திரங் காரணமாக அச்சங் கலந்த ஒன்றாகவே அந் நட்பினை வளர்த்திருக்கிறார்கள். ஆயினும் மந்திரந் தெரிந்த இந்நாட்டு மக்களுங் கூட, தம்மோடு உளங்கலந்து உறவு பூண்டவர்களுக்கு அதன் தீயவலியினைச் செலுத்தாது தாமும் அவரோடு நிறைந்த நட்புரிமை பாராட்டி விருந்து புறந்தருதலிலேயே சிறந்து "வந்தாரை வாழ வைக்கும் மட்டக்களப்பு" எனும் பழமொழிக்கு நாட்டை இலக்காக்கிப் பெருமை படைத்திருக்கிறார்கள். காலாகாலத்தில் தமக்கு ஊறு செய்ய முயன்றோருக்கு மட்டக்களப்பார் மந்திரங்களின் சுவையினை ஊட்டியிருத்தலும் உண்மையேயாகும்.

முன்னர் தாம் கண்ட கொடு வழிகளை விட, வெறும் சீலை நூல் ஒன்றை ஓதி ஒருவன் செல்லும் வழியின் குறுக்கே போடுதல்: எலுமிச்சம் பழம் முதலியவற்றை ஓதி அவனது வீட்டின் மேற் செல்ல எறிதல் : ஒரு பிடி மண்ணை ஓதி அவன் மீது எறிதல் என்பனவற்றால் உரு எதிரியைச் சாதாரணமாகவே துன்பங்களுக்குள் ஆக்குகிறார்கள். பெரும் பணம் படைத்தோரும் உடல் வலி நிறைந்தோரும் கூட இதன் சக்திக்குப் பயந்து கட்டுப்பட்டுப் பொது மக்களுடன் சேர்ந்து நடப்பாராயினர்.

முறை தவறித் தம்மைத் தீண்ட வந்த ஆடவரை அப்படியே 'நில்' என்று 'நெட்டை' சொல்லி மணிக்கணக்காக ஒரே இடத்தில் உணர்விழந்து நிற்க வைத்த மந்திரவாதிகளான பெண்களைப் பற்றிய உண்மைக்கதைகள் பல இங்கே வழங்குகின்றன. கள்வர்கள் வீட்டெல்லையுள் வந்தால் அப்படியே திகைத்து நிற்கச் செய்யும் மந்திரங்களின் வலியினால் இன்னும் சில கிராமங்களில் வீடுகள் காவல் செய்யப்படுகின்றன. கள்வனும் சிறந்த மந்திரவாதியினால் அந்தக் காவல் மந்திரத்தை வென்று வீட்டில் உள்ளவர்களையும், காவல் நாய்களையும் வென்று 'மூதேவி அழைப்பு மந்திரத்தினால்' துயிலுறுத்தி களவெடுத்துச் செல்கின்றான். மந்திரங்களால் எத்தகைய பலம் வாய்ந்த கதவுப் பூட்டுக்களையும் திறக்கவல்ல மந்திரவாதிகள் சிலர் இன்றும் உயிர் வாழ்தலறிவோம். கதவினைத் திறப்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரவேர், மந்திர எண்ணெய் என்பனவும் பயன்படுத்தப்படல் உண்டு. இவை பட்ட மாத்திரத்தே கதவுப்பூட்டுக்கள் தெறித்துத் தாமே திறந்து வழிவிடுதலைக் காணலாம். இவ்வாறு கள்வர்கள் பணப் பெட்டிகளைத் திறப்பதுண்டு. நீதிமன்றங்களில் வழக்குகளை வெல்ல வைக்கவும் மந்திரங்கள் உள்ளன. கூத்துக்களரிகளில் மத்தளம் அடிக்கும்போது, மந்திரம் சொல்லி அதன் ஓசையை ஒரு நூலினால் முடிந்து விடின், உடனே மத்தளம் உடைந்து போதல் நடக்கின்றது. மந்திர உச்சரிப்பினால் ஒருவன் விரும்பும் பெண்ணையும் தன்னிடம் அழைப்பித்துக் கொள்ளுகின்றான்.

நோய் கொண்ட ஒருவரிடமிருந்து பேயை விலக்கும் மந்திரவாதி நடு இரவிலே குறித்தவரது வீட்டிலிருந்து பேயைத் துரத்திக்கொண்டு போய்க் காட்டிலே மந்திரத்தால் கட்டிவிட்டு வருதல் 'கழிப்புப் செய்கை'யாகும் அவ் வேளையில் வழிநெடுக எழுமிச்சங்காய்களை ஓதிப் போட்டு இரண்டாக வெட்டிக்கொண்டே செல்லுவர். பேயானது அக் காய்களைக் கடந்து மீண்டு வராமல் வழிமறிப்புச் செய்யும் இச் செயலுக்குக் '*காய் வெட்டுதல்*' என்று பெயர். காய் வெட்டும்போது மந்திர உச்சரிப்பின் வலிமையால் மடையிலிருக்கும் முதற்காய் அந்தரத்தில் தானே எழுந்து நின்றாடும்.

மந்திரவாதிகளுக்குப் பேயோடு பழக்கம் அதிகம் என்பார்கள். இறுதியிலே அம் மந்திரவாதிகளுக்குப் பேயினாலேயே சாவு நேரிட்ட கதைகளும் உள்ளன. அதனாற் போலும் 'பேயோடு பழகேல்'என்ற பழமொழி வழங்குகின்றது. பேய்களைக் கட்டித் தமக்கு அவற்றை அடிமை கொண்ட மந்திரவாதிகள் அப்பேய்களுக்கு உரிய நேரத்தில் கொடுக்க வேண்டிய பலிகளிற் சிறிதேனும் குறைவு ஏற்படும்போது தாமே அவற்றுக்குப் பலியாகி உயிரிழந்திருக்கிறார்கள். சூனியப் பேய்கள், ஏவற்பேய்கள் என்பன ஒரு மந்திரவாதியின் கட்டளையினை நிறைவேற்றிய பின்னர் தமக்கு அவன் கொடுக்க வேண்டிய 'மடை' (உயிர்ப்பலி, அவியுணவு முதலியவை)களிற் சிறிது குறையுமிடத்தும், தாம் அனுப்பப்பட்ட எதிரியின் மந்திரத்தால் தோற்கடிக்கப்பட்டு மீண்டுவர ஏற்படுமிடத்து ஏற்பட்டவிடத்தும் தவறாது அம் மந்திரவாதியின் உயிரைப்பலி கொண்டு விடுகின்றன. அதனால் மனத்துணிவு நிறையப் பெறாத மந்திரவாதிகள் அவ்வித இக்கட்டான செயல்களில் இறங்குவதில்லை. அவ்வாறு பேயால் அறையப்பட்டு மந்திரவாதிகள் இறந்த கதைகள் பல மட்டக்களப்பிற் கேட்கப்படுகின்றன. ஆலமரச் சோலைகள் பேய்களுக்கு உறைவிடம் என்பார்கள். நடு இரவில் செல்ல நேரிடும் வழிப்போக்கர்கள், தம் வழியில் உள்ள ஆலமரங்கள் பேயின் செயலால் தலை கீழாக நிற்பதையும் மரங்களிலிருந்து மண், பல் என்பன விழுதலையும் கண்டிருக்கிறார்கள். சில இடங்களில் உள்ள வீடுகளிலே இரவில் பேயின் நடமாட்டம் இருக்கின்றது. அருவருக்கத்தக்க பொருட்கள் வீட்டினுள் வீசப்படுதல், மணி சதங்கை என்பவற்றின் ஓசைகள் கேட்டல், வீட்டுக் கூரைகள் பிரிக்கப்படுதல் என்பன எத்தகைய ஆராய்ச்சியாலும் கண்டு பிடிக்க முடியாமல் நடைபெறுவதை இன்றுஞ் சில இடங்களிற் காணலாம். மட்டக்களப்பு நகரின் நடுவில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வீடொன்றிலே அண்மையில் இவ்வாறு நடைபெற்ற பேய் நிகழ்ச்சிகளை நேரிற் கண்டவர் பலர் இருக்கின்றார்கள். இவ்வாறான பேய்க்கதைகள் மிகப் பல இந்நாட்டில் வழங்கப் பெறுகின்றன. புதுயுகத்திலே பேய் பொய் என்று சொல்கிறார்கள். மனிதரிடத்திலுள்ள கெட்ட குணங்களே தனித்தனி ஒவ்வொரு பேயாக உருவகிக்கப்பட்டுள்ளனவென்று தத்துவ முறையாகச் சிலர் விளக்கந் தருகின்றார்கள். மந்திர வித்தைக்காரரும் மந்திரங்களில் நம்பிக்கை உடையோரும் பேயின் உண்மையை நம்புகின்றனர். மேனாடுகளிலே பேயைப் பற்றியனவாக வழங்கும் கதைகளைப் பார்க்குமிடத்து மந்திரங்களுக்கு மன நம்பிக்கையினாலே ஊட்டப் பெற்றிருந்த வலிமையே இவைகளனைத்துக்குங்கால் என்று தெரிகின்றது. ஆக்கத்துக்கும் அழிவிற்கும் மந்திரங்கள் பயன்பட்டாலும், மந்திரவாதிகளாற் பல ஆக்க வேலைகள் செய்யப்பட்டாலும் பொதுவாக, மந்திரம் மந்திரவாதி என்றதுமே எல்லோரும் பயப்படக் காரணம் பேய்களோடு மந்திரங்களுக்குத் தொடர்பு ஊட்டப்பட்டிருப்பதேயாகும் என அறியலாம்.

பண்டையிலிருந்தே தோன்றி மக்கள் வாழ்வோடு பின்னி வளர்ந்து வந்துள்ள மந்திர வழக்கானது மட்டக்களப்பு நாட்டிலே இன்றும் மங்காதிருக்கின்றது. ஆயினும், இந்நாட்டு மக்கள் மந்திரவாதிகளுக்கு அதிகம் பயங் கொள்ளுவதில்லை. மந்திரங்களும் அவற்றிற்கான விலக்குகளும் பெரும்பாலோருக்குத் தெரிந்திருப்பதனாற் போலும் அச்சங்கலந்த ஒன்றாக அன்றி, நாட்டின் பொதுக் கலையாகவே மந்திரம் மட்டக்களப்பு மக்களிடை மதிக்கப் பெற்று உயிர்வாழ்கிறது. தீயவழிகளிலன்றிக், கொடிய நோய்களைத் தீர்க்கும் வழிகளிலும் பாம்புகளின் கொடிய நஞ்சுக் கடிகளிலிருந்து மக்களைக் காக்கும் வகையிலும், கோயிற் சடங்கு போன்றவற்றிலும் மந்திரம் அன்று பயன்கொள்ளப்படுதலை அதிகம் காணலாம்.

மட்டக்களப்பு மக்கள் மந்திரங்களை ஆக்க வேலைகளுக்கே அதிகம் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள் என இந்நாட்டு மந்திரவழக்க வரலாறுகள் தெரிவிக்கின்றன. பெரும்பாலான மந்திரங்களெல்லாம் தமிழிலிலேயே அமைந்து வலிவு பெற்றிருத்தல் இந்நாட்டு மந்தரங்களுக்குரிய ஒரு தனிச் சிறப்பாகும். இவ்வாறான மந்திரங்களின் தனி இயல்புகளெல்லாம் இங்குள்ள பல ஏடுகளிற் காணப்படுகின்றன. விஞ்ஞான வளர்ச்சியினால், மனித இயல்பினைக் கடந்த சக்திகளிலே கொள்ளும் நம்பிக்கை குறைவடைந்து வருதலை ஒட்டி எங்கணும் மந்திரப் பயிற்சி குறைந்து வந்தாலும் மட்டக்களப்பு நாட்டின் கலைச் செல்வங்களுள் ஒன்றாக இத்துறை மதித்துக் காக்கபட வேண்டியதாகும். யாழ்ப்பாண நாட்டிலே புதிதாக அமைக்கப் பெற்று வருவதும் கிழக்குலகக் கலைகளையெல்லாம் சிறப்புறக் காட்டப் போவதுமான பெரிய நூல் நிலையத்திலே இம் மந்திர ஏட்டுக் சுவடிகளுக்கான தனிப்பகுதி ஒன்று வகுக்கப்பட்டிருத்தலோடு, அவற்றைத் தொகுத்தற்கென ஒரு கலைக் குழுவும் இடம்பெற்றிருத்தல் இத்துறையினைப் போற்றிக்காத்தற்கு மிகுதியும் பயன்படுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமத இலக்கியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்து இந்து இலக்கியங்கள் - I

## (கண்ணகி வழக்குரை, கஞ்சன் அம்மானை, பாரத அம்மானை)

**- கலாநிதி செ. யோகராசா -**

மட்டக்களப்பு பிரதேச மக்கள் பல தெய்வ வழிபாடுடையவர்கள். இவர்கள் வழிபடு தெய்வங்களுள் பெரும்பாலானவை சிறுதெய்வங்களாகவுள்ளன. (சிறு தெய்வங்கள் என்று அழைப்பது இன்றைய சமூகவியலாளரால் தவறானதாகக் கருதப்பட்டாலும் வசதியும் தெளிவும் கருதி இங்கு அவ்வாறு குறிப்பிடப்படுகிறது). ஆழ்ந்து நோக்கும் போது இத் தெய்வங்களுக்கான கோயில்கள் வலுவான நிறுவன அமைப்புக் கொண்டனவாக விளங்கி வந்துள்ளமை தெரியவருகின்றது. ஒவ்வொரு கோயிலுக்கும் பத்ததி, செப்பேடுகள், கல் வெட்டுக்கள், ஏடுகள் என்பன உள்ளமை இதனை உறுதி செய்கின்றது. இத்தகைய ஏடுகள் சமயச்சார்பான பாடல்களைக் கொண்டுள்ளன. இவற்றுள் கணிசமானவை புனிதமுடையனவாகவும் இரகசியமாகப் பேணப்படுவனவாகவும் இருந்து வந்துள்ளன. இவற்றால் இன்றுவரை அச்சுப் பெறாமல் காணப்படுகின்றன. இவ்வாறு அச்சுப் பெறாமல் காணப்படுகின்றவை இந்து சமய இலக்கியங்கள் என்ற விதத்தில் எமது கவனிப்பை அவாவி நிற்கின்றன. இவ்விதத்தில் மூன்று நூல்கள் இங்கு அறிமுகம் செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணகி வழக்குரை

பதிப்பாசிரியர் : வித்துவான், பண்டிதமணி வீ.சி. கந்தையா 1968

மட்டக்களப்பு பிரதேச மக்களால் வழிபடப்படும் சிறு தெய்வங்களுள் கண்ணகி அம்மன் முக்கியமானதொன்று. இக்கண்ணகி அம்மன் வழிபாடு கி. பி. 2ம் நூற்றாண்டளவில் சேரநாட்டில் கண்ணகிக்கு கோயில் எடுக்கப்பட்ட வேளையிலே அவ்விழாவிற் கலந்து கொள்ளச் சென்ற கஜபாகு மன்னனால் இலங்கைக்கு அறிமுகமாயிற்று. பின்னர் சிங்கள மக்கள் மத்தியிலே பத்தினித் தெய்யோ வழிபாடாக பரிணமித்த இவ்வழிபாடு மட்டக்களப்புத் தமிழ் மக்கள் மத்தியில் கி பி 8ம் நூற்றாண்டளவிலே 2வது பாண்டியப் பேரரசு காலத்திலேயே வேரூன்றத் தொடங்கியது.

மழை வளம் வேண்டலும் நோய் தீர்த்தலும் இவ்வழிபாட்டின் தேவைகளாக இக்கண்ணகி அம்மன் வழிபாடு செல்வாக்குற்று காலகட்டத்தில் மட்டக்களப்பு பிரதேசத்திலே பல கோயில்களைப் பெற்றுக் கொள்கின்றது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் வைகாசி பௌர்ணமித் திங்களிலே ஆரம்பிக்கும் கண்ணகிகோயில் திருவிழாக்களிலே நிகழ்கின்ற சடங்கின் போது படிக்கப்படும் பல்வகையான கண்ணகி இலக்கியங்களுள் முதன்மை பெற்று விளங்குவதே மேற்குறிப்பிட்ட நூலான கண்ணகி வழக்குரையாகும். கண்ணகியின் வரலாற்றை விரிவு பட எடுத்துரைக்கும் வாய் மொழி இலக்கியப் பாங்குடைய கண்ணகி வழக்குரை செந்நெறிப் பாங்கு மிக்கதான சிலப்பதிகாரத்திலிருந்து வேறுபடுமாற்றை கண்ணகி வழக்குரையின் பின் வரும் அமைப்பிலிருந்து அறிந்து கொள்ளமுடியும்.

I. வரம் பெறு காதை

அ. கோவலனார் கதை

ஆ. அம்மன் பிறந்த கதை

II. கப்பல் வைத்த காதை

அ. மீகாமன் கதை

ஆ. தூரியோட்டு

இ. கப்பல் வைத்தல்

III. கடலோட்ட காதை

அ. வெடியரசன் போர்

ஆ. நீலகேசி புலம்பலும் வீரநாரணன் கதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. மணிவாங்கின கதை

ஈ. விளங்குதேவன் போர்

IV. கல்யாணக் காதை

V. மாதவி அரங்கேற்று காதை

VI. பொன்னுக்கு மறிப்புக் காதை

அ. பொன்னுக்கு மறிப்பு

ஆ. இரங்கிய காதல்

VII. வழி நடைக் காதை

அ. வயந்த மாலை தூது

ஆ. வழி நடை

VIII. அடைக்கலக் காதை

IX. கொலைக்களக் காதை

அ. சிலம்பு கூறல்

ஆ. கொலைக்களக் காதை

இ. அம்மன் கனாக் கண்டகாதை

ஈ. உயிர் மீட்புக் கதை

X. வழக்குரைத்த காதை

XI. குளிர்ச்சிக் காதை

அ. குளிர்ச்சி

ஆ. வழக்குரைக்காவியம்

மேலுள்ள காதைகளை நுணுகி நோக்கும் போது (V) (VII) (VIII) (IX (X) ஆகிய காதைகள் தவிர ஏனையவை சிலப்பதிகாரத்திலிருந்து கண்ணகி வழக்குரை எவ்வெவ்விதங்களில் வேறுபடுகின்ற தென்பதை உணர்த்தி நிற்கின்றன. எனினும் யாழ்ப்பாணத்தில் 19ம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் தொடக்கம் 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை காலம் வரை "சமணச்சி" என்ற காரணத்தினாலே புறக்கணிப்பிற்குள்ளான கண்ணகி, மட்டக்களப்பிலே எவ்வாறு மாற்றங்கண்டாள் என்பதே இங்கு எம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனத்திற்குரியது. இவ்வாறு நோக்கும் போது தான் கண்ணகி சிவ வழிபாட்டுடனும் சைவசமயத்துடனும் தொடர்பு படுகின்றமை முக்கியம் பெறுகின்றது. இவ்விதத்தில் பராசர முனிவரின் மகளாகிய நாகமங்கலை என்பாள் சிவனின் வரத்தினால் மாங்கனியாகிய பின் "கண்ணகை" யாகினாள் என்று வரம்பெறுகாதையில் கூறப்படுவதோடு சிவனருளினாலேயே பொன் ஊசியும் நூலும் பெற்று கண்ணகை கோவலனை எழுப்பினாள் என்றும் இறுதியாக கோப்மாறிய கண்ணகை சிவபூசை செய்தாளென்றும் வழக்குரைகாதையிலே கூறப்படுவதும் எமது கவனத்திற்குரிய விடயங்களாகின்றன.

தவிர மேற்கூறியவாறு சிவவழிபாட்டுடன் தொடர்பு படுத்தப்படும் கண்ணகி சக்தியின் அவதாரமாகவிருப்பதை "குளிர்ச்சிக்காதை" உணர்த்தி நிற்கின்றமை கவனத்திற்குரியது.

மேலும் நாகமங்கலையே கண்ணகையாகப் பிறந்தாள் என்பதும் நாகமணி கொண்டு கண்ணகையின் காற்சிலம்பு செய்யப்பட்டதென்பதும் கண்ணகையை நாகத்துடன் தொடர்புபடுத்துகின்றன. இவ்விதத்தில் கண்ணகை வழிபாட்டுடன் தொடர்பு படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆக மேற்கூறிய விதங்களிலே முக்கியம் பெற்ற சமய நூலாக சைவ சமய நூலாக - இந்து சமய நூலாக விளங்குகின்ற கண்ணகி வழக்குரையானது வாய் மொழி இலக்கியப் பண்புகளைப் பெற்று பொது மக்களுக்குரிய சிறந்த இலக்கியமாகத் திகழ்வதும் மனங் கொள்ளற்பாலது. இத்தகு சிறப்புறு இலக்கியமாகிய கண்ணகி வழக்குரையின் ஆசிரியர் யாவரென்று திட்டவட்டமாக அறியமுடியாவிடினும் பெரும்பாலானோர் 14ம் நூற்றாண்டைச் சார்ந்தவனான சகவீரன் என்று கருதுவர்.

## கஞ்சன் அம்மானை

**பதிப்பாசிரியர் : கலாநிதி சு. வித்தியானந்தன் 1970**

மட்டக்களப்பு பிரதேசத்திலே வைஷ்ணவ சமயம் முதன்மை பெறாவிட்டாலும் விஷ்ணுவிற்கான கோயில்கள் அமைந்திருப்பதும் விஷ்ணு வழிபாடு சிறப்புற்றிருப்பதும் நாமறிந்ததே.

இவ்விதத்தில் "கஞ்சன் அம்மானை" முக்கியம் பெறுவது வியப்பிற்குரியதன்று.

விஷ்ணுவின் தசாவதாரங்களுளொன்று கிருஷ்ண அவதாரம். உக்கிரசேனன் என்பவன் தனது மகன் கஞ்சனால் தனக்கு கேடு வருமென்று அறிந்து அவனைப் பேழையிலிட்டு கடலிலே செலுத்த அப்பேழையைக் கண்டெடுத்தவர் கஞ்சனை வளர்த்து வர கஞ்சன் கொடுமைகள் புரிந்து வர அவ்வேளை தேவகி வயிற்றிலே கிருஷ்ணன் கண்ணனாகிப் பிறந்து வளர்ந்து கஞ்சனை அழித்தொழிப்பது பற்றி எடுத்துரைப்பதே "கஞ்சன் அம்மானை".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் கஞ்சன் அம்மானையிலே கஞ்சன் வதம் மட்டுமன்றி அதனோடு தொடர்பு பட்டுள்ள பூதனை வதம், சகடன் நினைபோசனன் வதம், மத்தன் மகா மத்தன் வதம் முதலான பல வதங்கள் எடுத்துக் கூறப்படுகின்றன. அதுமட்டுமன்றி கண்ணனது வரலாறும் விரிவாகப் பேசப்படுகிறது. இவற்றை நோக்கும் போது கஞ்சன் அம்மானை ஆசிரியர் யாவரென்றறிய முடியாவிடினும் கஞ்சன் வதத்தினை பாடு பொருளாகக் கொண்ட அவ்வாசிரியரின் புலமைத்திறன் போற்றற்குரியதாகிறது. இதற்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலமைகிறது.

"சீரான் செல்லத் திருவோண நாளையிலே பேராளன் வந்து பிறந்தான் காண் அம்மானை உள்ளந் தெளிந்து உலகமெல்லாம் உண்டுமிழ்ந்த பிள்ளை தன்னைத் தேவகியும் பெற்றாள் காணம்மானை. தந்தை தளையவிழத் தாள்க்கதவு தான் திறப்பச், சிந்தை மகிழ்ந்து தாய் சீர் மேனி பூரிப்பக் கஞ்சன் வலிகுலையக் காசினிமான் பாரமறப் பஞ்சவர் களீடேறப் பாரதப் போர் தான் முடியச் சீராயர் வாழ்ந் தருளத் தேவர் சிறை மீளப் பேராளன் வந்து பிறந்தான் காணம்மானை. பெற்ற களைப் போய்ந்து பிரியங்கரை புரளப் பற்றியெடுத்தணைத்துப், பார்த்தாள் திருமகளை நாட்டுளபத்தோன் நான்கும் சங்குவளை சக்கரமும் காட்டி மறைத்தான் பின் கண்டாளிரண்டு கரம் கண்ணு முகமுங் கரங்களுங் காதிரண்டும் தெண்ணென்று நாட்பூத்த செந்தாமரை போலே ஆசொன்று மில்லாத அவயங்கள் தன்னுடனே மா சொன்று மில்லாத மரகத மாமலை போற் கண்டு மகனைக் கனி கவர்ந்திருக்கையிலே தண்டவினைக் கஞ்சன் தனை நினைந்தானம்மானை" (பக்கம்: 17- 18).

இவ்வாறு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் - கிடைக்கின்ற வாய்ப்பின் போதெல்லாம் விஷ்ணுவின் அவதார மகிமை, அற்புத ஆற்றல், அருள் மாட்சி பற்றிப் பேசப்படுவதும் விஷ்ணு கோயில் சடங்கின் போது கஞ்சன் அம்மானை பாடப்படுவது காரணமாக அவை பொதுமக்கள் மத்தியில் எளிதாகப் பரவி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கஞ்சன் அம்மானை மட்டக்களப்பிலுள்ள விஷ்ணு கோயில்களிலே கதவு திறக்கப்பட்ட நாளிலிருந்து உற்சவ இறுதி நாட் கலியாணச் சடங்கு வரை ஒவ்வொரு நாளும் தொடர்ந்து படிக்கப்பட்டு வருகின்றது.

எனினும் திமிலைத்தீவு விஷ்ணு கோயில் உற்சவம் தனிச்சிறப்புடையது. வைகாசித் திங்கள் இறுதியிலே வரும் திரு வோண நாளிலே முதல் நாளில் மாங்கனி பறித்தலுடன் உற்சவம் ஆரம்பிக்கின்றது. அன்று ஆரம்பிக்கப்பட்ட கஞசன் அம்மானை வேட்டைக்குச் சென்று மாங்கனி பறித்தலுடன் நிறுத்தப்பட்டதும் திருவிழா ஆரம்பிக்கும். விஷ்ணு வாகனத்தில் எழுந்தருளிக் கோயில் வலம் வருவர். அவ்வேளை மாங்கனி பறித்தல் தொடக்கம் கலியாணச்சடங்குவரை வரும் நிகழ்ச்சிகளை படிப்பது மட்டுமன்றி நடித்தும் காட்டப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கஞ்சன் அம்மானையிலே கறடியர்கோன் காதை இடம் பெறுவது காரணமாக மட்டக்களப்பிலுள்ள பிள்ளையார் போயில்கள் சிலவற்றிலும் இந்நூல் பாடப்பட்டு வருவதாகத் தெரிகிறது.*

*தவிர பொழுது போக்குக் காரணமாகவும் ஆவணி மாதச் சதுர்த்திப் பிறையை தவறுதலாகப் பார்க்க நேரிடுவதனாலேற்படும் தோஷம் காரணமாகவும், கஞ்சன் அம்மானை வீடுகளிலே பாடப்படுகின்ற வழக்கமுமுள்ளது.*

*மேற்கூறியவாறு பல்வேறு காரணங்களினால் பலவேறு மட்டங்களில் கஞ்சன் அம்மானை முதன்மை பெற்று விளங்குவதனாற் போலும் ஏனைய சமய இலக்கியங்களை விடப் பொது மக்களைக் கவருகின்ற அம்சங்கள் இந்நூலில் நிறைந்து காணப்படுகின்றன.*

## பாரத அம்மானை

**பதிப்பாசிரியர் : இலக்கிய கலாநிதி வித்துவான் சா. இ. கமலநாதன்**

*யாழ்ப்பாணக் கலாசாரத்தைக் கந்தபுராணக் கலாசாரமென்று பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை முதலானோர் குறிப்பிடுவது போன்று மட்டக்களப்பு கலாசாரத்தை பாரதக் கலாசாரமென்று புலவர்மணி ஏ பெரியதம்பிப்பிள்ளை முதலானோர் குறிப்பிட்டு வந்துள்ளனர்.*

*பாரதம் கூத்து வடிவிலே நீண்ட காலமாக பொதுமக்கள் மத்தியிலே செல்வாக்குப் பெற்றுவந்துள்ளது. (இது பற்றிய எண்ணிக்கையுடனான விரிவான தகவல்களை கலாநிதி சி மௌனகுருவின் மட்க்களப்பு மரபு வழிநாடகங்கள் என்ற ஆய்வு நூலிற் கண்டு கொள்க. (பக்கம் : 264- 269)*

*பாரதம் மரபுவழிக் கல்விப் பாரம்பரியத்திலே முக்கியமாகக் கற்பிக்கப்படும் நூல்களிலொன்றாகவும் இருந்துவந்துள்ளது. இவ்விதத்திலே இதுபற்றி மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுவதும் கவனத்திற்குரியது. மேலும் இது சமய இலக்கியமாக மட்டுமன்றி மக்களுக்குத் தேவையான நன் விழுமியங்களை எடுத்துரைக்கும் நூலாகவும் மக்களது வாழ்க்கைக்கு வழிகாட்டும் கைங்கரியத்தையும் செய்துவந்துள்ளது . மட்டக்களப்பு கலாசாரம் பாரதக்கலாசாரம் என்று கருதப்படுவது இவற்றால் போலும்.*

*தவிர மட்டக்களப்பு பிரதேசத்திலே திரௌபதி அம்மன் வழிபாடு முக்கியம் பெற்று விளங்குவது காரணமாகவும் திரௌபதி அம்மன் கோயில்களிலே பாரத அம்மானை படிக்கப்பட்டுவருவது காரணமாக மட்டக்களப்பு பிரதேச கலாசாரம் பாரத கலாசாரமாக கருதப்படுவதற்கு வாய்ப்பிருந்து வந்துள்ளது. கால அடைவில் பாரத அம்மானைகள் பல தோன்றுவதற்கான தேவையும் இருந்து வந்துள்ளது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய பின்னணியில் அண்மையில் பதிப்பிக்கப்பட்டுள்ள இப்பாரத அம்மானையும் மட்டக்களப்பு பிரதேச சமய நூலாகவும் இலக்கிய நூலாகவும் கல்விக்குரிய நூலாகவும் விளங்கிவந்ததுள்ளமை மனங்கொள்ளத்தக்க-தாகிறது.

இப்பாரத அம்மானை வில்லிபுத்தூரர் இயற்றிய பாரதத்திலிருந்து பல விதங்களில் வேறுட்டுள்ளது. எடுத்துக்காட்டுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம் :

i. சராசந்தன் கதை: புருஷாமிருகம் பற்றிய சம்பவம், திரௌபதி செய்த புரட்சி, பேரிண்டி கதை, அருச்சுனன் தவங்குலைதல் முதலியவை பெற்றுள்ள மாற்றங்கள்

ii. இடைப்பிறல் வரவாக புராணக்கதைகள் சில இடம் பெறல் ( எ.டு ) - இடும்பன் - இடும்பி கதை)

iii. பாத்திரங்கள் சிலவற்றின் குணசித்திர முரண்பாடுகள்

iv. நகைச்சுவைத் துணுக்குகள் இடம் பெறுதல்

v. சில பாத்திரங்கள் தமிழ்ப் பாத்திரமாக மாற்றம் பெற்றுள்ளமை மேற்கூறியவை நீண்ட காலமாக இப்பாரத அம்மானை பொது மக்கள் மத்தியிலே பாடப்பட்டு வந்தமை காரணமாக ஏற்பட்ட இடைச் செருகல்களினாலும் பொதுமக்களை கவருகின்ற நோக்கினாலும ஏற்பட்டிருக்க வேண்டும்.

இவ்வாறு நோக்கும் போது மட்டக்களப்பு பிரதேச மக்களது சமய வாழ்க்கையிலும் நாளாந்த வாழ்க்கையிலும் பாரத அம்மானை பெறும் முக்கியத்துவம் மேலும் முதன்மை பெறுகின்றது எனினும் எவரால் எக்காலத்தில் இயற்றப்பட்டதென்று அறியப்படாத ஏனைய பல இலக்கியங்கள் வரிசையிலேயே இப்பாரத அம்மானையும் அடங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்து இந்துமத இலக்கியங்கள் – II

## (இராமர் அம்மானை)

– இலக்கிய கலாநிதி வித்துவான் சா.இ. கமலநாதன் B. A. –

*மட்டக்களப்புப் பிராந்தியத்தின் இலக்கியப் பாரம்பரியம் ஒன்றின் வரலாற்றினை படிமுறையாக அறிந்து கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் இன்று பெரிதும் உணரப்படுகிறது. இம்முயற்சியில் ஈடுபடுவார்க்கு உதவக் கூடும் என்னும் எதிர்பார்ப்பிலே, "நாடறியா ஏடுகள்" என்னும் இக்கட்டுரைத் தொடரில் வெறுமனே சில தரவுகள் மாத்திரம் தரப்படுகின்றன.*

*அறியார் கைப்பட்டு அழிந்தனவும், செல்லின் வயிற்றிற் சீரணித்தனவும் போக எஞ்சியிருப்பனவற்றையாவது பதிந்து வைப்பதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.*

*1993ஆம் ஆண்டு வெளியான "மட்டக்களப்புப் பிரதேசச் சாகித்திய விழா நினைவு மலரிலே" இதே தலைப்பில் ஒரு கட்டுரை வெளிவந்தது. அது மட்டக்களப்புக் கிராமங்களிலே பாடப்பட்டுவந்தனவும், வெவ்வேறு நடையினையுடையனவுமான இரண்டு பாரத அம்மானைகள் பற்றியது.*

*இப்போது பிறிதோர் இதிகாசமாகிய இராமாயணம் பற்றி எழுந்த "இராமர் அம்மானை", "இராமாயணக் கதைவசனம்" ஆகிய இரண்டு ஆக்கங்களையும் பற்றிய சில தகவல்களைப் பதிந்து வைக்கலாமென நினைக்கின்றேன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமர் அம்மானை

இது வழமை போல் நாற்சீர் கொண்ட அகவல் யாப்பில் அமைந்துள்ளது. 16 அங்குல நீளமும், 4.4 அங்குல அகலமுங் கொண்ட பனையோலையில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொருஓலையிலும் நாற்பத்தெட்டு அடிகள் காணப்படுகின்றன. மொத்தமாக ஏறக்குறைய நூறு ஓலைகளில் 4800 அடிகளைக் கொண்டதாக இது அமைந்துள்ளது. இதன் முடிவிலே பின்வரும் சில தகவல்கள் தரப்படுகின்றன. "சிறிமது சுத்த .... கலியுக சகார்த்தம் நாலு நூறாயிரத்து நானூற்று முப்பத்திராயிரமுடைய கலியுகத்திற் சென்ற வருஷம் நாலாயிரத்து அ௲௮௰௫ஆன்று - மேற்செல்லாய் நின்ற மன்மத வருஷ மற்பசி மீ ரு திகதி திங்கட்கிளமையு மமர பக்கத்திற் பஞ்சமியுஞ் சுக்கிர வாரமுஞ் சோதி நட்செத்திரமுங் கூடிய சுவ தினத்தி லிராமரம் மானை யெளுதி நிறைந்தது யிந்த யேடு யெளுதினது மட்டுக்கழப்பு எரிவிற் பகுதிக்குச் சேர்ந்த களுதாவளையிற் குடிபதிந்திருக்கும் பன்றார மனுதர் கழில்க் கனனாயிதருடைய தம்பியனாகவும்....." எனக் காணப்படுகிறது.

மேற்படி தரவிலுள்ள எழுத்துப் பிழை, சொற்பிழை, புணர்ச்சிப் பிழை ஆகியனவற்றைத் தற்காலிகமாக ஒதுக்கிவிட்டு இதனூடாகவும் யாதும் உண்மைகளைப் பெறக்கூடுமாவென்பதையே முதற்கண் ஆராய்வாம்.

முதலாவதாக, இவ்வம்மானை கலியுகம் 4835ஆம் ஆண்டு அதாவது கி. பி. 1733இல் எழுதப்பட்டதென்பது. அதேநேரம் மன்மத வருடம் எனவும் குறிக்கப்படுகிறது. இக் கணிப்பிலே சிறு பிழை இருக்க வேண்டும் போற் தெரிகிறது. 60 வருடத்துக்கு ஒருமுறை வரும் மன்மத வருடம் 1733க்கு முன்னும் பின்னுமாக 1715, 1775 இல்தான் வருகிறது.

இந்த ஏட்டை யெழுதியவர் தன்னைக் "கனனாதருடைய தம்பியன்" எனக் குறிப்பிடுகிறார். சிலவேளை "கனனாதர்" என்பது கணநாதராய் இருக்கலாமோ என்பது ஆராயப்பட வேண்டியதொன்று. எது எவ்வாறாயினும் இந்தத் "தம்பியன்" எருவிற் பகுதியைச் சேர்ந்த களுதாவளையிற் குடிபதிந்திருந்தவர் என்பதும் "பண்டார" வகுப்பைச் சேர்ந்தவர் என்பதும் தெளிவு.

மேற்படி பந்தியில் இராமரம்மானை எழுதி நிறைவேற்றப்பட்ட காலம் பற்றி அவர்தருந் தகவல்களை நோக்கினால் அதை எழுதியவர் விஷய ஞானம் உடையவராகவும், சாசன மரபுகள் தெரிந்தவராகவுங் காணப்படுகிறார்.

பண்டைய சோழர், பாண்டியர் காலங்களில் எழுந்த இராசாதிராஜன், இராசேந்திரன், வீர ராசேந்திரன், முதற் குலோத்துங்கன் போன்றோரது மெய்க் கீர்த்திகளின் தொடக்கத்தில் "ஸ்வஸ்தி ஸ்ரீ, சுபமஸ்து, சுவஸ்தி" ஆதியாம் வடமொழிச் சொற்களை மங்கலச் சொற்களாய்ப் பயன்படுத்தல் மரபாய் இருந்துள்ளது. இந்த மரபைப் பின்பற்றி இராமர் அம்மானையிலும் "சிறிமது" என்று வடமொழியிலான மங்கலச் சொல் சிறிது மாற்றத்துடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டு குறிக்கப்படும் போது "சகாப்தம் ...... இதன்மேல் சொல்லா நின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலவஸம்வத்ஸரத்து கும்ப ஞாயறறு பூர்வ பக்ஷத்து பூறுணையும் ஆதித்த வாரமும் பெற்று மகத்துநாள்" என்றின்னவாறு குறிக்கப்படும். பாரத அம்மானையிலும் அது எழுதப்பட்ட கால விபரங் கூறும்போது பண்டைய மெய்க்கீர்த்திகளின் மரபு பின்பற்றப்பட்டிருப்பதை ஒப்பிட்டு அவதானிக்கலாம்.

## கம்ப இராமாயணப் பயிற்சி

இந்த அம்மானையைப் பாடிய கவிஞன் கம்ப இராமாயணத்தில் நல்ல பயிற்சியுடையவன் எனத் தெரிய வருகிறது. அம்மானையின் இடையிடையே கம்ப இராமாயணப் பாடல்கள் ஆங்காங்கே "விருத்தம்" என்னுங் குறிப்போடு எழுதப்பட்டுள்ளன. உதாரணமாகக் கும்பகர்ணன் வதைப் படலத்திலே வரும் விருத்தம் ஒன்றினை எடுத்துக் கொள்வோம்.

உறங்கு கின்ற கும்ப கன்ன
உங்கள் மாய வாழ்வெலாம்
இறங்கு கின்ற தின்று காணெ
மூந்தி ராயெ மூந்திராய்
கறங்கு போல விற்பி டித்த
கால தூதர் கையிலே
உறங் குவா யுறங்கு வாயி
னிக்கி டந்து றங்குவாய்.

இராமர் அம்மானையிலே இப்பாடல் சில மாற்றங்களையடைந்துள்ளது. "உறங்குகின்ற கும்ப கன்ன" என்பது உறங்குகின்ற "கும்பகா" எனவும், மாய வாழ்வு என்பது "மாய்கை" வாழ்வு எனவும், "இறங்குகின்ற தின்று காண்" என்பது, "இறந்து விடப் போகுது" எனவும், "சுறங்கு போல விற்பிடித்த" என்பது, "சுறங்கு போல மிகுந்து வந்த" எனவும், "உறங்குவாய்" என்பது ஏற்றேகாரம் பெற்று "உறங்குவாயே" எனவும் மாற்றப்பட்டுள்ளது.

இராவணனின் உடல் துளைத்த இராமபாணம் பற்றிய கம்பர் பாடலில் "வெள்ளெருக்கஞ் சடைமுடியான்" என்பது "வெள்ளிருக்குஞ் சடைமுடியான்" எனவும், "வெற்பெடுத்த திருமேனி" என்பது "வெற்பெடுத்த திண்தோளான்" எனவும், "கள்ளிருக்கும் மலர்க் கூந்தற் சானகியை மனச்சிறையிற் கரந்த காதல்" என்பது "கள்ளிருக்குங் குளலாரைக் கடுஞ்சிறையில் வைத்த காதல்" எனவும் மாற்றப்பட்டுள்ளது. ஏடு பிரதி செய்தவர்கள் தாம் விளங்கிக் கொண்டவாறும், தாம்மனனஞ் செய்த போது விட்ட பிழை காரணமாகவும், படிப்பறிவற்ற சாதாரண மக்களிடையே அவர்தம் அறிவு, பிறருதவியின்றி விளங்கக்கூடிய ஆற்றல், இவற்றைப் பொறுத்தும் இத்தவறுகள் நிகழ்ந்திருக்கலாம்.

சுருக்கமாகக் கதை மட்டும் மக்களிடையே பரப்ப வேண்டும் என்ற காரணத்தினாற் போலும், உயர்நிலை கொடுத்து அறிஞர் விமர்சிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவித்துவம் புலப்படும் கவிதைகள் வருணனைகள் என்பன பெரும்பாலும் இராமர் அம்மானையில் இடம்பெற வில்லை. அத்தோடு "படித்தவன் பாட்டைக் கெடுத்தான், எழுதியன் ஏட்டைக் கெடுத்தான்" என்னுங் கூற்றும் துணைபோயிருக்கலாமெனிற் தவறில்லை.

**மட்டக்களப்புப் பேச்சோசை**

மட்டக்களப்பு மக்களின் பேச்சோசைக்கேற்ப சொற்கள் பல மாற்றங்களை அடைந்துள்ளன. "கற்றைக் குளலார் *கவுசிகையர், கைகேசி* சிற்றிடையார் அந்தச் *சிமித்திரையும்* மற்றவரும்" என்பதில் கோசலையைக் "கவுசிகை"யெனவும், சுமித்திரையைச் "சிமித்திரை" எனவும், "தேரேழு கோடித் *தெசரதனும்* தேவர்களும்", "மன்னன் தெசரதனார் செத்த செய்தி" என்பவற்றில் தசரதன் தெசரதன் எனவும் கூறப்படுகிறது. இதேபோல், "உறங்கு கின்ற கும்பகனேயுங்கள் பெருஞ் சேனையெலாம் இறந்து விடப் போகுதுகா ணெழுந்திரடா கும்பகனே இலங்கை யழியுதடா யெழுந்திரடா கும்பகனே" என்றதில் கும்பகர்ணன் - கும்பகன்" எனவும் கும்பகா எனவும் கூறப்படுகின்றன.

## இராமர் கதைவசனம்

நாம் மேற்கூறிய இராமர் அம்மானையைவிட, "இராமர் கதைவசனம்" எனவும் விரிவான ஓர் ஏடு மட்டக்களப்பில் எழுதப்பட்டு வழக்கில் இருந்திருக்கிறது. இது எழுதப்பட்ட ஆண்டு திட்டவட்டமாகக் குறிக்கப்படவில்லை. வெறுமனே, "கலியுக சகாப்தத்தில் ஈசுர வருடம் ஆவணி மாதம் இரண்டாந் திகதி பூறுவ பக்கத்திறுதிகையும் - திங்கட்கிழமையும் சோதி நட்சேத்திரமுங் கூடிய சுப தினத்தில் மகிளவட்ட வானில்க் குடி பதிந்திருக்கும் முற்குகரில் கண்ணாப் பணிக்கப் போடி (கண்ணர் எனவும் இருக்கலாம்) மகன் உசுமிண்டாப்போடி பெண் சின்ன் பிள்ளை சொல்லுக்கு மண்முனைப் பற்றுக்குச் சேர்ந்த சத்துரு வென்றானிலிருக்கும் பத்தப்போடியார் முத்தையப் போடியாகிய நான் இந்த இராமாயணக் கதையெழுதி நிறைவேற்றினது" எனக் காணப்படுகின்றது. "ஈஸ்வர" வருடம் எனக் குறிக்கப்படுவதால் இது 1757, 1817, 1877, 1937 ஆகிய ஆண்டுகளில் ஒன்றாய் இருக்கலாம். இந்த ஏட்டினை எனக்குத் தந்துதவிய நாவற்காட்டின் முன்னாட் கிராமசேவகர் திரு. ஞானமுத்து அவர்களின் கூற்றுப்படி இது அவரின் தந்தையாரின் தந்தையிடம் இருந்ததாக அறிகிறேன். அவ்வாறாயின் இது 1877க்கு முந்தியதாய் இருக்கலாம். இதனைப் பிறிதொரு ஆதாரங்கொண்டும் ஆராயலாம். 1887இல் "ரப்ரபேனியன்" (The Taprobanian) என்னும் சஞ்சிகையில் அக்காலம் மட்டக்களப்பில் ஓர் உயர் அதிகாரியாய் இருந்த "லூயிஸ்" என்பவர் பின்வருமாறு எழுதுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"It has from time immemorial been customary to represent the story of the Ramayanam as a play, upon the stage,,, in Batticaloa. The actors were Ceylon Tamils of the district....

எனக் குறிப்பிடுகிறார்.

மேற்படி கூற்றின்படி நினைவுக்கெட்டாத காலம் முதல் இராமாயணக் கதை மட்டக்களப்புப் பகுதியில் நடித்துக் காட்டப்பட்டதாக அறிகிறோம். 1887க்கு முன்னரே இராமாயணப் பரிச்சயம் மட்டக்களப்பு மக்களுக்கு இருந்திருக்க வேண்டுமென்பது தெளிவு. நாடகமாக நடிக்கக் கூடிய அளவுக்கு அந்த அறிவு வளர்ந்திருந்தது. அவ்வாறாயின் நினைவுக்கெட்டாத காலம் முதல் என அவர் கூறுவதால் குறைந்தது நூறு ஆண்டு காலத்தை நாம் 1887இல் இருந்து முன்னோக்கிப் பார்க்கலாம். இதற்கு முற்பட்ட "ஈஸ்வர ஆண்டுகள் 1757, 1817 ஆகியவையாகும். இராமர் அம்மானை கவிதை வடிவில் எழுதப்பட்டதும் இக்காலப் பிரிவாகவே இருக்கலாம். ஆகவே, வசன நடையிலான இந்த இராமர் கதையும் ஈசுர வருடமாகிய 1757இல் எழுதப்பட்டிருக்கலாம். இதனை நாம் முடிந்த முடிவாகக் கூறவில்லை. இது மேலும் ஆராயப்பட வேண்டிய விஷயம். இதனை மொழியியல் வரலாற்று அறிஞர்களுக்கு விட்டுவிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்து இந்து இலக்கியங்கள் - III

## (மஹாமாரித் தேவி திவ்விய கரணி)

**– பி. பிரசாந்தன்** B.A. (Hons.) –

*மட்டக்களப்பில் இந்து சமயம் பற்றிய தேடலில் இங்குள்ள மக்களின் சமயவழிபாட்டு முறைகள் தவிர்க்க முடியாதனவாகும். ஏனெனில், இப்பிரதேசம் சிறு தெய்வ வழிபாட்டிற்குப் பெயர் பெற்றதென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவ்வகையில் சிறு தெய்வ வணக்க வழிபாட்டு முறைகளில் பக்தர்களால் பாடப்படும் காவியம், தாலாட்டு அம்மானை, ஊஞ்சல், குளிர்த்தி முதலான பாடல்கள் தனித்துவமானவையாகும். இப்பாடல்களில் பெரும்பாலானவை பல்வேறு ஏட்டுச்சுவடிகளிலிருந்து பெறப்பட்டவையாகவும், வாய்மொழிப் பாரம்பரியத்தில் வந்தவையாகவும் அமைகின்றன. இவ்வாறு இத்தெய்வங்கள் மீது பாடப்படும் பாடல்களைத் தொகுத்து நூலுருவில் வெளிவந்த மகாமாரி தேவி திவ்விய கரணி பற்றி சுருக்கமாக அறிமுகம் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

மகாமாரி தேவி திவ்விய கரணி இற்றைக்கு முப்பத்திரெண்டு வருடங்களுக்கு முன் வெளிவந்ததாகும் (1971). மட்டக்களப்பு இந்து மக்கள் தமது தெய்வங்களை நோக்கி பக்தியுடன் பாடும் பாடல்களை உள்ளடக்கியுள்ள இந்நூலின் பதிப்பாசிரியர் அட்டப்பள்ளத்தைச் சேர்ந்த திரு. சி. கணபதிப்பிள்ளை. இருநூற்றி நாற்பத்தியாறு பக்கங்களைக் கொண்டுள்ள இந்நூலில் மாரியம்மன், கண்ணகையம்மன், பேச்சியம்மன், திரௌபதியம்மன், கடல்நாச்சியம்மன், காளியம்மன் என்பவற்றோடு நாகதம்பிரான், வைரவர், ஐயனார் முதலான தெய்வங்களைக் குறிக்கும் பாடல்களும் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றைவிட இந்நூலில் குறிப்பிட்ட சில ஆலயங்களை நோக்கிப் பாடப்பட்ட பாடல்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன (தம்புலுவில் கண்ணகையம்மன் காவியம், சிங்கபுரி மாரியம்மன் காவியம், கல்லாற்று மாரியம்மன் காவியம்). இவை தவிர இப்பிரதேசம் தவிர்ந்த ஆலயங்கள் மீது பாடப்பட்ட பாடல்களும் தொகுக்கப்பட்டுள்ளன (வற்றாப்பளைக் கண்ணகையம்மன்).

இந்நூலில் பல்வேறு தெய்வங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் மகாமாரியின் பெயரிலேயே நூல் வெளிவந்துள்ளது. இதனை நோக்குமிடத்து மாரி விவசாயத்திற்குத் துணைபுரிகின்ற தெய்வமாக இருப்பதனாலும், இப்பிரதேச மக்கள் விவசாயத்தை ஜீவனோபாயமாக கொண்டிருப்பதனாலும் ஆசிரியர் தனது குல தெய்வமாக மாரியை வழிபட்டதாலும் மகாமாரி தேவி திவ்விய கரணி எனப் பெயரிட்டிருக்கலாம்.

மகாமாரி தேவி திவ்விய கரணி தொகுக்கப்பட்டதற்கான காரணங்களை நோக்குகின்றபோது பூர்வ காலம் முதல் வாய்மொழி மூலமாகவும், ஓலைச் சுவடி மூலமாகவும் சேமித்து வைத்திருந்த தெய்வ வழிபாட்டு பத்ததிகளிலுள்ள பாடல்களை தொகுத்து நூல் வடிவில் கொண்டுவருவதும் அவற்றை அழியாது பாதுகாப்பதனூடாக சமயகலாசாரச் செல்வங்களைப் பேணுவதாகவும் இருக்கலாம்.

இந்நூலில் காணப்படுகின்ற பாடல்களை அவதானிக்கின்றபோது ஒவ்வொரு தெய்வங்கள் மீதும் பாடப்பட்ட பாடல்களில் சில பொதுவான அம்சங்களை இனங்காண முடிகிறது. இவ்வகையில் குறிப்பிட்ட தெய்வத்திற்கும் ஏனைய தெய்வங்களுக்குமான உறவு, பக்தர்களால் தெய்வங்களிற்குப் படைக்கப்படும் படையல்கள், தெய்வங்களுடைய உருவ அமைவு, தெய்வ உருவங்களிற் காணப்படும் ஆயுதங்கள். இசைக்கருவிகள் அவற்றினுடைய வீர தீரச் செயல்கள் என்பவற்றுடன், மக்களை நோய்களிலிருந்து பாதுகாக்குமாறும், தீயவர்களுக்கு கொடிய நோய்களைக் கொடுக்குமாறும், மழை, நல்ல விளைச்சல் என்பவற்றை தர வேண்டுமெனவும் வேண்டப்படும் பாடல்களும் காணப்படுகின்றன. குறிப்பாக மாரியம்மன் மீது பாடப்படட பாடல்களை நோக்குகின்றபோது மேற்கூறப்பிட்ட அம்சங்களை இனங்காண முடிகின்றது. இவ்வகையில் இத் தெய்வம் வீரம் நிறைந்தவளாகவும், கொடிய அசுரர்களை அழித்தவளாகவும், உருவகிக்கப்படுகின்றாள். (சண்டமுண்டர்களைக் சங்கரித்தவளே, மகிடாசூரனை வதைத்தவள் நீயே... மாரியம்மன் அகவல்). மாரியம்மனை நோக்கி, துன்பங்களைத் தருபவர்களுக்கும் தீய செயல்களில் ஈடுபடுபவர்களுக்கும் கொடிய நோய்களைக் கொடுக்குமாறு வேண்டப்படும் பாடல்களும் காணப்படுவதை அவதானிக்கலாம்.

.................................................................

துன்பங்கள் செய்தோர்கள் தூர்நஞ்சையிட்டோர்கள்
கற்பையழித்தோர்கள் காமஞ்சேர் நெஞ்சுடையோர்
வட்டி கொடுத்து வாங்கு மகா பாவிகட்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லாத முத்துக்களைப் போயெறிநீ பத்தினியே
........................................................... (மாரியம்மன் அகவல்)

இவற்றைப் போலவே மாரியம்மன் நடனமாடும் விதம், அவ்வேளையில் சிலம்பின் ஒலி எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைக் கூட காட்டுவதாக பாடல்கள் இடம்பெற்றுள்ளமை சிறப்பானதாகும். இது மக்களுடைய பக்தி உணர்வை மாத்திரமன்றி, அவர்களின் கலை ஈடுபாட்டையும் எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. (திமிர்ததிமி திமிதியென நடனமிடு மகாமாரி, சிலம்பு கலகலெனச் சிவமுத்துமாரி ..............) இவ்வாறு வேறுபல அம்சங்களையும் எடுத்துக்காட்டுவதாக மாரியம்மன் மீது பாடப்படுகின்ற பாடல்கள் அமைந்துள்ளன.

கண்ணகையம்மன் மீது பாடப்பட்ட பாடல்களை ஆராயும்போது அவை பல்வேறு விடயங்களை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றன. குறிப்பாக இபபிரதேசத்திற்கே உரித்தான குரவை பாடும் பண்பை இங்கு தாம் போற்றும் தெய்வத்திற்கும் மக்கள் கையாளுகின்றனர். இந்நிலையானது தெய்வங்களிற்கும், மக்களிற்கும் இடையே காணப்படுகின்ற நெருக்கமான உறவு முறையைக் காட்டுகின்றது எனலாம்.

..............................................
பாவையர் நாடகம் பரதம் படிக்க
பூவையர் குரவை போற்றி முழக்கப் ............ (கண்ணகையம்மன் அகவல்)

இவற்றை விட இத் தெய்வத்தின் கோபம் நிறைந்த பண்பு சிறப்பாக எடுத்துக்காட்டப்படுகிறது. (.............. நீட்டுத் தெருவிற் குழை வலக்கையிலேந்தி, நெற்றியிற் கண்ணிடை நெருப்புமழை தூவ .......................... (கண்ணகியம்மன் காவியம்)

........................................................
கதிர்குடலை தலைசோர மானிடர்களேங்க
உலையாது உனது அருள் தந்து மழை பொழியே........

இப்பிரதேசத்தில் சிறப்பு மிக்க மற்றுமொரு வழிபாடாக குறித்த பாடல்களை நோக்கும்போது மேலே கூறிய அம்சங்கள் வெளிப்படுவதைக் காணலாம். பக்தர்களால் பேச்சியம்மனுக்குப் படைக்கப்படும் படையல்கள் பற்றி பேச்சியம்மன் தாலாட்டு குறிப்பிடுகிறது.

........................................................
முட்டைப் பொரியலம்மா பள்ளயப் பேச்சி
முருங்கைக்காய் தீயலம்மா பள்ளயப் பேச்சி
அட்டப்புளுங்கலம்மா பள்ளயப் பேச்சி
ஆவரம்பூச் சுண்டலம்மா பள்ளயப் பேச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தெய்வத்தின் உருவம் பாடல்களில் வர்ணிக்கப்பட்டுள்ளமையை நோக்குகின்ற போது பேச்சியின் உருவம் அச்சமூட்டுவதாக அமைந்துள்ளது.

............................ விரிந்த சடையும் வெண்பிறைப் பல்லுங்
கடித்த பல்லில் காண்பது பிணமுஞ்
சுற்றியே பூதத் துணையாய் வரவே............ (பேச்சியம்மன்)

இப்பாடல்களில் குறிப்பிடப்படும் மற்றுமொரு தெய்வம் கடலாச்சி அம்மனாகும். இத்தெய்வத்தை கடற்றொழிலாளர்கள் தமது பாதுகாப்புக் கருதி வழிபட்டிருக்கலாம். இவ்வகையில் கடலாச்சி அம்மனை நோக்கிப் பாடப்படும் பாடல்களில், வரலாற்றை எடுத்துக் கூறும் பாடல்கள் பாடப்படுவது நோக்கத்தக்கது.

............... ஆதியரசனுக்கு மகளாகிய நானிங்கு
வந்தே இலங்கைக்கு வரவேணுமென்றே
........................................................
கணிதமுடனே பூசையர்ச்சனை புரிந்து
கன்னிமா ரொடுகூடிக் கப்பல் மீதேறி
அணிமட்டக்களப்பாழி சேர் கரையருகில் (கடலாச்சியம்மன் காவியம்)

காளியம்மன் குறித்த பாடல்கள் இந்நூலில் முக்கியமாகக் குறிப்பிடப்படுகின்றது. காளியை நோக்கி, கருவில் குழந்தைகளைக் காப்பாற்றும்படியும், சுகப்பிரசவம் வேண்டியும் வழிபடப்படுபவளாகக் காணப்படுகின்றாள். அத்தோடு ஏனைய தெய்வங்களுடனான உறவு என்றவகையில் கோபாலனின் தங்கையாகக் குறிப்பிடப்படுகின்றாள். இதனை,

....................கோயிலிருந்தவளே கோதாரி தீர்த்தவளே
கோபாலன் தங்கையரே கோபமுடையவளே
அகோரகாளி......... (காளியம்மன் காவியம்)

திரௌபதையம்மன் வழிபாட்டுப் பாடல்களை நோக்கும்போது திரௌபதையானவள் மாறாத நோய்களை நீக்குபவளாக எடுத்துக்காட்டப்படுகிறாள். அத்தோடு, மாயோனின் தங்கையாகவும் சிறப்பிக்கப்படுகின்றாள்.

................ மாறாத நோய்பிணியை வண்ணமகளே
துரோபதை நாயகமே மாற்றிவிட வாறாவாம்....... (துரோபதையம்மன் தாலாட்டு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பெண் தெய்வங்கள் குறித்துப்பாடப்படுகின்ற பாடல்கள் போலவே வைரவர், நாகதம்பிரான், ஐயனார் முதலான தெய்வங்கள் குறித்த பாடல்களும் தொகுக்கப்பட்டுள்ளன. வைரவர் குறித்த பாடல்கள் பெரும்பாலும் வைரவருக்கு பக்தர்கள் படைக்கும் படையல்களைக் குறிப்பிடுவதாகவும், அவருடைய உருவத்தை வர்ணிப்பதாக அமைந்துள்ளதோடு வைரவர் வாதம், பித்தம், கபம் முதலான நோய்களை அகற்றுபவராகவும் வர்ணிக்கப்பட்டுள்ளார். இதனை இந்நூலில் உள்ள வைரவர் அகவல் குறிப்பிடுவதைக் காணலாம்.

........................அப்பமு மவலு மாலங் காயும்
செப்பிய மாங்கனி திகழ்தட்டுறட்டியும்
உச்சிக்குடுமியும் உதிரவாயும்
அலறிய பல்லும் அண்ணாந்த பார்வையுங்
..............................................
ஐயனே யுத்த னருளுண்டானால்
வையகப் பிணிபோய் வாதப்பித்தகபம்
துய்யவியாதிகள் துகழ்போற்பறக்க.......... (வைரவர் அகவல்)

நாகதம்பிரான் குறித்து பாடப்பட்டுள்ள பாடல்களை அவதானிக்கின்ற போது ஏனைய தெய்வங்களைப் போலவே நாகதம்பிரானுடைய உருவம், வரலாறு என்பன குறிப்பிடப்படுவதோடு இத் தெய்வம் ஏனைய நோய்களோடு சிறப்பாக விஷத்தை அகற்ற உதவும் கடவுளாகப் போற்றப்படுவதைக் காணலாம்.

........... பிணிகளோடு படுவிஷம் மாறவருள்செய்வாய்
பிரம்மரபானகுரு நாகதம்பிரானே......... (நாகதம்பிரான் காவியம்)

மகாமாரி தேவி திவ்விய கரணியில் ஐயனார் பற்றி தொகுக்கப்பட்ட பாடல்கள் படையல் அவர்கையில் ஏந்தியுள்ள பொருட்கள் (திரிசூலம் முதற்கையிலேயிலங்க) பற்றியும் குறிப்பிடுவதோடு குறிப்பாக இத் தெய்வம் வணிகர் குலத்தவருடைய கடவுள் என்றும் அதேவேளை ஏழைகளைக் காக்கும் இறைவன் என்றும் குறிப்பிடப்படுவது இங்கு நோக்கத்தக்கதாகும்.

..................வணிகர்குல தெய்வமென வந்தவரே சரணம்
ஏழைகளை காக்கும் மிறையவரே சரணம்...... (ஐயனார் அகவல்)

இத் தெய்வங்களைத் தவிர விஷ்ணு, ஸ்ரீ இராமர், கறுப்பாகி, எக்களாதேவி, முருகையன் முதலான தெய்வங்கள் குறித்து பாடப்படுகின்ற பாடல்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மகாமாரிதேவி திவ்விய கரணியில் தொகுக்கப்பட்டுள்ள தெய்வங்களைக் குறித்த பாடல்கள், இப்பாடல்களைப் பாடிய மக்களின் பக்தியுணர்வையும், தம் முன்னோர் பேணிவந்த வழிபாட்டு முறைகளை மாத்திரம் எடுத்துக்காட்டவில்லை. மாறாக இப்பாடல்களில் காணப்படும் எளிய சொல்வளமும், தனித்துவமான அதன் இசையும், இனிமையும் இப்பாடல்களில் தெய்வங்களுடன் காணப்படும் நெருக்கத்தையும், உரிமையையும், நம்பிக்கையையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளன. எனவேதான் இத் தெய்வ பாரம்பரியத்துடன் மக்கள் இறுகப் பிணைந்துள்ளனர். இத்தகைய செழுமை மிக்க இப்பாடல்களுக்கு இந்து இலக்கிய மரபில் உரிய இடம் அளிக்கப்பட வேண்டும். அவ்வாறான நிலையிலேயே மகாமாரிதேவி திவ்விய கரணி தொகுக்கப்பட்டதன் முழுப்பயனையும் பெறமுடியும் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்து இந்து இலக்கியங்கள் - IV

## (சுருதி நூல் முறை ஏட்டுப் பிரதியின் வரலாறு)

**– வி. சிவசுப்பிரமணியம்** B.A. (Hons.) Dip. in Ed. –

*"சுருதி நூல் முறை" என்ற பெயருடைய இந்த அற்புதமான அத்வைத வேதாந்த நூலின் ஒரேயொரு பிரதியே எமக்குக் கிடைத்தது.*

*இந்நூல் 22 செ.மீ. × 25 செ.மீ. அளவுள்ளவையும் வல இடப் பக்கங்களில் 1.2 செ.மீ. இடைவெளி விடப்பட்டவையுமான எழுபத்தைந்து ஓலைகளின் இருபக்கங்களிலும் பிரதி செய்து முடிக்கப் பெற்றுள்ளது. இலக்கங்கள் ஏடுகளைக் குறிக்கவே இடப்பட்டுள்ளன. பக்கங்களையல்ல. பிரதி செய்த அன்பர் இறுதி ஓலையில் பின்வருமாறு எழுதி வைத்துள்ளார்:*

இநத சுருதி நூல முறை யெழு
தினது எருவில பகுதி களுதாவ
ளை வெலா இதா வீரபததிரனதி
காரி யாகவும என தாய கணணம
ம பொருடடாக குரு நமசி
இநத யெடு யெளுதினது வெகுவரு
ததமாக யிருககும இதிலிருககும பிளை
களைத திரகக வெனும பெரியொா

*இவ்வுரையின் திருந்திய வடிவம் பின்வருமாறு இருக்கும் :*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சுருதி நூல் முறை யெழு
தினது எருவில் பகுதிக் களுதாவ
ளை வேலாயிதர் வீரபத்திரனதி
காரியாகவு (ம்) என் தாய் கண்ணம்
மை பொருட்டாக. குரு நமசி.
இந்த ஏடு எழுதினது வெகுவரு
த்தமாக விருந்தது. இதிலிருக்கும் பிழை
களைத் தீர்க்க வேண்டும் பெரியோர்

மட்டக்களப்பு மக்களின் நெல்வயல்களை நிருவாகரீதியில் இணைத்து அங்கு நடைபெறும் கருமங்களை மேற்பார்வை செய்வதும் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதும் "வட்டை விதானை" என்ற உத்தியோகத்தர் கடமை. இவருக்கு உதவியாக உள்ள உத்தியோகத்தர் "அதிகாரி" எனப்பட்டார். எருவில் பகுதியில் களுதாவளை என்ற கிராமத்தில் அதிகாரியாக இருந்தவர் வேலாயிதர் வீரபத்திரன் என்ற அன்பர். இவர் எழுதி வைத்துள்ள மேற்காட்டிய எட்டுச் சிறுவரிகளும் எம் மனத்தில் எத்தனையோ கேள்விகளை எழுப்புகின்றன.

மறைந்துபோன தமது நெருங்கிய உறவினர் ஒருவரின் ஞாபகார்த்தமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நூலைப் பிரதி செய்து வைக்கும் ஒரு நல்வழக்கம் மட்டக்களப்பிலும் வழக்கில் இருந்து வந்துள்ளது. வேலாயுதர் வீரபத்திரன் அவர்கள் தமது தாயார் கண்ணம்மையின் (கண்ணம்மை என்ற சொல்லை மட்டக்களப்பு நாட்டார் கண்ணம்ம என்றே உச்சரிப்பர்) ஞாபகமாகப் பிரதி செய்துவைக்க "சுருதி நூல் முறை" என்ற நூலைத் தெரிவு செய்ததிலிருந்து இந்நூல் மட்டக்களப்பில் நன்கு அறியப்பட்டதாகவும் படிக்கப்பட்டதாகவும் நன்கு மதிக்கப்பட்டதாகவும் இருந்திருக்க வேண்டுமென ஊகிக்க முடிகிறது.

இந்நூலின் ஆசிரியர் தமிழும் சமஸ்கிருதமும் கற்றுத் தேறிய பேரறிஞர். அத்வைத தத்துவத்தைக் கற்றுணர்ந்த பண்டிதர் என்பதில் ஐயமில்லை. எனினும் அவரது பெயரை அறிய முடியாமலிருப்பது பேரிழப்பே.

நூலின் முதலாம் ஏட்டின் முதல் பக்கத்தின் இடதுபக்க மூலையில் ஆசிரியர் பெயர் எழுதப்பட்டிருக்க வேண்டுமெனத் தெரிகிறது. அம் மூலைப் பகுதி சிதைந்துள்ளது. எனினும், நெருக்கி எழுதப்பட்ட நான்கு வரிகளின் இறுதிப் பகுதிகளில் முறையே "வள, ¬, சுவா, _|, ன என நான்கு சொற்களின் பகுதிகள் எஞ்சியுள்ளன. இவற்றுள் "சுவா" என்பது "சுவாமி" என்பதன் எச்சமாக இருக்கலாம். "மி" என்ற எழுத்து நான்காம் வரியின் முதலில் எழுதப்பட்டிருக்கலாம்.

இவ்வாசிரியர் மட்டக்களப்பு மண்ணின் மைந்தனாக இருக்கலாம். தமிழ்நாட்டிலிருந்து ஈழத்துக்கு வந்து மட்டக்களப்பில் வாழ்ந்தவராகவு-மிருக்கலாம். அப்படியானால் தாம் தங்கியிருந்து வாழ்வதற்கும் அத்வைத வேதாந்த தத்துவத்தைப் போதிப்பதற்கும் மட்டக்களப்பைத் தேர்ந்தெடுத்தற்கு அவரைத் தூண்டிய காரணங்கள் யாவை? அக்காலத்தில் மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநிலத்தில் போற்றப்பட்ட சமய கலாச்சாரப் பண்புகள் எத்தகையவை? இவ்வினாக்களுக்கெல்லாம் இனிமேல்தான் விடை காணப்பட வேண்டும்.

நூலின் மொழிநடை பற்றியும் சில கூற வேண்டும். வேதாந்தக் கருத்துக்களை சமஸ்கிருதமல்லாத வேறு இந்திய மொழிகளில் எழுதியவர்கள் வேதாந்த பரிபாஷைச் சொற்களை மொழிபெயர்க்க முயலவில்லை. கருத்தாழம் மிக்க அச்சொற்களையே உபயோகித்தார்கள். அந்த அந்த மொழிகளின் ஒலிமரபுக்கு ஏற்றதாக சிறுசிறு மாற்றங்கள் காணப்படுகின்றன. வேதாந்த பரிபாஷைச் சொற்களையும் வேறு சமஸ்கிருத பதங்களையும் தமிழ்ப் பேச்சு மொழியையும் இணைத்து அழகிய மணிப்ரவாளநடையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இங்கு உபயோகிக்கப்பட்ட பேச்சுத்தமிழில் பிராமணரின் பேச்சுத் தமிழினதும் மட்டக்களப்புப் பேச்சுத் தமிழினதும் சாயல் காணப்படுகிறது.

இந்நூலில் உபயோகிக்கப்பட்டுள்ள சில சொற்கள் வியப்பூட்டுகின்றன. முக்கியமாக "அரமா" என்ற சொல்லைக் குறிப்பிட வேண்டும். "ஆத்மா" என்ற பொருளில் இது தனிச் சொல்லாகவும் தொகைச் சொல்லாகவும் நூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் வருகிறது. ஆத்மா, ஆன்மா, ஆத்துமா என்ற சொற்களும் காணப்படுகின்றன. "ஆத்மா" என்ற சொல்லே தவறுதலாக "அரமா" என்று எழுதப்பட்டுள்ளது என உள்ளூர் அறிஞர்கள் சிலர் கூறிய கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அழுக்குகள் நிறைந்த உடலைச் சங்கரர் "மலபாண்டம்" என்று வருணிக்கிறார். இதே கருத்தில் இவ்வாசிரியர் தேகத்தை "எயம்" என்று குறிப்பிடுகிறார் (பக்கம் 9).

"தொடர்பு" எனப் பொருள் தரும் "புயபிரக்கு" என்ற சொல்லும் ஓரிடத்தில் காணப்டுகிறது (பக்கம 21).

வடமொழியில் "பதினாறு" என்ற பொருளுடைய "ஷோடசம்" என்ற சொல்லை இவ்வாசிரியர் "சொச்சம்" என்றெழுதியுள்ளார். "பத்துடன் ஆறு சேர்ந்தது" என்ற கருத்தில் வழங்கிய இச்சொல் பிற்காலத்தில் "பத்துச் சொச்சம்", "நூற்றுச் சொச்சம்" என பத்தோடு மேலும் சில நூற்றோடு மேலும் சில என்ற பொருளில் வழங்கத் தொடங்கியுள்ளதாக இருக்கலாம். சுவாமி விபுலாநந்தர் இதே கருத்துள்ள "சில்வானம்" என்ற சொல்லை தமது கட்டுரைகளில் உபயோகித்துள்ளனர். இச்சொல்லின் மூலம் எது என்பதை நானறியேன்.

இச்சொற்கள் மட்டக்களப்புப் பேச்சு மொழியில் வழங்கினவா அல்லது தமிழ்நாட்டில் ஏதோ ஒரு பிரதேச வழக்கா அல்லது திராவிட மொழிகள் ஒன்றிலிருந்து தமிழுக்குக் கொண்டுவரப்பட்டதா என்பதையும் என்னால் அறிய முடியவில்லை. எதிர்காலத்தில் அறிஞர்கள் மட்டத்திலோ பல்கலைக்கழக மட்டத்திலோ இந்நூல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய நூலாயினும் வேறு நூலாயினும் பழைய நூல்களில் இன்றியமையாததாய் விளங்கும் "கடவுள் வணக்கம்" இந்நூலில் காணப்படவில்லை. கடவுள் வணக்கத்தை உள்ளடக்கிய எண் குறிக்கப்படாத முதல் ஏடு தவறிப் போய்விட்டதாகவே கருத வேண்டும்.

இந்நூலைக் காப்பாற்றித் தந்தவர்கள் பற்றி சில வரிகள் எழுதுவது என் கடமை என உணர்கின்றேன்.

இந்நூலைப் பிரதி செய்து வைத்திருந்த வேலாயிதர் வீரபத்திரன் என்னும் அன்பர் வாழ்ந்த களுதாவளைக் கிராமத்திற்குத் தெற்கே சுமார் ஐந்து மையில் தூரத்திலுள்ள கிராமம் கல்லாறு. இங்கு இற்றைக்குச் சுமார் நூறு வருடங்களுக்குள் பிறந்தவர் திரு. பெரியதம்பி ஐயாக்குட்டி அவர்கள். இவரும் இவரது மனைவியார் வயிரமுத்து வள்ளியம்மை அவர்களும் சிறந்த சைவர்கள். திரு. ஐயாக்குட்டி அவர்கள் தமிழும் ஆங்கிலமும் நன்கு கற்றவர். மட்டக்களப்புக் கச்சேரியில் மேலதிக அலுவலக அதிகாரியாக (Extra Office Assistant) உத்தியோகம் புரிந்தவர். திரு. வீரபத்திரன் அவர்கள் எழுதிய "சுருதி நூல் முறை" ஏட்டுப் பிரதியை எழுதியவரிடமிருந்தோ அதனை வைத்திருந்த வேறு யாராவது ஒருவரிடமிருந்தோ திரு. ஐயாக்குட்டி அவர்கள் பெற்றுப் படித்துள்ளார்.

காலம் மாறிற்று. திரு. ஐயாக்குட்டியும் மனைவியாரும் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினார்கள். "சுருதி நூல்முறை" நூலின் பெருமையை அவர் உணர்ந்திருந்த போதிலும், அதனைத் தமது வீட்டில் பத்திரப்படுத்தி வைத்திருப்பதைத் தவிர அவரால் வேறொன்றுஞ் செய்ய முடியவில்லை. திரு. ஐயாக்குட்டி அவர்களும் அவரது மனைவியாரும் தமது வாழ்வின் இறுதிக் காலத்தில் மீண்டும் சைவத்தைத் தழுவினர். இந்த விவரங்களை எனக்குச் சொன்னவர் திரு. ஐயாக்குட்டி அவர்களின் மூத்த புதல்வி திருமதி. கமலா கமலநாதன் அவர்கள்.

வித்துவான் சா.இ. கமலநாதன், B.A. அவர்களுக்கு "சுருதி நூல்முறை" உட்பட சில ஏட்டுப் பிரதிகள் சீதனமாகக் கிடைத்தன. வித்துவான் அவர்கள் கிறிஸ்தவராகையால் இந்துமத தத்துவங்களில் அதிகம் பரிச்சயமில்லாதவர்.

1997ஆண்டு நடுப்பகுதியில் ஒரு நாள் "சுருதி நூல் முறை" ஏட்டுப் பிரதியை என்னிடம் தந்து வாசித்துப் பார்க்கும்படி சொன்னார். முதல் ஓலையை வாசித்துக் கொண்டிருந்தபோதே இது அத்வைத வேதாந்தத்தைக் கூறும் நூல் என்பது விளங்கிற்று.

நண்பர் அவர்களும் நானும் சேர்ந்து ஏட்டைப் படித்து உள்ளது உள்ளவாறே ஒரு மைப் பிரதியைத் தயார் செய்தோம். அதனை வாசித்துப் பார்த்தபோது எழுத்துப்பிழையும் சொற்பிழையும் மலிந்து கிடப்பதைக் கண்டோம்.

ஏட்டுப் பிரதியை என்னிடம் தந்து அடுத்துச் செய்ய வேண்டியவற்றை நண்பர் என்மீதே சுமத்திவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்வைத வேதாந்தத்திலும் சமஸ்கிருத மொழியிலும் எனக்கிருந்த ஓரளவு அறிவைக் கொண்டு நூலைச் செப்பம் செய்தேன். புளியந்தீவில் பணிபுரியும் ஒரு இந்துமத அமைப்பைச் சேர்ந்த சில நண்பர்களைக் கூட்டி நூலை வாசித்துக் காட்டினேன். அவர்கள் இதற்கு ஒரு விளக்கவுரை எழுதுவது நல்லது என்றார்கள். அவர்கள் சொல்வதில் நியாயம் இருந்தது. விளக்கவுரையை யார் எழுதுவது? ஈழத்திலோ அல்லது தமிழ்நாட்டிலோ இருக்கக் கூடிய அத்வைத வேதாந்த அறிஞர்களது உதவியையோ ஆலோசனைகளையோ பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட என் தேக நிலையோ குழப்பம் நிறைந்த தேச நிலையோ இடம் கொடுக்கவில்லை. இந்நூல் மட்டக்களப்பு மக்களின் மாபெரும் சொத்து. இதை அவர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்ற ஆசையும் அவசரமும் எனக்கு! எனக்குள்ள அற்ப அறிவைக் கொண்டு சிறு விளக்கமொன்றை மகாகவி கம்பன் கூறுவது போல "ஆசை பற்றி அறையலுற்றேன்". அறிஞர்கள் பிழை பொறுப்பார்கள் என்பது என் நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புத் தமிழகத்து இந்து இலக்கியங்கள் - V

## (மட்டக்களப்பில் கண்ணகையம்மன் சடங்குப் பாடல்கள்)

**- பேராசிரியை மௌ. சித்திரலேகா -**

மட்டக்களப்பில் வழங்கும் வழிபாட்டு முறைகளில் பாடல்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. காவியம், அகவல், தாலாட்டு, குளுர்த்தி என வெவ்வேறு வகைப்படும் இப்பாடல்கள் வழிபாட்டு முறைகளுடன் இரண்டறக் கலந்தன வாயுள்ளன. கண்ணகையம்மன், மாரியம்மன், காளியம்மன், பேய்ச்சியம்மன், கடல்நாச்சியம்மன், திரௌபதையம்மன், வைரவர், நாகதம்பிரான், வதனமார், கிருஷ்ணன், மறறா, தெய்வம் முதலிய தெய்வங்களின் வழிபாடுகளில் இப்பாடல்கள் இடம்பெறுகின்றன. வழிபாடே பாடல்களால் ஆனது எனக் கூறலாம்.

கண்ணகையம்மன் மட்டக்களப்பின் பெருந்தெய்வம். இத்தெய்வ வழிபாட்டில் பாடப்பெறும் பாடல்களை அறிமுகம் செய்வதே இச்சிறுகுறிப்பின் நோக்கமாகும்.

மட்டக்களப்பில் வழிபாடுகள் யாவும் சடங்குகள் என்றே அழைக்கப்படும். சடங்கு நாட்களின் எண்ணிக்கை கோயிலுக்குக் கோயிலும், ஊருக்கு ஊரும் வேறுபடும். மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது என இந்த எண்ணிக்கை அமையும்.

கண்ணகையம்மன் கோயிலைப் பொறுத்தவரை ஐந்து அல்லது ஏழு, அல்லது ஒன்பது நாட்களில் சடங்குகள் நிகழும். வசதி படைத்த ஊரவர்கள் ஒன்பது நாள் சடங்கு செய்வார்கள். பெரும்பாலான ஊர்களில் ஐந்து நாள் சடங்குகளே தற்போது நிகழ்த்தப்படுகின்றன. இந்த நாட்களில் எல்லாம் பாடல்கள் பாடப்படுகின்றன. கண்ணகையம்மன் கோயில்களில் வழக்குரை, கண்ணகையம்மன் ஊர்சுற்றுக் காவியம், கண்ணகையம்மன் அகவல், குளிர்த்தி, கண்ணகையம்மன் கலியாணக்கால் சுற்றுக் காவியம் ஆகியவை படிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் சடங்கு தொடக்கம் இறுதி நாள் வரை வழக்குரையாக கண்ணகி வழக்குரை கோயில்களில் கட்டாயம் பாடப்படும். முதலாம் நாள் கதவு திறத்தல் அன்றே இது ஆரம்பமாகும். கலியாணக்கால் சடங்கு நடக்கும் அன்று கலியாணக்காதை படிப்பு நடைபெறும்.

பச்சை கட்டுச் சடங்கு நடைபெறும் நாளில் அடைக்கலக்காதை பாடப்படும். பச்சை கட்டுச் சடங்கு மாதிரி வீட்டில் கண்ணகிக்கு சமைப்பதற்காக காய்கறிகள் கொடுக்கப்பட்டதைக் குறிக்கும். அடைக்கலக் காதையில் கண்ணகிக்குக் கொடுக்கப்பட்ட மரக்கறிகளின் பட்டியல் விஸ்தாரமாகச் சொல்லப்படும். இதனைப் படிக்கும் போது சடங்கு செய்யும் கட்டாடியார் இந்த மரக்கறிகளை ஒவ்வொன்றாக எடுத்து அம்மன் முன் படைப்பார்.

இறுதி நாளில் மத்தியான நேரம் கொலைக்களக்காதை படிக்கப்படும்.

வழக்குரை பாடுவது சடங்கின் ஒரு பகுதியாகும். இது கட்டாயமாகச் செய்யப்படவேண்டும். ஆனால் சடங்கு நாட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சுருக்கியும், விரித்தும் பாடுவது வழக்கம். பெரும்பாலும் இதனை இருவர் செய்வர். ஏட்டைப் பார்த்தே படிக்கவேண்டும் என்பதே சம்பிரதாயம். இதனால் ஏடு வாசிக்கத் தெரிந்தோரே வழக்குரை படிப்பர். எனினும் ஏடு படிக்கத் தெரிந்தோர் தொகை இன்று குறைந்து வருவதால் வழக்குரையை கையெழுத்தில் எழுதிப் படிப்பதும் இடம்பெறுகிறது.

கண்ணகியம்மன் சடங்கு இறுதி நாள் குளிர்த்தி நடைபெறும். கண்ணகையம்மனின் கோபம் தணிவிக்கச் செய்யப்படும் சடங்கே குளிர்த்தி ஆகும். குளிர்த்திப் பாடல் காப்புப் பாடலுடன் ஆரம்பமாகும்.

"சீர் பொருந்தும் ஐங்கரனே திருமாலின் மருகோனே
கார்பொருந்தும் ஆனைமுகக் கணபதியே கற்பகமே
பார் பொருந்தும் கண்ணகையாள்
பலிவாங்கிக் குளிர்ந்த கதை
ஊர் செழிக்கப் பாடுகிறேன் ஒரு பிழையும் வாராமல்"

என்று இது தொடங்கும் .பின்னர் மிகச் சுருக்கமாக கண்ணகி கோவலருடன் மதுரைக்குச் சென்றது, சிலம்பு விற்றல், கோவலன் கொலை, கண்ணகி கோபம், மதுரை எரிப்பு ஆகிய நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. கண்ணகியின் கோபத்தைத் தணிவிக்க ஆயர் சேரிப் பெண்கள் அவளது முலையில் நெய்யை அப்பினார்கள் எனவும் பின்னர் அவள் கோபம் தணிந்து அம்மானை ஆடுகிறாள் எனவும் பாடல் கூறுகிறது.

"ஆலிலை போலும் மணிவயிற்றாள்
அங்கையர்க் கண்ணுடை ஆயமுழையாள்
சாலி விளைய மழை பொழிய
தார் கோதை அம்மானை ஆடினாளே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி கோபம் தணிந்தாலே ஊர் செழிக்கும் என்பது நம்பிக்கை. எனவே குளிர்ந்தருள்வாய் என்று திரும்பத் திரும்ப வேண்டிப் பாடப்படுகின்ற பாடல்கள்.

"சொற்பெரிய மாநாகர் துய்ய குலத்தே உதித்த
சற்பமணித் தாளணிந்த தாயே குளிர்ந்தருள்வாய்"

"மாதவிக்குப் பொன் தோற்று வாழ்வணிகர் தன்னுடனே
காதலித்துப் பின் போன கன்னி குளிர்ந்தருள்வாய்"

"வாசலது கடந்து மாளிகையின் உட்புகுந்து
பூசலிடப் பாண்டியனை போந்தாய் குளிர்ந்தருள்வாய்"

"வாளையெடுத்து வளமுலையைத் தானரிந்து
தோளாடையாக்கத் துணிந்தாய் குளிர்ந்தருள்வாய்"

"தட்டான் பொடியாக தார்வேந்தன் நீறாக
சுட்டெரித்துப் போட்ட தொரு தோகாய் குளிர்ந்தருள்வாய்"

"எச்சேரி வேகினும் இடைச்சேரி வேகாமல்
பச்சேரி சேகினும் பறைச்சேரி வேகாமல்
அச்சம் தனையகற்றி
ஆண்டடிமை கொள்ளுமம்மா

நன்மையுடன் வளர்ந்து
நானிலமும் தான் மதிக்க
என்முலை குளிர்ந்ததுபோல்
என்றும் குளிர்ந்தருள்வாய்"

என்று செல்லும் குளிர்த்திப் பாடல் இறுதியில் வாழியுடன் முடியும்.

"மன்று தழைக்க மனுவெல்லாம் ஈடேற
கன்று தழைக்க கறுவையினம் பால் பொழிய
செங்கோல் தழைக்க தேசத்தோர் ஈடேற
மங்காத செல்வம் வளர்நாடும் தான்வாழ்க"
என்று போய் முடியும்.

இக்குளிர்த்திப் பாடல்களில் மூன்று வகையான பண் இசைக்கப்படும். இதனை இருவர் சேர்ந்து பாடுவது வழக்கம். ஆனால் பூசை செய்யும் கட்டாடியார் (பூசகர்) இதனைப் பாடுவதில்லை. குளிர்ந்தருள்வாய் என ஒவ்வொரு அடியும் பாடி முடிய அவர் வேப்பிலையால் தண்ணீரை வழிபடுவோர்களில் படும்படியாக விசுறுவார். குளிர்த்தி பாடுவதை முறை வைத்துச் செய்வார்கள். இந்த முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு குடிகளுக்கு மாறி மாறி வரும். உதாரணமாக ஒருவருடம் காலிங்கா குடியினர் பாடினால் அடுத்த வருடம் வேறு ஒரு குடியைச் சேர்ந்தவர் பாடுவார். குளிர்த்தி பாடுவது கௌரவமான ஒரு செயலாக நினைக்கப்படுவதால் அதைப் பாடுவதற்குப் போட்டி நிலவும். இதனால் பாடுபவர் யார் என்பதும் முன் கூட்டியே தீர்மானிக்கப்படும். சில ஊர்களில் குறிச்சி அடிப்படையில் இது தீர்மானிக்கப்படும் ஒன்றுக்கு மேற்பட்ட ஊரவர் சேர்ந்து நடத்தும் கோயில்களில் ஊர்கள் அடிப்படையில் முறை தீர்மானிக்கப்படும். குளிர்த்திப் பந்தல் முறைப்படி குளிர்த்திப் பாடல் பாடப்பட்டால் கண்ணகியம்மன் குளிர்ந்து சாந்தப்படுவாள் எனவும் அதனால் ஊரில் வளம் பிடிக்கும் என்பதும் பலமான நம்பிக்கை.

கண்ணகையம்மன் அகவல் ஒவ்வொரு நாளும் பூசை முடிந்ததும் மூலஸ்தானத்திற்கு கட்டாடியாரால் பாடப்படுவது ஆகும். கண்ணகையம்மன் கோவலனை உயிர்ப்பிப்பது, மதுரையை எரிப்பது, பின் கோபம் தணிவது பற்றி அகவல் கூறுகிறது. இந்நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய பண்புகளை மீண்டும் மீண்டும் கூறி தோத்திரிக்கும் அகவலின் சில அடிகள் பின்வருமாறு :

"ஒரு கை குழை பிடித்து ஒரு கை சிலம்பேந்தி
மதுரைநகர் தேடி வந்த மகா பத்தினியே
வேங்கை மரத்தடியில் வெட்டிவைத்த கோவலனை
பொன்னூசியாலே புரைந்து உயிர்மீட்டு
மாறன் படியதனில் மணிச்சிலம்பு தானடித்து
மீறுமணி தெறித்து வெந்தணலாய்ச் சிந்தி
வட்டமுலை தானரிந்த மங்கையே அஞ்சுகமே"

இந்த அகவலை கட்டாடியார் மாத்திரமே பாடுவர். வேறு எவரும் பாடுவதில்லை. பாடலுக்குப் பின்னணியாக எந்த வாத்தியமும் பயன்படுத்தப்படுவதில்லை.

அகவல் தவிர உடுக்குக் காவியம் என்ற ஒன்றும் சில கோயில்களில் பூசைக்குப் பிறகு பாடப்படும். வந்தாறுமூலைக் கண்ணகையம்மன் கோயிலில் பூசாரியார் உடுக்கு அடிக்கு இது பாடப்படும்.

இப்பாடல்கள் யாவும் ஒரே வகையில் அமைந்தவை. குறிப்பிட்ட சில வடிவங்களிலேயே இப்பாடல்கள் அமைந்துள்ளன. எனினும் சிற்சில இடங்களில் பாடப் பகுதிகளில் வித்தியாசமும் அவதானிக்கக் கூடியது. ஊருக்கு ஊர் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. மேலும் எல்லாப் பாடல்களும் எல்லாக் கோயில்களிலும் பாடப்படுவதில்லை. வழமைக்கும் வசதிக்கும் ஏற்ற படி இவை பாடப்படும்.

மட்டக்களப்பில் காணப்படுகின்ற பாடி வழிபடும் முறை பண்டைய தமிழ் வழிபாட்டு முறையுடன் தொடர்பு கொண்டது. இச்சடங்குப் பாடல்களின் மொழி, பாடலமைப்பு, பண், மக்கள் இப்பாடல்களை நோக்கும் முறை ஆகியவை பற்றி மேலும் விரிவான ஆராய்ச்சிகள் நடைபெற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமத இயக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாநிலத்தில் ஸ்ரீராமகிருஷ்ணமிஷன்

**- அருண் நடராசா B. Sc. -**

**புவியியல்**

ஆரியர் போற்றும் அணிசால் இலங்கையிலே
சீரார் குணதிசையைச் சேர்ந்து வளர்புகழும்
ஏரால் இயன்ற செந்நெல் இன்சுவைத் தீங்கன்னலொடு
தெங்கி னிளநீருந் தீம்பல வினள்ளமிர்தும்
எங்குறையா இயலுடைய நன்னாடு
மட்டக்களப்பெனு மாநாடந் ...[1]

என்று விபுலாநந்த அடிகளாரால் போற்றப்படும் மட்டக்களப்பு மாநாட்டின் ஆட்சி நிருவாகப்பட்டினமாகவும், கிழக்கிலங்கையின் தலைநகராகவும் விளங்குவது மட்டக்களப்புப் பட்டினமாகும்.[2]

போர்த்துக்கேயர் மட்டக்களப்பை 1622ல் கைப்பற்றி ஒல்லாந்தர் அதனை 1639ல் கைப்பற்றும் வரை தம் வசம் வைத்திருந்தனர். பின்பு கண்டி அரசன் பிடிபட்டவுடன் அதாவது 1815ம் ஆண்டு பங்குனி 2ம் திகதி செய்யப்பட்ட பிரகடனத்தின் கீழ் கிழக்குப் பிரதேசத்தின் புற எல்லைப் பகுதிகளும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. 1833.10.01ம் திகதிய பிரகடனத்தின் பிரகாரம் நிருவாக நோக்கத்திற்காக நாடு ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டபோது மட்டக்களப்பு மாவட்டம் கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியாக அமைக்கப்பட்டு திருகோணமலை அதன் தலைநகராக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய கிழக்கு மாகாணம், தற்போதுள்ள வடமத்திய மாகாணத்தின் தம்மன்கடுவ பகுதியையும், பதுளை மாவட்டத்தின் பிந்தனைப் பகுதியையும் "மட்டக்களப்பு திருகோணமலை" மாவட்டம் என அப்போதிருந்த பகுதியையும் உள்ளடக்கி இருந்தது. பின்னர் 1837ம், 1873ம் ஆண்டுகளில் முறையே பிந்தனை மத்திய மாகாணத்துடனும், தம்மன்கடுவ வடமத்திய மாகாணத்துடனும் இணைக்கப்பட்டன. 1870ல் மட்டக்களப்பு கிழக்கு மாகாணத்தின் தலைநகராக்கப்பட்டு திரு.ஆர்.டபிள்யூ.ரி மொறிஸ் முதலாவது அரசாங்க அதிபராக புதிய தலைமை அலுவலகத்தில் அமர்த்தப்பட்டார்.

கிழக்கு மாகாணத்தின் மூன்றாவது மாவட்டமாக 1961.04.10ல் அம்பாறை அமைக்கப்பட்ட போது மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பாகம் பிரிக்கப்பட்டது. அத்துடன் 1963ல் அம்பாறை மாவட்டத்தின் கச்சேரி உகனையில் நிறுவப்பட்டது.[3]

இத்தகைய வரலாற்றுத் தொடர்புகளால் இங்கு பாரம்பரியமாக வாழ்ந்து வந்த ஆதிக் குடிகள், கண்டி இராச்சியத் தொடர்பால் ஏற்பட்ட சிங்கள - பௌத்த செல்வாக்கு தென்னிந்தியாவிலிருந்து வந்த குடியேற்றங்களால் உருவான செந்நெறித் தமிழ்க் கலாசாரம், அராபிய வணிகரால் ஏற்பட்ட முஸ்லிம் குடிப்பரம்பல் ஐரோப்பியரின் வருகையால் தோன்றிய கிறிஸ்தவ மத எழுச்சி ஆகியவற்றின் பின்னணியில் தமிழ் - முஸ்லிம் இணைந்த அருகருகான வாழ்விடம், இந்துக்களும், கிறிஸ்தவர்களும் கலந்த குடும்ப உறவுமுறை, ஏற்றத்தாழ்வான பொருளாதார நிலை, மாற்றமடையாத பரம்பரைக் கலாசார முதுசங்கள் என்று பல்லின, பலநிலைக் கலாசார மையமாக மட்டக்களப்பு மாநிலம் திகழ்கின்றது.

ஆயினும், பெரும்பான்மையாகத் தமிழர்களும், இந்துக்களுமே அதிக அளவில் குடியிருக்கின்றனர்.

**மட்டக்களப்பு நிருவாக மாவட்டம் - 2001 புள்ளி விபரம்[4]**

**இன வாரியானது**

| மொத்தம் | தமிழர் | முஸ்லிம் | சிங்களவர் | பறங்கியர் |
|---|---|---|---|---|
| 517878 | 385216 | 129363 | 813 | 2486 |

**மத வாரியானது**

| மொத்தம் | இந்துக்கள் | இஸ்லாமியர் | கிறிஸ்தவர் | பௌத்தர் |
|---|---|---|---|---|
| 517878 | 354051 | 129363 | 34154 | 310 |

எனினும் தமிழ் இந்துக்களின் இருப்பு நிலை நாட்டப்படுவதில் இடர்பாடுகள் அதிகளவில் இருப்பதை ஆரம்பம் முதலே காணக்கூடியதாக உள்ளது.

மட்டக்களப்பில் ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் வேரூன்றத்தக்க பின்னணிக்கு 20ம் நூற்றாண்டின் கல்வி நிலையை ஒரு காரணமாகக் கூறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூற்றாண்டின் ஆரம்பகால யாழ்ப்பாணக் கல்வி நிலையுடன் ஒப்பிடும் போது, மட்டக்களப்பு பிரதேசக் கல்வி வளர்ச்சி இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலும் பெருமளவு பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. முன்னரும் கூறியது போன்று, மட்டக்களப்பு பிரதேசத்தின் புவியியல் ரீதியான மாறுபட்ட அமைப்பு, போக்குவரத்து விருத்தியடையாத நிலை, தொற்று நோய்கள் பரவும் சூழல் என்பன முக்கிய காரணங்களாகலாம்...

மேற்கூறிய இடர்களின் மத்தியில் கிறிஸ்தவ மிஷன்களின் கல்விப் பணி இங்கு ஆரம்பமாயிற்று. இவ்விடத்தில் 1921ம் ஆண்டுப் புள்ளி விபரம் ஒன்றினை எடுத்தாள்வது பொருத்தமானது.

| பாடசாலைகள் | ஆண் பாடசாலை | பெண் பாடசாலை | கலவன் பாடசாலை | சராசரி வரவு ஆண் | பெண் |
|---|---|---|---|---|---|
| வெஸ்லியன் சங்கம் | 3 | 9 | 70 | 2732 | 576 |
| றோ.க. சங்கம் | 3 | 2 | 33 | 961 | 291 |
| ஆங்கில திருச்சபை சங்கம் | 1 | - | 07 | 325 | 39 |
| இந்துப்பாடசாலை | - | - | 10 | 516 | 161 |
| குர்ஆன் பாடசாலை | - | - | 45 | 1114 | 97 |
| அரச பாடசாலை | 6 | - | 02 | 688 | 08 |

இராமகிருஷ்ண மிஷனின் கல்விப் பணிகள் இத்தகைய சூழ்நிலையிலேயே ஆரம்பமாகின்றன.[5]

மட்டக்களப்பின் சனத்தொகையில் பெரும்பான்மை இனமாக இந்து மதத் தமிழர்கள் இருந்தபோதிலும் அவர்களது சமயநிலையும் வாழ்க்கை நிலையும் ஐரோப்பியர் வருகையினால் பல்வேறு இடர்ப்பாடுகளையும் சந்திக்க வேண்டிய கட்டத்திலேயே இருந்தது. இதனைச் சீர் செய்ய வேண்டிய நிறுவனமயப்பட்ட தலைமைத்துவம் தேவைப்பட்டது. ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் வருகையும், சுவாமி விபுலாநந்தரின் தோற்றமும் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய பெரிதும் உதவின.

## ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் வருகை

ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் பணிகள் மட்டக்களப்பில் ஆரம்பமாவதற்குரிய சூழ்நிலை 1893இல் சுவாமி விவேகாநந்தரின் இலங்கை விஜயத்துடன் தோற்றம் பெறுகிறது. சுவாமிகள் சிகாகோ பயணத்தின் பின்பு கொழும்பு வந்ததைத் தொடர்ந்து இலங்கையில் விவேகானந்த சபைகள் உருவாகின. இச்சபையினர் இந்துசமயப் பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவதில் பெரும் ஆர்வம் காட்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் விவேகானந்த சபையின் தோற்றத்தைப் பற்றியும் திட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆனால், சபையின் நடவடிக்கை பற்றிய ஒரு செய்தியை இந்து சாதனம் (ஜனவரி 21, 1915) இதழில் பின்வருமாறு அறிகிறோம்:

விவேகானந்த சுவாமிகளின் ஜனன தினக் கொண்டாட்டம், மட்டக்களப்பு, கல்லடி - உப்போடை விவேகானந்த வித்தியாசாலையில் சென்ற ஜனவரி 19 சனிக்கிழமை பிற்பகல் விவேகானந்த சுவாமிகளின் 53ஆவது ஜெனனதினக் கொண்டாட்டம் விவேகானந்த சயையாராலும், வித்தியாசாலை வித்தியார்த்திகளாலும் கொண்டாடப்பட்டது. மேற்படி சபையின் அங்கத்தவர் சி. சுப்பிரமணிய தேசிகர் தலைமையில் அ. சரவணமுத்து ஸ்வாமியின் சரித்திரத்தை உபந்நியாசித்தார்.

1925ல் சபையின் தலைவராயிருந்தவர் திரு. எம். சின்னையா. மட்டக்களப்பு மாவட்டத்தில் காரைதீவு, மண்டூர், ஆரைப்பற்று, ஆனைப்பந்தி, ஈச்சந்தீவு முதலானவிடங்களில் இருந்த பாடசாலைகளை திரு. சின்னையா. சுவாமி விபுலாநந்தரிடம் ஒப்படைத்தார்.[6]

இந்தப் பாடசாலைகள் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலேயே "சைவப் பள்ளிக்கூடம்" என்னும் பெயரில் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

கொழும்பில் 22.10.1930ல் இராமகிருஷ்ணமிஷன் உருவாக்கப்பட்டது. ஆயினும் அதற்கு முன்பே சுவாமி விவேகானந்தரைத் தொடர்ந்து ஸ்ரீராமகிருஷ்ணதேவரின் நேர்சீடர்கள் ஏழுபேரும் அவர்களின் சீடர்களும் இலங்கைக்கு விஜயம் செய்து ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆன்மீகவித்தை ஊன்றிவிட்டனர்.

இவ்வாறே மட்டக்களப்பில் 1929 நவம்பர் 26ல் ஸ்ரீராமகிழுஷ்ணமிஷன் ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் அதற்குச் சிலகாலத்துக்கு முன்பே அதற்கான தளம் பல்வேறு வழிகளிலும் இடப்பட்டிருந்தது.

ராமகிருஷ்ணசங்கத்துக்கும், மட்டக்களப்பு மக்களுக்கும் நேரடித் தொடர்பை முதன்முதல் ஏற்படுத்தியவர், ராமகிருஷ்ணசங்கச் சந்நியாசினி சகோதரி அவபாமியா எனத் தெரிகிறது. இவர் 1912 ஆண்டின் ஆரம்பத்தில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார். இந்த விஜயம் சுவாமி அபேதானந்தர் (இராமகிருஷ்ணரின் நேர் சீடர்களில் ஒருவர்) அவர்களின் ஆலோசனைப்படி நடந்திருக்கலாம். சகோதரி அவபாமியா, இங்கு மதவிழிப்புடன் செயல்புரிந்து கொண்டிருந்த மக்களைச் சந்தித்து தனது ஆலோசனைகளை வழங்கி உற்சாகமூட்டினார்.

1912.01.19ல் ஆரப்பற்றை சைவப் பாடசாலையைத் திறந்து வைத்து பாடசாலை சம்பவ குறிப்புப் புத்தகத்தில் பின்வருமாறு அவர் எழுதி வைத்துள்ளார். இந்தப் பாடசாலைக்கும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இறைவனின் ஆசி பூரணமாகக் கிடைப்பதாக. இதுவே என் பிரார்த்தனை. பேரன்புடன் (ஒப்பம்) சகோதரி அவபாமியா. இதே திகதியில் கல்லடி - உப்போடையில் ஒரு பெண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார். காரைதீவு சைவப் பாடசாலையையும் இவரே திறந்து வைத்தார்.

சென்னை மயிலாப்பூர் ராமகிருஷ்ண மடத்துத் தலைவர் சுவாமி சர்வானந்தா 1915ம் ஆண்டிலிருந்து பலமுறை இலங்கைக்கு விஜயம் செய்தார். சகோதரி அவபாமியா அவர்களால் திறந்து வைக்கப்பட்ட ஆரைப்பற்றை சைவப் பாடசாலையை 10.01.1918ல் பார்வையிட்ட பின் சுவாமிகளும் சம்பவக் குறிப்புப் புத்தகத்தில் பின்வருமாறு எழுதினார்:

> இக்கிராமத்தில் அமைந்துள்ள கல்விச்சாலையைப் பார்வையிட்டு மிக மகிழ்ந்தேன். இதனை அமைத்துப் பாதுகாப்பதில் இக்கிராம மக்கள் காட்டிய தீரம் மிக்க விடாமுயற்சியின் வரலாற்றினை நான் கேள்வியுற்றேன். இப்பாடசாலை மேலும் மேலும் வளர்ந்து சிறந்ததொரு கல்விச்சாலையாக அமைய பகவானின் ஆசி கிட்டுவதாக. (ஒப்பம்) சர்வானந்தா.[7]

இவ்வாறாக இராமகிருஷ்ணமிஷன் துறவிகளின் வருகை மட்டக்களப்பில் நிகழ்ந்துள்ளது. இதனால் கொழும்பில் ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் இலங்கைக்கிளை ஆரம்பிக்கப்படுவதற்கு முன், சுவாமி விபுலாநந்தர் காரணமாக கிழக்கு மாகாணம் திருகோணமலையிலேதான் சுவாமி சர்வானந்தரால் ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் ஆரம்பித்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீராமகிருஷ்ண இயக்கம்

மட்டக்களப்பில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வேருன்றுவதை ஆராய்வதற்கு முன் ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் தோற்றமும் அதன் கோட்பாடுகளையும் பற்றி அறிந்து கொள்வது அவசியமாகும். ஏனெனில் அப்போதுதான் அந்தக் கோட்பாடுகள் எவ்வளவு தூரம் மட்டக்களப்பு மண்ணுக்குப் பொருந்தக்கூடியதாக இருந்தது எனக் காணமுடியும்.

ஸ்ரீராமகிருஷ்ணரை மையமாக வைத்து அவரது சீடர்களைக் கொண்டு சுவாமி விவேகாநந்தர் ஓர் இயக்கத்தை ஆரம்பிக்க விரும்பினார்.

அன்னை சாரதாதேவியின் விருப்பமும் அதுவாக இருந்தது. அன்னையின் பிரார்த்தனையும், சுவாமி விவேகானந்தரது ஆர்வத்துடிப்புமே ராமகிருஷ்ண இயக்கத்தின் அஸ்திவாரக் கற்களாயின.

1898ல் சுவாமி விவேகானந்தர் ஸ்ரீராமகிருஷ்ணரின் புனித அஸ்தி அடங்கிய குடத்தைத் தம் தோள்களிலேயே சுமந்து சென்று பேலூர் மடத்தின் கோயிலில் நிறுவினார். அப்போது அவர் சொன்னார்:

"குருதேவர் ஒருமுறை என்னிடம் "என்னை நீ தூக்கிக் கொண்டு போய் ஒரு குடிசையில் வைத்தாலும், மரத்தடியில் வைத்தாலும் அல்லது வேறு எங்கு வைத்தாலும் அங்கே நான் மகிழ்ச்சியோடு தங்கி இருப்பேன்" என்று சொன்னார். அவரது வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து இப்போது அவரை என் தோள்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமந்து வந்து இந்த மடத்தில் வைத்திருக்கிறேன். அவர் இங்கு எழுந்தருளி இந்த இடத்தைப் புனிதராக்குவாராக! அஸ்தியை நிறுவிய பின்னர், சுவாமிஜீ கண்களில் நீர் பெருக "இந்த யுகத்தின் அவதார புருஷரான பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் இந்த இடத்தில் எழுந்தருளி ஆசீர்வதிப்பாராக! இதை ஓர் ஈடிணையற்ற இயக்கமாக, உலகில் இருக்கின்ற எல்லா மதங்களும், எல்லாசமயக் கருத்துக்களும் ஒன்றாக இணைந்து உலக மக்களுக்கு நன்மையும் அமைதியும் தருகின்ற ஒரு புண்ணிய ஷேத்திரமாகச் செய்வாராக" என்று வேண்டினார்.

சுவாமிஜீ எவ்வளவு அளவு கடந்த ஆர்வத்தோடும் எதிர்பார்ப்புகளோடும் ராமகிருஷ்ண மடத்தைத் தொடக்கினார் என்பதைக் கீழ்க்காணும் அவரது சொற்களிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

"இந்தியா விழித்தே ஆக வேண்டும்! இந்த மடத்திலிருந்து பொங்கியெழுப் போகின்ற தெய்வீகப் பெருவெள்ளம், மனிதகுல முழுவதையும் பேரின்பத்திற்குக் கொண்டுபோய் சேர்த்தே தீர வேண்டும். இது நமது நம்பிக்கை. நாம் நமது பலத்தையெல்லாம் திரட்டி, வரிந்து கட்டிக் கொண்டு இந்த லட்சியத்தை அடைவதற்காகப் பாடுபட வேண்டும். யாரெல்லாம் இதில் நம்பிக்கை வைக்கிறார்களோ அவர்கள் பகவானின் கருணையினால் அதற்கு வேண்டிய ஆற்றலும் வலிமையும் பெறுவார்கள்.

இவ்வாறு தெய்வ சங்கல்பத்தாலும், தவத்தாலும், பிரார்த்தனையாலும் தோன்றிய இந்த இயக்கமே ராமகிருஷ்ணமடம் மற்றும் ராமகிருஷ்ணமிஷன் என்ற பெயர்களில் செயல்பட்டு வருகின்றது.[8]

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் புனித அஸ்தியின் ஒரு பகுதி 2ம் உலக யுத்த காலத்தில் பாதுகாப்பு கருதி மட்டக்களப்பிலும் எடுத்து வந்து மட்டக்களப்பில் உள்ள ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் பிரார்த்தனை மண்டபத்தில் பூஜிக்கப்பட்டு கொழும்பு மடத்தில் நிறுவப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதும், மட்டக்களப்பு மக்களுக்குக் கிடைத்த ஒரு பெரும் பேறுமாகும். கல்லடி - உப்போடையில் சிவானந்த வித்தியாலயத்தையும், ஆசிரமத்தையும் சுவாமி விபுலாநந்தர் அமைக்க வழிவகுத்தார். அப்போது துணை நின்ற ஊர்ப் பிரமுகர்கள் இதனை கல்கத்தாவின் பேலூர் மடத்துக்கு ஒத்த சூழலை உருவாக்க முனைந்தனர் என்பதை இன்றைய பிரதேச அமைப்பும் உணர்த்துகிறது.

பண்டிதர் செ. பூபாலபிள்ளை, சிவஸ்ரீ கந்தசாமி குருக்கள் முதலானோர் சுற்றியுள்ள பிரதேசத்தில் ஒரு காளி கோயிலையும் நிறுவி வேலூர் என அப்பகுதிக்கு பெயரும் வைத்தனர். அடுத்து சிவானந்தர் குடியேற்றம், விவேகானந்தபுரம் ஆகியன தோற்றம் பெற்றன. இறுதியில் இன்று சுவாமி விபுலாநந்தர் இசைநடனக் கல்லூரி, உள்ளிட்ட இப்பிரதேசம் யாவும் "இராமகிருஷ்ணபுரம்" என்று பெயரிடப்பட்டு வழங்கி வருகிறது.

இலங்கைக்கு கி.மு. 251ல் தேவநம்பிய திஸ்ஸ அரசனின் வேண்டுகோளில் வடஇந்தியாவிலிருந்து புத்தபகவான் புனித தந்தத்துடன் அசோகன் தனது மகன் மகிந்தாவையும், மகள் சங்கமித்தாவையும் பௌத்தபிக்குகள் சிலருடன் இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பி புத்ததர்மத்தை போதித்தார் என அறிகிறோம். அது இன்றும் நிலைத்து வாழ்வளிப்பதையும் காண்கின்றோம்.

இதேபோல் வடஇந்தியாவிலிருந்து பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் புனித அஸ்தி இலங்கையில் நிறுவப்பட்டது. இங்குள்ள இந்துக்கள் மத்தியில் ஒரு விளிப்புணர்வைத் தோற்றுவித்து வாழ்வளிப்பதை உணர முடியும்.

மட்டக்களப்பு, ஸ்ரீராமகிருஷ்ணமிஷனின் வருகையினால் இழந்து கிடந்த சிறப்புக்களை மீண்டும் பெறத் துணை செய்ததை நினைவுகூராமலிருக்க முடியாது.

ஸ்ரீராமகிருஷ்ணமிஷனின் இலட்சியம், கொள்கை, செயல்முறை, பணிகள் யாவும் இங்குள்ள மக்களின் வழிபாடு, பண்பாடு முதலிய அம்சங்களை ஏற்கும் நிலையில் இருந்ததாலேதான் யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் வேரூன்ற முயன்ற ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பில் ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கித் தந்துள்ளது. சமூக அமைதிக்கும் சமயசமரசத்துக்கும் வித்திட்டுள்ளது. இவை எல்லாவற்றிற்கும் வித்திட்ட மகான் சுவாமி விபுலாநந்தர்.

மட்டக்களப்புக்கு அவர் வந்திருந்தபோது மட்டக்களப்பிலுள்ள முக்கியஸ்தர்கள் சிலர் சேர்ந்து கல்லடி - உப்போடையில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தார்கள். இக்கூட்டம் தற்போது கல்லடி - உப்போடை விவேகானந்தர் மகளிர் மகா வித்தியாலயம் என அழைக்கப்படும் பாடசாலையில் 10.04.1025ல் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இந்துப் பிள்ளைகளின் கல்வி நிலையைப் பற்றிய தமது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு சுவாமி விபுலானந்தர் கேட்கப்பட்டார். சுவாமி விபுலாநந்தர் தமது உரையில் இந்துப் பிள்ளைகளுக்குப் பிறசமய நிறுவனங்கள் செய்வதைப் போல இந்துசமய அடிப்படையில் கல்வி வழங்கக்கூடிய ஒரு பாடசாலையை நாம் ஆரம்பிக்க வேண்டும் என்னும் தனது கருத்தைத் தெரிவித்தார்.

அதற்கிணங்க மட்டக்களப்பில் ராமகிருஷ்ணமிஷன் கிளை ஒன்றை நிறுவவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்காகப் பின்வருவோரைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது :

| | | |
|---|---|---|
| தலைவர் | - | சுவாமி விபுலாநந்தர் |
| துணைத் தலைவர் | - | திரு. கே.என். நல்லதம்பி நொத்தாரிஸ் |
| இணைச் செயலாளர்கள் | - | கே.என். சந்திரசேகரம்பிள்ளை |
| | | என். சீனித்தம்பி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர்கள் - எம். சின்னையா (அப்புக்காத்து)
ரி. சங்கரப்பிள்ளை
கே.ஓ. வேலுப்பிள்ளை
என்.எஸ். செல்லத்துரை
எஸ்.ஓ. இரத்தினசிங்கம்
குருநாதபிள்ளை கனகசபை
பி. கனகசபை
என்.எம். மாசிலாமணி நொத்தாரிஸ்
எஸ்.டபிள்யு. ஏரம்பமூர்த்தி
கே.என். காசுபதிப்பிள்ளை

இதற்கான நிதியாக அவ்விடத்திலேயே ரூபா 11,000/- சேர்க்கப்பட்டது[9]

இதன் பெறுபேறாக 15.04.1929ல் சிவானந்த வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. 6.6.1926ல் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த மாணவரில்லம் 14.11.1929ல் மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டது. அன்றிலிருந்து ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் செயற்பாடுகள் நிறுவனமயப்பட்டு செயற்படத் தொடங்கியது எனலாம்.

இன்று மட்டக்களப்பில் இந்துக்களின் குறியீடாகவும், ஆன்மீக அறப்பணிகளுக்கு உகந்த இடமாகவும் உயர்ந்த நிலையில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் போற்றப்படுகின்றது.

ஸ்ரீராமகிருஷ்ண மிஷனும் தனது சட்டதிட்டங்களையும் உள்ளூர்த் தேவைகளையும் கருத்தில் கொண்டு இயன்ற பணிகளை ஆற்றி வருகின்றது.

ஆறு மாணவர்களுடன் தொடக்கப்பட்ட இம்மாணவர் இல்லம் இன்று 195 பிள்ளைகளுடன் மட்டக்களப்பிலும், காரைதீவிலுமாக ஆண்கள், பெண்கள், சிறுவர் என மூன்று இல்லங்களாக விரிவடைந்துள்ளன. இவற்றைவிட ஆன்மீகப் பணிகளாக தினசரி தியானம், பூஜை, ஹோமம், விழாக்கள், சொற்பொழிவுகள், பூரணைக் கருத்துரைகள், ஞாயிறு பாடசாலை முதலியனவும், பாடசாலை விட்டுவிலகிய மாணவர்களுக்கு தொழிற்கல்விக்கு நிதிஉதவியும், பல்கலைக்கழக மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்களும் மற்றும் இயற்கை செயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணப் பணிகள், பாடசாலைகளில் வறிய மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் முதலிய பல்வேறு உதவிகளையும் அன்பர்கள் உதவியுடன் நிறைவேற்றி வருகின்றன.

இலங்கையிலும் மட்டக்களப்பிலும் இந்து மதத்தின் குறியீடாக இதன் துறவிகளே அழைக்கப்படுகின்றனர். சர்வமதக் கோட்பாடுகளை அனுசரித்த போதிலும் இந்துமதம் எல்லா மதங்களுக்கும் தாய்மதமாக அனைத்துக் கோட்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளதால் இந்துமதச் செயற்பாடுகளே இங்கு மேலோங்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பில் சித்தாந்தமும், வேதாந்தமும் கலந்த நிலை ஒன்று உள்ளது. இதனால் சமய சமரசக் போக்கு இந்துக்கள் உள்ளத்தில் மேலோங்கியுள்ளது. இது அவர்களை இடர்ப்பாடுகளுக்கு உட்படுத்தினாலும் பாரம்பரியமாக வந்த அனுசரித்துப் போகும் பண்பினால் ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் கோட்பாடுகள் ஏனைய பிரதேசங்களைவிட இங்கு நிலைத்து நிற்கிறது.

ஒருகாலகட்டத்தில் சமூகத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய மட்டக்களப்பில் தோன்றிய ஸ்ரீராமகிருஷ்ண இயக்கம் இன்றும் இம் மக்களின் வாழ்வில் ஒன்றித்த நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதற்கு பகவானின் அருளும் சமகாலத் துறவிகளின் செயற்பாடுகளுமே காரணம்.

மத அடிப்படை வாதங்கள் தலை தூக்கியுள்ள இக்காலகட்டத்தில் தமது அடையாளங்களை இழந்துவிடாமல் சேவைசெய்து அமைதிப் பாதையில் சென்று கொண்டிருக்கும் இந் நிறுவனம் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றது. மட்டக்களப்பில் சாதிக்கட்டமைப்பு வலுவற்ற நிலையும்,ஒரு சமத்துவநிலையும் இதன் சகல பணிகளுக்கும் உதவின. இதனால் ஒரு விழிப்புணர்வை மக்கள் மத்தியில் இது உருவாக்கிவிட்டது என்பதில் ஐயமில்லை. இதன் பணி தொடர இறையருள் கிடைப்பதாக.

**சான்றாதாரம்**


1. சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள் தொகுதி 4, ப. 127.
2. விபுலாநந்த அடிகளாரின் வாழ்வும் வளமும், க. செபரத்தினம், ப. 1.
3. இன்றைய மட்டக்களப்பு, மீன்பாடும் தேன்நாடு, 1993, ப. 1.
4. மட்டக்களப்பு மாவட்ட செயலக புள்ளிவிபரத்திரட்டு, 2001.
5. சுவாமி விபுலாநந்தரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும், செ. யோகராசா M.A. ப. 19.
6. இலங்கையில் இராமகிருஷ்ண இயக்கம், பெ. சு. மணி, ப. 203.
7. பவளவிழா - ராமகிருஷ்ண மாணவரில்லம், மட்டக்களப்பு, 2001, வ. சிவசுப்பிரமணியம், மட்டக்களப்பில் ஸ்ரீராமகிருஷ்ண சங்கம், ப. 25.
8. ராமகிருஷ்ண மடம் & ராமகிருஷ்ண மிஷன், சுவாமி தபஸ்யானந்தர், ப. 17.
9. மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் (1926 - 1997) 70 வருடகால வரலாறும் பங்களிப்பும், சுவாமி ஜீவனானந்த.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாவட்டத்தில் இராமகிருஷ்ண மிஷன் தவிர்ந்த இந்து சமய நிறுவனங்கள்

– திருமதி அருள்நாயகி பாஸ்கரன் B.A. (Hons.) –

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலங்கையின் இந்து சமய மறுமலர்ச்சி சுவாமி ஆறுமுகநாவலருடைய சைவசமயப் பணிகளூடாகவே செல்வாக்கு பெறுகின்றது. நாவலர் 19ம் நூற்றாண்டில் இந்து சமய மறுமலர்ச்சிக்காகப் பணிசெய்து சைவ தர்மத்தை நிலைநாட்டினாலும் அவருடைய முயற்சியால் இலங்கையில் சைவ மக்கள் வாழும் பல பகுதிகளிலும் நாவலர் மரபைப் பின்பற்றிய கலாசாரம் விரிவடைந்தது என குறிப்பிடலாம். நாவலர் தமது பணிகளின் மூலம் ஏற்பட்ட காவிய பாடசாலை 19ம் நூற்றாண்டில் கல்விப் பணியில் பெரும் பங்கு வகித்ததென அறிகிறோம். நாவலருடைய காவியபாடசாலையில் பண்டிதமணியோடு ஒன்றாக கல்வி கற்று கிழக்குப் பிரதேசத்தின் இந்துப் பாரம்பரியத்தை நிலை நாட்டியவரே புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையவர்கள்.

இலங்கையின் இந்து சமய மறுமலர்ச்சிப் பாரம்பரியத்தை அவதானிப்பதற்கு முன்னோடியாக இந்திய இந்து சமய நிறுவனங்கள் பற்றி அறிய வேண்டிய தேவையும் உண்டு. இந்திய இந்துமத மறுமலர்ச்சி இயக்கங்கள் இருநிலைப்பட்டனவாக காணப்பட்டன. அவற்றில் சுயமத கலாசாரத்தை நிலை நாட்டும் போக்கினை வலியுறுத்துவனவும் மேலைத்தேய அறிவியல் பின்னணியில் இந்துப் பண்பாட்டினைப் பேணும் நிறுவனங்களும் அடங்கும். இந்தியாவில் தோன்றிய மறுமலர்ச்சி நிறுவனங்களில் இந்தியா இந்தியருக்கே சொந்தம் என்னும் நோக்கில் தோன்றிய ஆரியசமாசம் தயானந்த சரஸ்வதி (1824) அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இந்தச் சூழலில் இலங்கையிலும் சைவசமய எழுச்சியின் விடிவெள்ளியாக ஆறுமுகநாவலர் (1822) தோன்றினார். எனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இந்துசமய மறுமலர்ச்சியானது இந்திய மறுமலர்ச்சியின் பின்னணியிலேயே எழுச்சி பெறுகின்றதெனலாம். மட்டக்களப்புப் பிரதேசத்தில் இந்து சமய நிறுவனங்கள் தோற்றம் பெறுவதற்கு அகில இலங்கை ரீதியாக ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சிக்கான பின்னணிகளை அவதானித்தல் வேண்டும். இலங்கையில் கி.பி. 1800களைத் தொடர்ந்து ஆங்கிலேயர் பண்பாட்டில் ஏற்பட்ட கெடுபிடித் தளர்த்தல் இதற்கான முக்கிய காரணியாக அமைகின்றது. ஆங்கிலேயர்கள் சுதேசிகள் மீது எற்படுத்திய வாழ்வியல் தளர்வுகள் இந்துக் கல்வி மரபிற்கு பெரும் வாய்ப்பாயிற்று. இத்தகைய தளர்வுகள் இந்துக் கோயில்களின் புனரமைப்பிற்கும், இந்துக் கல்வி மரபிற்கும் வாய்ப்பைக் கொடுத்தது. இப்பின்னணியிலேயே இந்து நிறுவனங்கள் யாவும் பலவும் தோற்றம் பெற்றன.

யாழ்ப்பாணத்தில் நாவலரின் எழுச்சி நாவலர் இயக்கமொன்று தொழில்படக் காரணமாயிற்று நாவலரியக்கத்தின் விளைவால் நாவலர் காவிய பாடசாலையில் கல்வி கற்ற புலவர் மணி பெரிய தம்பிப் பிள்ளையவர்கள் இந்து வித்தியா விருத்திச் சங்கம் ஒன்றை தாபித்து பணி செய்தார். ஐரோப்பியர்களது கெடுபிடித்தளர்வையடுத்து ஆலய புனரமைப்புக்களும் ஏற்பட்டன. இதனால் ஆலய பரிபாலன சபைகளும் எழுச்சி பெற்றன. சுயமொழிப் பாடசாலைகள், குருகுல கல்வி மரபு என்பனவும் விருத்தி பெற்றன. இவ்வேளையிலேயே சைவநெறிப் பாதுகாப்பு, சைவக்கல்வி மரபு ஆகியவற்றை நோக்காகக் கொண்டு இந்து சமய நிறுவனங்கள் எழுச்சி பெறலாயின.

மட்டக்களப்பு மாவட்ட சமய நிறுவனங்களையும் அவை தோற்றம் பெறுவதற்கான தேவைகளையும் பின்வருமாறு வகைப்படுத்தமுடியும்.

1. சுயமத கலாசார எழுச்சி ஏற்பட்டபோது தோன்றிய நிறுவனங்கள்.
2. இந்திய துறவியர் வருகையினால் தோன்றிய நிறுவனங்கள்.
3. கிராம கோயிற் பரிபாலனம் பிரதேச ரீதியான சமய கல்வித் தொண்டாகத் தோன்றிய நிறுவனங்கள்.
4. (N.G.O) இந்து சமூக சேவை கருதி தோன்றிய பெருநிறுவனங்கள்.
5. குருகுலங்கள்.

இவற்றுள் சுயமத கலாசாரப் பாதுகாப்பின் நிமித்தம் தோன்றிய நிறுவனங்களில் களுவாஞ்சிக்குடி சைவ மகாசபை, மட்டக்களப்பு இந்துவித்தியா விருத்திச் சங்கம், மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம், மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றம் முதலியன முக்கியமானவை. இவை பிரதேச ரீதியாக பெரும் நிறுவனங்களாக தொழிற்படுவதைக் காணமுடிகின்றது. இந்தியத் துறவியர்களது வருகையால் எழுச்சி பெற்ற நிறுவனங்கள் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்பட்டு வருவதைக் காண்கன்றோம். செட்டிபாளையம் திருவருள் சங்கம், குருக்கள் மடம் திருவருள் சங்கம் என்பன அறுபதாண்டு நிறைவு விழாவை கொண்டாடி தொடர்ந்து இந்து விழாக்கள், பாடசாலை மாணவர்களுக்கான தேவார பண்ணிசைப் போட்டிகள், பண்ணிசை வகுப்புக்கள், குருபூசை விழாக்கள் முதலியவற்றைக் கொண்டாடி வருகின்றன. மேற்படி சமய சங்கங்கள் 1940களில் தென்னிந்தியா திண்டுக்கல்லில் இருந்து தொழில்பட்டு வந்த சுவாமி ஜி சோமேஸ்வரானந்த கிரி அவர்களின் உபதேசங்களால் கவரப்பட்டு தொழிற்படுவனவாகும். 1940களில் இச்சங்கங்கள் இரண்டும் தாபிக்கப்பட்டன.

கிராமிய சூழலில் தோன்றியனவும் ஆலய பரிபாலனம் இந்துக் கல்வி வளர்ச்சி என்பவற்றுடன் இணைந்தவற்றுள் களுவாஞ்சிக்குடி சைவமகாசபை அண்மையில் பொன்விழாக் கொண்டாடியது. திருமுறை பாராயணப் பயிற்சி பேச்சு பண்ணிசைப் போட்டிகள், புராண படனம், அறநெறிப் பாடசாலை முதலிய பணிகளை செய்து வருகின்றது. அதேபோலவே மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றமும் சிரமதான முயற்சிகள், சமூக சேவை வீடமைப்பு உதவி, சைவச் சிறுவர் இல்லப் பரிபாலனம், புலவர் கௌரவிப்பு, நூல்களின் வெளியீடு என்பவற்றை நடாத்தியுள்ளன.

கிராமங்கள் தோறும் ஆலய பரிபாலன சபைகள், இந்து பரிபாலன மன்றங்கள் தோற்றம் பெற்றாலும் அவை அனைத்தும் இணைந்த நிறுவன அமைப்பாக மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அகில இலங்கை இந்து இளைஞர் மன்றத்தின் உப மன்றமாகவே மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தொழில்படுகின்றது. தற்போது சுவாமிஜி தந்திரதேவா அவர்களது ஆலோசனையிலும் வழிகாட்டலிலும் சீ. யோகேஸ்வரன் அவர்கள் கடமையாற்றுகின்றார். தொழில் பயிற்சிகள், வீடமைப்பு உதவி, அறநெறிப் பாடசாலை அமைத்தல் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு, குருகுலபரிபாலனம், மதமாற்றங்களை தடுத்தல் முதலியன இவர்களது கடமையாகும். மேற்படி பேரவையில் மாவட்டத்தின் பல இந்து இளைஞர் மன்றங்கள் தொழிற்பட்டாலும் சுழாவடி இந்து இளைஞர் மன்றம், கிரான்குளம் இந்து இளைஞர் மன்றம், செங்கலடி இந்து இளைஞர் மன்றம், வாழைச்சேனை புதுக்குடியிருப்பு இந்து இளைஞர் மன்றம், தேத்தாத்தீவு இந்து இளைஞர் மன்றம் என்பனவும் அடங்குகின்றன. அத்தோடு சித்தாண்டி இந்து இளைஞர் மன்றமும் பிரதேச ரீதியாகப் பெரும்பணியாற்றி வருகின்றதென அறியமுடிகிறது.

மேற்கூறிய நிறுவனங்களோடு தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்டகாலமாக தொழிற்பட்டுவரும் முதலைக்குடா ஏக தந்தன் இந்து இளைஞர் மன்றம், களுதாவளை இலங்கேசன் இந்து இளைஞர் மன்றம், பழுகாமம் விபுலாநந்தா பொதுப்பணி மன்றம் என்பனவும் முக்கிய இடம் வகிக்கின்றன. கலை நிகழ்வுகள், நாடக அரங்கேற்றம், கணனிப் பயிற்சி, குருகுல் பரிபாலனம், பஜனை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தனை வழிபாடுகள் இவற்றில் அடங்கும். கலியுகத்திலே நாம சங்கீர்த்தன வழிபாடு பிரதானமானது என்பதற்கமைய வெள்ளிக்கிழமை நாட்களில் பஜனை பிரார்த்தனைகள் மூலம் கிராமியச் சூழலில் சமய சிந்தனைகளைப் பரப்பி வருகின்றன.


மேற்கூறியவற்றோடு சிவதொண்டன் நிலையம், சாயிசமிதி, குருமகராஜ் மன்றம், பிரம்ம குமாரிகள் சபை என்பனவும் பணியாற்றி வருவதைக் காணலாம். வழிபாடுகளோடு கூடிய மேற்படி நிறுவனங்களுடன் காயத்திரி சித்தர் நிலையப் பணிகளையும் உள்ளடக்கலாம். வெவ்வேறு வகை ஆத்மீக மார்க்கங்களைப் பரப்புவனவாக மேற்படி நிறுவனங்கள் அமைந்துள்ளன. சைவ சித்தாந்த போதனை, நூல் வெளியீடு என்பவற்றில் ஈடுபடும் சிவதொண்டன் நிலையம் யோகர் சுவாமியின் சிந்தனைகளை மேலும் பரப்பி வருகின்றது. எனவே ஆலய பரிபாலனம், குருகுலம், சைவச் சிறார்களின் கல்வி, வழிபாட்டு நெறி, சைவ சித்தாந்தம், இந்து நூல் பதிப்பித்தல் முதலிய துறைகளில் மேற்படி நிறுவனங்கள் தனித்துவ பங்காற்றியுள்ளமை அறியப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதமும்

# சமூகமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டக்களப்புப் பிரதேச இந்து சமய மக்களின் இன்றைய நிலை

– காசுபதி நடராசா B.A. –

## அறிமுகம்

இந்துமதம் தொன்மையானது. அது இன்றுவரை உள்வாங்கியும், வெளிவிட்டும், புறந்தள்ளியும் பல்வேறு நிலைகடந்து வந்துள்ளது. இலங்கை, இந்தியா முதலிய நாடுகளின் அரசியல் எழுச்சியும், வீழச்சியும், மாற்றங்களும் அதன் இருப்பில் பாரிய தாக்கங்களையும், மாற்றங்களையும் ஏற்படுத்தி வந்துள்ளன.

இந்துக்கள் பலவந்தமாக மதம் மாற்றப்பட்டனர்; மதம் மாறினர். இன்று நம்மைச் சுற்றியுள்ள இந்துக்களல்லாதவர்களில் பெரும்பாலானோர் நமது சகோதரிகளாகவும், சகோதரர்களாகவும் தோன்றியவர்களே.

அரசியல் மயப்பட்ட நிறுவனமயமான குணாம்சங்களுடன் காலத்தால் பிந்திய, கருத்தோட்ட நிலையுள்ள பிறமதங்கள் தத்தம் நிலைகளைப் பலப்படுத்தி இருப்புக்களை உறுதிசெய்துகொண்டு வளர்ந்து வருகின்றன. இதற்காகக் காலத்துக்குக் காலம் பல்வேறு விதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு நல்ல பல செயற்பாடுகளுடன் புதுப்புது அணுகுமுறைகளைக் கையாண்டு தத்தமது மக்கள் குழுக்களை வலுவான கட்டுக்கோப்புக்குள் வைத்து நடத்தி வருகின்றன.

இருபதாம் நூற்றாண்டில் "கிறிஸ்தவ இறையியல் கோட்பாடு" உருவாக்கப்பட்டதை இவ்விடத்தில் சுட்டி நிற்றல் பொருந்தும் - இதன்படி மூன்றாம் உலக நாடுகளில் கிறிஸ்துவத்தைப் பரப்பும் குழுக்கள் அம்மக்களின் சமூகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளில் கூடிய கவனம் செலுத்திப் பரிகாரம் காண வேண்டும் என்னும் நிலை தோற்றுவிக்கப்பட்டது.

இந்து மக்களின் சமூகப் பிரச்சினைகளில் உதவும் குறிக்கோளை முன்னிறுத்தியவர்களில் ஸ்ரீராமகிருஷ்ணமிஷனும் சுவாமி விவேகானந்தரும் அரும்பணியாற்றி நமக்கெல்லாம் வழிகாட்டியவர்கள். தொடர்ந்து இந்து நிறுவனங்கள் உருவாகியுள்ளன.

எனினும், இலங்கையிலும் குறிப்பாக மட்டக்களப்பிலும் சமுதாய அபிவிருத்தி நிலையைச் சென்றடைவதில் போதியளவு ஆர்வமும், முன்னேற்றமும் காணப்படவில்லை. ஏனைய மதக் குழுக்களின் நடவடிக்கைகளைப் பார்த்து ஒப்பீட்டளவிலேயே இதனைத் தெரிவிக்க வேண்டியுள்ளது. எனவே, நமது மக்களின் வழிநடத்தலுக்கான செயற்பாடுகள் மிகவும் பலவீனமாக உள்ளன என்னும் முடிவிற்கே வரவேண்டியுள்ளது. இன்றைய போராட்டச் சூழலில அதிகம் பாதிக்கப்படுபவர்களாக இருப்பவர்களும், உதவிகள் அதிகம் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருப்பவர்களும் இந்துக்களாகவே உள்ளனர் என்பது மிகுந்த மனக்கவலையுடன் நோக்கப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது.

இப்பிரதேசத்தின் கிராமங்களின் எண்ணிக்கைகளையும் அதன் மக்கள் தொகையினரையும் அவைகளில் இந்துக்களின் பெரும்பான்மையையும் நீங்கள் அறிவீர்கள். ஆலயங்களும், இந்து மதநிறுவனங்களும், தொண்டர்களும் தங்களாலான பணிகளை ஆற்றிக்கொண்டு வருகின்றனர். ஆயினும், அதன் தன்மை, வேகம், புத்தி அதற்கான ஆளணி, நிதிவளம், அணுகுமுறைகள் போன்றன குறிப்பிட்டுக் கூறக்கூடிய வளர்ச்சி நிலையை எட்டவில்லை.

இன்றைய உலகில் ஒருபக்கம் அடக்கப்பட்டோருக்கான போராட்டம் தீவிரமாகி வருகின்றது; பின்தள்ளப்பட்ட மக்கள் குழுக்கள் தத்தமது வேர்களைத் தேடி வீச்சாகச் செயற்படுகின்றனர். மற்றொரு பக்கம், மத அடிப்படை வாதக்குழுக்கள் பலமாகச் செயற்பட ஆரம்பித்துள்ளன. இவைகளுக்கு உலக வலைப்பின்னல் தொடர்புகளால் அரசும், நிறுவனங்களும் உதவுகின்றன.

இவைகளுக்கு நடுவே திகைத்த நிலையில் மரபு வழிவயப்பட்ட செயற்பாடுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டு அது கடந்து செல்ல விரும்பியும் முடியாத நிலையில் பல்வேறு தடங்கல்கள் கட்டுப்பாடுகளுடன் பிணைக்கப்பட்ட நிலையில் இந்துக்கள் உள்ளனர்.

நாம் பிற மதங்களைத் தூஷிப்பவர்களாக இருக்கமுடியாது: இருக்கவும் கூடாது. ஏனெனில் நமது பண்பாடு அதற்கு இடமளிக்காது. அத்துடன், நம்மைச் சுற்றியிருப்பவர்கள் நமது சகோதர இனத்தவர்களே, அவர்களைத் துவேஷித்து நமது விழிப்புணர்வுப் போராட்டத்தை ஆரம்பிப்போமாயின் அது நமக்கே கேடாக முடியும். எனினும்,

"உங்கள் வீட்டுக் கதவுகளைத் திறந்து வையுங்கள்
காற்றானது அதனுள்ளே வந்து செல்லட்டும் – எனினும்
அக்காற்று உங்கள் கால்களை வாரிவிடாது பார்த்துக்கொள்ளுங்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறும் மகாத்மாகாந்தியின் பொன்மொழியை இவ்விடத்தில் நினைவில் கொள்ளல் தகும்.

நமது நிலை ஒழுங்குபடுத்த, நிலைப்படுத்த, வலுவூட்ட வேண்டிய தேவையொன்று நம்முன்னே உள்ளது. இதனை நாம் அலட்சியப்படுத்திவிட முடியாது. இதற்குப் புத்திபூர்வமானதும், ஆன்மீகமானதுமான புதிய அணுகுமுறையொன்றை நாம் கண்டடைய வேண்டும்.

## குறியீடு

இன்று இந்து சமயத்தின் பிரதான குறியீடாகத் திகழ்பவை ஆலயங்களும், அவற்றின் கிரியைகளும் ஆகும். இவற்றை வழிநடத்துபவர்களாக இந்துக்குருமார், அறங்காவலர்சபை, இந்துமத சமூக நிறுவனங்கள் ஆகியன உள்ளன. பொதுமக்கள் உதவிகள் செய்கின்றனர்.

### ஆலயங்கள்

பிராமண குலவழித் தோன்றல்களாலும் வீரசைவ குல வழித் தோன்றல்களாலும் குடும்ப வழித்தோன்றல்களாலும் குரு - சீட வழித்தோன்றல்களாலும் - வழிபாடாற்றப்படுகின்றன.

### அறங்காவலர் சபை

இது மரபுவழியாலும், மக்கள் கூடிய தெரிவினாலும், தனியாட்களினாலும் இவைகள் ஒன்றிணைந்தும் உருவாக்கப்படுகின்றன. குலக்குழுக்கள், பரிபாலன சபைகள், தனி அறக்கொடையாளர்கள், சமூக நிறுவனங்கள் எனவும் இதனை வகுத்தும் கூறலாம். ஒரே பரிபாலன சபையின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட ஆலய நிருவாகங்களும் உள்ளன. அறங்காவலர் சபைப் பிளவுகள் அல்லது ஊர்ப் பிரச்சினைகள் காரணமாக நீதிமன்ற இடைக்காலச் சபைகளை நிறுவிப் பரிபாலனம் நிகழும் செயல்களும் ஆங்காங்கே உள்ளன.

### சமூக நிறுவனங்கள்

வெளிநாட்டு நிறுவனக் கிளைகளையும், உள்ளூர் மக்களின் உருவாக்கங்களையும் கொண்டு இந்து சமய சமூக நிறுவனங்கள் இயங்குகின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன், காயத்திரி பீடம், சாயிசமித்திகள், பிரம்ம குமாரிகள் சங்கம், இந்து இளைஞர் மன்றக் கிளைகள், சிவ தொண்டர் நிலையம், இந்து சமய அபிவிருத்திச் சங்கம், சக்தி பீடம், குருபீடம் முதலியனவைகள் இயங்கிச் சேவை செய்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறநெறிப் பாடசாலைகள்**

இந்து நிறுவனங்களால் நடத்தப்பட்டுவந்த ஞாயிறு இந்து சமயப் பாடசாலைகளும், அறநெறிப் பாடசாலைகளும் ஓய்வுநாள் சமயக் கல்விப் பணிபுரிகின்றன. இந்து சமயப் பாலர் பாடசாலைகளும் சில இடங்களில் நடைபெறுகின்றன.

**புதுசேவா நிலையங்கள்**

அண்மைக்காலப் போர்ச் சூழலினால் புதிய தோற்றம் பெற்ற நிறுவனங்கள் சில அரும்பணிபுரிகின்றன. மட்டக்களப்பு மங்கையர்க் கரசியார் மகளிர் இல்லம், களுதாவளை திருஞான சம்மந்தர் குருகுலம், பழுகாமம் விவேகானந்தர் பணிமன்றம், சித்தாண்டி சுவாமி நடராஜானந்த இல்லம் முதலான இடங்களிலும் அன்பு இல்லங்கள் தோன்றி சேவை புரிகின்றன. எனினும், பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இவைகளுக்குப் போதிய வளங்கள் கிடைப்பதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இல்லங்களிலிருந்து கல்வியை முடித்து வெளியேறுபவர்களுக்கு அடுத்த கட்ட நகர்வுக்குத் திட்டங்கள் அல்லது சுயதொழில் வாய்ப்புத்தன்மைகள் இல்லாதது பெருங்குறையாக உள்ளது.

**இந்து சமய மக்கள்**

இவர்களை அவர்களது நடத்தை கருதி முப்பெரும் பிரிவிற்குள் அடக்கலாம். அதற்குள்ளும் உப பிரிவுகள் உள்ளன.

1. அடிப்படை வாதிகள் - இவர்கள் மரபு வழிச் சடங்காசாரத்தைப் பின்பற்று பவர்களும் அல்லாதன அனைத்தையும் நிராகரித்துப் போராடுபவர்களும்.

2. மிதவாதிகள் - இவர்கள் சடங்காசாரத்துடன் உலகியல் நடை முறைகளையும் காலவோட்டங்கருதிப் பின்பற்று பவர்களும்.

.. புறக்கணிப்பவர்கள் - இவர்களை மேலும் இரு பிரிவாகப் பிரிக்கலாம்.

1. பின்பற்றாதவர்கள்
2. நம்பிக்கையற்றவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதி வழிமுறைகள்

*இதனை மேலும் மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்*

1. *பிராமணர் சமூகம்*
2. *சைவக் குருமார் சமூகம்*
3. *குலக்குழுக்கள்*

## தொண்டர்கள்

1. *அறங்காவலர்கள்/கோயில் நிருவாகிகள்*
2. *இவர்களை ஆதரித்து நிற்பவர்கள்*
3. *அவர்களை எதிர்த்து நிற்பவர்கள்*
4. *இவைகள் ஒன்றிலும் சாராது செயற்படுபவர்கள்*
5. *வளங்கள் கொடுத்து உதவுபவர்கள்*

## நிருவாகப் பிரிவுகள்

1. *மரபுவழிக் கிராமங்களில் குடியாட்சி நிருவாக முறைமை உள்ளது.*
2. *குடியேற்றக் கிராமங்கள்/நகரங்களில் கோயில்களின் வளர்ச்சி நிலைக்கேற்ப தெரு/பாகை/குழுக்கள் (வர்த்தகர்/புகையிரத ஊழியர்) ஊர் (ஒவ்வொரு ஊருக்கும்) சேர்ந்து நிருவாகம் செய்கின்றனர். இது பெரும்பாலும் கோயில் மகா உற்சவங்களுக்கே உதவுகின்றன. அப்பிரதேச மக்களின் சமூக நலனில் ஈடுபடுவதில்லை.*

## கோயில்கள்

1. *தேசத்துக் கோயில்கள்*
2. *திருப்படைக் கோயில்கள்*
3. *ஊர்க்கோயில்கள்*
4. *சாதி குலக் கோயில்கள்*
5. *குடும்பக் கோயில்கள்*
6. *தனியார் கோயில்கள்*

*என இயங்கியும் இயக்கப்பட்டும் வருகின்றன. சாதி இறுக்கம் இங்கு தளர்ந்துள்ளதால் ஒவ்வொரு கோயிலும் அயலிலுள்ள மக்கள் சேர்ந்து வழிபடும் முறைமையே இங்கு காணப்படுகின்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறவிகளும் தொண்டர்களும்

இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஞானிகளும் மூத்த தொண்டர்களும் தத்தம் நிலைக்கேற்ப செயற்பட்டுச் சேவை செய்து வருகின்றனர் என்பதைக் குறிப்பிடாதிருக்க முடியாது.

மட்டக்களப்பின் பொது நிகழ்வுகளில் இந்து சமயத்தைப் பிரதிபலிக்கும் நிறுவனமாக ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனும், அதன் துறவிகளும் அழைக்கப்படுவதை நாம் காண்கின்றோம்.

செங்கலடி சிவதொண்டன் நிலையத்தில் உயர் திரு. செல்லத்துரை சுவாமிகளும் அமைதியாயிருந்து சிவத் தொண்டு புரிந்து வருகின்றார்.

இத்தகையோரின் வழிகாட்டலும் ஆசியும் நம் அனைவருக்கும் துணை செய்யும். மட்டக்களப்பில் இந்து சமய நிகழ்ச்சிகளை முன்னெடுத்துச் செல்ல இத்தகையவர்களின் ஆலோசனைகளும் உதவிகளும் பெற்றுக்கொள்ளலாம்.

## உயர் கல்வி நிறுவனங்கள்

மட்டக்களப்பில் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட நன்நிகழ்வுகளில் உயர்கல்விப் பயிற்சி நிறுவனங்களின் வருகை சிறப்பிடம் பெறும்.

1. கிழக்குப் பல்கலைக்கழகம்
2. சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி
3. கல்வியியல் கல்லூரி
4. தொழில் நுட்பக் கல்லூரி - மஞ்சந்தொடுவாய்
5. திறந்த பல்கலைக்கழகம்
6. தாதியர் பயிற்சிக கல்லூரி
7. பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பயிற்சி நிலையம்
8. தபாலதிபர்கள் பயிற்சிக் கல்லூரி
9. தொலைக்கல்வி நிறுவனம்
10. மாவட்ட சிறுகைத்தொழிற் பயிற்சி நிலையங்கள்

முதலானவைகள் இப்பிரதேசத்தில் புதிய விழிப்புணர்வுகளைத் தோற்றுவிக்கவல்லன. இவற்றில் மரபு வழியில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நமது ஆசிரிய கலாசாலை காத்திரமான பங்களிப்பை அமைதியாகச் செய்து வந்து கொண்டிருப்பதை நினைக்காதிருக்க முடியாது. இதிற் கற்பித்த பண்டிதர் செ. பூபாலபிள்ளை முதலானோர்களால் உருவாக்கப்பட்டவர்களே இன்று மூத்த தலைமுறையினராக சமய பணிகளில் ஈடுபடுவதைக் காணமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கல்வி நிறுவனங்களில் கிழக்குப் பல்கலைக்கழகம் மிகவும் காத்திரமான, கனதியான செயற்பாட்டை வழங்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இதனை வைத்து நமது எதிர்காலச் செயற்பாட்டையும், புதிய நூற்றாண்டுக்கான அடியெடுப்பையும் திட்டமிடல் மிகுந்த வெற்றியளிக்கும். எனினும் இஸ்லாம், அரபிக் ஆகியவற்றிற்குத் தனியான பீடம் அமைக்கப்பட்டபோது இந்து சமயத்துக்கு ஒரு தனிப்பீடம் அமைக்கப்படாதது ஒரு பெருங் குறையாகவே உள்ளது.

சுவாமி விபுலாநந்தா இசை நடனக் கல்லூரி, கல்வியியல் கல்லூரி, ஆசிரிய கலாசாலை ஆகியவற்றிலிருந்து வெளியேறும் கலைஞர்கள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் நமக்கு ஒரு கொடையாகத் திகழ்வர். இவர்களுடன் ஓர் இணைந்த செயற்பாட்டை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

## ஒன்றிணை முயற்சி

மட்டக்களப்பிலுள்ள இந்து அமைப்புக்களை ஒன்றிணைக்கும் முயற்சி கடந்த கால் நூற்றாண்டுகளுக்கும் மேலாக இங்கே எடுக்கப்பட்டு வந்துள்ளது. இதில் திருகோணமலையைச் சேர்ந்தவரும் அகில இலங்கை இந்துப் பேரவையின் நிருவாகியுமான திரு. செ. சிவபாதசுந்தரம் அவர்கள் தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வந்தார்கள்.

மட்டக்களப்பு - அம்பாறை இந்து மாமன்றம் ஆரம்பத்தில் உருவாகி செயற்பட்டது. தொடர்ந்து கிழக்கு இந்து ஒன்றியம் உருவாக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை உருவாக்கப்பட்டது. பிரதேச ஆலயங்களின் சம்மேளனம் உருவாக்கப்பட்டது.

இவைகளை விட பிராமணக் குருமார் சங்கம், வைசக் குருமார் சங்கம், சாயி சம்மேளனம், பிரம்ம குமாரிகள் சமாஜம் எனப் பல்வேறு நிலையில் நிறுவனமயப்படுத்தல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவைகளில் பல செயலிழந்தும், அல்லது இலக்கை அடைவதில் தளர் நிலை கண்டும் உள்ளதை நீங்கள் அறிவீர்கள். இந்த நிலையில் நமது மக்களின் உலகியல் ஆன்மீகத் தேவைகள் அதிகரித்துக் கொண்டு செல்வதையும் நாம் காண்கின்றோம்.

நாம் இதற்கு ஏதாவது வழி கண்டு பிடிக்க முடியாதா என்ற ஆதங்கத்தின் வெளிப்பாடே இக்கூட்ட அழைப்பு.

## இன்றைய பிரச்சினைகள்

### 1. அடிப்படைப் பிரச்சினைகள்

i. யுத்தம், அதிகம் அதிகமான அனாதைகள், விதவைகள், அகதிகள், கைதுகள், அழிவுகள் முதலானவற்றைத் தோற்றுவித்துக்கொண்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. கல்வி, தொழில் வாய்ப்பு போன்றவற்றில் யுத்தப் பாதிப்புக்கள் நிறைவாகவே ஏற்பட்டுள்ளன.

iii. பொருளாதாரத் துறையில் சீர்குலைவு ஏற்பட்டுள்ளன. போடிமை, பெருவணிகர்கள் நலிவுற்றமை.

iv. சமூகச் சீர்குலைவு, இந்துப் பெண்களின் திருமணப் பிரச்சினை.

v. மதமாற்றம் ஏற்படுத்தும் தாக்கங்கள்.

2. பொதுப் பிரச்சினைகள்

i. இந்துக்களுக்கு உறுதியாக வழிகாட்டக்கூடிய தலைமைத்துவம் காணப்படவில்லை.

ii. பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் அதிகரித்துச் செல்ல, உதவு நிலையங்கள் அருகியே உள்ளன.

iii. இந்து நிறுவனங்கள் மரபு வழியாகப் பின்பற்றிய சடங்காசாரங்களில் தொடர்ந்து செல்ல, மக்களின் நிலையும், தேவைகளும் அன்னியப்பட்டவைகளாக உள்ளன.

iv. பிறமதப் பரப்புரைகள், பொருளாதார ஊக்குவிப்பு உதவிகள், திருமணப் பிரச்சினைகள் முதலானவற்றினாலும்; பயம், பாதுகாப்பு முதலியவற்றினாலும், இந்துக்கள் மத்தியில் மதமாற்றம் அண்மையில் அதிகரித்துச் செல்கிறது.

v. ஆங்கில அறிவும், உலகத் தொடர்பும் இந்துக்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளதால், அரசசார்பற்ற நிறுவனங்களின் நிழலில் இந்துக்கள் தங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உள்ளது.

பலவீனங்கள்

1. நிறுவனமயப்படவில்லை (இதனைப் பலமாகப் பெருமை பேசப்படுவதுமுண்டு)

2. குருவழித்தொடர்பு பேணப்படாமை.

3. சீரமைக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் இல்லை.

4. ஆலயங்களைச் சுற்றியுள்ள மக்களின் சமூக மேம்பாட்டுக்கு வழிகாட்டாமல் விழாக்களுக்கு ஆடம்பரச் செலவிடுதல்.

5. காலத்துக்கேற்ற செயற்பாடுகளைப் பின்பற்றாது, இறுக்கமான கோட்பாடுகளை நிலைநிறுத்த முயலுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உணவு, உடை முதலான பழக்கங்களை முன்னிறுத்தப் பாடுபட்டு அடிப்படையான அன்பை இழந்தது.
7. சாதிக்குழு வழிமுறைக்கட்டமைப்பை முன்னெடுக்க முயலுதல்.
8. நவீன முகாமைத்துவ அணுகுமுறைகளைப் பற்றிய அறிவு போதாமையும்; அக்கறை காட்டப்படாமையும்.
9. இந்துக் குருமாரைப் போற்றும் பண்பு அருகிவிட்டமை.
10. இந்துக் குருமாரின் வாழ்க்கை முறையும் பின்பற்றக் கூடிய நிலையில் இல்லாமை.
11. இந்து நிறுவனங்களில் ஒற்றுமையும், கூட்டிணைப்பும் இல்லாமை.
12. இந்து சமய அடிப்படை அறிவும், அது வழங்கும் தெய்வீக ஆற்றலும் மக்களுக்கு உரிய முறையில் காட்டப்படாமை.
13. ஆலய அறங்காவலர் சபைக்குக் கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள் முன்வரத் தயங்குதல்.
14. வருமானம் பெறும் பேராலயங்கள் நீதிமன்ற வழக்குகளில் சிக்குண்டு கிடப்பது.
15. தியானம், பிரார்த்தனை, உதவி செய்யும் பண்புகள் இல்லாமல் அரச சட்ட முறைமையைப் புகுத்தி ஆன்மீகத்தை ஒதுக்கி விட்டமை.

**வளங்கள்**

1. மாவட்டத்தில் பெரும்பான்மை மக்கள் தொகையினர்.
2. கல்வியில் சிறந்த அறிஞர்கள் வழிகாட்டிகளாக உள்ளனர்.
3. உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பயிற்சி பெற்ற சிறந்த உயர்நிலை அரச உத்தியோகத்தர்கள்.
4. சமுதாய முன்னேற்றக் கருத்துள்ள துறவிகள்.
5. வளமுள்ள கோயில்கள்.
6. ஆர்வம் மிக்க இளைஞர்களும், மன்றங்களும்.
7. நிறுவனமயப்படுத்தப்பட்ட இந்து ஸ்தாபனங்கள்.
8. அறக்கொடை வழங்கவல்ல வள்ளல்கள்.
9. இந்து சமயக் குருமார்களும், ஐயர்களும்.
10. சமுதாய, சாஸ்திரிய, கலை இலக்கிய எழுத்தாளர்கள், கலைஞர்கள், தொண்டர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகளை வரவேற்று ஆதரவளிக்கும் பொதுமக்களும், நிறுவனங்களும் எனினும், நமது செயற்பாடுகள் ஒப்பீட்டளவில் மந்த நிலையிலேயே உள்ளன.

நமது பணி

உள்ள வளங்களைக் கொண்டு உச்சப் பயனைப் பெறும் வழிவகைகளைக் கண்டறிவதே நமது தலையாய பணியாகும்.

நிறுவனமயப்படல்




இவைகளில் துணைச்சபைகள், ஊக்குவிப்புச் சபைகள் போன்றன அவசியம். இதனடிப்படையில் -

1. வலைப்பின்னல் போன்ற வகையில் ஒரு கண் அறுந்தாலும் இணைக்கக்கூடிய செயற்பாட்டை உருவாக்குதல்.
2. ஒவ்வொன்றினதும் தனித்துவமும், உட்கட்டமைப்பும் சிதறாமல் செயற்படவிடல் - தலையிடாதிருத்தல்.
3. புதிய நூற்றாண்டில் எதிர்கொள்ள வல்ல சவால்களை இனங்கண்டு ஆன்மீக, தொழில்நுட்ப செயற்பாடுகளுக்கு வழிகாட்டல்.
4. அயல் மதங்களுடனும், மக்களுடனும் இணைந்த நேசத்துடன் செயற்படல். முரண்பாட்டில் கலந்துரையாடல்.
5. இந்துக்களின் இனத்துவ அடையாளங்களைப் பேணுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஆகமம், ஆகமம் சாரா வழிபாட்டு முறைகளை மேம்படுத்தல்.

7. இந்துக் குருமார் பயிற்சி நிலையம், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் ஏற்பாடு செய்தல். இதற்கு மாமாங்கேஸ்வரத்தை மையப்படுத்தல்.

8. கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இந்து சமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களுக்குத் தனியான பீடம் அமைக்கத் தூண்டுதல்.

9. மதமாற்றங்களுக்கான ஆன்மீக, பொருளாதார, சமூகக் காரணங்களை உடனடியாக இனங்கண்டு பரிகாரம் தேடுதல்.

10. பிறமதத்துவேஷமற்ற வழிகளில் இந்துக்களின் கல்வி, பொருளாதார, சமூக மறுமலர்ச்சிக்கு உதவ உள்நாட்டு வெளிநாட்டு வளங்களைத் திரட்டி உதவுதல்.


இவைகளும், இவைகளை ஒத்தவைகளுமான மட்டக்களப்பு இந்து மக்களின் தேவைகள், அபிலாசைகள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் முதலானவற்றைச் சிந்தித்து ஓர் ஆக்கபூர்வமான செயற்பாட்டை முன்னெடுக்கத் தூண்டும் ஒரு முயற்சியாகவே நான் தனியாக உங்களுடன் இக் கருத்துக்களை பகிர்ந்து உங்களது மேலான ஒத்துழைப்பை வேண்டி நம் ஒவ்வொருவரும் தனித்தும் இணைந்தும் நமது சக்திக்குட்பட்ட வழிகளில் ஓரளவுக்கேனும் நேரப்பங்கீடு செய்து துயர்துடைப்புப் பணிகளில் ஈடுபட வேண்டுமென்று அன்புடனும் வினையத்துடனும் அழைக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு

# இந்துப் பண்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துப் பண்பாட்டில் கவனிக்கப்பட வேண்டிய பக்கம்

## (மட்டக்களப்பில் தெய்வ வழிபாட்டினை மையப்படுத்திய சில சிந்தனைகள்)

**– பேராசிரியர் சி. மௌனகுரு –**

## 1

சிறப்பாகக் கிழக்கு மாகாணத்து இந்துத் தமிழர் மத்தியிலேயும், குறிப்பாக மட்டக்களப்பு இந்துத் தமிழர் மத்தியிலேயும் சிறுதெய்வ வணக்க முறையே பிரசித்தி பெற்றுக்காணப்படுவதாக ஆய்வாளர் கூறுவர்.

தெய்வங்களைச் சிறு தெய்வங்கள், பெரும் தெய்வங்கள் எனப்பிரிக்கலாமா? தெய்வங்கள் என்றால் அனைத்தும் தெய்வங்கள் தானே? என்ற வினாக்களை உண்மையான தெய்வபக்தர்களும், உலகப்பற்றை விட்ட ஞானிகளும் எழுப்புவர். அவர்களின் வினாக்கள் நியாயமானவையே. எனினும் சமயத்தின் தோற்றம், வளர்ச்சி என்பனவும் வழிபாட்டு முறைகளும் சரித்திர ஓட்டத்தோடும், சமூக அமைப்புகளோடும் தொடர்புடையவை எனக் கருதும் ஆய்வறிவாளர்கள் பெரும் தெய்வம், சிறுதெய்வம் என்ற பாகுபாடுகளை சரித்திர, சமூகவியல், மானிடவியல், நாட்டுப்புறவியல், தொன்மவியல் ஆகிய ஆய்வு நெறிகளின் பின்னணியில் விளக்குவதற்கு முயல்வர்.

முதலில் நாம் சிறுதெய்வம் என்ற சொற்றொடரின் தோற்றத்தை நோக்கவேண்டும். இச்சொல் கி.பி. 7ம் நூற்றாண்டில் பாடப்பட்ட திருநாவுக்கரசு நாயனாரின் தேவாரத்தில் வருகிறது. "சென்று நாம் சிறு தெய்வம் சேரோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லோம்" என்கிறார் நாவுக்கரசர். அவருக்கு முந்தி வாழ்ந்தவராகக் கருதப்படும் பறையர் குலத்தில் பிறந்த திருநாளைப்போவார் என பெரியபுராணம் அழைக்கும் நாயனாரான நந்தனார், சிறுதெய்வங்களான காடன், மாடன் ஆகியவற்றை வணங்கிப் பின்னால் பெரும் தெய்வமான சிவனைத் தேடிச் சிதம்பரம் புறப்பட்டவராவார்.

பெரும் தெய்வம் என்ற சொற்றொடர் கி.பி. 2ம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட புறநானூற்றில் வருகிறது. இரண்டு வேந்தர்களையும் ஒன்றாகக் கண்ட புறநானூற்றுப் புலவர் "இரு பெரும் தெய்வமும் உடன் நின்றார்" என பலராமனையும் திருமாலையும் இரண்டு வேந்தருக்கும் உவமிக்கின்றார்.

இப்படிப் பார்க்கும் போது சமூகத்தின் அடித்தள மக்கள் வழிபடும் தெய்வங்களை சிறுதெய்வங்கள் எனவும் மேல் தளத்து மக்கள் வழிபடும் தெய்வங்களை பெரும் தெய்வங்கள் எனவும் அழைக்கும் வழக்கம் இருந்திருப்பதாகத் தெரிகின்றது.

சிறுதெய்வ வழிபாடுகளின் முதற் பண்பும் முக்கிய பண்பும் அவை பிராமணரால் பூசை பண்ணப்படாதவை என்பதாகும். வேத, ஆகம நெறி முறைகளுக்கு அமைந்த பூசை சிறுதெய்வங்களுக்கு இல்லை. தேவார, திருவாசகங்கள் பாடி அவை பூசிக்கப்படுவதுமில்லை.

சிறு தெய்வங்களுக்குரிய கிரியை முறைகள் வேறு. நாள்தோறும் ஆறு காலப் பூசை அவற்றிற்கு நடைபெறாது. அவற்றிற்குரிய விழாக்களும் பூசை முறைகளும் பெருந்தெய்வ முறைகளிலிருந்தும் வேறானவை.

சிறுதெய்வக் கோயில்கள் வித்தியாசமானவை. பெருந்தெய்வக் கோயில்களிற் காணப்படும் விமானம், கோபுரம், உள்மண்டபம், வெளிமண்டபம் போன்றவை அங்கு இல்லை. கோயில்களும் அளவில் மிகச்சிறியவை. சில கோயில்கள் கட்டிடமில்லாமற்கூட இருக்கும். வருடாவருடம் குறிப்பிட்ட இடத்தில் (அது ஒரு மரமாக அல்லது பந்தலாக இருக்கும்) மக்கள் கூடி ஓரிரு நாட்கள் வழிபாடு நடத்தும் முறையைச் சிறு தெய்வ வணக்க முறையிலேதான் காண முடியும்.

மரங்களும், புதர்களும், சூலம் முதலிய குறியீட்டுப் பொருட்களும் கூட தெய்வமாக எண்ணப்பட்டு வணங்கப்படும். ஒரு சிறு தெய்வக் கோயிலில் பலதெய்வங்களுக்குரிய பந்தல்கள் அமைக்கப்பட்டு பல சிறுதெய்வங்களையும் வணங்கும் பண்பு சிறுதெய்வ வழிபாட்டிற்குரியது.

பெரும் தெய்வங்களின் பெயரில் இருந்து சிறுதெய்வங்களின் பெயர்கள் வேறுபட்டிருக்கும். முருகன், சிவன், பிள்ளையார், திருமால், சக்தி என்பன பெரும் தெய்வங்களாம். வைரவர், காளி, மாரி, கண்ணகி என்பன சிறு தெய்வங்களாகும். தமிழகத்தில் ஆண் தெய்வங்களின் பெயர்கள் அய்யா, அப்பன், சாமி, (கருப்பையா, இருளப்பன், கருப்புச்சாமி) என்ற விகுதிகளோடும், பெண் தெய்வங்களின் பெயர்கள் அம்மன், நாச்சி, (முத்தாலம்மன், பெரியநாச்சி) என்ற விகுதிகளோடும் அமைந்திருக்கும் என்பர். ஈழத்தில் தமிழரிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகியம்மன், மாரியம்மன், காளியம்மன், கடல்நாச்சியம்மன் திரௌபதையம்மன், பேய்ச்சியம்மன் என்ற சிறு தெய்வவழிபாட்டு முறைகளுண்டு.

இச்சிறு தெய்வ உருவங்கள் பெரும் தெய்வ உருவங்களிலிருந்து சற்று வேறுபட்டவை. உருவம் இல்லாத சிறு தெய்வங்களே அதிகம். இச்சிறு தெய்வங்களுக்குப் பூசை செய்வோர் குருக்கள் என்று அழைக்கப்படுவதில்லை. பூசாரியர் அல்லது கட்டாடியார் என்றே அழைக்கப்படுவர். (பூசை செய்கின்றபடியினால் பூசாரி எனவும் கட்டுக்களைச் சொல்லிக் கொண்டு ஆடுகின்றபடியால் கட்டாடியார் எனவும் அழைக்கப்படுகின்றார்.) இப்பூசாரிமார் பிராமண குலத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். ஒவ்வொரு சாதியிலிமிருந்தும் வந்தவராயிருப்பார். பூசாரித் தொழில் சாதி கடந்த தொழிலாகும். பிராமணர், வேளாளர் மத்தியில் பூசாரிமார் மரபு இல்லை.

பொதுவாக பிராமணரல்லாத எல்லாச் சாதியினரும் சிறுதெய்வ வழிபாடு செய்வர். பிராமணர் அல்லாத சாதியினரிடமே சிறுதெய்வ வழிபாடு அதிகமுண்டு. புலாலுண்ணாத வேளாளரிடத்திலும் சிறுதெய்வ வழிபாடு குறைவாகக் காணப்படுகிறது.

இச்சிறு தெய்வக் கோயில்களில் சாமியாட்டம் எனப்படும் பேயாட்டம் அல்லது தெய்வமேறி ஆடும் ஆட்டம் இடம்பெறும். ஒருவர் மீது தெய்வத்தினை (மாரி அம்மனோ, காளியம்மனோ, வைரவரோ) பூசாரி தன் மந்திரத்தினால் வரவழைக்க, அக்குறிப்பிட்ட நபர் தன்னை அத்தெய்வமாக நினைத்து அத்தெய்வம் போல் அபிநயித்து ஆடுவார். பூசாரியின் உடுக்கடியும், பறையொலியும் அவர் ஆடலுக்கு உதவும். முன் கையிலே சிலம்பணிந்து, கையிலே வேப்பிலை தாங்கி உடுக்கொலிக்கும், பறையொலிக்கும் ஏற்ப அவர் தலை சுற்றி ஆடுவார். மக்கள் அவரைச் சாமி எனவும் தாயே எனவும் அழைத்து தம் குறை கூறி அத்தெய்வத்திடம் வாக்குக் கேட்டு ஆறுதல் பெறுவர்.

இத்தகைய ஆட்ட முறையும் தெய்வத்துடன் நேரடியாக நெருக்கமாக உரையாடும் முறையும் பெரும் தெய்வ வழிபாட்டில் இல்லை.

சிறுதெய்வ வழிபாடு வருடாவருடம் நடைபெறும். ஒரு குறிப்பிட்ட தினத்தில் கூடி கோயிற்கதவு திறந்து சில நாட்கள் விழா நடத்துவர். இச்சிறு தெய்வ வணக்கத்தின் இறுதி நாளன்று ஏதோ ஒரு விழாவும், இரத்தப் பலியும் இடம்பெறும். இறுதி விழாவில் தாம் உண்ணும் உணவுவகைகளையே பொதுமக்கள் சாமி முன் வைத்து வணங்குவர். இதனைப் படையல் என அழைப்பர்.

பிராமணர் சைவ, வேளாளர் தவிர்ந்த எல்லாச் சாதியினரும் ஏதோ ஒரு சிறுதெய்வ வழிபாட்டுடன் தொடர்புடையவர்களே. எனவே சிறு தெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய அனைவரும் புலாலுண்ணும் சாதியினரே. இரத்தப்பலி இக்கோயில்களில் இடம்பெறுவதும் இதனாலேயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

மட்டக்களப்பு மாவட்டம் சிறுதெய்வ வழிபாட்டிற்கு மிகவும் பெயர்பெற்ற இடமாகும். இங்குள்ள இந்து மக்களிடையே பிரதான ஓட்டத்தில் காணப்படும் சமய நெறியும் இதுவே. ஏற்கனவே குறிப்பிட்டபடி மட்டக்களப்பிலே மாரியம்மன், காளியம்மன், திரௌபதியம்மன், கண்ணகியம்மன், கடல்நாச்சியம்மன், படபத்திரகாளியம்மன், பிரத்தியங்கிரிக் காளியம்மன், முத்துமாரியம்மன், பத்தினியம்மன், பேய்ச்சியம்மன் எனப் பெண் தெய்வங்களும் வைரவன், நாகதம்பிரான், பெரிய தம்பிரான், நரசிங்க வைரவர், குமாரர், வதனமார், மாறா. புள்ளிக்காரன், தெவுத்தன் என்ற ஆண் தெய்வங்களும் வணங்கப்படுகின்றனர்.

மட்டக்களப்பிலே பெண் தெய்வக் கோயில்களே, அதிலும் மாரியம்மன் கோயில்களே அதிகம். மட்டக்களப்பில் வருடாவருடம் இச்சிறு தெய்வக் கோயில்கள் விமரிசையாகத் திறக்கப்பட்டு உற்சவம் நடைபெறும். கோயிலைத் திறத்தல் "கதவு திறத்தல்" என்றும் உற்சவத்தினை "சடங்கு" என்றும் மட்டக்களப்பு மக்கள் அழைப்பர். மட்டக்களப்பில் கண்ணகியம்மன் சடங்கும், அதில் நடக்கும் குளிர்த்தியும் தனித்துவமானவை.

இச்சிறு தெய்வ உற்சவங்கள் (சடங்குகள்) 3 நாட்கள், 5 நாட்கள், 7 நாட்கள் என கோயிலுக்குக் கோயில் வித்தியாசப்படும். வைகாசி மாதம் தொடக்கம் புரட்டாதி மாதம்வரை மாறிமாறி மட்டு நகரின் கிராமங்கள் சடங்குக் கோலமாகவே இருக்கும். சடங்கு நாட்களின் அளவு, கோயிலின் தன்மை, அதனை நடத்தும் மக்கள் அவர்களது பொருளாதாரப்பலம் என்பவற்றிக்கிடையே வேறுபாடு காணப்படும். இக்கோயிலில் பூசை புரிபவர்கள் ஆரம்பத்தில் கூறியதுபோலவே பூசாரிகள் என அழைக்கப்படுவர். ஒரு கோயிலுக்கு ஒரு தலைப் பூசாரியும் அவருக்குத் துணையாக ஓரிரு பூசாரிகளும் அமர்த்தப்படுவார்கள். பத்ததி முறையிலேயே இப் பூசையைத் தாங்கள் செய்வதாக இவர்கள் கூறுகின்றார்கள். பத்ததி முறை என்பது மட்டக்களப்பில் சிறுதெய்வ வழிபாடுகளை நடத்தும் முறைமையை கூறுகின்ற ஏடுகளாகும். சில பூசாரிமார் இக்கிரியை முறைகளை வாய்மொழி மரபு மூலமும் கற்றுக் கொள்கிறார்கள்.

கோயிற் சடங்கு முறையில் கதவு திறந்த பின் கும்பம் வைத்து தம்பனம் செய்து கும்பத்திற்கு மந்திர வலிமையினால் தெய்வ உருக்கொடுத்து அல்லது தெய்வத்தை கும்பத்தில் வரவழைத்து பூசை பண்ணுவதாக இவர்கள் கூறுகிறார்கள்.

மந்திர உட்சாடனங்கள், அட்சரக்கோடுகள் என்பனவே கிரியைகளின் போது பயன்படுத்தப்படுகின்றன. மந்திரத்தால் தெய்வம் ஏறி ஆடுபவரை ஆடவைத்தல், கட்டுதல் வீழ்த்துதல், அதனை வெட்டுதல், எழுப்புதல் என்பன இச்சிறு தெய்வக் கோயில்களில் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் உடல்வளம், உளவளம், பொருள்வளம், மழைவளம், பிள்ளைவளம் வேண்டி இப்பூசைகளில் ஈடுபடுவர்.

இச்சடங்குகளில் இறுதி நாள் நிகழ்வு பெரும் விழாவாக இருக்கும். இப்பெருவிழா ஒன்றில் கடலுக்குச் சென்று கும்பம் சொரிவதாக இருக்கும் அல்லது தீ பாய்வதாக இருக்கும் அல்லது பள்ளயமாக (பழம்சோறு படைத்தலும் கொடுத்தலும்) இருக்கும். அல்லது பொங்கலாக இருக்கும். அல்லது ஆடு, கோழி பலி கொடுத்தலாக இருக்கும். இறுதி நாள் சடங்குடன் கோயில் மூடப்படும். அடுத்த வருடம் தான் மீண்டும் கோயில் திறபடும்.

இச்சிறு தெய்வக் கோயில் அமைப்புக்கள் தனித்துவமானவை, இக்கோயிலுகளுக்கென அமைக்கப்படும் பந்தல்கள், தோரணங்கள், குருத்தோலை அலங்காரங்கள் அம்மனை அலங்கரிக்கும் விதம் (அதாவது வெங்கலத்தால் வார்க்கப்பட்ட அம்மனின் முகத்தை மாத்திரம் மேடையில் வைத்து அதற்குக் கீழே பாவாடை கட்டுவது பொல வர்ணத் துணிகளை ஒன்றன் கீழ் ஒன்றாக அடுக்கி (இதனை அடுக்குச் சாத்துதல்) (அம்மனை முழுப் பெண்ணுருவமாக்கிக் காட்டும் முறை.) கும்பத்தின் முன்னால் மடை (வாழைப்பழம், கமுகம் பூ, வெற்றிலை) முதலியன வைக்கும் முறை, தெய்வத்தை வரவழைக்க மந்திரம் உச்சரிக்கப்படும், சூலங்களை வைக்கும் முறை, சூலங்களையும், மடைகளையும், ஏந்திய வண்ணம் பூசாரியார் தெய்வம் ஏறி ஆடுவோர் புடைசூழக் கோயில் வலம் வரும் முறை, அதற்கு பின்னால் பக்தர்கள் கற்பூரச் சட்டி தாங்கிச் செல்லும் முறை, பெண்கள் எழுப்பும் குரவை ஒலி, தெய்வம் ஏறி ஆட்டுவோரை ஆட்டுவிக்க பக்தர்களால் பாடப்படும் காவியம், தாலாட்டு, அம்மானை, ஊஞ்சல் முதலான பாடல்கள், கண்ணகி அம்மன் கோயில்களில் பாடப்படும் கண்ணகி அம்மன் குளிர்த்திப் பாடல்கள், மாரி அம்மன் கோயிலிற் பாடப்படும் மாரி அம்மன் காவியம், மாரி அம்மன் குளிர்த்திப்பாடல்கள் என்பன இச்சிறு தெய்வ வணக்க வழிபாட்டு முறைகளின் தனித்துவமான செயற்பாடுகளும் பாடல்களுமாகும்.

இச்சிறு தெய்வக் கோயில்களிற் பாடப்படும் பாடல்கள் தேவாரம் போல பக்தியும், கனிவும், வேண்டுதலும் நிறைந்தவை. அம்மா,அம்மா என அம்மனை நெஞ்சுக்கு நெருக்கமாக அழைத்து விளிப்பவை. இக்கோயில்களிற் பாவிக்கப்படும். உடுக்கு, பறை, சிலம்பு, அம்மனைக்காய், சேகண்டி, சிலம்பு, சவணிக்கை என்பன இத்தெய்வங்களை ஆடவைக்க இசைக்கப்படும் வாத்தியங்களாகும். இவை இந்து மக்களின் இசைப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகும்.

சிறுதெய்வம் ஏறி ஆடும் தெய்வக்காரருடன் மக்கள் நேரடியாக உறவு கொள்வர். அவர்களில் மாரி, காளி, கண்ணகி முதலாம் தெய்வங்களைக் கண்டு அத்தெய்வங்களை அம்மா, ஆச்சி, தாயே, சாமி என்று நெருக்கிய உறவு கொண்டாடி நெருக்கமான ஒரு குடும்ப உறவு நிலையிலேயே அத்தெய்வங்களுடன் தொடர்பு கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் தெய்வ வழிபாட்டில் பக்தர்களையும் கடவுளரையும், கடவுளருக்கும் பக்தருக்குமிடையே தரகராக நிற்கும் பிராமணக் குருக்கள் பிரித்துவிடுகிறார். அங்கு சுலோகங்களாகக் கூறப்படும் சமஸ்கிருத மொழி மக்களைத் தெய்வத்தினின்றும் அந்நியப்படுத்திவிடுகிறது. கருவறைக்குள்ளே வெகு தொலைவிலேயே ஆண்டவனின் விக்கிரகம் இருந்து விடுகிறது. (எழுந்தருளி விக்கிரகம் வெளியே கொண்டு வரப்படினும் கருவறைக்குள் இருக்கும் இருந்தருளி பக்தர்களின் அருகில் வருவதில்லை.)

மட்டக்களப்பில் சிறுதெய்வ வழிபாட்டில் இத்தடைகள் மீறப்படுகின்றன. இங்கு சிறுதெய்வச் சடங்கு மக்களுக்குள்ளேயே தெய்வம் வரும் விழாவாக, தெய்வத்தோடு மக்கள் பேசி மகிழ்ந்து உறவாடி அதனைத் தொட்டு அழைந்து திருப்தியுறும் விழாவாக ஒரு வகையில் மக்களும் தெய்வமும் இணையும் விழாவாக பேதங்கள் அற்ற பெரு நெறியாக சிறுதெய்வ வழிபாடு அமைந்துவிடுகிறது.

மட்டக்களப்பில் ஏறத்தாழ 200 சிறுதெய்வக் கோயில்கள் இருப்பதாகக் கூறுவர். சாதிக்கு ஒரு தெய்வம், ஊருக்கு ஒரு தெய்வம், தெருவுக்கு ஒரு தெய்வம் என்று சிறுதெய்வங்கள் ஊரெல்லாம் நீக்கமற நிறைந்துள்ளன. மட்டக்களப்பின் சிறுதெய்வ வழிபாடு பற்றி எழுதிய மகேஸ்வரலிங்கம் இங்கு வணங்கப்படும். 6 பெண் தெய்வங்களையும் 13 ஆண் தெய்வங்களையும் குறிப்பிட்டு அத்தோடு துணைத்தெய்வங்கள், பரிகலத் தெய்வங்கள் துட்டத் தெய்வங்கள் எனப் பலவகையான சிறு தெய்வங்களை பட்டியலிட்டுள்ளார்.

மட்டக்களப்பு இந்துமத வழிபாட்டில் 90 வீதமான வணக்க முறை சிறுதெய்வ வணக்க முறையே. இன்னொரு வகையில் சொன்னால் மேட்டுக்குடியினரால் சிறுதெய்வங்களென அழைக்கப்படும் இத்தெய்வங்களையே மட்டக்களப்பு இந்து மக்கள் தமது பெரும் தெய்வங்களாக எண்ணி வழிபடுகிறார்கள்.

ஆகம முறை சாராத, பத்ததி முறை, சார்ந்த மக்களை ஈடுபாட்டுடன் பேதா பேதமின்றி உள்ளிழுக்கும் இவ்வழிபாட்டு நெறி மட்டக்களப்பில் மாத்திரமல்ல, மலைநாடு, முல்லைத்தீவு, வற்றாப்பளை, சிலாபம், மூதூர், திருமலை ஆகிய தமிழர் வாழ் பிரதேசங்களில் எல்லாம் பெரும் வழிபாட்டு நெறியாகக் காணப்படுகின்றது. யாழ்பாணத்திலும் இவ்வழிபாட்டு நெறி சமூக அமைப்பில் குறைந்தவர்கள் என வகுக்கப்பட்ட சாதியினர் மத்தியில் வழக்கிலுண்டு.

உண்மையில் இச்சிறு தெய்வ வழிபாடும் அவ்வழிபாட்டிற்குரிய ஆகமம் சார கிரியை முறைகளும் செயற்பாடுகளும், கோயிலமைப்பும், கோயில் விழாவும், அங்கு பாடப்படும் பாடல்களும், இசையும் இசைக்கருவிகளும் இந்து மதத்தினதும் இந்து கலாசாரத்தினதும் உயிர்த்துடிப்புமிக்க ஒரு பகுதியாகும்.

இத்தகைய உயிர்த்துடிப்பு மிக்கதும் பெரும்பான்மை இந்து மக்களை, குறிப்பாக கிராமப்புற இந்து மக்களை வெகுவாக ஈர்த்து நிற்கின்றதுமான இப்பெரு நெறி பற்றி இந்து கலாசாரம் பற்றியும், இந்து பண்பாடு பற்றியும் எழுதுவோர் அதிகம் கூறுவதில்லை. இந்து கல்சார பாடவிதானத்திலும் இதற்குப் பெருமளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இந்துக் கடவுளுக்குள் சிவன், திருமால், முருகன், பிள்ளையாருக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் மக்கள் கடவுளரான சிறுதெய்வங்களுக்கு அளிக்கப்படுவதில்லை. சாங்கிய தரிசனத்தின் அடியாக எழுந்த தாய்த் தெய்வ வழிபாடும் அம்மன் பத்திகளும் பெரிதாக இந்துக் கலாசாரத்தில் பேசப்படுவதுமில்லை.

பெரும் தெய்வ கோயில் கட்டிடங்களையும், சிற்பங்களையும், தேவார திருவாசகங்களையும், கர்நாடக இசையினையும், பரதத்தையும் இந்துக்கலைகளாகப் போற்றும் இந்து கல்சார மரபு சிறுதெய்வக் கோயிற் கட்டிடக்கலைகளையும் சிறுதெய்வ விக்கிர வார்ப்பு முறைகளையும் காவியம், அம்மானை, ஊஞ்சல், குளிர்த்திப் பாடல்களையும் குறிப்பிடுவதில்லை.

இந்து மதத்தின் மிக வலிமையான இன்னொரு பக்கத்தை ஏன் நமது இந்து கலாச்சார மரபு பார்க்கவில்லை என்பது பிரதானமானதும் முக்கியமானதுமான ஓர் வினாவாகும்.

இதற்கு விடை தேட வேண்டுமாயின் இந்து மதத்தின் வரலாற்றையும், அதனைக் கட்டியமைத்தவர்களின் கருத்து நிலை (Idelogy), சமூகப் பின்னணிகளையும் புரிந்து கொள்ள வேண்டும். நாம் ஆரம்பத்தில் சொன்ன பன்முகப்பார்வையும், ஆய்வுமே இதற்கு விடை தரும்.

## 3

இந்தியத் துணைக்கண்டம் 4500 வருடங்கட்கு மேற்பட்ட பண்பாட்டு வரலாற்றையுடையது. இந்து மதத்தின் புராதான கூறுகள் யாவும் இந்தியத் துணைக்கண்டத்தில் பரந்து வாழ்ந்த குடிகளினிடத்திலேயே இருந்தன. கி.மு. 2500 க்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்திலே இந்துப் பண்பாட்டின் மூலக்கூறுகள் காணப்படுகின்றன. கி.மு. 1500 ஐச் சேர்ந்த வேத கால நாகரிகத்திலேயே இந்து நாகரிகம் சார்ந்த இலக்கியம் எமக்குக் கிடைக்கின்றது. இவ்வண்ணம் பண்டைய இந்திய தொல் குடிகளும் சிந்துவெளி நாகரிகத் திராவிட மக்களும், இந்தியாவுக்குள் வந்து வேதங்களை உருவாக்கிய ஆரிய மக்களும் இணைந்து உருவாக்கிய நாகரிகமே இந்திய நாகரிகம் ஆகும். அதன் ஒரு கூறே இந்துப்பண்பாடு.

வேதங்களின் சாரமான உபநிடதங்கள் தத்துவச் சிந்தனைகளை வளர்த்தன. வர்ணாச்சிரம தர்மக் கோட்பாடுகள் உருவாகின.

பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர், என நான்கு வருணப் பாகுபாடுகள் தோற்றம் பெற்றன. வேதம் ஓதவும், ஓதுவிக்கவும் தகுதியுடையோர் பிரம்மனின் தலையிலிருந்து தோன்றிய பிராமணரே என்ற கருத்துருவாக்கம் பெற்றது. அரசர்கட்கு அவர்களின் தயவு தேவைப்பட்டது. படைப்பலம் அரசரிடமும், அறிவுப் பலம் பிராமணரிடமும் இருந்தன. யாகங்கள் புரிய பிராமணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசனுக்குதவினர். யாகத்தில் மிருகங்கள் பலியிடப்பட்டன. நால் வருணப் பாகுபாட்டையும், பலியிடலையும் எதிர்த்த ஒரு சமயத்தை கௌதம புத்தர் தோற்றுவித்தார். அதற்குப் பொது மக்களிடம் பலத்த ஆதரவு கிடைத்தது. மௌரிய அரச ஆதரவினால் பௌத்தம் பிராமணியத்தை நலிவடையச் செய்தது. பௌத்த மதம் மேலோங்கப் பிராமணர் மதம் தாழ்ந்தது.

மீண்டும் குப்தர் ஆட்சிக் காலத்தில் பிராமணியம் புது வலுப்பெற்றது. புத்தரின் கோட்பாடுகள் பலவற்றை உள்வாங்கி மேலெழுந்த பிராமணியம் தன்னைத் தக்க வைத்துக்கொண்டது.

இந்து மதத்தின் பிரதான நூல்களாக 3 நூல்கள் முன்வைக்கப்பட்டன. ஒன்று உபநிடதங்கள். மற்றையது பகவக்கீதை. அடுத்தது பிரம்ம சூத்திரம். இவை மூன்றும் இந்து மதத்தின் பிரஸ்தான திரயங்களாகின.

இதன்பின் இந்தியா முழுவதும் சமஸ்கிருதமயமாக்கல் நடந்தேறியது. வடஇந்தியாவிலிருந்து கிழக்கிந்தியா, மேற்கிந்தியா, தக்கணம், தென்னிந்தியா ஆகிய பகுதிகள் அனைத்திற்கும் வைதீக நெறியான பிராமண நெறி பரவியது. இதனைச் சமூகவியலாளரான சீனிவாசன் சமஸ்கிருத மயமாக்கம் அல்லது ஆரிய மயமாக்கம் என்றழைப்பார்.

ஏனைய நாடுகளுக்குப் பரவிய பிராமண நெறி அப்பகுதிகட்கு நான்கு வர்ணக் கோட்பாடுகளைப் பரப்பியதுடன், வடமொழியினையும் வேத ஆகம நெறி சார்ந்த தமது பெரும்தெய்வக் கோட்பாட்டையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டு சென்றது.

அவ்வப்பிரதேசங்களில் ஏற்கனவே இருந்த வழிபாட்டு முறைகளைப் பெரும் தெய்வ நெறிகள் தம்முடன் இணைத்துக் கொண்டன. தமிழ் நாட்டு மாரி அம்மன் சிவனின் மனைவியாக இணைக்கப்பட்டாள். தமிழ் நாட்டு முருகன் வடநாட்டுச் சுப்ரமணியனின் மறு உருவமானான். தமிழ் நாட்டு வைரவர் சிவனின் இன்னொரு முகூர்த்தமானார்.

தமிழ் நாட்டின் பல கோயில்கள் ஆகமக் கோயில்களாக்கப்பட்டன. அங்கிருந்த பூசாரிகளின் இடத்தை குருக்கள்மார் எடுத்துக் கொண்டனர்.

வேதநெறியும் சைவநெறியும் பிராமணரினதும் அரசர்களினதும் மேலோரதும் நெறியாயிற்று. மக்களுக்கும் கடவுளுக்குமிடையே தரகர்கள் உருவாகினர். இறைமொழி சமஸ்கிருத மொழியே என்ற கருத்துகட்டமைக்கப்பட்டது. கடவுளிலிருந்து பொதுமக்கள் அந்நியமாயினர். பெரும் தெய்வங்களும், வழிபாடுகளும், கிரியைகளும் பொருளாதாரத்திலும், அதிகாரத்திலும், அறிவிலும் மேம்பட்டிருந்த பெரும் மனிதர்களுக்கு மாத்திரமே உரிமையுடையதானது.

சமஸ்கிருத மயமானதும் ஆகம நெறிப் பட்டதும் பிராமணரால் பூசை பண்ணப்பட்டதுமான தெய்வங்கள் பெரும் தெய்வங்கள் எனப்பட்டன. அத்தெய்வங்களுக்காக அரசர் எழுப்பிய பெரும் கோயில்களும், சிற்பங்களும், இசையும், கோயிலுக்குள் ஆடப்பட்ட இறைவன் பற்றிய நடனங்களும் பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய இந்துக் கலைகள் எனவும் இந்துப்பண்பாடு எனவும் போற்றப்பட்டன. பின்னாளிலும் இத்தகைய பெரும் பாரம்பரியப் பண்பாட்டையே இந்துப் பண்பாடு என கட்டமைத்தனர் நமது இந்து அறிஞர்கள். இவ்வகையில் வேதம், உபநிடதம், பகவக்கீதை, பிரம்ம சூத்திரம், திவ்விய பிரபந்தம், தேவாரம், திருவாசகம் என்பனவே இந்து மதத்தின் பிரதான இலக்கியங்களாகவும் கூறப்பட்டன. இம் மரபே செந்நெறி இந்து மரபு (Classical Tradation) எனவும் அழைக்கப்பட்டது.இச்செந் நெறி மரபு அரசர்களாலும், நிலவுடமையாளராலும், பிராமணராலும், பெரு வணிகர்களாலும் சமூக அமைப்பின் மேனிலையில் இருந்த சமூகத்தராலும் போஷிக்கப்பட்டது. இந்துமதம் நிறுவன மயம் பெற்றது. பெரும் கோயில்களை இது மையமாகக் கொண்டது. முக்கியமாக பிராமணரை மாத்திரமே இது அர்ச்சகராக ஏற்றுக் கொண்டது.

செந்நெறி சாராத இந்து மரபு (Non Clssical Hindu Tradition) பெரும்பாலும் நாட்டார் பண்பு சார்ந்திருந்தது. சிறுதெய்வக் கோயில்களையும், தெய்வங்களையும் மையமாகக் கொண்டது. பிராமணர்களை அர்ச்சகர்களாகக் கொள்ளாது உள் ஊர்ப் பூசாரிகளை அர்ச்சகர்களாகக் கொண்டது.

செந்நெறி சார் இந்துமரபு செந்நெறி சாராத இந்து மரபின் சில கூறுகளைத் தன்னுள் இணைத்துக் கொண்டது. இதனையே நாம் சமஸ்கிருத மயமாக்கம் என முன்னர் கூறினோம்.

சமஸ்கிருத மயமாக்கம் என்றால், சமஸ்கிருத நெறி நின்ற ஆரிய பிராமண வாழ்க்கை முறைகளை ஏனைய இந்திய மக்கள் மத்தியில் தம் அறிவு பலத்தாலும், அதிகார பலத்தாலும் புகுத்தி அம் மக்களையும் தம் வழிக்குத் திருப்புவதாகும். ஆங்கிலேயர் தம் மதத்தாலும் மொழியாலும் தமிழ் மக்களை ஐரோப்பிய வாழ்க்கை முறைக்குள் இழுத்தமையை ஐரோப்பிய மயமாக்கம் என்பர். ஆரியர் இழுத்தமையை சமஸ்கிருத மயமாக்கம் அல்லது ஆரியமயமாக்கம் என்பர்.

சமஸ்கிருத மயமாக்கம் என்ற கொள்கை பற்றி ஆராய்ச்சியாளரிடையே பல அபிப்பிராய பேதங்கள் உள்ளன. இந்திய பிரதேச தெய்வங்கள் ஆரியமயமாகியது என்பதனை விட ஆரியம் இந்திய மயமாகியது என்பதே சரி என்பர் சிலர். அது ஒரு வகையில் உண்மையும் தான்.

சிவன், விஷ்ணு ஆகிய இரு தெய்வங்களும் வேதங்களில் முக்கியம் பெறாத இரு தெய்வங்கள். அவை பிரதேச தெய்வங்கள். ஒரு வகையில் ஆரியருக்கு முன்னர் திராவிடர் மத்தியில் வணக்கத்திலிருந்த தெய்வங்கள். வேதங்களில் இந்திரன், அக்கினி, வருணன் என்பவையே பிரதான தெய்வங்கள். எனினும் நடந்தேறிய ஆரிய திராவிட இந்திய கலப்பில் சமஸ்கிருத மயமாக்கலில் ஆரியத் தெய்வங்கள் மறைந்து போக இந்திய பழைய தெய்வங்களான சிவனும், விஷ்ணுவும் பெரும் தெய்வங்களாக மாறிய விந்தை நடந்தேறியுள்ளது. வடநாட்டில் விஷ்ணுவும், தென்னாட்டில் சிவனும் இன்று பிரதான பெரும் தெய்வங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்கிருத மயமாக்கம் இவ்வண்ணம் நடந்தேறிய போதிலும் மக்கள் தம் பழைய தெய்வங்களையும், வழிபாட்டு முறைகளையும் இலகுவில் விட்டு விடவில்லை. சமூக மேல் நிலையாக்கத்தில் வசதி படைத்த உயர் நிலையில் இருந்தோர் மத்தியில் இருந்த கிராமியத் தெய்வங்கள் பெரும் தெய்வங்களுடன் இணைக்கப்பட்டன. ஆகம பூசை முறைகள் அங்கு நடாத்தப்பட்டன. அம்மன் கோயில்கள் சில இராஜேஸ்வரி கோயில்களாகின. வைரவர் கோயில்கள் சிவன் கோயில்களாகின. எனினும் இந்த மாற்றத்திற்குள் தூரத்திலிருந்த கிராமிய மக்கள் தம் பழைய மத வழிபாடுகளையும் கடவுளரையும் பேணினர். மிக இறுக்கமாகப் பழைய மரபுகளைப் பேணினர்.

அத்தகைய மத வழிபாடுகளையும் கடவுளரையும் சிறுதெய்வ வழிபாடுகள் எனவும் சிறுதெய்வங்கள் எனவும் கூறி இந்துமதம் தன்னுள் இணைத்துக் கொண்டது.

சமணர்கட்கு எதிரான சமயப் போரில் அகச்சமயம், அகப்புறச்சமயம் என பெரும் தெய்வ வழிபாட்டுடன் இணையாத இந்துமத புறச்சமயங்களையும் சைவசித்தாந்த ஆசிரியர்கள் தம்முடன் இணைத்துக் கொண்டனர். சமண பௌத்த மத எதிர்ப்பிலே வைஷ்ணவமும், சைவமும் கைகோர்த்துக் கொண்டன. நாயக்கர் காலத்தில் அந்நியரான இஸ்லாமியருக்கு எதிராகவும் இந்துக்கள் ஒன்றுபட வேண்டி ஏற்பட்டபோது, சிதறிக்கிடந்த அனைத்து இந்திய மதங்களையும் இந்துக்கள் என்ற குடைக்குள் கொண்டு வரவேண்டியேற்பட்டது. இதே நிலைதான் 18 ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் தம் மதமான கிறிஸ்தவத்துடன் இந்தியாவுக்குள் புகுந்த போதும் ஏற்பட்டது.

காலனித்துவ வாதிகளுக்கெதிரான போரில் இந்துமதம் அனைவரையும் இணைத்த முற்போக்குப் பாத்திரம் வகித்தது. ராஜராம் மோகன்ராயின் பிரம்ம ஞான சங்கம்,விவேகானந்தரின் ராமக்கிருஷ்ண மிஷன் என்பன இந்துமக்கள் அனைவரையும் இந்துக்களாக இணைத்த இயக்கங்களாகும்.

எனினும் இந்துப் பண்பாடு கட்டமைக்கப்படுகையில் ஆகம நெறி சார் மரபான உயர் மரபே இந்து மரபு என்று கட்டியமைக்கப்பட்டது.

உண்மையில் அந்நியர் வருகையின் போது மதம் மாறாமல், இறைபக்தி குன்றாமல் இந்து மதத்தினைக் கட்டிக்காத்தவர்கள் இறைவனுடன் தன் வழிபாட்டாலும், கிரியை முறைகளாலும் நெருக்கமான உறவு கொண்டிருந்த சிறுதெய்வ வழிபாட்டினை மேற்கொண்டிருந்த கிராமிய இந்து மக்களே.

இந்துமதம் சார் கிராமிய தெய்வ வழிபாட்டு முறைகளும், அக்கோயில் சார் கலைகளும் இந்துமத புராணங்களையும், இதிகாசங்களையும் உள்ளடக்கமாகக் கொண்டிருந்த இந்துக் கூத்துகளும், கிராமிய இந்து வாழ்க்கை முறைகளுமே அம்மக்களை மதம் மாறாமல் வைத்திருந்தன.

மேல் நிலையில் இருந்த பலர் உத்தியோகம், சுகமான வாழ்வு என்பதற்காக மதம் மாறியபோதும் அக்கிராமிய மக்கள் இந்துக் கடவுளரைத் தம்மோடு உடனுறையும் உறவுகளாக நினைத்தனர். இதனால் அவர்களை எளிதில் மதமாற்ற முடியவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

மட்டக்களப்பிலே அண்மைக்காலமாக இச்சிறு தெய்வ வழிபாட்டில் சமஸ்கிருத மயமாக்கம் நடந்து வருகிறது. சடங்கு என்ற சொல்லைப் பாவிப்பதற்குப் பதிலாக உற்சவம், விழா என்ற சொற்களையேஅங்கு இன்று பாவிக்கின்றனர். அம்மன் கோயில்கள் பலவற்றில் தெய்வம் ஏறி ஆடும் சடங்கு முறை மாறி, திருவிழா முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. காவியம் முதலிய அம்மன் பாடல்களுடன் தேவாரங்களும் பாடப்படுகின்றன. கோயிற் கும்பாபிஷேகங்கள் பிராமணரைக் கொண்டு நடாத்தப்படுகின்றன. கோயில்களும் ஆகமக் கோயில்கள் அமைப்பின் படி கட்டப்படுகின்றன.

மட்டக்களப்பின் சில மாரியம்மன் கோயில்கள் முற்றாக ஆகம முறைக் கோயில்களாகிவிட்டன. அங்கு பிராமணர்களே பூசை செய்கின்றார்கள். இது சமஸ்கிருத மயமாக்கலின் ஒரு விளைவே. சில கோயில்கள் ஆகம முறைக்குள் ஆகியும், ஆகாமலும் இருக்கின்றன. வரலாற்றுப் போக்கில் இவை தவிர்க்க முடியாதவை.

எனினும் சதாரண மக்களும் கிராமிய மக்களும் இம்மாறுதல்களுக்குள் இலகுவாக வந்து விடமாட்டார்கள். தம் முன்னோர் பேணிவந்த சிறுதெய்வ வழிபாட்டு முறைகளையும்,சிறுதெய்வ கோயிற் இந்துக்கலை பாரம்பரியங்களையும் தொடர்ந்து பேணுவர். அதிற் காணப்படும் பேதமின்மையும், தெய்வ நெருக்கமும், உரிமையும், நம்பிக்கையும் அச்சிறு தெய்வ பாரம்பரியத்துடன் அவர்களை இறுகப் பிணைத்துள்ளன. இன்றைய மத மாற்றச் சூழலில் வசதி படைத்த இந்துமக்கள் மதம் மாறிச் சுகம் அனுபவிப்பினும் மதம் மாறாமல் உண்மை இறைபக்தியுடன் போலித்தனமின்றி இந்துவாக வாழ்வோர் கிராமிய இந்து மக்களே.

இத்தகைய மிகச் செழுமை பொருந்திய இந்துப் பாரம்பரிய மரபினை இந்துப் பண்பாட்டுக்குள் இணைக்காமல் புறக்கணிப்பது பிழையாகும். சிறுதெய்வங்கள், அதன் வழிபாட்டு முறைகள் அதனடியாக எழும் சிறுதெய்வ கட்டிட, சிற்ப, இசை, நடன, நாடக இந்துக் கலைகள் என்பன இந்துப் பண்பாட்டுடன் இணைக்கப்பட வேண்டும். கவனிக்கப்படாத இந்த இந்துப் பாரம்பரியம் கவனிக்கப்படவேண்டும். இச்சிறு மரபுக் கலைகள் இந்துக்கலைகளின் முக்கியமான கூறுகள் என்ற கருத்து அழுத்தப்பட வேண்டும்.

இச்சிறு தெய்வக் கோயில்களிற் கைக்கொள்ளப்படும் சாங்கிய நெறி புராதான இந்துமத நெறியாகும். இங்கு செய்யப்படும் பேயோட்டம் நிகழ்வு ஒரு வகையில் பண்டைய உளநோய் சிகிச்சை நெறியாகும். அதை நாம் ஒரு வகையில் பண்டைய இந்து விஞ்ஞானம் எனலாம். இப் பண்டைய இந்து விஞ்ஞான நெறியின் தன்மைகள் ஆராயப்படவேண்டும். இந்த பண்டைய இந்து உளவியல் விஞ்ஞானம் நுணுக்கமாக ஆராயந்து நிறுவப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை பெருநெறி நின்ற இந்துச் சனாதனிகளினால் கவனிக்கப்படாதிருந்த வலிமை வாய்ந்த இப்பக்கம் கவனிக்கப்பட வேண்டும். உயர்வு, தாழ்வு அற்ற இந்துமத சமூகத்தை உருவாக்க இவ்வணுகுமுறை உதவவும் கூடும். இம் மறுபக்கத்தின் ஆழ அகலங்கள் தேடப்பட வேண்டும். இந்துமத ஆராய்ச்சிகள் இவற்றை நோக்கி ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இவை பற்றிய தகவல்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டும் இந்துப் பண்பாட்டு ஆய்வாளர் முன்பு பெரும் பணி காத்துக் கிடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் உலக இந்து மாநாடு
# மட்டக்களப்பு அம்பாறை
# பிரதேசக்கிளையின் அறிக்கை

## இந்து சமய மறுமலர்ச்சி

**முன்னுரை**

பல ஆண்டுகளின் பின்னர் தற்போது நிலவும் சமாதான சூழ்நிலையில் காத்திரமான முறையில் 2ஆம் உலக இந்து மாநாடு நடைபெறவுள்ளது பற்றி இந்துக்களாகிய நாதம் பெருமிகம் கொள்கின்றோம். இந்துமதத்தவர்களிடையே இந்நிகழ்வுகள் மிகவும் வேண்டப்படுபவையாக அமையும் இந்துமதம் பற்றிய அறிவு விளக்கத்தையும், உணர்வுபூர்வமான பெருமிதத்தையும். விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. கொழும்பிலும் தமிழர் வாழும் வேறு பிரதேசங்களிலும் இந்து மாநாட்டு நிகழ்வுகள் கோலாகலமாக நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்து சமய அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் நடைபெறும் இம் மாநாட்டு நிகழ்வுகள் வெறும் கேளிக்கைகளாக மாத்திரம் முடிவடைந்துவிடக் கூடாது என்பதே பெரு விருப்பமாகும். கருத்தரங்குகளும், கலை நிகழ்ச்சிகளும், அலங்கார ஊர்திகளுடனான கலாசார பவனிகளும், கண்காட்சிகளும், பட்டிமன்றங்களும், பண்ணிசைப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன. இந்துக்கள் மத்தியில் / மதசார்பான விழிப்புணர்ச்சியை, பெருமித உணர்வினை இவை ஏற்படுத்தப் பெரிதும் உதவுமென்பது உண்மை. இருப்பினும் இம்மாநாட்டின் நோக்கம் இவற்றுடன் முடிந்துவிடக் கூடாது என்பது எமது ஆதங்கம், எமது நிலைப்பாடு. எனவேதான் எமது நாட்டில் இந்துமதம் பற்றிய யதார்த்தபூர்வமான நிலைமையினை முடிந்தளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்து குறைநிறைகளை மட்டிட்டு, தேவைகளை இனங்கண்டு மறுமலர்ச்சிக்கான வழிமுறைகளை தெரிவிப்பதே எமது நோக்கமாகும். எமது பகுதியினைச் சேர்ந்த (வாகரை தொடக்கம் பொத்துவில் வரை) பெரியார்கள், அறிஞர்கள் பலரையும் தொடர்பு கொண்டு பெற்ற அபிப்பிராயங்களின் அடிப்படையில் இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

## நோக்கம்

எம் நாட்டில் இந்துமதம், மத நிறுவனங்கள், அரசாங்க நிறுவனங்கள் ஆகியவற்றில் இன்றுள்ள நிலையினை (வெளிக் கொணர்தலும்) எமது மதத்தில் காணப்படும் வேறுபாடுகள், முரண்பாடுகள், நடைமுறைகள் பற்றி அறிந்து கொள்ளுதலும் அவற்றின் பரிகாரங்களுக்கான ஆலோசனைகள் முன்வைப்பதும் இதன் நோக்கங்களாகும்.

### கவனத்திற் கொள்ளப்படுபவை

**அ. இந்து மக்களின் ஆன்மீக மேம்பாடு**

அவர்களது இன்றைய நிலை, குறைபாடுகள், தேவைகள், அவர்களது சமய அறிவு, சமய உணர்வு, சமய ஈடுபாடு, சமய ஆசாரம் போன்றவற்றை ஊக்குவித்தலும் பேணுதலும். பொதுவாக இன்றைய யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளுதல், இந்துசமய மறுமலர்ச்சிக்காக பல மட்டங்களிலும் மேற்கொள்ள வேண்டிய அவசிய பரிகார நடவடிக்கைகள் பற்றி அறிந்து கொள்ளுதல்.

**ஆ. ஆலயங்கள்**

இந்துமத ஆலயங்களது நிலைப்பாடு, வேறுபாடுகள், குறைபாடுகள், நடவடிக்கைகள், திருப்பணிகள், கடமைகள் பற்றி அறிவதுடன் அவற்றில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள், சீர்திருத்தங்கள் பற்றி தீர்மானித்தல், ஆலய முகாமைத்துவம்.

**இ. ஆலய முகாமைத்துவம்**

நிர்வாகம் - இவர்களது இன்றைய நிலை - குறைநிறைகள் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. குருமார், பூசகர்கள்

*இவர்களது இன்றைய நிலை, குறைநிறைகள், தேவைகள் வேண்டப்படும் சீர்திருத்தங்கள்.*

உ. நிறுவனங்கள்

*இந்துமத மன்றங்கள், குருகுலங்கள், ஆச்சிரமங்கள், இல்லங்கள், அறநிலையங்கள், ஆதீனங்கள்,*
*இன்றைய நிலை - எதிர்நோக்கும் பிரச்சினைகள், குறைநிலைகள் - செய்யப்பட வேண்டியவை.*

ஊ. அரசு

*அரசு இந்து கலாசார அமைச்சு, திணைக்களம் - இன்றைய நிலைப்பாடு குறைநிறைகள் வேண்டும் பங்களிப்புச் செயற்பாடும்.*

எ. மதமாற்றம்

*பல்வேறு மட்டங்களிலும் பகுதிகளிலும் நமது மதத்தைப் பாதிக்கும் மதப்புற்றுநோயாக எம்மவர் வேறு மதங்களுக்கு மாற்றப்படுதல் இருந்து வருகின்றது. போர்த்துக்கேயர் காலம் முதல் இன்றுவரை நமது வளர்ச்சியை பெரிதும் பாதித்து வரும் இதற்கான காரணங்கள், தீர்வுக்கான ஆலோசனைகள்.*

ஏ. ஏற்படுத்த வேண்டிய நிறுவனங்கள்

- *தலைமைப்பீடமும் அதிகார வரையறைகளும்*
- *நிதி நிறுவனம்*
- *ஆச்சாரிய பயிற்சிக் கல்லூரிகள்*
- *இந்துப் பல்கலைக்கழகம்*

## இன்றைய நிலையும் சீரமைப்புக்கான கருத்துக்களும்

*தொன்மையும் வரலாற்றுப் பாரம்பரியச் சிறப்பும் உடையது இந்துமதம். ஆன்மீகம் இந்துக்களின் வாழ்வின் அடிப்படையாகும். வேதங்கள், உபநிடதங்கள், திருமுறைகள் வழங்கிய பெருமறையாக வரலாற்றுச் சிறப்பும் சீரும் பெற்ற இந்துமதத்தினதும் அம்மதம் சார்ந்த சமூகத்தினதும் பல்மட்ட நிறுவனங்களின் இன்றைய நிலைப்பாடும் தேவைகளும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. இந்துமதம்

இந்துமதத்தில் காணப்படும் பல்வகையான வழிபாட்டு முறைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் ஒரு கட்டமைப்பின் கீழ் கொண்டுவரப்படல் வேண்டும். பொதுவான தலைமைப்பீடமும், மறுமலர்ச்சிக்கான திட்டமும் வழிமுறைகளும் கண்டறியப்படல் வேண்டும். பலம் வாய்ந்த பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான பதவிநிலைத் தலைமைத்துவமும் அதிகாரக் கட்டமைப்பும் எதிர்கால மறுமலர்ச்சிக்குத் தேவையாகும்.

இந்துமத உயர்பீடம் அமைக்கப்படும் போது சமய, சமூக அபிவிருத்தி, மேம்பாடு சம்பந்தமான காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் அவ்வப்போது ஏற்படும் தேவைகளை நிறைவேற்ற பலம் வாய்ந்த, நிதிவளமும் நிதி நிர்வாகக் கட்டமைப்பும் ஏற்படுத்தப்படுதல் எதிர்காலத்தில் மிக முக்கிய தேவையாகும். சமய நடவடிக்கைகள் சமூகமயமாக்கப்படுவதும் இந்து சமூக மேம்பாட்டில் ஆலயங்களும் சமய பீடங்களும் இணைந்து செயற்படுவது காலத்தில் தேவைகளாகும்.

02. ஆலயங்கள்

ஆலயங்கள் யாவும் பொதுவான கட்டமைப்புக்குள் மாவட்ட ரீதியாகவேனும், கொண்டு வரப்படுதல் வேண்டும்.

இன்று ஆலயங்கள் ஒரு சீரான அமைப்புக்களின்றி, பலவாறு செயற்படுகின்றன. பல ஆலயங்கள் போர்ச்சூழலில் சிதைவடைந்துள்ளன. பலவற்றில் நிர்வாகச் சீர்கேடுகள் மலிந்துள்ளன. அலயங்களின் புனரமைப்புத்திட்டம் அமுலாக்கப்படுவதுடன் புதுப்பாதையில் அவை செயல்பட வேண்டும். அவை ஆன்மீகத்தை, இந்துமத சாரத்தை, வேத, உபநிடதங்களை, சிவாகம அறிவினை, மத பாரம்பரியங்களை உணர்த்தும் நிலையங்களாக விளங்க வேண்டும். சமூகப் பணிகளில், ஆலய நிர்வாகம் பங்கு கொள்ளல் வேண்டும். பூசை புனஸ்காரங்களுடன் கூட்டுப் பிரார்த்தனை. பஞ்சபுராணம், திரமுறை ஓதல் போன்றவையும் இடம்பெறல் வேண்டும். கேளிக்கைகளும். ஆடம்பரச் செலவுகளும் கட்டுப்படுத்தப்படுவதுடன் இளம் சிறார்களுக்கு சமய அறிவு ஊட்டுதலில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

03. ஆலய நிர்வாகம்

நிர்வாகத்திற்குப் பொறுப்பாயுள்ளவர்கள் தன்னலமற்ற, சேவை மனப்பான்மையுள்ள சமய ஆர்வலர்களாக இருப்பது அவசியம். புகழ், அந்தஸ்து, வருமானம், சுரண்டல் ஆகியவற்றிற்காக உள்ள எவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகங்களில் இருத்தல் தவிர்க்கப்படல் வேண்டும். பல ஆலயங்களில் முகாமைத்துவ சீர்கேடும் ஊழல்களும் நிரந்தர அவலங்களாக அமைந்துள்ளன. அறங்காவலர்கள் ஆன்மீக அறிவும் மனத்தூய்மையும் இறைபக்தியும் சேவையுணர்வும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். ஆலய நிர்வாகங்கள் பொதுவான கட்டமைப்பு விதிக்குட்பட்டவை யாக சட்டபூர்வமான கட்டுக்கோப்புக்களுக்குட்பட்டவையாக இருத்தல் சிறந்தது. ஆலய நிர்வாக சபைகளை மேற்பார்வை செய்யக் குழுக்கள் அமைக்கப்படல் வேண்டும். ஆலய நிர்வாகங்கள் ஆலய நிர்வாகத்துடன் நின்றுவிடாது சமூக நல நாட்டமும் கொண்டவையாக விளங்குதல் வேண்டடத்தக்கதாகும்.

## 04. ஆலய குருமார், பூசகர்கள்

இத்துறையில் பாரிய சீர்திருத்தங்கள் மிகவும் வேண்டப்படுகின்றன. ஆலயங்களைப் போன்றே இந்துமத மறுமலர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கவேண்டியவர்கள் இவர்கள். இப்பணிக்கு இவர்களுள் பெரும்பாலானோர் பொருத்தப்பாடு இல்லாதவர்களாகவே உள்ளனர். இவர்களுள் பல வகைப்பட்டவர்கள் உளர். பிராமணக் குருக்கள், சைவக் குருக்கள், பூசாரிகள் போன்றவர்களைக் குறிப்பிடலாம். வேறுபட்ட பயிற்சிகள், ஆசாரங்கள், பூசை அனுட்டானங்கள் காணப்படுகின்றன. இவர்களில் பெருதம்பாலானோருக்கு தெளிவான, நிறைவான, வேதசாஸ்திர அறிவும் பத்ததி பயிற்சியும், தேர்ச்சியும் இல்லை. சமயம் பற்றிய ஆழ்ந்த அறிவு இல்லை. சமயம் வளர்க்கும் மனப்பாங்கும், சோதிடம் போன்ற துறைகளில் அறிவும் இல்லை. இவர்கள் தமது அறிவு, அந்தஸ்து ஆகியவற்றை உயர்த்திக் கொள்ள வேண்டும். ஆன்மீகக் குரவர்களாக, வழிகாட்டிகளாக, ஒழுக்கசீலர்களாக விளங்க வேண்டும். இவர்களுக்கு அடிப்படைக் கல்வி அறிவு கட்டாயப்படுத்தப்படல், வேண்டிய அடிப்படைப் பயிற்சிக்கான தரமான வசதிகள் வழங்கப்படல், நியாயமான கொடுப்பனவு, சலுகைகள் வழங்கப்படுதல் சமூக, அரசாங்க தாபன ரீதியான மதிப்பும் கௌரவமும் வழங்கப்படுதல் போன்றவற்றில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். குருமார்களின் அடிப்படைச் சமய அறிவு, பயிற்சி, மனப்பாங்கு, ஆன்மீக வழிகாட்டல், ஒழுக்கம் ஆகியவை முக்கிய தேவைகளாகவுள்ளன. வருமானத்தை மாத்திரம் இலக்காகக் கொண்ட தொழிலாக மாத்திரம் கொண்டவர்களாக ஆலயப் பூசகர்கள் அமைந்துவிடக் கூடாது. இவற்றை மேற்பார்வை செய்து, வளமூட்ட மத்திய, மாகாண அரச/தனியார் மட்ட நிறுவனங்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. இந்துமத நிறுவனங்கள்

இந்துமத மன்றங்கள், சபைகள், ஆதீனங்கள், குருகுலங்கள், மகாசபைகள், அறநிலையங்கள். குருபீடங்கள், இந்துமாணவர் இல்லங்கள் எனப் பல்வேறு நிறுவனங்கள் இன்று செயற்படுவதை காணக்கூடியதாகவுள்ளது. இவை பல முற்போக்கான செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்தி அரும்பணிகளை ஆற்றுகின்றன. ஆன்மீகப் பயிற்சி, மத விழிப்புணர்ச்சி, வசதியற்ற குழந்தைகளுக்கு உண்டி, உறைவிடம், கல்வி வசதிகளை வழங்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இருப்பினும் இவற்றின் செயற்பாடுகள் கணிப்பீடுகளுக்கு உட்படுத்த வேண்டிய நிலைப்பாடும் உள்ளது. நிர்வாகச் சீர்கேடுகளும், நிதி மோசடிகளும் ஒழுக்கச் சீர்கேடுகள் பற்றியும் அறிய முடிகின்றது. பொருளீட்டும் முறைமை ஒழிக்கப்பட்டு அற நிலையங்களாக. மத மேம்பாட்டு விளக்கங்களாக இவை மாற வேண்டும். மாற்றப்படல் வேண்டும். கிரமமான ஒன்றுகூடல், சீரிய நிதி நிர்வாகம், சமூகமயப்பட்ட நடைமுறைத் திட்டங்கள், நிதி வளம் பெருக்குதல் ஆகியவற்றில் இவை கவனம் செலுத்தல் வேண்டும். இத்துறை சார்ந்த அனைத்து நிறுவனங்களின் கூட்டமைப்பினை, ஒன்றியத்தினை ஏற்படுத்தி அதற்கான பொது இலக்கினையும் நடைமுறைத் திட்டங்களையும் உருவாக்கி செயற்படுத்துதல் வேண்டும். இவ்விடயத்தில் இந்து சமய அலுவல்கள் அமைச்சும், திணைக்களமும் மதப்பெரியார்களும் வழி சமைத்துக் கொடுக்கலாம். இந்துமத மறுமலர்ச்சிக்கு எமது மதம் சார்ந்த சகல அமைப்புக்களினது ஒருங்கிணைக்கு அவசியமாகும். எமது சமயம் இன்று முகம் கொடுக்கும் சவால்களுக்கு நமது அமைப்புக்கள் அனைத்தும் ஓர் அணியில் செயற்படுவது இன்றியமையாத தேவை எனலாம்.

06. இந்துசமய அலுவல்கள் அமைச்சு, திணைக்களம், அகில இலங்கை இந்துமாமன்றம் ஆகியவற்றின் பங்கு

எதிர்கால இந்துமத மறுமலர்ச்சிக்கு வழிகாட்டி, உரமூட்டி முன்னெடுத்துச் செல்லும் பணியில் மேற்கூறியவற்றின் பங்கு மிக முக்கியமானதாகும். அடிப்படைப் பலத்தினையும். நிதி வளத்தினையும் கட்டமைப்பு நெறிப்படுத்தலையும், பிராந்திய சமச்சீரான மேம்பாட்டினையும் பாரிய பொறுப்பும் கடப்பாடும் இவற்றிற்குண்டு - கொழும்பை மாத்திரம் கவனத்தில் கொள்ளாது ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் முழுநாடும் தழுவிய ரீதியில் இவை சிந்தித்து செயற்படல் வேண்டும் - துணிவுடன், வேண்டியவற்றை செயற்படுத்த வேண்டியவற்றை திருந்தச் செய்தல் வேண்டும் - சட்டவாக்கம், நிறுவனங்களின் அமைப்பு. நிதிவளப் பயன்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படல் வேண்டும். ஆலயங்களின் புனரமைப்பு நிர்வாகச் சீரமைப்பு, குருமாருக்கான பயிற்சிக்கல்லூரி, தனியான இந்துப் பல்கலைக்கழகம் - மதமாற்ற தடைச்சட்டம் நாம் எதிர்பார்க்கும் செயற்பாடுகளுள் முக்கியமாகவையாகும். கேளிக்கைகளையும், விளம்பர விழாக்களையும் குறைப்பதும் இந்துமதம் சார்ந்த ஆன்மீக கலாசார நிகழ்வுகளை அனைத்துத் தமிழ் மாவட்டங்களிலும் மாவட்டமன்றங்களின் ஒத்துழைப்புடன் நடத்த வேண்டும்.

07. மதமாற்றம்

16ம் நூற்றாண்டு இந்து மதத்தினை சீரழித்த காரணிகளில் ஒன்று இந்துக்களை பிறமதத்திற்கு மாற்றமையாகும். இந்து மக்கள் பலவாறாக கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றப்பட்டார்கள். புகழ்பெற்ற இந்து ஆலயங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. இந்து மத அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன. இந்நிலை ஆங்கிலேய காலத்தின் பின்னும் நாடு சுதந்திரம் பெற்ற பின்னும் சீரடைந்தாலும் அண்மையில் போர்ச் சூழலின் கீழ் புது வேகம் பெற்றுள்ளதென்றே கொள்ள வேண்டியுள்ளது. இன்று எம்மவர்கள் பல்வேறு பட்ட காரணிகளால் கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம் ஆகிய பிற மதங்களுக்கு மாறுகின்றனர்/மாற்றப்படுகின்றனர். இந்து சமூகம் மெல்லமெல்ல சீரழிந்து வருகின்றது. இந்த ஆபத்தான போக்கினை பலவாறும் தெரிந்திருந்தும், கண்டிருந்தும் அது பற்றிச் சிறிதளவும் கரிசனம் கொள்ளாது இதற்குப் பொறுப்பானவர்கள் மௌனிகளாக வாழாவிருப்பது பெருவேதனையைத் தருவதொன்று - மதமாற்றம் என்னும் பயங்கர நோயினை கட்டுப்படுத்த வேண்டியது இன்றைய காலத்தின் அவசியமாகும்.

காரணங்களுள் சில

* எமது மதத்தில், மதவழிபாட்டு முறைகளில் சமூக நடைமுறைகளில் காணப்படும் குறைபாடுகள் இதற்கான அடிப்படைக் காரணங்களாகின்றன. எமக்குத் தன்மான உணர்வு மதப்பற்றுப் போன்றவை குறைவு எனவே சமய மாற்றத்திற்கு எமது சமூக எதிர்ப்பு இல்லாத நிலை இன்று உள்ளது.

* பிற மதங்கள் எம்மவர்களை கவர்வதற்கு பாவிக்கும் உபாயங்கள் - நோய் தீர்ப்பு, கல்வி, நிதி வழங்கல், நிலம், வீடு, சலுகைகள், சமூக அந்தஸ்து, வேலைவாய்ப்பு போன்றவற்றை வழங்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* எமது இறுக்கமான பிற்போக்கான சமூக அமைப்பும் - சாதிவேறுபாடும் பொருண்மிய ஏற்றத்தாழ்வும்.
* சாதாரண மக்களின வறுமை, ஏழ்மை, அறிவின்மை.
* எமது சமய நிறுவனங்கள், ஆலயங்கள், ஆலய நிர்வாகங்கள், சமூக மேம்பாட்டில் சமூகப் பணிகளில் கவனம் செலுத்தாமை.

தீர்வுகள்

* அமைச்சு திணைக்கள மட்டத்தில் தீவிர கணிப்பும் செயற்திட்டமும்
* தீவிர பிரச்சார குழுமங்கள், உத்திகள்
* சமய விளக்கம்
* சமூக நாட்டம்
* வளப்பங்கீடு உதவிகள்
* சமூகக் கட்டமைப்புடனான எதிர்ப்பு
* மதமாற்ற தடைச்சட்டம்

எதிர்பார்ப்பு

சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்களை கருத்தில் எடுத்து வேண்டப்படும் செயற்பாடுகளை ஆராய்ந்து திட்டமிட்டு செயற்படுத்தல்.

அறிக்கை தயாரிப்புக் குழு

திரு. க. தியாகராஜா (தலைவர்)

கலாநிதி. சி. ரவீந்திரநாத்

திருமதி. சாந்தி கேசவன்

திரு. சி. த. கோபாலசிங்கம்

திரு. காசுபதி நடராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் உலக இந்து மாநாடு
# மட்டக்களப்பு பிரதேசக் கிளை செயற்குழு

| | |
|---|---|
| தலைவர் | திரு. ஆர். மோனகுருசாமி |
| உப தலைவர்கள் | பேராசிரியர் மா.செ. மூக்கையா<br>திரு. க. தியாகராஜா |
| ஆலோசகர்கள் | ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தாஜி மகராஜ்<br>ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தாஜி மகராஜ்<br>விஸ்வபிரம ஸ்ரீ காந்தன் குருக்கள் ஐயா |
| செயலாளர் | திரு. கு. தெட்சணாமூர்த்தி |
| உபசெயலாளர் | கலாநிதி சி. இரவீந்திரநாத் |
| துணைச் செயலாளர் | திருமதி எஸ். விஜயநாயகம் |
| பொருளாளர் | திரு. அ. இரவீந்திரன் |
| இணைப்பு உத்தியோகத்தர் | திரு. காசுபதி நடராஜா |

## உப குழுக்கள்

### கல்விக் கண்காட்சிக்குழு

| | |
|---|---|
| தலைவர் | பேராசிரியர் சி. மௌனகுரு |
| அங்கத்தவர்கள் | திருமதி சாந்தி கேசவன்<br>கலாநிதி எஸ். யோகராஜா<br>திரு. இரா. நாகலிங்கம்<br>திரு. காசுபதி நடராஜா<br>திரு. டீ. யுவராஜன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதிக்குழு

| | |
|---|---|
| தலைவர் | திரு. சி.த. கோபாலசிங்கம் |
| அங்கத்தவர்கள் | திரு. ச. சிவபாதசுந்தரம் |
| | திரு. எம். மகேந்திரராஜா |
| | திரு. ஆர். இராஜேந்திரம் |

## ஒருங்கிணைப்புக்குழு

| | |
|---|---|
| தலைவர் | திரு. பே. சத்தியமூர்த்தி |
| அங்கத்தவர்கள் | திரு. த. கனகசபை |
| | திரு. க. ஆறுமுகம் |
| | திரு. சீ. யோகேஸ்வரன் |
| | திரு. வ. கமலதாஸ் |
| | திரு. சி.சின்னையா |
| | திரு. பூ.ம செல்லத்துரை |
| | திரு. காந்தி ஞானச்சந்திரன் |
| | சைவப்புலவர் சாந்தலிங்கம் |

## கலாசாரக்குழு

| | |
|---|---|
| தலைவர் | செல்வி க. தங்கேஸ்வரி |
| அங்கத்தவர்கள் | திரு. இரா. நாகலிங்கம் |
| | திரு. க. ரவீந்திரன் |
| | திரு. கதிர் பாரதிதாசன் |
| | திரு. க. இராசலிங்கம் |
| | திரு. அ. செல்வேந்திரன் |
| | திரு. க. ஆறுமுகம் |
| | திரு. சிவாகந்தராசா |
| | திரு. க. சிவகுமார் |
| | திரு. க. சுதாகரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போக்குவரத்து சுற்றுலாக்குழு

| | |
|---|---|
| தலைவர் | திரு. செ. புண்ணியமூர்த்தி |
| அங்கத்தவர்கள் | திரு. வீ. பத்மநாதன் |
| | திரு. எஸ். ஜெகதீசன் |
| | திரு. எஸ். கௌரிபாலன் |

## பிரசாரக்குழு

| | |
|---|---|
| தலைவர் | திரு.நெல்லை நடேசன் |

## பாடசாலை ஒருங்கிணைப்புக் குழு

| | |
|---|---|
| தலைவர் | திரு. எம். பவளகாந்தன் |
| அங்கத்தவர்கள் | திரு. வ. கணபதிப்பிள்ளை |

## வரவேற்புக்குழு

| | |
|---|---|
| தலைவர் | திருமதி பவளகாந்தன் |
| அங்கத்தவர்கள் | திருமதி அருள்நந்தி தவமணிதேவி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Printed by
Kumaran Press Private Limited
201, Dam Street, Colombo-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org